இந்தப் பிரச்சினை குறித்து, தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர் தெரிவித்த கருத்தினைக் கேட்டும், தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முல்லைப் பெரியாறு குறித்த வழக்கின் முடிவுதான் தமிழகத்துக்கு முக்கியம் என்ற நோக்கத்தோடும், உச்ச நீதிமன்றம் அறிவித்த குழுவில் தமிழக அரசின் சார்பில் பங்கேற்பது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவில் தமிழக அரசின் சார்பாக ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் திரு. ஏ.ஆர். லெட்சுமணன் அவர்கள் இடம் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[2010 ஏப்ரல் 21

முற்பகல் 10-30

3. தகவல் கோரல்

(அ) மின் நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிலக்கரியின் சாம்பலைத் தனியார் சிமென்ட் ஆலைகளுக்குக் குறைந்த விலையில் வழங்குவதால் அரசுக்கு ஏற்படும் நட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினமணியில் வந்துள்ள ஒரு செய்தியைத் தங்களிடத்தில் காட்டி அனுமதி கோரியிருக்கிறேன். கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பு தந்திருக்கிறேன் தமிழக அரசின் சார்பாக இறக்குமதி செய்யப்படுகின்ற நிலக்கரியை மேட்டூர், தூத்துக்குடி, எண்ணூர், வட சென்னை போன்ற மின் நிலையங்களில் பயன்படுத்திவிட்டு அதிலிருந்து வெளியேறுகிற ash என்பதைக் குறைந்த விலைக்கு குறிப்பிட்ட இரண்டு தனியார் சிமென்ட் ஆலைகளுக்கு மட்டும் வழங்குவதால் ஆண்டொன்றுக்கு 450 கோடி ரூபாயிலிருந்து 500 கோடி ரூபாய் வரை அரசுக்கு நஷ்டம் ஏற்படுவதாக செய்திக் கட்டுரை வந்திருக்கின்றது. இந்த விலையை உயர்த்தி அரசுக்கு வருமானம் வருகின்ற வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். (குறுக்கீடு)*

(ஆ) ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற நளினி சிறையில் செல்ஃபோனைப் பயன்படுத்தியது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவினுடைய இணையற்ற தலைவன் ராஜீவ் காந்தி அவர்களைப் படுகொலை செய்த வழக்கில் தண்டனை அளிக்கப்பட்ட குற்றவாளி நளினி என்பவர், வேலூர் மத்திய பெண்கள் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார். அவர் சில மாதங்களுக்கு முன்னால் சென்னை உயர் நீதிமன்றத்தில்கூட*

2010 ஏப்ரல் 21] [திரு. சி. ஞானசேகரன்]

வழக்குத் தொடுத்து முன்கூட்டியே தன்னை விடுதலை செய்ய வேண்டுமென்றெல்லாம் மனு செய்து, அந்த மனுவில் தான் சிறைத் துறையினுடைய விதிகளை எந்தக் காலக்கட்டத்திலும் மீறவில்லை என்றெல்லாம் சத்தியப் பிரமாண வாக்குமூலமெல்லாம் போட்டு முன்கூட்டியே என்னை விடுதலை செய்ய வேண்டுமென்றெல்லாம் கூறியிருக்கிறார்கள். ஆனால், நேற்று அதிகாலை 6-30 மணியளவில் வேலூர் பெண்கள் மத்திய சிறையிலே சோதனையிட்டபோது, ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் குற்றவாளியாக இருக்கின்ற நளினி என்பவர், Airtel நிறுவனத்தின், சென்னையிலே இருக்கக்கூடிய ஒரு எண்ணை, சென்னையிலிருந்து பெற்று, ஒரு cell phone-ஐத் தன்னுடைய பையில் வைத்திருந்ததாக்ச் சோதனையில் கண்டறிந்திருக்கிறார்கள். அந்தச் சோதனையின்போது cell phone-ஐ அவர்கள் கழிவறையிலே போட்டுவிட்டதாகவும். பிறகு அறையில் சென்று சோதனை செய்தபோது, அங்கே இரண்டு sim card-கள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிகிறது. அதைச் சோதித்துப் பார்த்ததில் கடந்த 4 ஆண்டுகளாக இலண்டனுக்கும், கனடாவுக்கும் பல முறை அந்தக் குற்றவாளி பேசியிருப்பதாகக் கண்டறிந்திருக்கிறார்கள். இப்போது, எந்தவிதமான சிறை விதிகளையும் தான் மீறவில்லை என்று கூறி, அவர்கள் ஒரு சலுகை பெற்று 'A' Class-ல் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள்.

ஒரு முக்கிய நபரை, இந்தியாவினுடைய முன்னாள் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அவர்களைக் கொலை செய்த வழக்கில் குற்றவாளியாக இருக்கிறவர் கைக்கு எப்படி Mobile Phone போனது? அவர் கடந்த ஏப்ரல் 6 ஆம் தேதிகூட சிறைத் துறை அதிகாரிகளுக்கும், அரசுக்கும் அனுப்பிய மனுவில், அவர்கள் ஏற்கெனவே தான் எந்தவிதமான சிறை விதிகளையும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாக உரையை முடியுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: இதோ முடித்துவிட்டேன். எந்தவிதமான விதிகளையும் தான் மீறவில்லை; சிறைத் துறை அதிகாரிகளுக்குத் தான் இலஞ்சம் கொடுப்பதில்லை; ஆகவே, தன்னை, சிறைத் துறை அதிகாரிகள் கொடுமைப்படுத்துகிறார்கள்; தன்னை torture செய்கிறார்கள் என்றெல்லாம் மனு செய்திருக்கிறார்கள். ஆனால், எந்தவிதமான bribe-ம் கொடுக்காமல், எதுவும் இல்லையென்று சொன்னால், எப்படி அவர் கைக்கு cell phone வந்தது என்பதையும், எப்படி 2 sim card-களைப் பெற்று 4 ஆண்டுகளாக இலண்டனுக்கும், கனடாவுக்கும் அவர்கள்

[திரு. சி. ஞானசேகரன்] [2010 ஏப்ரல் 21

தொலைபேசியிலே பேசினார்கள் என்பதையும் கண்டறிந்து அவைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

அதேபோல, நான் பொது விவாதத்திலே பங்கேற்றுப் பேசியபோதுகூட சொன்னேன். சிறையிலே இப்படிப்பட்ட விதிமீறல்கள் நடைபெறுகின்றன. cell phone வைத்திருந்ததாகத் திருச்சியிலேகூட கண்டுபிடித்திருக்கிறார்கள். பல வகைகளிலும் சிறைகளில் இவ்வாறு செய்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இவரை முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டுமென்ற வழக்கிலேகூட மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டி, அரசைப் பாராட்டி, உயர் நீதிமன்றமே அவர்களுக்குச் சரியான முடிவை அரசு எடுத்திருக்கிறது என்பதைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசு போட்ட கமிட்டியிலேகூட எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இராஜேந்திரன் அவர்களும், மாவட்ட நீதிபதி திரு. கலையரசன் அவர்களும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவு நேரமெல்லாம் பேச முடியாது நீங்கள். (குறுக்கீடு) முடியுங்கள் என்று சொல்கிறேன். திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டிருந்தால், எப்படி? (குறுக்கீடு) அவர் முடிக்கட்டும்.

முற்பகல் *10-35*

திரு. சி. ஞானசேகரன்: முடித்து விட்டேன். முடித்து விட்டேன். (குறுக்கீடு) ஏற்கெனவே தூக்குத் தண்டனை பெற்றவர், எங்களுடைய அருமை அன்னை சோனியா காந்தி அவர்கள், பரிந்துரை செய்த காரணத்தினாலே அதை ஆயுள் தண்டனையாக மாற்றிக் கொண்டிருக்கிறவர், முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டும் என்றெல்லாம் நீதிமன்றத்தைப் பலமுறை அணுகி, அரசின்மீது பல பழிகளைப் போட்டு, அடிக்கடி கடிதங்கள் எழுதுகிற நளினி இப்பொழுது சிறை விதிகளை எல்லாம் மீறி செல்ஃபோனை வைத்துக்கொண்டு இலண்டனுக்கும் அதேபோல கனடாவுக்கும் பலமுறை பேசியிருக்கிறாரே, அது எப்படி?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தீர்களென்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

2010 ஏப்ரல் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எத்தனை முறை சொன்னாலும் இலண்டன் ஒன்றுதான், உட்காருங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலையில் நளினி செல்ஃபோன் வைத்திருந்தது குறித்து பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. இதுகுறித்து ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நளினி அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதற்கான கோரிக்கையை. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதனை திரு. ஞானசேகரன் raise பண்ணிவிட்டார். அதற்கு அமைச்சர் பதில் சொன்ன பிறகு மற்றவற்றை எடுக்கலாம். உட்காருங்கள் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு) யாரும் notice கொடுக்கவில்லை. அவர் புதிதாக ஒரு subject-ஐ open பண்ணி சொல்லியிருக்கிறார். என்னவென்று அமைச்சர் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் notice எதுவும் கொடுக்கவில்லையே! ஒவ்வொருவரும் அதையே சொல்லிக் கொண்டிருந்தீர்கள் என்றால் நேரமாகிறது. (குறுக்கீடு) அதையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது பதில் சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்) அவர் raise பண்ணினார், நீங்கள் notice எதுவும் கொடுக்கவில்லையே! திரு. சிவபுண்ணியம், நீங்கள் notice எதுவும் கொடுக்காமல் எப்படி raise பண்ணுகிறீர்கள்? மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பதில் சொல்வதாக இருந்தால், சொல்லுங்கள். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே பேசிய பிரச்சினையின்மீது, அரசின் சார்பில் வந்திருக்கிற தகவலை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 20-4-2010 அன்று காலை 6½ மணியளவில் வேலூர் மத்திய பெண்கள் சிறையினுடைய Superintendent அவர்களும், அவரோடு அதிகாரிகளும், வழக்கமாகச் செய்கின்ற check-up-க்காகப் போய் பார்த்திருக்கிறார்கள். நளினி அவர்கள் இருந்த அறையை, அவர்கள் சோதனையிட்டபொழுது துணிப் பையில் ஒரு செல்ஃபோன் மறைத்து வைத்திருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதை அதிகாரிகள் எடுக்க முற்பட்டபொழுது, அவர் வேகமாக, அதிகாரி கையில் இருந்து பிடுங்கி பக்கத்தில் இருந்த கழிவறையில் போட்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

[2010 ஏப்ரல் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், நீங்கள் எல்லாம் எனக்குச் சொல்லித் தரவேண்டாம், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* சொல்லித் தரவேண்டாம், எனக்குத் தெரியும். எல்லாம் தெரியும், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)* நான் சொல்கிறேன் அல்லவா? அந்த subject சம்பந்தமாக அவர்தான் முதலில் raise பண்ணினார். நீங்களும் அதே subject-ஐ open பண்ணுவதாக இருந்தால், முன்பே நீங்கள் எழுதிக் கொடுத்திருக்க வேண்டும். *(குறுக்கீடுகள்)* என் அனுமதி இல்லாமல் எழுப்ப முடியாது, உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, zero hour-இல் யார் உங்களிடம் அனுமதி பெற்றார்களோ அவர்கள்தான் எழுப்பலாம். அதையொட்டி எல்லோரும் பேசமுடியாது. ஆகையினாலே என்னுடைய கருத்தை நான் சொல்லிவிடுகிறேன். உடனே Deputy Jailor ஓடிப் போய் கழிவறையிலே வீசப்பட்ட அந்த செல்ஃபோனை எடுத்து மீட்டிருக்கிறார்கள். அது தண்ணீரில் நனைந்திருக்கிறதா அல்லது அது வேலை செய்கிறதா என்று பார்ப்பதற்கு அதைப் பழுதுபார்க்கும் நிறுவனத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், நான்கு ஆண்டுக்காலமாக அதில் பேசியிருக்கிறார்கள் என்று சொன்னார். அப்படிப்பட்ட தகவல் இன்னும் வரவில்லை. அப்படி இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். அந்த செல்ஃபோனை analyse செய்து பார்த்தால்தான், அந்த sim card-இல் இருந்து யார் யாரோடு பேசியிருக்கிறார்கள் என்று தெரியவரும். தெரிந்தால், நாங்கள் அதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

முற்பகல் 10-40

அந்த செல்ஃபோன் மட்டுமின்றி இரண்டு sim card-களும் கிடைத்திருக்கின்றன. அதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். இரண்டாவதாக, அவர் சொன்னதைப்போல, இதுவரையில் பல சிறைச்சாலைகளில் செல்ஃபோன்களும், sim card-களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. ஆனால், வேலூர் பெண்கள் மத்திய சிறையில் இதுவரையில்

2010 ஏப்ரல் 21] [திரு. துரைமுருகன்]

அப்படிப்பட்ட புகார்கள் வந்ததுமில்லை; செல்ஃபோனோ, sim card-ஓ கைப்பற்றப்பட்டதுமில்லை. இதுதான் முதன்முறை. இதுவரையில் மற்ற சிறைச்சாலைகளிலெல்லாம் இப்படிச் செய்திருக்கிறார்களே, அவர்கள்மீது இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அவர் கேட்டார். இந்த ஆட்சியில் 1-1-2006 முதல் 10-3-2010 வரையில் செல்ஃபோன்கள், கஞ்சா, இதுபோன்றவை கடத்தியதற்காக அரசாங்கம் அதையெல்லாம் தீவிரமாக check-up செய்து நடவடிக்கை எடுத்திருக்கிறது. செல்ஃபோன் இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிப்பதற்காக செல்ஃபோன் கண்டறியும் கருவி ஒன்று, கஞ்சா போன்ற பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதைக் கண்டுபிடிப்பதற்காகப் பன்முக உலோகம் கண்டறியும் கருவி, இவற்றைக் கொடுத்திருக்கிறோம். இவற்றின்மூலமாக 19 சிறைப் பணியாளர்கள்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். 5 பணியாளர்கள்மீது கிரிமினல் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். 195 சிறைவாசிகளுக்குச் சிறைத் தண்டனையே தந்திருக்கிறோம். 60 சிறைவாசிகள்மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 7 வெளி நபர்கள்மீதும் இத்தகைய கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவுதான் அக்கறை காட்டி, இப்படிப்பட்ட பொருட்கள் உள்ளே போகாமல் தடுப்பதற்கு, அரசாங்கம் எத்தனையோ திட்டங்கள் சட்டங்கள் போட்டுச் செய்தாலும், திட்டம் போட்டு, அவற்றை மீறுகின்ற கூட்டம் ஒன்று செய்துகொண்டுதான் இருக்கிறது. ஆகவே, செல்ஃபோனோ, sim card-ஓ இத்தகைய பொருட்கள் உள்ளே போகாமல் இருப்பதற்கு அரசாங்கம் மிகுந்த கவனத்தோடு பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற அறிவுரையை அடிக்கடி சிறை அதிகாரிகளுக்குத் தந்துகொண்டிருக்கிறது.

(ஆ) மின் நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிலக்கரியின் சாம்பலைத் தனியார் சிமெண்ட் ஆலைகளுக்குக் குறைந்த விலையில் வழங்குவதால் அரசுக்கு ஏற்படும் நட்டம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 219-ன்கீழ் (குறுக்கீடு) செல்வி பாலபாரதி, சொல்லுங்கள். வேறு சப்ஜெக்டா? அல்லது இதுபற்றித்தானா? (குறுக்கீடு) நீங்கள் காலையிலேயே என் அறைக்கு வந்தீர்கள் இல்லையா? என்ன விஷயம் என்று என்னிடம்

[பேரவைத் தலைவர்] [2010 ஏப்ரல் 21

சொல்லியிருக்கலாம் அல்லவா? (குறுக்கீடு) காங்கிரஸ் கட்சியின் சார்பாக அவர் கேட்டார், முன் அனுமதி பெற்று அவர் இங்கே பேசினார். நீங்கள் எதுவுமே சொல்லவில்லை. (குறுக்கீடு) சரி, என்ன விஷயம் என்று சொல்லுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அனல் மின் நிலையங்களிலிருந்து கிடைக்கும் ஆயிரக்கணக்கான டன்கள் நிலக்கரிச் சாம்பல், சிமெண்ட் ஆலைகளுக்குச் சலுகை விலையில் வழங்கப்படுவதால் மின் வாரியத்திற்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை ஏற்கெனவே கவனத்திற்குக் கொண்டு வந்தாயிற்று. காலையிலேயே திரு. வேல்முருகன் அவர்கள் என்னிடத்தில் சொன்னார். நீங்கள் அவையிலே எழுப்புங்கள் என்று சொல்லியிருந்தேன். அவர் எழுப்பிவிட்டார். அதையேதான் நீங்களும் கேட்கிறீர்கள். அதற்கு அமைச்சர் பதில் சொல்வார். உட்காருங்கள். (குறுக்கீடு) பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: எந்த உறுப்பினரும் அரசாங்கம் சம்பந்தப்பட்ட ஒன்றை இந்த அவையில் கிளப்புவதற்கு முன்னால், குறிப்பிட்ட அந்த அமைச்சருக்கோ, முதலமைச்சருக்கோ தெரிவித்தால்தான் அதற்கு reply-யோடு நாங்கள் வரமுடியும். நாங்கள் உள்ளே 9-25 மணிக்கு நுழையும்போது இதை எடுத்துக்கொள்ளலாமா, அதை எடுத்துக்கொள்ளலாமா என்றால், நீங்கள் பத்திரிகைச் செய்தியைப் படித்துவிட்டுப் பேசுகிறீர்கள். அதற்கு வேண்டிய பதிலை ஆதாரப்பூர்வமாக சர்க்கார் தரப்பில் தரவேண்டும். அதற்கு அவகாசம் இல்லை. ஆனால், பத்திரிகையிலே என்ன செய்தி வரும்? 'சாம்பலை எடுத்துக்கொண்டு போனார்கள் என்று அரசாங்கத்தின்மீது திரு. வேல்முருகன் குற்றச்சாட்டு' என்று செய்தி வரும். அரசாங்கம் பேசாமல் இருந்தது மாதிரி இருக்கும். நியாயமாகப் பார்த்தீர்கள் என்றால், அவர் பேசியதை எல்லாம் நிறுத்தி வைத்துவிட்டு, நாங்கள் நாளைக்கு பதில் சொன்ன பிறகுதான், அவர் பேசியதை publish செய்ய வேண்டும். இல்லையென்றால் அரசாங்கம் தரப்பிலே பேசாமல் இருந்தோம் என்று வந்துவிடும்.

[2010 ஏப்ரல் 21

முற்பகல் 10-30

3. தகவல் கோரல்

(அ) மின் நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிலக்கரியின் சாம்பலைத் தனியார் சிமெண்ட் ஆலைகளுக்குக் குறைந்த விலையில் வழங்குவதால் அரசுக்கு ஏற்படும் நட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினமணியில் வந்துள்ள ஒரு செய்தியைத் தங்களிடத்தில் காட்டி அனுமதி கோரியிருக்கிறேன். கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பு தந்திருக்கிறேன் தமிழக அரசின் சார்பாக இறக்குமதி செய்யப்படுகின்ற நிலக்கரியை மேட்டூர், தூத்துக்குடி, எண்ணூர், வட சென்னை போன்ற மின் நிலையங்களில் பயன்படுத்திவிட்டு அதிலிருந்து வெளியேறுகிற ash என்பதைக் குறைந்த விலைக்கு குறிப்பிட்ட இரண்டு தனியார் சிமெண்ட் ஆலைகளுக்கு மட்டும் வழங்குவதால் ஆண்டொன்றுக்கு 450 கோடி ரூபாயிலிருந்து 500 கோடி ரூபாய் வரை அரசுக்கு நஷ்டம் ஏற்படுவதாக செய்திக் கட்டுரை வந்திருக்கின்றது. இந்த விலையை உயர்த்தி அரசுக்கு வருமானம் வருகின்ற வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். (குறுக்கீடு)*

(ஆ) ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற நளினி சிறையில் செல்ஃபோனைப் பயன்படுத்தியது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவினுடைய இணையற்ற தலைவன் ராஜீவ் காந்தி அவர்களைப் படுகொலை செய்த வழக்கில் தண்டனை அளிக்கப்பட்ட குற்றவாளி நளினி என்பவர், வேலூர் மத்திய பெண்கள் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார். அவர் சில மாதங்களுக்கு முன்னால் சென்னை உயர் நீதிமன்றத்தில்கூட*

2010 ஏப்ரல் 21] [திரு. சி. ஞானசேகரன்]

வழக்குத் தொடுத்து முன்கூட்டியே தன்னை விடுதலை செய்ய வேண்டுமென்றெல்லாம் மனு செய்து, அந்த மனுவில் தான் சிறைத் துறையினுடைய விதிகளை எந்தக் காலக்கட்டத்திலும் மீறவில்லை என்றெல்லாம் சத்தியப் பிரமாண வாக்குமூலமெல்லாம் போட்டு முன்கூட்டியே என்னை விடுதலை செய்ய வேண்டுமென்றெல்லாம் கூறியிருக்கிறார்கள். ஆனால், நேற்று அதிகாலை 6-30 மணியளவில் வேலூர் பெண்கள் மத்திய சிறையிலே சோதனையிட்டபோது, ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் குற்றவாளியாக இருக்கின்ற நளினி என்பவர், Airtel நிறுவனத்தின், சென்னையிலே இருக்கக்கூடிய ஒரு எண்ணை, சென்னையிலிருந்து பெற்று, ஒரு cell phone-ஐத் தன்னுடைய பையில் வைத்திருந்ததாக்ச் சோதனையில் கண்டறிந்திருக்கிறார்கள். அந்தச் சோதனையின்போது cell phone-ஐ அவர்கள் கழிவறையிலே போட்டுவிட்டதாகவும். பிறகு அறையில் சென்று சோதனை செய்தபோது, அங்கே இரண்டு sim card-கள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிகிறது. அதைச் சோதித்துப் பார்த்ததில் கடந்த 4 ஆண்டுகளாக இலண்டனுக்கும், கனடாவுக்கும் பல முறை அந்தக் குற்றவாளி பேசியிருப்பதாகக் கண்டறிந்திருக்கிறார்கள். இப்போது, எந்தவிதமான சிறை விதிகளையும் தான் மீறவில்லை என்று கூறி, அவர்கள் ஒரு சலுகை பெற்று 'A' Class-ல் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள்.

ஒரு முக்கிய நபரை, இந்தியாவினுடைய முன்னாள் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அவர்களைக் கொலை செய்த வழக்கில் குற்றவாளியாக இருக்கிறவர் கைக்கு எப்படி Mobile Phone போனது? அவர் கடந்த ஏப்ரல் 6 ஆம் தேதிகூட சிறைத் துறை அதிகாரிகளுக்கும், அரசுக்கும் அனுப்பிய மனுவில், அவர்கள் ஏற்கெனவே தான் எந்தவிதமான சிறை விதிகளையும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாக உரையை முடியுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: இதோ முடித்துவிட்டேன். எந்தவிதமான விதிகளையும் தான் மீறவில்லை; சிறைத் துறை அதிகாரிகளுக்குத் தான் இலஞ்சம் கொடுப்பதில்லை; ஆகவே, தன்னை, சிறைத் துறை அதிகாரிகள் கொடுமைப்படுத்துகிறார்கள்; தன்னை torture செய்கிறார்கள் என்றெல்லாம் மனு செய்திருக்கிறார்கள். ஆனால், எந்தவிதமான bribe-ம் கொடுக்காமல், எதுவும் இல்லையென்று சொன்னால், எப்படி அவர் கைக்கு cell phone வந்தது என்பதையும், எப்படி 2 sim card-களைப் பெற்று 4 ஆண்டுகளாக இலண்டனுக்கும், கனடாவுக்கும் அவர்கள்

தொலைபேசியிலே பேசினார்கள் என்பதையும் கண்டறிந்து அவைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

அதேபோல, நான் பொது விவாதத்திலே பங்கேற்றுப் பேசியபோதுகூட சொன்னேன். சிறையிலே இப்படிப்பட்ட விதிமீறல்கள் நடைபெறுகின்றன. cell phone வைத்திருந்ததாகத் திருச்சியிலேகூட கண்டுபிடித்திருக்கிறார்கள். பல வகைகளிலும் சிறைகளில் இவ்வாறு செய்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இவரை முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டுமென்ற வழக்கிலேகூட மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டி, அரசைப் பாராட்டி, உயர் நீதிமன்றமே அவர்களுக்குச் சரியான முடிவை அரசு எடுத்திருக்கிறது என்பதைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசு போட்ட கமிட்டியிலேகூட எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இராஜேந்திரன் அவர்களும், மாவட்ட நீதிபதி திரு. கலையரசன் அவர்களும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவு நேரமெல்லாம் பேச முடியாது நீங்கள். (குறுக்கீடு) முடியுங்கள் என்று சொல்கிறேன். திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டிருந்தால், எப்படி? (குறுக்கீடு) அவர் முடிக்கட்டும்.

முற்பகல் *10-35*

திரு. சி. ஞானசேகரன்: முடித்து விட்டேன். முடித்து விட்டேன். (குறுக்கீடு) ஏற்கெனவே தூக்குத் தண்டனை பெற்றவர், எங்களுடைய அருமை அன்னை சோனியா காந்தி அவர்கள், பரிந்துரை செய்த காரணத்தினாலே அதை ஆயுள் தண்டனையாக மாற்றிக் கொண்டிருக்கிறவர், முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டும் என்றெல்லாம் நீதிமன்றத்தைப் பலமுறை அணுகி, அரசின்மீது பல பழிகளைப் போட்டு, அடிக்கடி கடிதங்கள் எழுதுகிற நளினி இப்பொழுது சிறை விதிகளை எல்லாம் மீறி செல்ஃபோனை வைத்துக்கொண்டு இலண்டனுக்கும் அதேபோல கனடாவுக்கும் பலமுறை பேசியிருக்கிறாரே, அது எப்படி?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தீர்களென்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

2010 ஏப்ரல் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எத்தனை முறை சொன்னாலும் இலண்டன் ஒன்றுதான், உட்காருங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலையில் நளினி செல்ஃபோன் வைத்திருந்தது குறித்து பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. இதுகுறித்து ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நளினி அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதற்கான கோரிக்கையை. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதனை திரு. ஞானசேகரன் raise பண்ணிவிட்டார். அதற்கு அமைச்சர் பதில் சொன்ன பிறகு மற்றவற்றை எடுக்கலாம். உட்காருங்கள் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு) யாரும் notice கொடுக்கவில்லை. அவர் புதிதாக ஒரு subject-ஐ open பண்ணி சொல்லியிருக்கிறார். என்னவென்று அமைச்சர் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் notice எதுவும் கொடுக்கவில்லையே! ஒவ்வொருவரும் அதையே சொல்லிக் கொண்டிருந்தீர்கள் என்றால் நேரமாகிறது. (குறுக்கீடு) அதையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது பதில் சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்) அவர் raise பண்ணினார், நீங்கள் notice எதுவும் கொடுக்கவில்லையே! திரு. சிவபுண்ணியம், நீங்கள் notice எதுவும் கொடுக்காமல் எப்படி raise பண்ணுகிறீர்கள்? மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பதில் சொல்வதாக இருந்தால், சொல்லுங்கள். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே பேசிய பிரச்சினையின்மீது, அரசின் சார்பில் வந்திருக்கிற தகவலை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 20-4-2010 அன்று காலை 6½ மணியளவில் வேலூர் மத்திய பெண்கள் சிறையினுடைய Superintendent அவர்களும், அவரோடு அதிகாரிகளும், வழக்கமாகச் செய்கின்ற check-up-க்காகப் போய் பார்த்திருக்கிறார்கள். நளினி அவர்கள் இருந்த அறையை, அவர்கள் சோதனையிட்டபொழுது துணிப் பையில் ஒரு செல்ஃபோன் மறைத்து வைத்திருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதை அதிகாரிகள் எடுக்க முற்பட்டபொழுது, அவர் வேகமாக, அதிகாரி கையில் இருந்து பிடுங்கி பக்கத்தில் இருந்த கழிவறையில் போட்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

[2010 ஏப்ரல் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், நீங்கள் எல்லாம் எனக்குச் சொல்லித் தரவேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லித் தரவேண்டாம், எனக்குத் தெரியும். எல்லாம் தெரியும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன் அல்லவா? அந்த subject சம்பந்தமாக அவர்தான் முதலில் raise பண்ணினார். நீங்களும் அதே subject-ஐ open பண்ணுவதாக இருந்தால், முன்பே நீங்கள் எழுதிக் கொடுத்திருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) என் அனுமதி இல்லாமல் எழுப்ப முடியாது, உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, zero hour-இல் யார் உங்களிடம் அனுமதி பெற்றார்களோ அவர்கள்தான் எழுப்பலாம். அதையொட்டி எல்லோரும் பேசமுடியாது. ஆகையினாலே என்னுடைய கருத்தை நான் சொல்லிவிடுகிறேன். உடனே Deputy Jailor ஓடிப் போய் கழிவறையிலே வீசப்பட்ட அந்த செல்ஃபோனை எடுத்து மீட்டிருக்கிறார்கள். அது தண்ணீரில் நனைந்திருக்கிறதா அல்லது அது வேலை செய்கிறதா என்று பார்ப்பதற்கு அதைப் பழுதுபார்க்கும் நிறுவனத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், நான்கு ஆண்டுக்காலமாக அதில் பேசியிருக்கிறார்கள் என்று சொன்னார். அப்படிப்பட்ட தகவல் இன்னும் வரவில்லை. அப்படி இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். அந்த செல்ஃபோனை analyse செய்து பார்த்தால்தான், அந்த sim card-இல் இருந்து யார் யாரோடு பேசியிருக்கிறார்கள் என்று தெரியவரும். தெரிந்தால், நாங்கள் அதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

முற்பகல் 10-40

அந்த செல்ஃபோன் மட்டுமின்றி இரண்டு sim card-களும் கிடைத்திருக்கின்றன. அதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். இரண்டாவதாக, அவர் சொன்னதைப்போல, இதுவரையில் பல சிறைச்சாலைகளில் செல்ஃபோன்களும், sim card-களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. ஆனால், வேலூர் பெண்கள் மத்திய சிறையில் இதுவரையில்

2010 ஏப்ரல் 21] [திரு. துரைமுருகன்]

அப்படிப்பட்ட புகார்கள் வந்ததுமில்லை; செல்ஃபோனோ, sim card-ஓ கைப்பற்றப்பட்டதுமில்லை. இதுதான் முதன்முறை. இதுவரையில் மற்ற சிறைச்சாலைகளிலெல்லாம் இப்படிச் செய்திருக்கிறார்களே, அவர்கள்மீது இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அவர் கேட்டார். இந்த ஆட்சியில் 1-1-2006 முதல் 10-3-2010 வரையில் செல்ஃபோன்கள், கஞ்சா, இதுபோன்றவை கடத்தியதற்காக அரசாங்கம் அதையெல்லாம் தீவிரமாக check-up செய்து நடவடிக்கை எடுத்திருக்கிறது. செல்ஃபோன் இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிப்பதற்காக செல்ஃபோன் கண்டறியும் கருவி ஒன்று, கஞ்சா போன்ற பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதைக் கண்டுபிடிப்பதற்காகப் பன்முக உலோகம் கண்டறியும் கருவி, இவற்றைக் கொடுத்திருக்கிறோம். இவற்றின்மூலமாக 19 சிறைப் பணியாளர்கள்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். 5 பணியாளர்கள்மீது கிரிமினல் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். 195 சிறைவாசிகளுக்குச் சிறைத் தண்டனையே தந்திருக்கிறோம். 60 சிறைவாசிகள்மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 7 வெளி நபர்கள்மீதும் இத்தகைய கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவுதான் அக்கறை காட்டி, இப்படிப்பட்ட பொருட்கள் உள்ளே போகாமல் தடுப்பதற்கு, அரசாங்கம் எத்தனையோ திட்டங்கள் சட்டங்கள் போட்டுச் செய்தாலும், திட்டம் போட்டு, அவற்றை மீறுகின்ற கூட்டம் ஒன்று செய்துகொண்டுதான் இருக்கிறது. ஆகவே, செல்ஃபோனோ, sim card-ஓ இத்தகைய பொருட்கள் உள்ளே போகாமல் இருப்பதற்கு அரசாங்கம் மிகுந்த கவனத்தோடு பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற அறிவுரையை அடிக்கடி சிறை அதிகாரிகளுக்குத் தந்துகொண்டிருக்கிறது.

(அ) மின் நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிலக்கரியின் சாம்பலைத் தனியார் சிமென்ட் ஆலைகளுக்குக் குறைந்த விலையில் வழங்குவதால் அரசுக்கு ஏற்படும் நட்டம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 219-ன்கீழ் (குறுக்கீடு) செல்வி பாலபாரதி, சொல்லுங்கள். வேறு சப்ஜெக்டா? அல்லது இதுபற்றித்தானா? (குறுக்கீடு) நீங்கள் காலையிலேயே என் அறைக்கு வந்தீர்கள் இல்லையா? என்ன விஷயம் என்று என்னிடம்

4. உரிமை மீறல் பிரச்சினை

கரும்புக்குக் கொள்முதல் விலை வழங்குவது பற்றி முந்தைய ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில், தமது மானியக் கோரிக்கைக்கான பதிலுரையில் தவறான தகவல் தந்ததாக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்மீது—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி எண் 219-ன்கீழ் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்மீது உரிமை மீறல் பிரச்சினை குறித்து அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், எதிர்கட்சித் துணைத் தலைவர், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. ஆக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் 15-4-2010 அன்று அறிவிப்பு ஒன்றை என்னிடம் கொடுத்துள்ளார்கள். அந்த அறிவிப்போடு சில ஆவணங்களையும் கொடுத்துள்ளார்கள். இந்த அறிவிப்பின் நகல் ஒன்றும், ஆவணங்களின் நகல்களும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்குப் பேரவைச் செயலகத்தின்மூலமாக ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளன. இப்பிரச்சினை அவையின் உரிமை மீறலுக்கு உட்பட்டுள்ளதா என்பதை நான் அறிவிப்பதற்கு முன், முதலில் இதுகுறித்து அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்களில் யாரேனும் ஒருவர் தனது கருத்தைத் தெரிவிக்கலாம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.*

முற்பகல் 10-45

***திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12-4-2010 அன்று மாண்புமிகு உறுப்பினர் பாண்டுரங்கன் பேசுகிறபோது, குறுக்கிட்டு 'உங்கள் ஆட்சிக் காலத்தில் 745 ரூபாய்க்கு மேலே ஒரு பைசாகூட கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை' என்று வலியுறுத்தி அமைச்சர் அவர்கள் இங்கே கருத்துகளை வெளிப்படுத்தினார்கள். இதற்கு என்ன காரணம் என்று சொன்னால், தென்னிந்திய சர்க்கரை ஆலை அதிபர்கள் சங்கம் தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 1996 ஆம் ஆண்டில், அரசு அறிவித்த பரிந்துரை விலையை வழங்க முடியாது என்று. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

[2010 ஏப்ரல் 21

***மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர், இந்நாள் எதிர்க்கட்சித் தலைவர்மீது நான் ஏற்கெனவே ஓர் உரிமை மீறல் பிரச்சினையைக் கொடுத்திருந்தேன். அது என்னவாயிற்று என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.ஏ. செங்கோட்டையன், பேசுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள். இது என்ன நியாயம்? (குறுக்கீடுகள்) இது எப்படி நியாயம் என்று கேட்கிறேன்? ஓர் உறுப்பினர் பேசுகிறபோது அமைச்சர் எழுந்து நின்று எந்த subject-ஐப் பேசுகிறார், இந்த subject-ஆக இருந்தால் பரவாயில் லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.ஏ. செங்கோட்டையன், நீங்கள் பேசுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: அதை அவைக் குறிப்பிலிருந்து முதலில் நீக்குகிறீர்களா இல்லையா? (குறுக்கீடுகள்) அதை நீக்க வேண்டும். (குறுக்கீடுகள்) அது என்ன நியாயம்? நீங்கள் பேசுவதற்கு என்னை அனுமதித்திருக்கிறீர்கள். நான் பேசிக் கொண்டிருக்கிறேன். அவர் குறுக்கே எழுந்து நின்றுகொண்டு பேசுகிறார். அது இந்த subject இல்லை. வேறு subject பேசுகிறார். (குறுக்கீடுகள்) அவர் பங்குக்கு எழுந்து சொன்னால் என்ன அர்த்தம்? இதேபோல subject இல்லாமல் பேசினால். . .

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்த உரிமை மீறல் பிரச்சினை என்னவாயிற்று என்பதைப் பேரவைத் தலைவரிடம் தெரிந்துகொள்வதற்காக நான் கேட்டேன். அது என்னுடைய உரிமை.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: இல்லை. அதைப் பிறகு கேளுங்கள், தவறில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, அதைப் பிறகு கேட்கலாம். (குறுக்கீடுகள்) இப்பொழுது அதை சபைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், நான் உங்களைப் பேசச் சொல்லியாகிவிட்டது, பேசுங்கள். (குறுக்கீடு)

2010 ஏப்ரல் 21]

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: அவர் பேசியதை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அமைச்சரைப் பேசக் கூடாது என்று நான் சொல்ல முடியாது.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: அவர் subject இல்லாமல் பேசினால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் சொல்வதைக் கேளுங்கள். அவர் என்ன சொல்ல வேண்டுமோ, அதைச் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) உட்கார்ந்துவிட்டார். திரும்ப நான் உங்களைப் பேசுங்கள் என்று சொல்லிவிட்டேன், பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வழங்கியிருக்கிறேன்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: ஆமாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அமைச்சர் குறுக்கிட்டு, ஒரு சில கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: இதில் என்ன கேள்வி கேட்டார்? இந்த subject-க்கு உட்பட்ட கேள்வியா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்குப் பிறகு நான் உங்களைப் பேசுங்கள் என்று சொல்லியிருக்கிறேன், இல்லையா?*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: இந்த subject-க்கு உட்பட்ட கேள்வியா என்று நான் கேட்கிறேன். (குறுக்கீடு) அப்போது எதை வேண்டுமானாலும் சொல்லலாமா? யார் வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும், என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டிருக்கலாமா? சட்டமன்றமா, என்ன இது? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேச அனுமதித்ததற்குப் பிறகு இவ்வளவு பேரும் நிற்பது தேவையா?*

[2010 ஏப்ரல் 21

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் இப்போது எழுப்புகின்ற பிரச்சினை பற்றி எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. நான் உங்களிடம் கேட்பது, நான் கொடுத்த உரிமை மீறல் பிரச்சினை என்னவாயிற்று என்பதைத் தெரிந்துகொள்வதற்காகத்தான் கேட்டேன். அது என்னுடைய உரிமை. அதில் தலையிட யாருக்கும் எந்த உரிமையும் கிடையாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ.ம. வேலுசாமி, (குறுக்கீடுகள்) திரு. செ.ம. வேலுசாமி, 'போடா, வாடா' என்று பேசினீர்கள் என்றால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும், ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) இந்த மாதிரியான வார்த்தைகளையெல்லாம் அவையிலே உபயோகித்தீர்கள் என்றால், நடவடிக்கை எடுக்க வேண்டி வரும், ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வப்போது நீங்கள். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் பெயரைச் சொல்லிக் கூப்பிடவில்லை, எழுந்து நிற்கத் தேவையில்லை, உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: அவ்வப்போது நீங்கள் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும், அதேபோல எதிர்க்கட்சிகளுக்கும் வாய்ப்புகளை வழங்குகிறீர்கள். அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கின்றபோது அவர்கள் பேசுகின்றார்கள். எங்களுக்கு வாய்ப்பு தருகின்றபோது, நாங்கள் கேட்கிறோம். ஆனால், அதேநேரத்திலே அந்தப் பின் வரிசையிலேயிருந்து 'வாடா, போடா' என்ற அருவருக்கத்தக்க, ஆபாசமான வார்த்தைகளையும், கையை நீட்டி, மிரட்டுவது போன்றும் பேசுகின்றார்களே? இதையெல்லாம் நீங்கள் எப்படி அனுமதிக்கின்றீர்கள்? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையனை நான் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன், யார் பேசுகிறார்?

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: அன்றைக்குக்கூட அப்படித்தான் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினர் நேரடியாக

2010 ஏப்ரல் 21] [திரு. பரிதி இளம்வழுதி]

வந்து மாண்புமிகு அமைச்சரைப் பார்த்து 'வாடா வெளியிலே' என்று கூப்பிடுகிறார். அன்றைக்கே நான் கேட்டேன். இந்த அவையை ஒழுங்காக நடத்த வேண்டும். அவையில் ஒழுங்கீனமாக நடப்பதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சின்னசாமி, யார் பேசுகிறார் என்பது தெரியாது என்று நினைத்துக்கொண்டு ஒளிந்துகொண்டு பேசாதீர்கள். எனக்குத் தெரிகிறது. (குறுக்கீடுகள்) திரு. கே.ஏ. செங்கோட்டையன், பேசுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவருடைய அனுமதி பெற்றுத்தான் இந்தப் பிரச்சினையை நான் பேசிக் கொண்டிருக்கிறேன். இடையிலே அமைச்சர் பேச வேண்டுமென்று சொன்னால், இந்தப் பொருள் குறித்துத்தான் பேச வேண்டுமே தவிர, உங்களிடத்திலே பேசுவதற்கு அவருக்கு வாய்ப்பிருக்கிறது. அதற்கு முன்னாலே சொல்வதற்கு வாய்ப்பு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் subject-க்குப் போங்கள் என்றால் என்னவெல்லாமோ பேசிக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) subject-ஐப் பேசுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: subject-ஐப் பேசுங்கள் என்று அவரிடம் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் subject-ஐப் பேசுங்கள்

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: என்ன வேண்டுமானாலும் அவர் பேசலாம் என்றால், பிறகு நாங்களும் பேசலாம் என்றால், நீங்கள் என்ன control செய்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களைத்தான் பேசச் சொல்லியிருக்கிறேன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: பிறகு அவரை ஏன் பேசுவதற்கு அனுமதித்தீர்கள், இந்த subject இல்லாமல்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசுவதாக இருந்தால் பேசுங்கள். இல்லையென்றால் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர், அவர் பேசி முடிக்கட்டும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், பேசுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, continue செய்ய வேண்டியிருக்கிறது. அதனால் இடையிலே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் subject-க்குள்ளே பேசுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: பேசுகிறேன். அவர் subject இல்லாமல் பேசினார். அதையெல்லாம் கேட்க மாட்டீர்கள்; அவரைக் கேட்க மாட்டேன் என்கிறீர்கள். எங்களைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-50

தென்னிந்திய சர்க்கரை ஆலை அதிபர்கள் சங்கத்தின் சார்பாக அரசு அறிவித்த பரிந்துரை விலையை வழங்க முடியாதென்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள். 1996ஆம் ஆண்டு அந்த வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கைத் துரிதப்படுத்த வேண்டுமென்று 1996-இல் இருந்து 2001 வரை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் முயற்சிகள் மேற்கொள்ளவில்லை. அதேபோல, இந்திய சர்க்கரை ஆலை அதிபர்கள் சங்கத்தின் சார்பாக டெல்லி உச்ச நீதிமன்றத்திலும் வழக்குகள் தொடரப்பட்டன. இரண்டு வழக்குகளையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, இரண்டையும் ஒன்றாக இணைத்து உடனடியாக விவசாயிகளுடைய நலனைக் கருத்தில் கொண்டு, சர்க்கரை ஆலை அதிபர்கள் போட்டிருக்கிற வழக்கில் உடனடியாக ஒரு தீர்வு காணவேண்டுமென்று நம்முடைய தலைமை வழக்கறிஞர் அவர்களை அனுப்பி, உச்ச நீதிமன்றத்திலே வாதாடி, 2005-இல் அதை வெற்றி பெறச் செய்து, தமிழகத்தின் வரலாற்றில் இடம் பெற்றவர் *புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல; அந்த வழக்கு முடிந்ததற்குப் பிறகு, சர்க்கரை ஆலை அதிபர்களையும் விவசாயிகளையும் அழைத்துப் பேசி, ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென்று விவசாயிகள் வேண்டுகோள் விடுத்தபோது,

2010 ஏப்ரல் 21] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

1014 ரூபாய் வழங்கலாம் என்று ஆணையிட்டவர் நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, "உங்கள் ஆட்சிக் காலம் முடிவடையும் வரையிலும், நீங்கள் வழங்கியது மத்திய அரசு பரிந்துரை விலை 745 ரூபாய் மட்டும்" என்று குறிப்பிட்டு, தவறான ஒரு செய்தியை இந்தச் சட்டமன்றத்திலே தெரிவித்திருக்கிறார். அதனடிப்படையிலேதான், எங்களுடைய ஆட்சிக் காலத்தில் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் எம். இராமசாமி என்பவருக்கு 1-4-2006-ல் ரூபாய் 1014 வழங்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நாங்கள் குறிப்பையும் வழங்கியிருக்கிறோம். அதைப்போல எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலும் சொக்கலிங்கம் என்பவருக்கு 1075 ரூபாய் 60 பைசா வழங்கப்பட்டிருக்கிறது 1-1-2006-இல் என்பதையும் நாங்கள் உங்களிடத்திலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறோம். அதேபோல திருத்தணியிலே இருக்கிற கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் கோவிந்தராஜ் என்பவருக்கு 10-4-2006-இல் வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது ஒரு ரூபாய்கூட கொடுக்கவில்லையென்று ஒரு தவறான செய்தியை முந்தைய ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்துகிறவகையில், 'விவசாயிகளுக்கு நீங்கள் செய்யவேயில்லை' என்று இந்தச் சபையிலே, இங்கே ஒரு தவறான தகவலைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்கள், தவறு ஏற்பட்டால் விஜயகுமார் போன்றவர்மீது அதற்குரிய நடவடிக்கையை எடுத்தீர்கள்; அந்தத் தீர்ப்பு போல, அமைச்சர்மீது நீங்கள் எடுக்கப் போகிறீர்களா? ஒரு தவறான தகவலைத் தெரிந்தே அமைச்சர் சொல்லியிருக்கிறார். கரும்பு விவசாயிகளுக்கு உங்கள் ஆட்சிக் காலத்திலே வெறும் 745 ரூபாயைத் தவிர கொடுக்கவில்லை என்று உறுதிப்பட இங்கே தெரிவித்திருப்பது இந்தச் சபையின் மரபிற்கேற்றதாக இல்லை. இது உரிமை மீறிய செயலாக இருக்கிறது. உங்கள் தீர்ப்பைப் பொறுத்தவரையில் எங்களுக்கு வழங்கிய தீர்ப்பைப்போல அவர்களுக்கும் வழங்குவீர்களா என்பதை நாடு அறிந்துகொள்ள இருக்கிறது என்பதை வலியுறுத்தி அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

[2010 ஏப்ரல் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு அ.இ.அ.தி.மு.க சார்பில் என்மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்பட்டுள்ளது. மாண்புமிகு பேரவை உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள், அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கரும்பு விவசாயிகளுக்கு நல்ல விலை கொடுத்ததாகவும், அதை நான் மறைத்து இந்த அவையில் தெரிவித்ததாகவும் சொல்லி, உரிமைப் பிரச்சினை கொண்டு வந்திருக்கின்றார்.

முற்பகல் 10-55

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், அதுவும், நான் தொடர்ந்து வேளாண்மைத் துறை அமைச்சர் என்ற முறையில் தெரிவித்துக்கொள்வது, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மத்திய அரசாங்கம் நிர்ணயித்த விலையைவிட அவர்கள் 2001-2002-இலேயிருந்து 2004-2005 ஆம் ஆண்டு வரை கூடுதலாக ஏதும் வழங்கவில்லை என்பதைத் தெளிவாகச் சொல்லியிருந்தாலும், இங்கு உரிமைப் பிரச்சினை கொண்டு வந்த காரணத்தினாலே சில விளக்கங்களைத் தர நான் விரும்புகின்றேன்.

1996-2001 ஆம் ஆண்டு வரை திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கும்வரை ஒவ்வோர் ஆண்டும் மத்திய அரசாங்கம் நிர்ணயிக்கின்ற விலையோடு, மாநில அரசாங்கம் பரிந்துரை விலையாகச் சேர்த்து கரும்பு விவசாயிகளுக்கு ஒரு டன்னுக்கு இவ்வளவு தொகை என்று நாங்கள் கொடுத்து வந்திருக்கின்றோம். அதுவும், மத்திய அரசாங்கம் விலையை நிர்ணயிக்கிறபோது 8.5 சதவிகிதம் என்றால் அதற்குமேல் ஒவ்வொரு பூஜ்யம் புள்ளி ஒன்று கட்டுமானத்திற்கும் இவ்வளவு தொகை என்று ஒவ்வோர் ஆண்டும் அறிவிக்கிறார்கள். அந்த அடிப்படையிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருந்தோம். 2000-2001 ஆம் ஆண்டு மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட விலை, ஒரு டன் கரும்புக்கு ரூ.595/- என்றும், கூடுதலாக ஒவ்வொரு பூஜ்யம் புள்ளி ஒன்று கட்டுமானத்திற்கும் ரூ.7/- என்றும் அறிவித்தது. அப்பொழுது மாநில அரசாங்கத்தின் சார்பாகப் பரிந்துரை விலையாக 180 ரூபாய் சேர்த்து, ஒரு டன் கரும்புக்கு ரூ.775/- என்று வழங்கப்பட்டது.

2010 ஏப்ரல் 21] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

அந்த ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், அப்போது அமைச்சரவையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 10 சதவிகிதம் சர்க்கரை கட்டுமானம் உள்ள ஒவ்வொரு டன் கரும்புக்கும் ரூ.1,000/- என்று வழங்குவது என முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. அந்த ஆண்டில் அமராவதி, தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை இரண்டிலும் 1,000 ரூபாய் வழங்கப்பட்டது. பிறகு தேர்தல் வந்தது. 2001 தேர்தலிலே அ.தி.மு.க. ஆட்சிக்கு வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அரசு, 19-11-2001 அன்று அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி, மாநில அரசு பரிந்துரை விலையைச் செய்வதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. அப்படி தீர்மானிக்கப்பட்ட பிறகு, எப்படி அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே மத்திய அரசாங்கம் அறிவித்த விலையைவிடக் கூடுதலாகத் தந்திருப்பார்கள் என்று பேரவையினுடைய கவனத்திற்கு நான் இங்கு கொண்டு வர விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதனால் தொடர்ந்து 2001-2002 ஆம் ஆண்டு மத்திய அரசு அறிவித்த சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலை, 8.5 சதவிகிதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஒரு டன் கரும்புக்கு ரூ.620.50 என்றும், 0.1 கூடுதல் கட்டுமானத்திற்கு ரூ.7.30 எனவும் அறிவித்ததை மட்டுமே அ.தி.மு.க. அரசு வழங்கியது. அதைப்போலவே, 2002-2003 ஆம் ஆண்டுக்கு மத்திய அரசு சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலையாக 8.5 சதவிகிதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஒரு டன் கரும்புக்கு நிர்ணயித்த தொகை ரூ.695/-. ஒவ்வொரு கூடுதல் 0.1 கட்டுமானத்திற்கும் ரூ.8.20 என அறிவிக்கப்பட்டது. இதுமட்டுமே அந்த ஆண்டும் வழங்கப்பட்டது.

முற்பகல் 11-00

2003-2004 ஆம் ஆண்டில் மத்திய அரசு சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலையாக 8.5 சதவிகிதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஒரு டன் கரும்புக்கு நிர்ணயித்த தொகை ரூபாய் 730/-. ஒவ்வொரு கட்டுமானத்திற்கும் ரூபாய் 8.50 வீதம் என மத்திய அரசாங்கம் அறிவித்தது. அந்தத் தொகை மட்டும்தான் 2003-2004 ஆம் ஆண்டும் வழங்கப்பட்டிருக்கிறது.

2004-2005 ஆம் ஆண்டில் மத்திய அரசு சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலையாக, 8.5 சதவிகிதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஒரு டன் கரும்புக்கு நிர்ணயித்த தொகை ரூபாய் 745/-.

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [2010 ஏப்ரல் 21
ஒவ்வொரு கட்டுமானத்திற்கும் ரூபாய் 8.80 என அறிவிக்கப்பட்டது மட்டுமே 2004-2005 ஆம் ஆண்டிலும் வழங்கப்பட்டது.

2005-2006 ஆம் ஆண்டு கரும்பு அரைவைப் பருவத்திற்கு மத்திய அரசு 8.5 சதவிகிதத்திற்கு மாறாக 2005-2006 ஆம் ஆண்டில் 9 சதவிகிதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஒரு டன் கரும்புக்கு ரூபாய் 795 என நிர்ணயித்தது. இந்த ஆண்டுதான் மாநில அரசு பரிந்துரை விலையாக, 9 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானத்திற்கு, மத்திய அரசின் விலையோடு ரூபாய் 219-ஐச் சேர்த்து, ரூபாய் 1,014 என 21-9-2005-இல் அறிவித்தது. தேர்தல் அறிவிப்பு வந்த நேரம். 2006 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கான அறிக்கை 13-4-2006-இல் தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டது. அதன்படி, தேர்தல் 8-5-2006 அன்று தமிழகத்திலே நடைபெற்றது.

ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதம் கரும்பு அரைவை தொடங்கி மே மாதம் வரை அரைவை நடைபெறும். தென்னிந்திய சர்க்கரை ஆலை அதிபர்கள் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார். அவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்திலே அப்போது வழக்கு தொடர்ந்தபோது, மாநில அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலையை நாங்கள் கொடுக்கமாட்டோம் என்று, 2001 இலே அவர்கள் சொன்னது உண்மை. உயர் நீதிமன்றத்திலே வழக்கு போட்டது உண்மை. உயர் நீதிமன்றம், அப்படி ஆலைகளைக் கட்டாயப்படுத்தக்கூடாது என்று சொன்னபோது, ஒரு இடைக்கால தடை உத்தரவு வழங்கியபோது, உடனடியாக நாங்கள் நமது மாநில அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய கூட்டுறவு, பொதுத் துறை ஆலைகள், தொடர்ந்து மத்திய அரசாங்கம் நிர்ணயிக்கின்ற விலையோடு மாநில அரசாங்கம் நிர்ணயிக்கின்ற விலையையும் சேர்த்துக் கொடுக்கலாம் என்று கூட்டுறவு, பொதுத் துறைக்கு வழங்கி வந்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த முறையை நீங்கள் ஏன் பின்பற்றவில்லை என்பதுதான் இங்கே வைக்கப்படுகின்ற கேள்வியாக நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஆகவே, ஏதோ உச்ச நீதிமன்றத்திற்கு இவர்கள் போனதாகச் சொல்கிறார்கள். அ.தி.மு.க. சார்பிலே, அந்த அரசின் சார்பிலே போகவில்லை. அலகாபாத்திலே உள்ளவர்கள் உச்ச நீதிமன்றத்திலே இதுபோன்ற ஒரு வழக்கைத் தொடர்ந்தார்கள். பிறகு உத்தரப்பிரதேசத்திலே இருப்பவர்கள் உச்ச நீதிமன்றத்திலே ஒரு வழக்கைத் தொடுத்தார்கள். அப்போது அந்த எல்லா வழக்குகளும்

2010 ஏப்ரல் 21] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

உச்ச நீதிமன்றத்திற்குக் கொண்டுசென்று, உச்ச நீதிமன்றத்திலேதான் அந்த முடிவு எடுக்கப்பட்டு, 2004 ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கினார்கள். 5-5-2004-இல் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் மாநில அரசாங்கம் பரிந்துரை விலை செய்யலாம் என்று தீர்ப்பு வழங்கியது.

இந்தத் தீர்ப்பு கிடைத்து ஓராண்டு நான்கு மாதம் வரை, அ.தி.மு.க. அரசு நடைமுறைப்படுத்தாமல் இருந்து வந்துள்ளது. உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது 5-5-2004. அதே ஆண்டுக்குள் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்று கருதி, மாநில அரசு பரிந்துரை விலை அறிவித்திருந்தால் விவசாயிகள் பயன்பெற்றிருப்பார்கள். ஆனால், அ.தி.மு.க. அரசு விவசாயிகளுக்கு வழங்க ஆணை வெளியிட்ட நாள் 21-9-2005 ஆகும். இந்த ஆணை 2005-2006 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குமேல் கரும்பு அரைவை செய்யப்படும் பருவத்திற்குத்தான் பொருந்தும். இந்தக் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் 31-5-2006 முடிய அரைவை செய்யப்பட்ட 59.06 இலட்சம் மெட்ரிக் டன் கரும்புக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபாய் 54.60 கோடியாக இருந்தது.

முற்பகல் 11-05

13-5-2006 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் 2006-2007 ஆம் ஆண்டுக்கு 9 சதவீத சர்க்கரைக் கட்டுமானமுள்ள ஒரு டன் கரும்புக்கு மத்திய அரசின் சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலையாக ரூபாய் 802.50-உம், ஊக்கத் தொகையாக ஒவ்வொரு கட்டுமானத்திற்கும் ரூபாய் 9 வீதமும் அறிவித்தது. திராவிட முன்னேற்றக் கழக அரசால் மாநில அரசு பரிந்துரை விலையாக ரூபாய் 222.50-ஐச் சேர்த்து 2006-2007 ஆம் ஆண்டு ரூபாய் 1,025 வழங்கப்பட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அந்த ஆண்டுதான் வண்டி வாடகையாக, நம்முடைய முதலமைச்சர் 90 ரூபாயைக் கரும்பு ஒரு டன்னுக்குக் கூட்டியும் தந்தார்கள்.

2007-2008 ஆம் ஆண்டு 9 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானமுள்ள ஒரு டன் கரும்புக்கு மத்திய அரசின் சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலையான ரூபாய் 811.89 உடன் ஒரு கட்டுமானத்திற்கு ரூபாய் 9 அறிவித்தது. மாநில அரசின் பரிந்துரை விலையாக நான்

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [2010 ஏப்ரல் 21

முன்பு சொன்னதைப்போல ரூ. 222.20-ஐக் கூட்டி 1,034 ரூபாய் என்றும், ஒவ்வொரு சதவீதம் கூடுதல் கட்டுமானத்திற்கு ரூபாய் 9 வீதமும், வாகன வாடகையாக ஒரு டன்னுக்கு 90 ரூபாய் வழங்கப்பட்டது.

2008-2009 ஆம் ஆண்டு 9 சதவீதம் கட்டுமானமுள்ள ஒரு டன் கரும்புக்கு மத்திய அரசு சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலையாக எவ்வித மாற்றமுமின்றி ரூபாய் 811.80 என அறிவித்தது. இத்துடன் மாநில அரசின் ஊக்கத் தொகையாக ரூபாய் 288.20-ஐச் சேர்த்து மாநில அரசின் பரிந்துரை விலை ரூபாய் 1,100 எனவும், ஒவ்வொரு 0.1 சதவீதம் கூடுதல் கட்டுமானத்திற்கு ரூபாய் 9 வீதமும் சேர்த்து, வாகன வாடகையாக ரூபாய் 90-ஐயும் சேர்த்து ஆக மொத்தம் 1,220 ரூபாய் வழங்கப்பட்டது.

2009-2010 ஆம் ஆண்டு 9 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானமுள்ள ஒரு டன் கரும்புக்கு மத்திய அரசின் சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலையாக ரூபாய் 1,077.60 என நிர்ணயித்தது. இத்துடன் மாநில அரசு, பரிந்துரை விலையாக ரூபாய் 359.80-ஐக் கூட்டி ஒரு டன் கரும்புக்கு ரூபாய் 1,437.40 எனவும், ஒவ்வொரு கட்டுமானத்திற்கு ரூபாய் 11.30 வீதமும் சேர்த்து, வாகன வாடகையாக டன் ஒன்றுக்கு ரூ. 90-ஐயும் சேர்த்து மொத்தமாக 2009-2010 ஆம் ஆண்டுக்கு ரூபாய் 1,550 வழங்கப்பட்டது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், ஏற்கெனவே உறுப்பினர் சொல்ல வேண்டிய கருத்துகளையெல்லாம் சொல்லி முடித்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போது இடையூறு செய்யாதீர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மேலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 100-ஐக் கூட்டி, டன் ஒன்றுக்கு ரூபாய் 1,650 வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-10

நடப்பாண்டான, 2010-2011 ஆம் ஆண்டிற்கான கரும்பு அரைவைப் பருவத்திற்கு, 9.5 சதவிகிதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஒரு டன் கரும்பிற்கு 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று

2010 ஏப்ரல் 21] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

அறிவிக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லி வருவது, உங்கள் ஆட்சிக் காலத்தில், மத்திய அரசாங்கத்தின் பரிந்துரை விலைக்கு மேல் நீங்கள் வழங்கவில்லை என்பதை இப்பொழுதும் நான் இங்கே உறுதியாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் பேசியதில் எந்தவிதமான உரிமைப் பிரச்சினைக்கும் இடமில்லை. உண்மையைத்தான் நான் தெரிவித்திருக்கின்றேன். இப்பொழுதும் விளக்கமாக நான் தெரிவித்திருக்கிறேன் என்பதை எடுத்துச் சொல்லி, நீங்கள் உண்மைக்கு மாறான தகவலைச் சொல்லி, உங்கள் பக்கம் நியாயம் இருப்பதாக விவசாயிகள் நம்ப வேண்டுமென்ற அந்த முயற்சியில் ஈடுபடுவது, விவசாயிகள் மத்தியில் எடுபடாது என்பதை மட்டும் இங்கே எடுத்துச் சொல்லி, அமர்கிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு பக்கமும் கேட்கப்பட்டுவிட்டது. முடிவு பின்னால் அறிவிக்கப்படும். *(குறுக்கீடுகள்)* No, உட்காருங்கள்.

5. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

(ஆ) கோரிக்கை எண் 41–வருவாய்த் துறை

(இ) கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

(ஈ) கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

(அ) கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010-2011 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்

2010 ஏப்ரல் 21] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

அறிவிக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லி வருவது, உங்கள் ஆட்சிக் காலத்தில், மத்திய அரசாங்கத்தின் பரிந்துரை விலைக்கு மேல் நீங்கள் வழங்கவில்லை என்பதை இப்பொழுதும் நான் இங்கே உறுதியாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் பேசியதில் எந்தவிதமான உரிமைப் பிரச்சினைக்கும் இடமில்லை. உண்மையைத்தான் நான் தெரிவித்திருக்கின்றேன். இப்பொழுதும் விளக்கமாக நான் தெரிவித்திருக்கிறேன் என்பதை எடுத்துச் சொல்லி, நீங்கள் உண்மைக்கு மாறான தகவலைச் சொல்லி, உங்கள் பக்கம் நியாயம் இருப்பதாக விவசாயிகள் நம்ப வேண்டுமென்ற அந்த முயற்சியில் ஈடுபடுவது, விவசாயிகள் மத்தியில் எடுபடாது என்பதை மட்டும் இங்கே எடுத்துச் சொல்லி, அமர்கிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு பக்கமும் கேட்கப்பட்டுவிட்டது. முடிவு பின்னால் அறிவிக்கப்படும். *(குறுக்கீடுகள்)* No, உட்காருங்கள்.

5. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்–*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

(ஆ) கோரிக்கை எண் 41–வருவாய்த் துறை

(இ) கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

(ஈ) கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

(அ) கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010-2011 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்

கணக்கில் ரூ.98,13,02,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.13,06,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 41, திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.98,13,02,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 387, திரு. மா. ராஜசேகரன், அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3260, திரு. பெ.சு. விஜயகுமார், அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4867, திரு. அருள் அன்பரசு.

திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.98,13,02,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5768, திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.98,13,02,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7249, திரு. சு. சிவராஜ்.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.98,13,02,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1061, திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.98,13,02,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 101, திரு. வே. மாரிமுத்து.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகராட்சிகளிலும் குடிசை வீடுகளை அகற்றி வீட்டு வசதித் துறைமூலமாகக் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5001, திரு. ஆர். சாமி, அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5628, திரு. தா. மலரவன்.

திரு. தா. மலரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீட்டு வசதி வாரியக் குடியிருப்பிலுள்ள வீடுகளுக்குப் பராமரிப்பு வசதிகள் செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6412, திரு. பி. பலராமன்.

திரு. பி. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்ட தலைநகரங்களில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும், மக்கள் தொகை கணக்கீட்டின்படி, பொது மக்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளையும் பொறுத்து, சிறப்பு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6578, திரு. ஓ.கே. சின்னராஜ்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீட்டு வசதி வாரியத்தில், வீடுகளை ஒதுக்கீடு பெற்றவர்கள் தொகை முழுவதும் செலுத்திய பின்னரும் உரிய

ஆவணங்கள் வழங்காமல் இருப்பதைத் தடுத்து உடனுக்குடன் ஆவணங்களை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7018, திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேரூராட்சிகளில் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7168, திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் எதிர்க்காலத் தேவைகளைக் கணக்கிட்டு நிலத்தை மிச்சப்படுத்திட அடுக்குமாடிக் குடியிருப்புகளை, சிறு நகரங்கள் வரை கட்டும் நடைமுறையை உருவாக்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7195, திரு. கு. சீனிவாசன்.

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பூங்கா நகர் சட்டப் பேரவை தொகுதியில், கேசவபிள்ளை பூங்கா குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் புதிதாக கட்டப்பட்டு வருவது, காலதாமதமாவதைத் தடுத்து விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8142, திருமதி ஜி. லதா.

திருமதி ஜி. லதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; "கிராமிய வீட்டு வசதி சங்கங்கள் சிறப்பாகச் செயல்பட நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6451, திரு. ஞா. செந்தமிழன்.

திரு. ஞா. செந்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள வீடுகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளைச் சரிபார்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8452, திரு வை. காவேரி.

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடியில் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டு விற்பனையாகாமல் உள்ள வீடுகளை விலை குறைத்து விற்பனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8475, திருமதி ரா. லீமா ரோஸ்.

திருமதி ரா. லீமா ரோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கத்தில் கடன் பெற்ற ஏழையெளிய மக்களுக்கு வட்டியும், அசலும் தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8993, திருமதி ஆர். பிரேமா.

திருமதி ஆர். பிரேமா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அவினாசி தொகுதியில் வழங்கப்பட்ட வீட்டு வசதி கடன் வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9288, திரு. து. ரவிக்குமார், அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9586, திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராயபுரத்தில் உள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்பில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9621, திரு. செ. பொன்னுதுரை.

திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிப்காட் தொழில் வளாகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின்மூலமாக வீடுகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9902, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைவருக்கும் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வழங்கப்படும் வீட்டுக் கடனைக் குறைந்த வட்டியில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10179, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டப் பேரவை தொகுதியில் உள்ள ஜமுனாமரத்தூர் பகுதியில் வீட்டு வசதித் துறை வீடுகளைக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10346, திரு. ரா. வரதராஜன்.

திரு. ரா. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு பழுதடைந்துள்ளது; அதைப் புனரமைக்க வேண்டியதன் அவசியம்

குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10371, திருமதி ராணி வெங்கடேசன்.

திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை மாநகரைச் சுற்றி ஒரு பறக்கும் பாதை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிகக, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10446, திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டியில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 11544, திரு. எஸ். ராஜகுமார், அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11757, திரு. எல். ரவிச்சந்திரன்.

திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் ஒன்றாவது தொகுதியில் குடிசைகளில் வாழ்ந்துவரும் ஏழைக் குடும்பங்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 11956, திரு. பி. தங்கமணி.*

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு தொகுதி, பள்ளிப்பாளையம் தாஜ் நகர்ப் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு உடன் பத்திரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 12019, திரு. இ. மகேந்திரன்.*

திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டப்பட்டு, தற்பொழுது பழுதடைந்துள்ள குடியிருப்புகளைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்க்ண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *12154*, திரு. ந. சுப்ரமணியன்.

திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, இலுப்பூர் மற்றும் கீரனூரில் அரசு அலுவலர்கள் குடியிருப்பைக் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *12458*, திரு. வே. செந்தில் பாலாஜி, அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *12645*, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *12853*, திருமதி எஸ். தேன்மொழி.

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டை தொகுதியில் நகர்ப்புற மற்றும் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள்மூலம் மிகவும் ஏழையெளிய மற்றும் நடுத்தர மக்களுக்குக் குறைந்த வட்டியில் வீடு கட்ட கடனுதவி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *13052*, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *13318*, செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு முழுவதும் உள்ள, வீட்டு வசதி வாரியத்தின்மூலம் பெற்ற வீடுகளுக்கு, வட்டி, அபராத வட்டி தள்ளுபடி செய்து பத்திரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,00,72,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.949,89,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.125,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். முதலில், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

@ *219* முதல் *270* வரையிலான பக்கங்களில் இணைப்பு-I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

முற்பகல் 11-30

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்தபின், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று 4 மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் 4 மானியக்

@ 271 முதல் 331 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 332 முதல் 375 வரையிலான பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

கோரிக்கைகள்மீது சேர்த்தே பேசலாம். அதே நேரத்தில், 3 அமைச்சர்கள் தங்களின் பதிலுரைகளை வழங்கவுள்ளதால், நேரத்தின் அருமை கருதி ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய உரையை முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள்.

திரு. கோ. அரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவுற்ற நற்றமிழ் நாட்டை வலிமைப்படுத்தி வாழ்விக்க, நாளெல்லாம் சிந்திக்கும் நல்லவர்களின் உறைவிடம், கவலையுற ஆடவர்கள் நாளும் செய்யும் கணக்கற்ற ஊழல்களையெல்லாம், அந்த நவையற்ற பெண்களன்றோ விலக்குகின்றார் எனும் புரட்சிக் கவிஞரின் புதுவார்ப்பே, (மேசையைத் தட்டும் ஒலி) அச்சந்தனை அகற்றி, அகல் விளக்காய்ப் படர்ந்து, அக்கிரமங்களை அகற்ற, அறப் போர்களைத் தொடுத்து, அதர்மத்தை வீழ்த்த, தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு, சம்பாத்தியம், இவையுண்டு, தானுண்டு என வாழ்வோர் மையத்தில் தமிழுண்டு, தமிழருண்டு, தமிழர்தம் வாழ்வோடு தானுண்டு என்ற தூய உள்ளம், அன்பு உள்ளம், பெரிய உள்ளம், தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே எனும் தாயுள்ளம் தனிலன்றோ இன்பம் என வாழும் தமிழனத்தின் பாதுகாப்பே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) தங்களின் பொற்பாதங்களை வணங்கி என் உரையைத் துவக்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கம்.

நாட்டின் முதுகெலும்பாக அனைத்துத் துறைகளுக்கும் தாய்த் துறையாக விளங்குவது வருவாய்த் துறை. இந்தத் துறையின்மூலம்தான் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். பள்ளி மாணவ, மாணவியர் சாதிச் சான்று, முதியோருக்கான ஓய்வூதியம், ஆதரவற்றோர்களுக்கான ஓய்வூதியம், பட்டா வேண்டுதல், பட்டா மாற்றுதல், வாரிசு சான்று உள்ளிட்ட அனைத்தும் இந்தத் துறைமூலம்தான் பெறப்பட வேண்டியுள்ளது. ஆனால் இன்றைக்கு, இந்தத் துறையில் மக்கள் நாள்தோறும் அலைக்கழிக்கப்படுகின்ற நிகழ்ச்சி தொடர்ந்து கொண்டிருக்கிறது. தினந்தோறும் செய்தித் தாள்களைப் புரட்டினால், V.A.O. இலஞ்சம் வாங்கியதாகக் கைது, R.I. இலஞ்சம் வாங்கியதாகக் கைது என்றுதான் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இதற்குக் காரணமென்ன? எந்த மட்டத்தில் தவறு நடக்கிறது? போதுமான ஊழியர்கள் இல்லாமையாலும் இந்தத் தவறு நடப்பதால் வட்டாட்சியர்

அலுவலகங்களில் தினந்தோறும் மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வசதியாக, பணியாளர் பற்றாக்குறையை நீக்க இந்த அரசு முன்வர வேண்டும். சாதித் சான்றிதழா? மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் உடனுக்குடன் கிடைத்தது. மாணவர்கள் அல்லல்படுவது நிறுத்தப்பட்டது. இன்றைக்கு வருவாய்த் துறைமூலம் கொடுக்கப்படும் அனைத்துச் சான்றுகளும் காலதாமதம் செய்யப்படுவதால், ஊழலுக்கு வழிகாட்டியாக இந்தத் துறையின் நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் *11-35*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரையில் இந்த நேரத்தில் ஒன்றைக் குறுக்கிட்டுச் சொல்ல விரும்புகிறேன். சான்றிதழ் வழங்குவதற்காக, இதற்கு முன்பில்லாத அளவிற்குக் கூடுதல் அலுவலர்களை நியமித்து, அந்தப் பள்ளிக்கே சென்று சான்றிதழ் வழங்க ஏற்பாடு செய்த ஆட்சி, தலைவர் கலைஞர் ஆட்சி என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். மற்றவற்றை என்னுடைய பதிலுரையில் சொல்கிறேன்.

திரு. கோ. அரி: போதுமான கிராம நிருவாக அலுவலர்கள் இல்லாதது, தலையாரிகள் இல்லாதது போன்ற நிலைகளை மாற்றி, பணியிடங்களை உடனடியாகப் பூர்த்தி செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், வாரிசுச் சான்றிதழ் போன்றவற்றை, விண்ணப்பித்தவுடன் உடனே கொடுத்திடும் அந்தந்த ஊராட்சியின் கிராம நிருவாக அலுவலர்களுக்கு அதிகாரத்தை வழங்க வேண்டும்.

கிராம நிருவாக அலுவலர்களுக்கென்று அலுவலகம் இருப்பதுபோல், அவர்கள் அந்தந்த ஊராட்சிகளில் தங்கிப் பணி புரிய வேண்டுமென்ற உத்தரவை வழங்கி, கிராம நிருவாக அலுவலர்களுக்கு அந்தந்த ஊராட்சியில் குடியிருப்பு கட்டித் தர இந்த அரசு ஆவன செய்ய வேண்டும்.

R.D.O., D.R.O., போன்ற பதவிகளுக்கு நேரடியாக தேர்வாணையத்தின்மூலம் தேர்வு செய்வதுபோல்,

வட்டாட்சியரையும் தேர்வாணையத்தின்மூலம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம் மிகப் பெரிய ஒன்றியமாக உள்ளதால். அந்த ஒன்றியத்திற்கென்று வட்டாட்சியர் அலுவலகம் தனியாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

தீயினால் பாதிக்கப்பட்டோர் வீடு, உடைமைகள் இழந்துத் தவிக்கின்ற நிலையில், அரசு கொடுக்கும் பணம் எதற்கும் உதவாத நிலையில், அந்தக் குடும்பங்களுக்கு வீடு கட்டிக்கொள்வதற்கு சுமார் 50,000 ரூபாயாவது வழங்க அரசு முன்வர வேண்டும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் வட்டாட்சியர் அலுவலகங்களில் தொடுதிரைத் தகவல் மேடை நிறுவப்பட்டு, நிலம் சம்பந்தப்பட்ட தகவல்கள், பிறப்பு, இறப்பு சான்றுகள், முதியோர் உதவித் தொகை மற்றும் வறியோர் ஓய்வூதியம், நில மதிப்பீட்டுத் தகவல்கள், அரசுத் திட்டங்கள் பற்றிய தகவல்கள், பொது மக்கள் எளிதில் அறிந்துகொள்ளும் நிலை இருந்தது. இன்றைக்கு தொடுதிரைத் தகவல் மேடை பல இடங்களில் கேட்பாரற்ற நிலையில் இருக்கிறது. உடனே பொது மக்கள் பயன்பெற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மனு நீதி முகாம்களைப் பொறுத்தவரை, எந்த இடத்தில், எந்த ஊரில் நடத்தப்படுகிறது என்பதை--சட்டமன்ற உறுப்பினர் அந்த நிகழ்ச்சிக்கு வர முடியுமா என்றெல்லாம்கூட தேவையில்லை-- இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னால் தகவல் தெரிவித்தால், அந்த மனு நீதி முகாம்களில் கலந்துகொள்வதற்கு வசதியாக இருக்கும். இதை அரசு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்த வேண்டும்.

இதேபோன்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட, உழவர்தம் வாழ்வில் ஒளியேற்றிய உன்னதமான திட்டம், உழவர் பாதுகாப்புத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) கருவறை தொடங்கி, கல்லறை வரை பாதுகாப்பளித்த அந்தத் திட்டத்தின் பெயரை வேண்டுமானால். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருத்திக்கொள்ள வேண்டும். விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டுவந்தவர் எங்கள் தலைவர் கலைஞர். அதை 2001 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கொண்டுவந்தார்கள். நீங்கள் 4 ஆண்டுக் காலம் அதைக் கிடப்பிலே போட்டுவிட்டீர்கள். பின்னால், தேர்தல் வரப்போகிறது என்று 2005 ஆம் ஆண்டுதான் அதனுடைய பெயரை மாற்றி உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற திட்டத்தை அறிவித்தீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. கோ. அரி: ஆனால், உழவர்கள் மனதில் இருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களை நீங்கள் மறக்கச் செய்ய முடியாது என்பதை ஆணித் தரமாக இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அவையில் விலைவாசி உயர்வு பற்றிப் பேசும்போதெல்லாம், இருக்கின்ற அமைச்சர்கள், மக்களுக்கு வாங்கும் சக்தி அதிகரித்துவிட்டது, அதனால் விலைவாசி உயர்வால் பாதிப்பில்லை என்று சொல்கிறார்களே தவிர, மாண்புமிகு அம்மா ஆட்சியில் கொண்டுவரப்பட்ட உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்மூலம் கொடுக்கப்படுகின்ற, விவசாயி இறந்தால் ஒரு இலட்சம் ரூபாய், இரண்டு கைகள் இழப்பு என்றால் ஒரு இலட்சம் ரூபாய், தொழிற்கல்வி படிக்கின்ற மாணவராக இருந்தால் 2,250 ரூபாய், மாணவியராக இருந்தால், 2,750 ரூபாய், திருமண உதவித் தொகை ஆண் என்றால் 3,000 ரூபாய், பெண் என்றால் 5,000 ரூபாய், மகப்பேறு மற்றும் கருச் சிதைவு என்றால் 6,000 ரூபாய், இந்தத் தொகையை மட்டும் ஏன் இந்த அரசு உயர்த்திக்கொடுக்க முன்வரவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்த திட்டம் என்பதால், இன்றைக்கு இந்த அரசு இதைப் புறக்கணித்துக்கொண்டிருக்கிறது என்பதைக் குற்றச்சாட்டாக இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வருவாய்த் துறைமூலம் நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. ஆனால், நில உரிமையாளர்களுக்குப் போதிய கால அவகாசத்தில் அவர்களுக்கு உண்டான நில மதிப்பீட்டுத் தொகை வழங்குவதிலே காலதாமதம் செய்கிறது. இது வெந்தப் புண்ணிலே வேலைப்

பாய்ச்சுகிற செயலாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுனாமி ஆழிப் பேரலையின்போது, ஆழிப் பேரலையின் வேகத்தைவிட பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாகச் சென்று நிவாரணங்கள், இழப்பீடுகள் வழங்கி, அவர்தம் வாழ்வில் ஒளியேற்றியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) உலக நாடுகள் வியந்து பாராட்டுகின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் இதுபோன்று இயற்கை இடர்ப்பாடுகள், பேரிழப்புகள் ஏற்படாமல் இருக்க, அனைத்துக் கடலோர மாவட்டங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுத்ததுடன், மாணவ, மாணவியர்க்கு, 6-12-2004 அன்று பள்ளிப் பாடத்தில் இயற்கைப் பேரிடர் மேலாண்மையைப் பற்றிப் பாடமாகச் சேர்க்க உத்தரவிட்ட ஒரே தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இன்றைக்கு அதெல்லாம் என்னவாயிற்று என்றுகூட கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்படவில்லை. (குறுக்கீடு)

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம்தான் உங்களுடைய அரசு வழங்கியது. ஆனால், எங்கள் தலைவர் கலைஞர் ஐந்தாவது முறையாக ஆட்சிக்கு வந்தவுடனேயே, அதிலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு, 53,000 வீடுகள் கட்டித் தந்திருக்கிறார்கள்.

திரு. கோ. அரி: சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுடைய கடன்கள் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டுமென்று, மீனவர்கள் தரப்பில் மாண்புமிகு அம்மா அவர்கள் குரல் கொடுத்ததன் அடிப்படையில், தற்பொழுது அரசு, கடனைத் தள்ளுபடி செய்துவிட்ட நிலையில், 140 விசைப் படகு உரிமையாளர்கள் படகு கட்டுவதற்கு அரசு மானியம் வழங்கி, தற்போது அவர்களது விண்ணப்பங்கள் வங்கியில் நிலுவையில் உள்ள நிலையில் அவர்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்கின்ற வகையில், அவர்களுக்கு வழி செய்ய வேண்டுமென்பதை இந்த

நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு பல்வேறு கவர்ச்சிகரமான திட்டங்களை, மாயாஜால திட்டங்களைக் காட்டி ஆட்சிக்கு வந்துள்ளது என்பதை இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள்.

தி.மு.க.-வின் தேர்தல் அறிக்கையில் கூறியவற்றையெல்லாம் செய்து முடித்துவிட்டதாக, சட்டப் பேரவையில் பலமுறை கருத்து பரிமாறப்பட்டிருக்கிறது. நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் வழங்கப்படும் என்று தி.மு.க-வின் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தீர்கள். அதில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் அரசுக்குச் சொந்தமான 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை, ஏதோ வெளிநாட்டு நிறுவனங்களுக்குத் தாரை வார்த்ததாகவும், அதை மீட்டு நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குத் தரப் போவதாகவும் நீங்கள் அறிவித்தீர்கள். இந்த 55 இலட்சம் ஏக்கர் நிலம் அரசுக்குச் சொந்தமானது இல்லை என்றும் நீங்கள் தேர்தல் அறிக்கையில் கூறியதை நிறைவேற்றவில்லை என்றும் மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியதையும் நீங்கள்தான் 2001, 2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டதாக முதலமைச்சர் இந்த அவையிலே அறிவித்திருக்கிறார்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

2001-2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் மக்களின் பங்கேற்புடன் மேம்படுத்தித் தர வேண்டுமென்றுதான் கூறப்பட்டிருந்தது. அரசுக்குச் சொந்தமான நிலம் என்று குறிப்பிடப்படவில்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியதனால்தான் நான் இதைக் கூறினேன் என்று முதலமைச்சர் சொல்வதில் எள்ளளவும் உண்மையில்லை. ஏனென்றால் 11-4-2006 அன்று தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இதற்கு முன்பே தமிழ்நாட்டில் 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் கணக்கெடுக்கப்பட்டு, அவை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருந்தபோது, தி.மு.க. அரசு ஆட்சி முடிந்துவிட்டது என்று இன்றைய முதலமைச்சர் பேசிய பேச்சு 'முரசொலி' பத்திரிகையில் வெளி வந்திருக்கிறது. அப்படியென்றால், 1996 முதல் 2001 வரையிலான உங்களுடைய ஆட்சியில் கணக்கெடுக்கப்பட்டதாகத்தானே அர்த்தம்? தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் நீங்கள் பேசிய அன்று, மாண்புமிகு

அம்மா அவர்கள் அரசுக்குச் சொந்தமான 3,67,000 ஏக்கர் தரிசு நிலங்கள்தான் அரசு வசம் உள்ளன; மீதியெல்லாம் தனியாரிடம் உள்ள பட்டா நிலங்கள்தான்; எனவே, 57 இலட்சம் ஏக்கர் தரிசு நிலத்தை எப்படி இவர்கள் ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுப்பார்கள்; இது போகாத ஊருக்கு வழி சொல்வது போல் உள்ளது. என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணி அடித்தாற்போல் கூறிய பிறகும், ஐந்தாவது முறை முதலமைச்சராக இருக்கின்ற ஒருவர், இப்படியே திரும்பத் திரும்ப உண்மைக்கு மாறான செய்தியை இந்த அவையில் கூறுவதை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்றுதான் இந்த விளக்கத்தினை அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவருடைய கொள்கையே, 1952-லிருந்து இன்று வரை நிலமற்ற ஏழைக்கு நிலம் கொடுக்க வேண்டுமென்பதுதான். 1970 ஆம் ஆண்டு, இலட்சக்கணக்கான மிகை நிலங்களை பெரிய மிராசுதாரர்களிடமிருந்து 15 "Standard" ஏக்கர் எனக் கொண்டுவந்து, இரண்டு இலட்சம் ஏக்கரை எடுத்து, இலட்சக்கணக்கான ஏக்கரை. நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கியவர் தலைவர் கலைஞர். அதேபோல நான் ஒரு விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் (குறுக்கீடுகள்) இருங்கள், நான் பதில் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நான் சொல்கிறேன். உங்கள் தொகுதியில் கொடுத்திருக்கிற நிலத்தைச் சொல்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த இரண்டு (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். உட்காருங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு அமைச்சருக்கு குறுக்கிட அதிகாரம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தொகுதி, திருத்தணி வட்டத்தில், அவருடைய தொகுதியிலேயே 384.36 ஏக்கர் நிலம், 11,13,000 இலட்சம் மதிப்புள்ள நிலம் வழங்கப்பட்டதா, இல்லையா? அதை மறுப்பாரா?

திரு. கோ. அரி: அரசின் சார்பில் கொண்டு வரப்பட்டிருக்கின்ற திட்டங்கள், மக்களிடையே சென்றடைவதற்கு முன்பு பெரும்பாலும் ஆளுங்கட்சியினரையே சென்றடைகிறது. சமீபத்தில்கூட, தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதியில் 250 ஏக்கர் நிலத்தை ஆளும் கட்சி பிரமுகர் பினாமி பெயரில் வாங்கியுள்ளதாகப் பத்திரிகையில் செய்தி வெளிவந்துள்ளது.

முற்பகல் *11-45*

இதேபோல, சமீபத்தில் ஏற்பட்ட மழை, வெள்ளத்தின்போது தரப்பட்ட நிவாரண உதவிகள்கூட, ஆயிரம் ரூபாய் என்றால் 250 ரூபாய் தர வேண்டுமென்றும், 2 ஆயிரம் ரூபாய் என்றால் 500 ரூபாய் தர வேண்டுமென்றும் அப்படிக் கொடுத்தவர்களுக்குத்தான், நிவாரண உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி அரசின் திட்டங்கள் அனைத்திலும் ஆளுங்கட்சியினருடைய செயல் கொடிகட்டிப் பறக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது மிகவும் தவறானது. அவர்கள் கட்சியினுடைய தலைவியின் ஆண்டிப்பட்டி தொகுதியிலேயே எங்கள் தலைவர் அறிவித்திருக்கிற இலவச நிலம் வழங்குகின்ற திட்டத்திலே ஏழைகளுக்கு ஆண்டிப்பட்டி தொகுதியிலே 1,375 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. யாருக்கு நீங்கள் பணம் கொடுத்தீர்கள்? சொல்ல முடியுமா? குற்றச்சாட்டு சொல்கிறீர்களே, பதில் சொல்லுங்கள். 1,375 ஏக்கர் நிலம் உங்கள் தலைவியினுடைய சட்டமன்றத் தொகுதியில் நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கோ. அரி: நிவாரணங்கள் வழங்குவதிலே கட்சி பேதமின்றி உரியவர்களுக்கு அந்தப் பயன் போய்ச் சேருகின்ற வகையிலே ஆயிரம் ரூபாய் சலவை நோட்டுக்களைக் கொடுத்தவர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான மனைகள் விற்பதிலே பல குளறுபடிகளை வாரியம் செய்துள்ளது. திருவான்மியூர் திட்டப் பகுதி, காமராஜர் நகர், திருவான்மியூர் முதல் மெயின் ரோடு, திருவான்மியூர் விரிவாக்கம் போன்ற

பகுதிகளிலும் தற்போதைய மதிப்பைவிட குறைத்து 37 பேருக்கு சதுர அடிக்கு ரூபாய் 2,450 என்ற அளவிலே விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. இன்றைய மார்க்கெட் மதிப்பு ரூ.10,000-க்கு மேல் உள்ள நிலையில் பழைய மதிப்பின்படி விற்று அரசுக்குப் பல கோடி ரூபாய் இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001-லிருந்து 2006 ஆம் ஆண்டு வரை, நீங்கள் ஆட்சியில் இருந்தபோது ஒரு வீடுகூட கட்டவில்லை. ஏற்கெனவே இருந்த வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலத்தை, என்றைக்கு வீட்டு வசதி வாரியம் கைப்பற்றியதோ, அதே விலையில் 8,700 அலகுகளை பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்க்கு நஷ்டம் ஏற்படுத்தி விற்ற ஆட்சி, உங்களுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. கோ. அரி: **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ** இந்த அவையினுடைய உறுப்பினராக இல்லாத காரணத்தினால் அவர் வந்து பதில் சொல்ல முடியாது. எனவே, அவருடைய பேச்சை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) ** is not a Member of this House. (குறுக்கீடு) Record இருக்கட்டும். ** is not a Member of this House.

திரு. கோ. அரி: **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. அரி, நேரம் முடிந்துவிட்டது என்பதை அறிவாரா? (குறுக்கீடுகள்) திரு. அரி, நேரம் முடிந்துவிட்டது.

திரு. கோ. அரி: ஆளுங்கட்சியின் தலையீட்டால் குறைத்து, இப்படித் தமிழகம் முழுவதும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான இடங்களை சந்தை மதிப்பைவிட குறைந்த விலையில் ஆளுங்கட்சிக்காரர்களுக்கும், பினாமிகளுக்கும்

**மாண்புமிகு பேரவைத் துணை தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கொடுத்து வாரியத்திற்குப் பல கோடி ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்தியவர்கள்மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒதுக்கிய நேரம் முடிந்துவிட்டது. திரு. அரி, நேரம் முடிந்துவிட்டது என்பதை அறிவாரா? அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கூ.ந. சேகரன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. இப்படி நீங்கள் எல்லோரும் எழுந்து நின்று தினம் பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) அனுமதிக்க முடியாது. 3 அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும், முடியாது. (குறுக்கீடுகள்) திரு. கூ.ந. சேகரன். (குறுக்கீடுகள்) அமைதி, அமைதி.

திரு. கூ.ந. சேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதனை என்பதையே அன்றாட வாழ்வின் நிகழ்வுகளில் ஒன்றாய் ஆகிடும்வண்ணம் சாதனைகளைப் படைப்பதில் சாதனை புரிந்திடும் தலைவர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) சுற்றிலும் கற்கள் இல்லா ஊரில் கற்களைக் கொண்டு வந்து மதில்கள் அமைத்து அதன் மையத்தில் உலகமே வியந்து போற்றும் ஒப்பற்ற பெரும் கோபுரத்தை தஞ்சையிலே நிர்மாணித்து வரலாற்றில் நீண்ட இடம் பிடித்தான் இராசராசன். (குறுக்கீடு) உலக அதிசயங்களில் ஒன்றினை உருவாக்கி, விழிகளுக்கு விருந்தளித்து, காதல் நினைவுச் சின்னமான கட்டடக் கனவுகளை நனவாக்கி, காலத்தால் அழிக்க முடியாத பெயர் கொண்டான் ஷாஜகான். அவற்றை அடியொற்றி தன் கற்பனை வளத்தால். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சேகரன், ஒரு நிமிடம். திரு. அரி, உங்களுக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கியாகிவிட்டது. பேச்சை ஆரம்பிக்கும்போதே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், எல்லோரையும் request பண்ணிக்கொண்டார், எல்லோரும் co-operate பண்ண வேண்டுமென்று. (குறுக்கீடுகள்) அப்புறம், நசுக்குவது என்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) அவரையும் 15 நிமிடங்களில் நான் correctஆக முடிக்கச் சொல்வேன். நான் எனது right side-ல் இருக்கிறவர்களுக்கும் correctஆக நேரத்தைக் கடைப்பிடிக்கிறேன். அதை வேண்டுமானால் watch பண்ணிக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) திரு. அரி, இந்தமாதிரி கலாட்டா எல்லாம் வேண்டாம். (குறுக்கீடு) வேண்டாம், உட்காருங்கள். திரு. கூ.ந. சேகரன்.

முற்பகல் 11-50

திரு. கூ.நு. சேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவற்றை அடியொற்றி தன் கற்பனை வளத்தால் வரலாற்றுச் சுவடுகள் மாறாமல் அப்படியே சிந்தாமல், சிதறாமல் பூம்புகாரையும், வள்ளுவர் கோட்டத்தினையும், இன்ன பிறவற்றையும் வடித்தெடுத்த கலைஞரின் பொற்கால ஆட்சியில் உருவாக்கப்பட்ட வரலாற்றுப் பெட்டகமாய், வசந்த மாளிகையாய், பல்லோர் எண்ணங்களைக் கவர்ந்திழுக்கும் வண்ணக் கோலமாய், எழுந்து நிற்கும் ஏற்றமிகு எழில் மாடம், புதிய சட்டமன்ற வளாகத்தில் பேசுவதில் பேருவகையும், பெருமிதமும் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வரி உயர்வே இல்லா நிதிநிலை அறிக்கையினை வழங்கிய நட்பின் இலக்கணம் மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் பெருந்தகை அவர்களே, காலம் எங்கள் தலைவர் கலைஞர் மூலம் இஞ்ஞாலத்திற்கு அளித்த தமிழ் இனத்தின் கருவூலம், வேழத்தின் வீரத்தையும், விழிகளில் ஈரத்தையும் தாங்கி இளைஞர்களை வழி நடத்திடும் எழுஞாயிறு, கலைஞர் எள் என்று கூறிடும் அடுத்த நொடி எண்ணெயைக் கொண்டுவரும் பேராற்றலின் உருவம், பெரும் பணிகள் ஆற்றும் சிகரம், பம்பரங்கள் பாடம் கேட்கும் வண்ணம் சுற்றிச் சுழன்று, சூறாவளிக்குப் பாடம் கற்பிக்கும் கணிப்பொறி, வீரம் செறிந்த கழகக் காளையரை விவேகத்துடன் செல்ல வழிநடத்திடும் வேகத்தடை, "பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்; எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண் இங்கு இளைப்பில்லை காண்" என்ற பாரதியின் பாடல் வரிகளின் வழி பெண்கள் முன்னேற்றத்திற்குப் பெரும் பணிகள் ஆற்றிடும் பேரறிவாளர்,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற வள்ளுவன் வழியில் தலைவரால் அடையாளம் காட்டப்பட்ட எங்கள் ஆருயிர் அண்ணன் தளபதி அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் அவர்களின் எண்ணங்களை விரைந்து முடிக்கும் செயல் வல்லார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத்

தொழில் நிறுவனங்கள் துறை என்கிற மானியக் கோரிக்கைகளில் கருத்துகளைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருவாய்த் துறை என்பது எல்லாத் துறைகளுக்கும் முதன்மையான துறையாகும். மாண்புமிகு முதல்வர் அவர்களால் பல்வேறு சீர்திருத்தங்கள் பெற்று, நில நிருவாகம், நிலச் சீர்திருத்தம், மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல், சட்டம் ஒழுங்கினைப் பராமரித்தல் போன்ற பணிகளை இத்துறை செவ்வனே சிறந்து ஆற்றிவருகிறது.

புயல், வெள்ளம், வறட்சி போன்ற நிகழ்வுகளில் இத்துறையின் பணி, கடந்த காலங்களில் பாராட்டத்தக்க விதத்தில் அமைந்திருக்கிறது என்பதை நாம் கண்கூடாக அறிவோம்.

நில ஆவணங்கள், சாதிச் சான்றிதழ்கள், நலத் திட்ட உதவிகள் என்று எல்லாவற்றுக்கும் எப்படிக் கடந்த காலங்களிலே வழங்கப்பட்டன? எனக்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அரி அவர்கள், அவர்களுடைய அம்மா காலத்திலே, அவர்களுடைய ஆட்சியிலே உடனடியாக வழங்கப்பட்டது என்று அறிவித்தார்கள். தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான் இதுபோன்று மாணவர்கள் எல்லாம் ஜாதிச் சான்றிதழ்கள், இருப்பிடச் சான்றிதழ்கள், வருமானச் சான்றிதழ்கள் எதுவாக இருந்தாலும் அவர்கள் மேற்படிப்புக்குச் செல்கின்றபோது அவர்களை அலைக்கழிக்கக்கூடாது என்கின்ற காரணத்தினாலேயே, 1998-லிருந்து தொடர்ந்து அவர்கள் பயிலும் பள்ளியிலேயே அவர்களுக்கு அந்தச் சான்றிதழ்கள் எல்லாம் வழங்குகின்ற நடவடிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான், அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து இன்று வரை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால் எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள், அவருடைய அம்மா காலத்தில் வழங்கப்பட்டதாக மாபெரும். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உங்களுடைய விஷயத்தைப் பேசுங்கள்-

திரு. கூ.ந. சேகரன்: கடந்த வருடம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, திருவெறும்பூரைத் தலைமையிடமாகக்

2010 ஏப்ரல் 21] [திரு. கூ.ந. சேகரன்]

கொண்டு வருவாய் வட்டம் தொடங்கப்பட்டதற்கு, என் தொகுதி மக்கள் சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய வட்டாட்சியர் அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இயங்குவதால், அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத காரணத்தால், மக்களும் ஊழியர்களும் அவதிப்படுகின்றனர். எனவே, திருவெறும்பூர் புதிய வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதிகளை மட்டுமின்றி, புதிய அறிவிப்புகளை வழங்கி மாண்புமிகு முதல்வர் அவர்கள் மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கடிக்கின்றார் என்று பாமரர்களும் பேசுவதைத் தமிழகமெங்கும் கேட்க முடிகிறது.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், Gas அடுப்புகள், இலவச விவசாய நிலங்கள் வழங்குதல், வீட்டுமனைப் பட்டா மற்றும் வேட்டி சேலை வழங்குவது, இதுபோன்ற பணிகளில் அடுக்கடுக்காகப் பல்வேறு நலத் திட்ட உதவிகளையெல்லாம் ஆண்டுதோறும் வழங்கிவருவதால், ஊழியர்களுக்குப் பணிச் சுமை ஏற்படக் கூடாது என்ற காரணத்தினால்தான், ஊழியர்களிடத்திலே காலிப் பணியிடங்கள் எதுவும் ஏற்படக் கூடாது என்கின்ற காரணத்தினால்தான், காலிப் பணியிடங்களை உடனுக்குடன் இந்த அரசு நிறைவேற்றுகின்ற காரணத்தினால்தான், அந்த வருவாய் அலுவலர்கள் மகிழ்வுடன் தங்கள் பணியைச் செவ்வனே செய்துகொண்டிருக்கிறார்கள். நில வரியைக் குறைத்து புன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.2 வீதமும், நன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.5 வீதமும் மற்றும் தல வரி, தல மேல்வரி உள்ளிட்ட பிற வரிகளைத் தள்ளுபடி செய்த இவ்வரசை, விவசாயப் பெருங்குடி மக்கள் பாராட்டுகிறார்கள்.

முற்பகல் 11-55

2007 ஆம் ஆண்டு பெருமழையால் பாதிக்கப்பட்ட விவசாயப் பயிர்களுக்கு மத்திய அரசின் நிவாரண உதவிச் சட்டங்களையெல்லாம் மாற்றி, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்

அவர்கள் எக்டேருக்கு ரூ.7,500/- என்றும், ஒருவருக்கு எத்துணை ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டிருந்தாலும், அனைத்திற்கும் நிவாரணம் வழங்கியதையும் மனமுவந்து இன்றையதினம் விவசாயப் பெருங்குடி மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டிக் குடியிருப்பவர்களுக்கு, ஆக்கிரமிப்புகளை வரைமுறை செய்து, 1-4-2006 லிருந்து 31-3-2010 வரை கணக்கிட்டு, வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற அந்தச் சிறப்புத் திட்டத்திலும், ஏனைய திட்டங்களிலும், எல்லாத் திட்டங்களிலும் இதுவரை மொத்தம் 7,24,327 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கி, மிகப் பெரிய சாதனையை மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் நிகழ்த்தியிருக்கிறார்கள். இதை இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களிலுள்ள அத்துணை மக்களும், அரசியல் தலைவர்களும் இன்றையதினம் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

விவசாயத் தொழிலாளர்களை உயர்த்திட, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்-விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) என்கின்ற திட்டத்தைக் கொண்டுவந்து, சுமார் 76 இலட்சம் குடும்பத்தைச் சார்ந்த 173 இலட்சம் நபர்கள் உறுப்பினர்களைப் பதிவு செய்து 5.10 இலட்சம் பயனாளிகளுக்கு ரூ.415 கோடி நிவாரண உதவி வழங்கியதையும், அதேபோன்று இவ்வாண்டு சுமார் ரூ.152 கோடி நிதி ஒதுக்கியுள்ளதையும் அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அதை நான் வரவேற்கின்றேன்.

திருவெறும்பூர் வட்டத்திற்கு முதன்மைக் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் இந்த ஆண்டு தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று திருச்சி மாவட்டம், நாவல்பட்டு, அண்ணாநகர் பகுதிகளில் 1981-இல் துணை நகரம் ஒன்று வீட்டு வசதி வாரியத்தால் உருவாக்கப்பட்டது. அரசுப் புறம்போக்கு நிலங்களான சர்வே எண் 310-இல் சுமார் 570 ஏக்கரில் திட்டம் நிறைவேற்றப்பட்டு, திட்ட ஒதுக்கீட்டாளர்களுக்கு வீட்டுமனை வழங்கப்பட்டது. வருவாய்த் துறை மூலம் நிலத்திற்கு விலை நிர்ணயம் செய்யப்படாத காரணத்தால், 1981-இல் முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுங்கூட, ஒதுக்கீட்டாளர்கள் வீடுகளைக் கட்டி 25 ஆண்டுகளாகக் குடியிருந்துவரும் நிலையிலும்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இதுவரை விற்பனைப் பத்திரம் வழங்கப்படவில்லை. மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சரவர்களிடம் நான் இதுசம்பந்தமாகக் கடந்த சில மாதங்களாகப் பேசி வருகின்றபோது, அவர் இன்னும் சில மாதங்களில் விற்பனைப் பத்திரம் வழங்கப்படும் என்கின்ற இனிய செய்தியை என்னிடம் கூறியிருக்கிறார்கள். விரைவில் வழங்கிட வேண்டுமென்றும் அதையும் இப்போதே அறிவிக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

1963-இல் துவாக்குடியில், மண்டலப் பொறியியல் கல்லூரி--R.E.C.--இன்றைய NIT தொடங்கப்படுவதற்கு, முன்பு கல்லூரி வளாகத்தில் சுமார் 7 ஏக்கர் நிலப் பரப்பளவில் முத்துராஜா சமூகத்தைச் சார்ந்த சுமார் 80-க்கும் அதிகமான குடும்பத்தினர் குடியிருந்து வந்தனர். அருகில் உள்ள வாழவந்தான்கோட்டை, குங்குமபுரம் பகுதிகளில் அந்நிறுவனத்திற்குச் சொந்தமான நிலங்களில் மறு குடியமர்வு செய்யப்பட்டனர். சுமார் 40 வருடங்களாகியும் இதுநாள் வரை வீட்டுமனைப் பட்டா வழங்க முடியவில்லை. கல்லூரி நிருவாகம் நிலம் தர மறுக்கும் நிலையில் வழங்க இயலவில்லை. இந்நிறுவனம் கல்விப் பணிக்குப் பயன்படுத்தாத நிலங்களை அரசே மீளப் பெற்று குங்குமபுரம் பகுதி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். 100 ஆண்டுக் கால கோரிக்கைகள், 120 ஆண்டுக் கால கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், அந்த மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்குரிய நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி, துவாக்குடிப் பகுதியில் பாரத மிகுமின் நிறுவன பாய்லர் தொழிற்சாலை, சுமார் 400-க்கும் அதிகமான அதன் துணை நிறுவனங்கள் மற்றும் வாழவந்தான்கோட்டையில் உள்ள இந்தியன் ஆயில் நிறுவனம் போன்றவற்றில் இருந்து, தினமும் சுமார் 1,500 கனரக லாரிகளும், பள்ளி செல்லும் வாகனங்களும் என ஆயிரக்கணக்கான வாகனங்கள் திருச்சி-தஞ்சாவூர் சாலையில் செல்வதால் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடிகளைப் போக்கிட, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் NH 67 சாலையை நான்கு வழிச் சாலையாகத் தரம் உயர்த்தும் பணி மேற்கொள்ளப்பட்டு, திட்டப் பணி நிறைவடையும் நிலையில் உள்ளது.

திருச்சி பால் பண்ணையிலிருந்து துவாக்குடி வரை, சாலையின் இருபுறமும் குடியிருப்புகள் ஆயிரக்கணக்கில் இருக்கின்ற நிலையிலும், சுமார் 150-க்கும் அதிகமான அணுகு சாலைகள் உள்ள நிலையிலுங்கூட, உபயோகிப்பாளர் சாலை (Service Road) அமைக்கப்படாததால் நாள்தோறும் ஏற்படும் சாலை விபத்துகளால் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இதனால் இப்பகுதி மக்கள் தினமும் அச்சத்தோடு பயணம் செய்யும் நிலையில் உள்ளனர். உயிரிழப்புகளைத் தடுத்திட, மக்கள் அச்சத்தினைப் போக்கிட, தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையத்தின்மூலம் துவாக்குடி முதல் திருச்சி பால் பண்ணை வரை 14.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு மத்திய அரசின்மூலம் Service Roads அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

மேலும், எதிர் காலத்திலே வாகனப் பெருக்கத்தால், போக்குவரத்து நெருக்கடி ஏற்படாமல் தடுத்திட, தொலைநோக்குத் திட்டமான வெளிவட்டச் சாலையினை, துவாக்குடியிலிருந்து வாழவந்தான் கோட்டை, கிருஷ்ண சமுத்திரம், நடராஜபுரம், வேங்கூர், பனையக்குறிச்சி வழியாக காவிரி ஆற்றின் தென்கரைப்பகுதி வழியாக பைபாஸ் சாலை வரை புதிய சாலை அமைத்து போக்குவரத்து நெருக்கடி தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

துவாக்குடி சிட்கோ பகுதியில் உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் சாலையினைப் புதுப்பிக்க நிதி வழங்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். சிட்கோவில் உள்ள சில நிறுவனங்கள் தங்கள் தவணைத் தொகைகளை முழுமையாகச் செலுத்தியுங்கூட, விற்பனைப் பத்திரம் வழங்கப்படவில்லை. உடனே விற்பனைப் பத்திரம் வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, NH-ல் துவாக்குடிப் பகுதியின் நடுவில் தடுப்புச் சுவர் உள்ளதால், கனரக வாகனங்கள் சிட்கோ வளாகத்திற்குள் செல்ல முடியவில்லை. தடுப்புச் சுவரை அகற்றி, வாகனங்கள் தங்கு தடையின்றிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

திருச்சியில் காவிரி ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு குடிநீர் வழங்கப்படுவதால், நிலத்தடி நீர் குறைந்து வருவதாக வல்லுநர்கள்

கூறி வருகின்றனர். நிலத்தடி நீரினைப் பெருக்கிட, செறிவூட்ட, காவிரியில் தடுப்பணை கட்டி, நீரைத் தேக்கிட, நடவடிக்கை எடுக்க வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போன்று, திருவெறும்பூரிலே எந்த வசதியும் இல்லாத ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளிட்ட மருத்துவமனைகள்தான் இருக்கின்றன. எனவே, புதிய வட்ட மருத்துவமனை அமைத்திட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். திருச்சி அரியமங்கலம் பகுதியில் 29-வது வார்டுப் பகுதியில் மாநகராட்சியின் குப்பைக் கிடங்கு உள்ளது. 47 ஏக்கர் நிலப் பரப்பில் மலைபோல் குவிந்துள்ள அந்தக் குப்பைகளில் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில், ஆண்டு தவறாமல் திடீர் திடீரென்று தீ பிடித்துக்கொள்கிறது. பிடித்த தீயை அணைப்பதற்குக் குறைந்தபட்சம் 10 தினங்களாவது ஆகிறது. மாவட்டத்தில் இருக்கின்ற அத்துணைத் தீயணைப்பு நிலையங்களிலிருந்தும் வருகின்ற அந்த வாகனங்களின்மூலமாகத் தீயை முற்றிலும் அணைக்கின்ற பணிகளில் ஈடுபட்டாலுங்கூட, தீயை அணைப்பதற்கு 10 நாட்களுக்குக் குறையாமல் ஆகிறது. இவ்வாறு ஏற்படுகின்ற காலதாமதத்தால் அங்கே எழும் புகையால் அப்பகுதியில் வாழும் மக்கள் மூச்சுத் திணறலால் மிகவும் பாதிப்புக்குள்ளாகி, பல்வேறு நோய்களால் இன்றையதினம் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். உடனடியாக அந்தக் குப்பைகளையெல்லாம் அகற்றி, வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான பணியினை எடுப்பதோடு அந்த 47 ஏக்கர் நிலத்திலே, அரசின் வேறு பல நலத் திட்டங்களை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

திருவெறும்பூர் வட்டாரப் பிரிவு அலுவலகத்தை, வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதைப்போன்று, திருச்சி மாநகராட்சியிலே ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைய வேண்டுமென்று அந்த மாநகராட்சிப் பகுதி மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணத்தை ஈடேற்றுகின்ற வகையிலே ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைந்திட, நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போன்று, சென்னை மாநகராட்சிக்கு அடுத்து, திருச்சி மாநகராட்சிப் பகுதியில்தான் கடுமையான வாகனப் போக்குவரத்து நெருக்கடிகள் எல்லாம் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே,

சென்னை மாநகராட்சிமூலம் மேம்பாலங்களும், சாலைகளும் அமைப்பதுபோல, திருச்சி மாநகராட்சியின்மூலமும் பல்வேறு சாலைகளும், மேம்பாலங்களும், அமைத்து, போக்குவரத்து நெருக்கடி ஏற்படாத நிலையை உருவாக்கிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போன்று, குடிசை மாற்று வாரியத்தின்மூலம் அரியமங்கலம் பகுதியிலே அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களில், மாற்றுத் திறன் படைத்த, மனநலம் பாதித்த குழந்தைகளையுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்கள், சொந்த வீடில்லாதவர்களாக உள்ளனர். அவர்களின் குழந்தைகள் எழுப்புகின்ற ஒலியால், அவர்களால் ஏற்படுகின்ற அந்த இடையூறுகளால், அவர்களுக்கு யாருமே வாடகைக்கு வீடு தர மறுப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, மாற்றுத் திறன் படைத்த குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு, அந்தக் குடிசை மாற்று வாரிய வீடுகளிலே ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு தலைவர் அவர்களை வேண்டி விரும்பி இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

1982-ல் கும்பக்குடி ஊராட்சி, எம்.ஜி.ஆர். நகரில், சர்வே எண் 34, 35 மற்றும் 41 போன்ற எண்களில் உள்ள பரப்பளவில் சுமார் 41 ஏக்கர் நிலத்தை மக்களுக்கு இலவசமாக வழங்குகின்ற அந்தத் திட்டத்தின்மூலம் 53 நபர்களுக்கு வழங்கப்பட்டது. தகுதியற்றவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதாக மாவட்ட வருவாய் அலுவலருக்கு வந்த புகாரின் அடிப்படையில் அதை ஆய்வு செய்து, மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் அந்த ஒதுக்கீடுகளையெல்லாம் இரத்து செய்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது). ஆனால் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் இரத்து செய்த அந்த ஆணையை எதிர்த்து, நில நிருவாக ஆணையரிடத்திலே அந்த ஒதுக்கீட்டுதாரர்கள் எல்லாம் மேல்முறையீடு செய்திருக்கிறார்கள். 1992-லே இரத்து செய்யப்பட்ட அந்த ஆணையை எதிர்த்து அவர்கள் நில நிருவாக ஆணையர் இடத்திலே மேல்முறையீட்டிற்குச் சென்ற காரணத்தினால், 10 ஆண்டுக் காலம் தடையாணை பெற்ற காரணத்தினால், அந்த இடைப்பட்ட காலத்திலே, நில நிருவாக ஆணையருடைய இறுதித் தீர்ப்பு வருவதற்குள்ளாக அந்த இடைப்பட்ட 10 ஆண்டுக் காலத்திலே அதை ஒதுக்கீட்டுதாரர்கள் மனைப் பிரிவுகளாக்கி, விற்று, அந்த வீட்டுமனைகளைப்

பெற்றவர்களெல்லாம் இன்று வீடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். 2002-இலே நில நிருவாக . . .

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி அவர்கள்.

திரு. மா. தண்டபாணி: மாண்பிற்குரிய பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் பேசுகிற வாய்ப்பினைப் பெற்றுத் தந்திருக்கிற எங்களுடைய தியாகத்தின் திருவுருவமாம் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய இளைஞர்களைத் தன்பால் ஈர்த்து நாளைய இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமாய்த் திகழ்கின்ற எங்கள் இளம் தலைவர் ராகுல் காந்தி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் தெய்வமாக வணங்குகிற மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுடைய அருந்தவப் புதல்வர் மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்பிற்குரிய ஐயா திரு. ஜி.கே. வாசன் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) தங்களுக்கும், சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், துணைத் தலைவர், கொறடா, துணைக் கொறடா ஆகிய அத்தனை பேருக்கும், இத்தனைக்கும் மேலாக எனக்கு வாழ்வு கொடுத்த என் தொகுதி மக்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை.
உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை."

என்று பாரதி பாடினான். அந்த பாரதி இன்றைக்கு இருந்திருந்தால், யாமறிந்த தமிழகத் தலைவர்களிலே தந்தை பெரியாரைப் போல், பேரறிஞர் அண்ணாவைப் போல், பெருந்தலைவர் காமராஜரைப் போல், மூதறிஞர் ராஜாஜியைப் போல் மறைந்த மக்கள் தலைவர் ஐயா மூப்பனாரைப் போல் இவர்களின் ஒட்டுமொத்த உருவமாகத் திகழ்கின்ற கலைஞரைப் போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை. உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை என்று பாடியிருப்பான். (மேசையைத் தட்டும் ஒலி)

அவன் சொன்னது உண்மை. எப்படி என்றால் வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்கள் மனதில் நிற்பவர் யார்? யாரெல்லாம் மக்கள் மனதில் நின்றிருக்கிறார்கள் என்றால்,

கரிகாற் பெருவளத்தான் கல்லணையைக் கட்டியதன்மூலமாக மக்கள் மனதிலே நின்றிருக்கிறார். தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய காரணத்தால், இராஜராஜ பெருஞ்சோழன் மக்கள் மனதிலே நின்றிருக்கிறார். வைகை அணை, தாமிரபரணி அணை, மணிமுத்தாறு அணை எனப் பல்வேறு அணைகளைக் கட்டி, கல்விக் கண் திறந்த காமராஜர் மக்கள் மனதிலே நின்று நிலைத்துக் கொண்டிருக்கிறார்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதுபோல, தமிழுக்கும், தமிழ்ச் சமுதாயத்திற்கும் பாடுபட்டதோடு மட்டுமல்ல; வள்ளுவர் கோட்டம், பூம்புகார், அண்ணா நினைவிடம், காந்தியினுடைய நினைவிடம், பெருந்தலைவர் காமராஜர் நினைவிடம், இராஜாஜியினுடைய நினைவிடம், பெரியவர் பக்தவத்சலம் அவர்களுடைய நினைவிடம் இப்படி நினைவிடங்களைக் கட்டியதோடு மட்டுமல்ல; தன்னுடைய கற்பனையில் உருவான கலை நுணுக்கம் முழுமையையும் பயன்படுத்தி, இரவு, பகலென்று எந்நேரமும் பார்வையிட்டு, ஆலோசனைகள் வழங்கி, காண்போரின் கண்களைக் கவரும் வண்ணம், பார்ப்போரைப் பரவசமூட்டுகின்ற வகையில் கட்டப்பட்டுள்ள இக்கட்டடத்தைப் பார்வையிட்ட பச்சிளம் குழந்தை, பாலர் பள்ளியில் படிக்கின்ற குழந்தை, பரவசமடைந்து தன்னால் பாதுகாத்து வைக்கப்பட்ட சிறு தொகையைப் பெரிய மனதுடன் தங்களுக்கு வழங்கியதே இந்த மாமன்றக் கட்டடத்திற்குப் பெருமை சேர்க்கிற ஒரு நிகழ்வு என்பதை யாராலும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடத்தைக் கட்டிய காரணத்தால், நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், பல ஆண்டுகள் அல்ல; பல 100 ஆண்டுகள் தமிழ்ச் சமுதாயத்தோடு, தமிழ் மக்களோடு வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட பெருமை உங்களுக்கு மட்டுமல்ல, பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும் என்பதைப் போல, நாங்களும் இந்த மன்றத்து முதல் உறுப்பினர்கள் என்கிற வகையிலே பெருமையடைகிறோம். பெருமிதம் கொள்கிறோம். அப்படிப்பட்ட தலைவர் கலைஞர் அவர்களுக்கும், பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும்,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப தான் ஏற்றுக்கொண்ட பதவிகளுக்கு எல்லாம் பெருமை சேர்க்கிற வகையில் பெருமைப்படுத்தியிருக்கிற நம்முடைய துணை முதல்வர் தளபதியார் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) தலைவர் வந்துவிட்டார். வருவாய், வீட்டு வசதி மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மானியக் கோரிக்கை விவாதத்திலே கலந்து கொண்டு பேசுவதிலே பெருமைகொள்கிறேன்.

'வெற்றிமீது வெற்றி வந்து என்னைச் சேரும், அதை வாங்கித் தந்தை பெருமை எல்லாம் தலைவர் கலைஞரைச் சேரும்' என்ற தாரக மந்திரத்தைத் தனக்கெனக் கொண்டு கொடுக்கப்பட்ட பணியினைத் திறம்பட, மதிநுட்பத்துடன் செயல்படுத்தி வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, நினைத்ததை முடிப்பவராகச் செயல்படுகிற எங்கள் மாவட்டத்தின்மீது அக்கறை கொண்டு ஆற்றிய பணியால், எங்கள் மாவட்ட மக்களின் அன்பைப் பெற்ற, எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர் மாண்பிற்குரிய I.P. அவர்களுடைய துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதிலே நான் பெருத்த மகிழ்ச்சி அடைகிறேன்.

பிற்பகல் *12-10*

வருவாய்த் துறை என்பது, மன்னர் ஆட்சி, முகலாயர் ஆட்சி, ஆங்கிலேயர் ஆட்சி, இன்றைக்கு மக்களாட்சி ஆகிய பல்வேறு காலக்கட்டங்களில் இருந்திருக்கிறது. ஆரம்பத்தில் வருவாய் மட்டும் ஈட்டுகிற துறையாக இருந்திருக்கிறது. இன்றைக்குப் பல்வேறு நிலைகளில் பரிணாம வளர்ச்சி அடைந்து, சமூக நீதிகளை, சமூகப் பாதுகாப்புகளை ஏற்படுத்துகின்ற துறையாக மருவி வந்திருக்கிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், வருவாயே இல்லாமல் மக்களின் வாழ்வாதாரங்களுக்கு வழிகாணுகின்ற துறையாகச் செயல்படுகிறது. மனிதனுக்கு இதயம் முக்கியமான உறுப்பு என்பதைப் போல, அரசுக்கு இதயமாகச் செயல்படுகிற வருவாய்த் துறை, மிக மிக முக்கியமான துறை என்று சொன்னால் அது மிகையாகாது. ஏனென்று சொன்னால், மனித சமுதாயத்திற்குக் கல்லறையிலிருந்து கருவறை வரையிலும், ஏன் அதற்குப் பின்னாலுங் கூட, பயன்படுகிற,

உதவுகிற ஒரு துறையாக இந்த வருவாய்த் துறை இருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. காரணம், உண்ண உணவின்றி வாடுகின்ற கோடிக்கணக்கான ஏழையெளிய மக்கள் ஒரு நேரமாவது வயிறாற உண்ண வேண்டுமென்கின்ற உயர்ந்த இலட்சியத்தோடு இன்றைக்கு அரசால் வழங்கப்படுகிற ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்குகிற திட்டமானாலும் சரி, தமிழகத்தில் இருக்கிற கோடானுகோடி ஏழை விவசாயிகள் வறுமையால், கஷ்டத்தால் வாடுகிற நேரத்தில், தான் வாங்கிய கடனை அடைக்க முடியாது என்ற நிலை இருக்கிறபோது, நான் இருக்கிறேன் என்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 7,000 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசாங்கம் 75,000 கோடி ரூபாய் தள்ளுபடி செய்ததுபோல, 7,000 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள்; இந்தத் திட்டமானாலும் சரி, அதுபோல, கர்ப்பிணிப் பெண்களுக்குப் பேறு காலத்திற்கு முன்பாக 3,000 ரூபாயும், பேறு காலத்திற்குப் பின்பாக 3,000 ரூபாயும் கொடுக்கிற அந்த உன்னத திட்டமானாலும் சரி, ஐயோ! தன்னுடைய தந்தையின் வருமானத்தால், தாயின் வருமானத்தால், தனக்குத் திருமணம் என்பதே நடைபெறாமல் போய்விடுமோ, தான் வாழ்கிற ஏழைக் குடும்பத்தில் என்ன நடக்குமோ என்று எண்ணுகிற இளம் பெண்களுக்கு 10 ஆம் வகுப்பு படித்து 18 வயது நிரம்பியிருக்கிற அந்த ஏழைப் பெண்ணுக்கு 10,000 ரூபாய் என்று சொல்லி, 15,000 என்று ஆக்கி, 20,000, 25,000 ரூபாய் என்று கொடுக்கிற ஒரு அற்புதமான திட்டமானாலும் சரி, படித்து வேலையற்று இருக்கிற இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்குகிற இந்த நல்ல திட்டமானாலும் சரி, இல்லத்தரசிகளுக்கெல்லாம் இலவச எரிவாயு வழங்குகிற திட்டமானாலும் சரி--என்னுடைய தொகுதியிலேகூட கிட்டதட்ட 7,000 பேருக்கு இலவச எரிவாயு வழங்கப்பட்டிருக்கிறது--அதுபோல, உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டமானாலும் சரி--என்னுடைய தொகுதியிலேகூட 51,000 பேருக்கு அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன--இந்தத் திட்டங்களெல்லாம் எவ்வளவு அற்புதமான திட்டங்கள் கிராமப்புறத்திலிருக்கிற ஏழையெளிய மக்களுக்கு என்று எண்ணிப் பார்க்கிறேன்.

ஒரு சாதாரண ஏழைக் குடும்பத்திலே பிறந்திருக்கிற, ஏழைக் குடும்பத்தைச் சார்ந்திருக்கிறவன், தன்னுடைய மகனுக்கு ஒரு

கொடிய நோய், இதய நோய் ஏற்பட்டிருந்தால், இந்த இதய நோயைத் தீர்க்க முடியுமா, நம்முடைய வருமானத்தால் அவனைக் காப்பாற்ற முடியுமா என்று எண்ணியெண்ணி ஏங்கி, மடிந்திருக்கிற காட்சியை நாம் பார்க்கிறோம். அந்த நிலையிலேதான் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், "கவலைப்படாதே! நான் இருக்கிறேன்" என்று சொல்லி, "நீ நேரடியாக மருத்துவமனைக்குச் செல்; உன்னுடைய நோயைப் போக்கிக்கொள்" என்று சொல்கிற அளவிற்கு உயர்ந்த திட்டமான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். என்னுடைய தொகுதியில் கிட்டதட்ட 100-க்கு மேற்பட்டவர்கள் இந்தத் திட்டத்தின்மூலம் பயனடைந்து இருக்கிறார்கள் என்று எண்ணுகிறபொழுது, நான் உள்ளபடியே பெருமையடைகிறேன்.

அதுபோல, இலவச வேட்டி, சேலை வழங்குகிற திட்டமானாலும் சரி, முதியோர் உதவித் தொகை கொடுக்கிற அந்த அற்புதமான திட்டமானாலும் சரி-400 ரூபாய் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது; முடிந்தால் அதை 1,000 ரூபாயாக மாற்றிக் கொடுத்தால் இன்னும் சிறப்பாக இருக்கும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்-- இவையெல்லாம் அற்புதமான திட்டங்கள்.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் என்னுடைய தொகுதியிலே கிட்டதட்ட 70,000 மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போல, தமிழகம் முழுமைக்கும் ஒன்றரை கோடி மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற இலக்கை நிர்ணயித்து, இன்றைக்கு 1.1 கோடி அளவுக்குக் கொடுத்து முடிக்கப்பட்டிருக்கிறது. இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குகிற நேரத்தில், "இது என்ன ஒரு அற்புதமான திட்டமா? ஏழைகளைக் கொச்சைப்படுத்துகிற திட்டம்" என்று சொன்னார்கள். உண்மைதான். காரிலே போகிறவனுக்கு ஸ்கூட்டர் கொடுத்தால், அதனுடைய அருமை தெரியாது. ஸ்கூட்டரிலே பயணம் செய்கின்றவனுக்கு, சைக்கிள் கொடுத்தால் அதனுடைய அருமை தெரியாது. சைக்கிளிலே பயணம் செய்கிறவனுக்கு செருப்பு கொடுத்தால், அதனுடைய அருமை தெரியாது. ஆனால், வெறுங்காலில் வெயிலில் நடந்து செல்கிறவனுக்கு ஒரு சைக்கிள் கொடுத்தால், எந்த அளவுக்கு அவன் பெருமைப்படுவானோ, அதுபோல ஏழையெளிய மக்கள் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி கொடுப்பதனுடைய மகிமையை இன்றைக்கு உணர்ந்திருக்கிறார்கள். அதனால் பெருமைப்பட்டுக்

கொண்டிருக்கிறார்கள். அதன்மூலமாக இன்றைக்கு மக்கள் மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அதேபோலத்தான், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் 7-1/4 இலட்சம் பேருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த 2 இலட்சம் பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதனுடைய மகத்துவம் அந்த ஏழைக்குத்தான் தெரியும். இவ்வளவு காலமாக நமக்கு இருக்க இருப்பிடம் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருந்தோமே, ஏழையாக இருந்து கொண்டிருந்தோமே, நாம் எதுவும் இல்லாமல் இருந்து கொண்டிருந்தோமே என்று எண்ணுகின்ற அந்த ஏழைக்கு, அந்த இலவச வீட்டுமனைப் பட்டா கிடைத்ததன்மூலமாக, அவன் எவ்வளவு பெருமிதத்தோடு இருக்கிறான் என்பது அவனுக்குத்தான் தெரியும். ஆக, இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற தமிழக முதல்வரை, அவன் மனதார, உளமார பாராட்டிக் கொண்டிருக்கிறான் என்பதுதான் நிதர்சனமான உண்மை.

பிற்பகல் 12-15

தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. நான் அதற்குள் போக விரும்பவில்லை. அதில் எவ்வளவு பேருக்கு நிலம் இருக்கிறது. வாக்குறுதியையும் தாண்டி எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லுவேன். என்னுடைய தொகுதியில் 477 பேருக்கு 500-க்கு மேற்பட்ட நிலங்களைப் பட்டா போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். எப்படியென்றால், நிலமே இல்லாத ஓர் ஏழை, இவ்வளவு காலம் நிலச்சுவான்தார் எனச் சொல்லுகிற உரிமை இல்லாதவன் இன்றைக்கு 2 ஏக்கர் நிலம் அல்லது 1 ஏக்கர் நிலம் கிடைத்திருக்கிறபோது எண்ணுகிறான், தானும் ஒரு நிலச்சுவான்தாரர் என்று. நிலச்சுவான்தாரர் என்ற பெருமை அவனுக்கு இருக்கிறபோது உள்ளபடியே அவன் இந்த அரசைப் பாராட்டுவான் என்பதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்காது. 50 ஏக்கர், 20 ஏக்கர் நிலம் என்று இருப்பவனுக்குக் கொடுத்தால் அதனுடைய மகிமை தெரியாது. நிலமற்றவனுக்குக் கொடுக்கிறபோது அதனுடைய மகிமை தெரியும்.

இதுபோலத்தான், விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை உருவாக்கி கிட்டத்தட்ட 5 இலட்சம் பயனாளிகளுக்கு 415 கோடி

ரூபாய் கடந்த 4 ஆண்டுகளில் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 152 கோடி ரூபாயை வழங்குகிற நிலையைப் பார்த்தால் அதிலே பயனடைகின்ற பயனாளிகள் இன்றைக்குப் பெருமையோடு எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசினுடைய நல்ல திட்டங்களை எல்லாம் இன்றைக்கு இருக்கிற ஏழையெளிய .மக்கள் பெருமையோடு எண்ணிக்கொண்டிக்கிறார்கள். சிறு சிறு தவறுகள் இதில் இருக்கலாம். நடைமுறைப்படுத்துவதிலே சில தவறுகள் இருக்கலாம். நான் மறுக்கவில்லை. ஆனால், அந்தத் தவறுகளைவிட இன்றைக்கு அது எவ்வளவு சிறப்பானது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அவசர உதவிக்கு எண் 108 ஆம்புலன்ஸ் இன்றைக்கு கிராமப்புறத்திலே அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது என்றால், அதனுடைய மகத்துவம், கிராமத்தில் இருக்கிற மக்களுக்குத்தான் தெரியும். ஆகவே, அப்படிப்பட்ட நல்ல திட்டங்களையெல்லாம் இன்றைக்கு இந்த அரசு நிறைவேற்றுவதற்கு மூல காரணமாக இருப்பது நம்முடைய வருவாய்த் துறை.

நில உடைமைப் பாதுகாப்பு, கணினியமாக்கப்பட்டு இன்றைக்கு எளிமையாக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய வேண்டுகோள் எல்லாம், இன்றைக்குப் பட்டா பெற வேண்டுமென்று சொன்னால், கணினிமயமாக்கப்பட்ட பட்டா பெறப்பட வேண்டுமென்று சொன்னால், வட்டாட்சியர் அலுவலகத்திற்கு செல்ல வேண்டுமென்ற நிலை இருக்கிறது. தயவுசெய்து அதை அந்தந்தக் கிராம அளவிலோ அல்லது குறைந்தபட்சம் அங்கே இருக்கிற Revenue Inspector அளவிலோ கொடுக்கிற ஒரு நிலையை உருவாக்கினால், அதை இன்னும் எளிமைப்படுத்த முடியும். அது ஏழைகள் பயனடைவதற்கு வாய்ப்பாக இருக்கும். அதுபோலத்தான் சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்கின்ற துறையாக இது இருந்து கொண்டு இருக்கிறது; இன்னும் இருக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மனு நீதி நாள் என்பது, அரசு, மக்களை நாடிச் செல்லுகிற ஒரு அபூர்வமான திட்டம். ஒரு சாதாரண குடியானவன் பட்டா பெற வேண்டுமென்று சொன்னால், தான் இருக்கின்ற இடத்திற்கும், வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் 30, 40 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். ஒரு முறை அல்ல; இரு முறை அல்ல; பலமுறைச் சென்று அந்த அலுவலரைப் பார்த்து அந்தப் பட்டாவைப் பெற முடியாத நிலை இருக்கிறபோது,

அவனுடைய இடத்திற்கே சென்று அவனுடைய கிராமத்திற்கே சென்று, "மனு நீதி நாள் நடத்துகிறோம்; அதிகாரி பெருமக்கள் வந்திருக்கிறோம்; வாருங்கள், உங்களுக்கு என்ன பட்டா வேண்டும்? வீட்டுமனைப் பட்டா வேண்டுமா? அல்லது, முதியோர் பென்ஷன் வேண்டுமா?" என்பதை எல்லாம் கேட்டு, மக்களை நாடிச் சென்று பிரச்சினைகளைத் தீர்க்கின்ற அரசாங்கமாக, இந்த அரசாங்கம் இருப்பதிலே எனக்கு பெருத்த மகிழ்ச்சி ஏற்படுகின்றது. இதுபோலத்தான், வாரத்திற்கு ஒருமுறை மக்கள் குறைதீர்க்கும் நாளை உருவாக்கி, மக்களினுடைய பிரச்சினைகளைத் தீர்க்கின்ற ஒரு நல்ல பணியை இன்றைக்குச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடைபெறுகின்ற இந்த நேரத்தில் நம்முடைய தமிழக அரசாங்கமும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்திக் கொண்டிருக்கிறது. இதில் ஒரு திட்டவட்டமான குறிக்கோளோடு செயல்பட்டு ஒருமுறை கணக்கெடுப்பை நடத்திவிட்டால், நாட்டிலே பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, இன்றைக்கு கிராமத்தைப் பொறுத்த அளவில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வருவாய்த் துறையிலே அதிகாரி பெருமக்கள் நிறைய பேர் இருக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பணியிடங்கள் காலியாக இருப்பதை நீங்கள் அருள்கூர்ந்து நிரப்ப ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஜாதிச் சான்றிதழ் வழங்குவதிலே சில குளறுபடிகள் இருப்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, எங்களுடைய திண்டுக்கல் மாவட்டத்தில் என்னுடைய தொகுதி வேடசந்தூரிலே வாடிச்செட்டிப்பட்டி கிராமத்தில் இருக்கின்றவனுக்கு இந்து தொட்டியன் என்று ஜாதிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஆனால், அவனுடைய மாமன் நிலக்கோட்டையிலே இருக்கிறான், அதே மாவட்டத்தில். பக்கத்தில் இருக்கிற தாலுகாவிலே, நிலக்கோட்டையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறான். அவனுக்கு அங்கே காட்டுநாயக்கன் என்று ஒரு சான்றிதழை வழங்குகிறார்கள். ஆகவே, இந்த முறையை அருள்கூர்ந்து நீங்கள் மாற்றிக்கொடுத்து இவனுடைய உறவினர்தான் அங்கே இருக்கிறார். ஆகவே, இவனுக்கும் அந்தக் காட்டுநாயக்கன் என்கின்ற சான்றிதழைக் கொடுத்தால் சிறப்பாக இருக்குமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

1977 ஆம் ஆண்டு வெள்ளம் வந்தபோது என்னுடைய வேடசந்தூர் தொகுதி மக்கள் எல்லாம் பாதிக்கப்பட்டபோது பாளப்பட்டிக் கிராமம் என்கின்ற புது அளகாபுரியில், ஒரு பூமிதான இயக்கத்தில் குடியமர்த்தப்பட்ட காரணத்தால், அந்த இடங்களுக்கு இதுவரை பட்டா கிடைக்கப் பெறவில்லை.

அவர்களுக்கு உடனடியாக பட்டா கொடுக்க வேண்டுமென்ற மகத்தான கோரிக்கையை இந்த நேரத்திலே வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். இத்தனைக்கும் மேலாக என்னுடைய மாவட்டம், மிகுந்த வறட்சி மாவட்டமாக இருக்கிறது. ஆகவே, அந்த மாவட்டத்தினுடைய வறட்சி நிலையைப் போக்க வேண்டும். வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். வறட்சி மாவட்டத்திற்குரிய அத்தனை பலன்களையும் என்னுடைய மாவட்டத்திற்கு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு ஒரு பணிவான வேண்டுகோளை இந்த மன்றத்தில் வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-20

மாண்பிற்குரிய தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்களும், துணை முதல்வர் அவர்களும் இதை அருள்கூர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன். என்னவென்று சொன்னால் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் என்பது அரசினுடைய பணிகளை மட்டும் செய்து கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் வந்த காரணத்தால் ஏழை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருப்பதிலே எங்களுக்குப் பெருமை ஏற்படுகிறது. ஆனால், விவசாய வேலைகளுக்கு ஆட்கள் கிடைப்பதிலே சிரமம் ஏற்படுகிறது. விவசாயம் பாதிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை விவசாய வேலைகளுக்கும் பயன்படுத்தலாம். இந்த தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் பயன்படுத்துகிற தொழிலாளர்களை விவசாயத்திற்கு நீங்கள் பயன்படுத்துவீர்களேயானால், அதற்கு 100 ரூபாய் கூலி என்று சொன்னால், விவசாயியிடமிருந்து 50 ரூபாயைப் பெற்றுக்கொண்டு நீங்கள் வழங்குவீர்களேயானால், (மணியடிக்கப்பட்டது) விவசாயம் சிறப்பாக இருக்கும் என்று இந்த நல்ல நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

என்னுடைய தாலுகாவான வேடசந்தூர் தாலுகாவை இரண்டாகப் பிரிக்க வேண்டும். குஜிலியம்பாறை வட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தாலுகா பிரிக்கப்பட வேண்டும். அதேபோல, ஈரோடு தாலுகா பெரிய தாலுகாவாக இருக்கிறது. அந்தப் பகுதிகளைப் பிரித்து, கொடுமுடியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு தாலுகா அமைக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன். நம்முடைய கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அரியலூர் மாவட்டத்தில் பல்வேறு மாவட்ட அலுவலர்கள் சரியாக இல்லாத காரணத்தால், உடனடியாக அக்குறையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

இத்தனைக்கும் மேலாக, என்னுடைய தொகுதியில் குஜிலியம்பாறை பகுதியில் கரூர் மாவட்டத்தில் அரவக்குறிச்சி போன்ற பகுதிகளில் இன்று சில Real Estate Owner-கள் சிமெண்ட் ஆலைகளுக்கு broker-களாக இருந்து, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் மட்டுமே வாங்கக்கூடிய பஞ்சமி நிலங்களையெல்லாம் பத்திரப் பதிவுத் துறை அலுவலகத்திலே பதிவு செய்வதாக எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. தயவுசெய்து அதை இரத்து செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்திலே வைக்கிறேன்.

நம்முடைய தமிழக துணை முதல்வர் அவர்களுக்கு நான் வைக்கும் பணிவான வேண்டுகோள் என்னவென்றால், எங்களுடைய கிராமத்திற்கு, எங்களுடைய தொகுதிக்கு, காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அறிமுகப்படுத்தி இருக்கிறீர்கள்; அதிலே பல்வேறு சிரமங்கள் இருப்பதை எங்களால் உணர முடிகிறது; இருந்தாலும், இன்றைக்கு வறட்சி அதிகமாக இருக்கிற காரணத்தினால், அருள்கூர்ந்து அதை விரைவுபடுத்தி மிக விரைவில் முடித்துத் தர வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

எங்களுடைய தொகுதி வறண்ட தொகுதியாக இருப்பதால், எங்களுடைய தொகுதிக்கு ஒரு கல்லூரியை உருவாக்கித் தர வேண்டும். ஆட்கோம்பை பகுதியிலே, வரட்டாறு அணை கட்டித் தர வேண்டும். கொம்பேரிப்பட்டி கிராமத்திலே மம்மானியூரில், மான்கொம்பாறு அணை கட்டித் தர வேண்டும். வட்டாட்சியருக்கு ஒரு புதிய அலுவலகம் கட்டித் தர வேண்டும். அதேபோல, வேடசந்தூர் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்து தரவேண்டும்.

இத்தனைக்கும் மேலாக, வீடு கட்டுவதற்காகக் கூட்டுறவு வங்கிகளிலே கடன் பெற்றவர்கள் ஏராளமானோர் இன்றைக்கு வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் வாங்கிய கடனைச் செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அதற்கு நீங்கள் கமிட்டி அமைத்திருந்தாலுங்கூட--ஏற்கெனவே நீங்கள் சலுகைகள் கொடுத்து அவற்றைப் பயன்படுத்தமுடியாமல் இருக்கிறார்கள்--விவசாயிகளுக்கு நீங்கள் எப்படிக் கடனைத் தள்ளுபடி செய்தீர்களோ, அதேபோல் இவர்கள் கடனையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் வைக்கவில்லை; மாறாக அவர்கள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தட்டும்; வட்டி, அபராத வட்டி அத்தனையும் தள்ளுபடி செய்து, அவர்களுடைய வாழ்க்கைக்கு வழிகாட்ட வேண்டுமென்று சொல்லி, இவ்வளவு நேரம் பொறுமை காத்து என்னுடைய பேச்சைக் கேட்ட தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள்.

திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையில் வருவாய்த் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழக மக்கள்மீது கொண்ட அன்பால் கட்டிய தாஜ்மகாலான இந்த அவையில் பேசுகின்ற வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், பாட்டாளிகளின் எதிர்கால துருவ நட்சத்திரம் மருத்துவர் சின்னய்யா அவர்களுக்கும், கட்சித் தலைவர் அண்ணன் ஜி.கே. மணி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு வருவாய்த் துறை என்பது மக்களுக்கு இன்றியமையாத துறையாகும். மக்களுக்குத் தேவையான அடிப்படையிலான பணிகளைச் செய்கின்ற ஒரு சேவை துறை ஆகும். ஆனால், அவ்வாறு மக்களுக்குச் சேவை செய்கிறதா எனப் பார்த்தால் அது சற்றுக்குறைவாகவே இருக்கின்றது.

பிற்பகல் 12-25

பெரிய மாவட்டங்கள் பிரிப்பு. நிருவாக நலன் கருதி, விழுப்புரம், வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி போன்ற பெரிய மாவட்டங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்றும், ஆறு சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்ட ஒரு மாவட்டமாகப் பிரிக்கப்பட வேண்டும் என்பது பா.ம.க.-வினுடைய கோரிக்கையாகும்.

தமிழ்நாட்டில் உள்ள 31 மாவட்டங்களிடையே, பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் கடும் ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. எழுத்தறிவு, வேலைவாய்ப்பு, தனி வருமானம் போன்றவற்றில் மிக மிகப் பின்தங்கிய மாவட்டங்களாக பல உள்ளன. எனவே, அதனைப் போக்க அரசு அந்தந்த மாவட்டங்கள்மீது தனிக் கவனம் செலுத்தி, சிறப்பு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றிட வேண்டும். அரசமைப்புச் சட்டம் பிரிவு 371-ஐப் பயன்படுத்தி, மத்திய அரசு செயல்படுவதுபோல, மாநில அரசும் பின்தங்கிய மாவட்டங்கள்மீது சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும் என்பது பா.ம.க.-வின் கோரிக்கையாகும்.

தொகுதி வளர்ச்சி. அதேபோல தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளையும், கல்வி, வேலைவாய்ப்பு, நீர்ப் பாசன வசதி, தொழிற்சாலைகள், சுகாதாரம் பற்றிய தகவல்கள் தயாரிக்கப்பட்டு, சமமற்றவர்களுக்கு மேற்கண்ட அனைத்தும் சமமாகக் கிடைக்க 'Unequal treatment for unequals' என்ற கோட்பாட்டினை வகுக்க வேண்டும். ஒரு ஆண்டு திட்டத்தின் முதலீட்டைப் பங்கிடும்போது, அனைத்துச் சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சமமாக முதலீடு கிடைக்க அரசு வழிவகை செய்திட வேண்டும். உதாரணமாக, எனது காவேரிப்பட்டினம் தொகுதியில் அரசு சார்ந்த கல்வி நிறுவனம் ஏதுமில்லை. வேலைவாய்ப்பில் பின்தங்கியுள்ளது. தொழிற்சாலை என்பதே கிடையாது. சுகாதாரம் என்பது கிடையாது. எனவே, இதனைச் சரி செய்திட, அரசு முன்வர வேண்டும்.

மாவட்ட வருவாய் நிருவாகம். நாடாளுமன்றத் தொகுதியின் மத்தியில் மாவட்டந்தோறும் நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டித் தர வேண்டும். அதுபோல, வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிருவாக அலுவலர் ஆகியோருக்கும் அலுவலகம் மற்றும் குடியிருப்புகளைக் கட்டித் தர வேண்டும். மேலும், அவர்களுக்கு உரிய உதவியாளர்களையும் அமர்த்த வேண்டும். அப்படிச் செய்தால்தான் மாவட்ட நிருவாகம் சீரடையும்.

ஒன்றிய நிருவாக வசதி. மக்கள் தொகை மற்றும் பரப்பளவு ஆகிய இரண்டையும் கொண்ட கணக்கீட்டின் அடிப்படையில், பெரிய வட்டங்களையும், ஒன்றியங்களையும் வருவாய்க் கோட்டங்களையும் பிரித்து சீரமைக்க வேண்டும். அதேபோல, பெரிய அளவில் உள்ள ஊராட்சிகளையும் நிருவாக வசதி கருதி பிரிக்க வேண்டும். எனது தொகுதிக்குட்பட்ட ராயக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தாலுகா அமைக்க வேண்டும். போச்சம்பள்ளி, ராயக்கோட்டை ஆகியவற்றைப் புதிய ஊராட்சி ஒன்றியங்களாக உருவாக்க வேண்டும்.

பட்டா வழங்கல், சான்றிதழ் வழங்கல் போன்றவற்றில் காலதாமதம் ஏற்படுவதற்குத் துறையில் காலியாக உள்ள பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பது ஒரு காரணம் ஆகும். எனவே, வருவாய்த் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை விரைவில் நிரப்ப வேண்டும் என்பது கோரிக்கையாகும். சுமார் 3,000 கிராம நிருவாக அலுவலர் பணியிடங்கள் காலியாக உள்ளன. அவற்றை நிரப்பிட வேண்டும்.

பழுதடைந்த வீடுகள். தமிழகத்தில் ஆதி திராவிடர் குடியிருப்புகளில் சுமார் 10 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிய வீடுகள் பழுதடைந்து குடியிருக்க முடியாமல் பொதுமக்கள் மிகவும் சிரமம் அடைந்து வருகின்றார்கள். அவற்றைச் சீர்படுத்திட கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் திம்மாபுரம், காந்திநகர், குரும்பட்டி, முருக்கம்பட்டி, முருக்கல்நத்தம் ஆகிய கிராமங்களில் உள்ள காலனி வீடுகள் பழுதடைந்துள்ளன. அவற்றைச் சீர் செய்திட கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுமனைப் பட்டா. நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் வீட்டுமனைப் பட்டா வேண்டி மனு கொடுத்தவர்கள் தாலுகா அலுவலகம் சென்று அலைந்து வருகின்றார்கள். தமிழகத்தில் சுமார் 30 இலட்சம் பேர் அரசுக்குச் சொந்தமான இடங்களில் பல ஆண்டுகளாகக் குடியிருந்து வருகின்றார்கள். ஆனால், அவர்களுக்கு இதுவரை பட்டா வழங்கப்படாமல் இருந்து வருகின்றது. சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்தும் பட்டா வழங்கப்படவில்லை. எனது தொகுதியில் நான் சட்டமன்ற உறுப்பினராக வந்தபோது, பட்டா வழங்க வேண்டி பொது மக்கள் கொடுத்த மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பரிந்துரை செய்து கொடுத்து சுமார் நான்கு வருடங்கள் ஆகின்றன. இன்னும் பட்டா வழங்கப்படவில்லை. மாவட்டத்தில், மக்கள் பட்டா,

பட்டா என அலைகின்றார்கள். அதிகாரிகள் டாட்டா, டாட்டா எனச் சொல்லி அனுப்பி விடுகின்றனர். எனவே, பட்டா ஏழைகளுக்கு வழங்கிட அரசு ஆவன செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, உழவடை பட்டா. அரசு வழங்கும் இலவச 2 ஏக்கர் திட்டத்தின்கீழ் பல ஆண்டுகளாக உழவடை செய்து வரும் விடுபட்ட விவசாயிகளுக்குப் பட்டா வழங்கிட வேண்டும். குறிப்பாகச் சொல்லப்போனால், தருமபுரி, எம்.ஜி.ஆர். நகரில் 25 ஆண்டுக் காலமாகவும், பென்னாகரத்தில் வெள்ளையாம்பட்டி என்ற கிராமத்தில் 50-க்கும் மேற்பட்ட குடும்பத்தினருக்கு, சுமார் 60 வருடங்களாகப் பட்டா வேண்டி விண்ணப்பித்தவர்களுக்குப் பட்டா கிடைக்கவில்லை. எனவே, அதை நிவர்த்தி செய்ய அரசு முன்வர வேண்டும்.

அடுத்து, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு. தமிழகத்தில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தற்போது நடைபெற்று வருவது வரவேற்கத்தக்க ஒன்றாகும். சமூகத்தில் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைய மற்றும் கல்வி, வேலைவாய்ப்புகளில் வளர்ச்சியடைய, ஜாதி வாரியாக மக்கள் தொகை, கணக்கெடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் இட ஒதுக்கீடு முறையைச் சரியான முறையில் பின்பற்ற முடியும். அனைத்துச் சமூக மக்களும் சமம் அடைய இது ஒரு வாய்ப்பாகும். எனவே, ஜாதி வாரியாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்திட வேண்டும் என பா.ம.க. கேட்டுக்கொள்கிறது.

மீனவர் நலன்கள். மீனவர்களுக்கு ஏற்படும் இழப்பீடுகளுக்கு வழங்கப்படும் நிவாரணம் சரியான முறையில் கிடைப்பதில்லை எனக் குறைபாடுகள் அதிகமாக உள்ளன. அவற்றைச் சரி செய்து, அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகைகளை அதிகப்படுத்த வேண்டும். இவர்கள் அனைவருக்கும் கம்பி இல்லாத் தொலைத் தொடர்பு ஏற்படுத்தித் தர வேண்டும்.

பிற்பகல் 12-30

இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்துடைப்பு. வீடுகள் தீப்பற்றி எரிந்தாலோ அல்லது மழை வெள்ளத்தில் வீடுகள் அடித்துச் சென்றாலோ, அதற்கு நிவாரணமாக அரசு ரூபாய் 2,000/- மட்டுமே வழங்குகின்றது. அந்தத் தொகையை அதிகப்படுத்தி, ரூபாய் பத்தாயிரமாக உயர்த்திட அரசு ஆவன செய்ய வேண்டும்.

கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை மாவட்டங்களில் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாமல் வறட்சி ஏற்பட்டுள்ளது. விவசாயம் அழிந்துவிட்டது. எனவே, மேற்படி மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, அங்குள்ள குறு, சிறு விவசாயிகளுக்கு ரூபாய் 5,000/- நிவாரணமாக நிதி வழங்க வேண்டும்.

மேலும் விவசாயிகளின் ஆடு, மாடுகள் நோய்வாய்ப்பட்டு செத்து மடிகின்றன. குறிப்பாக, கறவை மாடுகள் சில நோய்கள் தாக்கி இறந்து விடுகின்றன. கறவை மாடுகளை மட்டும் நம்பி, குடும்பம் நடத்தும் குடும்பங்கள் ஏராளம். எனவே, அவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்க அரசினைக் கேட்டுக்கொள்கிறேன்.

மின்னல் தாக்கியும், பாம்புக் கடியினாலும் பல பேர்கள் எனது தொகுதியில் இறந்துள்ளனர். ஆனால், அங்குள்ள கிராம நிருவாக அலுவலர்கள் முறைப்படி விவரங்களை அரசிற்குத் தெரிவிக்காததால், யாருக்கும் நிவாரணம் கிடைக்கவில்லை. எனவே, மேற்படி இயற்கைச் சீற்றத்தால் இறந்தவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். இயற்கை இடர்ப்பாடுகள் நிதியம் ஒன்றை உருவாக்கி, ஆண்டுதோறும் நிதி ஒதுக்கி நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

ஒருவருக்கு O.A.P. வாங்கிக் கொடுத்தால், ரூபாய் இரண்டாயிரம் மறைமுகமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்பது வட்டாட்சியர் அலுவலகங்களின் எதிரில் நடைபெறுகின்ற ஒரு நடைமுறை விதி. இதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். வருவாயைப் பார்க்காமல் வறுமையைப் பார்க்க வேண்டும் என்கின்றது பா.ம.க.

கிராம நிருவாக அலுவலர், வருவாய் அலுவலர், வட்டாட்சியர் போன்ற அரசு ஊழியர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். அதேபோல், முன்னாள் கிராம நிருவாக அலுவலர்களுக்கு ஓய்வூதியம் உயர்த்தப்பட வேண்டும். அனைத்து வட்டாட்சியர்களுக்கும் நான்கு சக்கர வாகனங்கள் வழங்கப்பட வேண்டும். அனைத்து நிலையில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும்.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை. ஒரு மனிதனுக்கு உணவு, உடைக்கு அடுத்து உறைவிடம் மிகவும் இன்றியமையாததாகும். 'எலி வலையானாலும் தனி வலை

வேண்டும்' என்பார்கள் பெரியோர்கள். தமிழகத்தில் 40 சதவிகிதம் பேர்தான் நல்ல வீடுகளில் வசிப்பதாக ஓர் அறிக்கை கூறுகிறது. அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட, தீப்பிடிக்காத, கழிப்பிட வசதிகள் கொண்ட வீடுகள் தேவை. கிராமத்தில், கலைஞர் வீட்டு வசதித் திட்டம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கு ரூபாய் 1,800 கோடி ஒதுக்கியது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். அவர்களுக்கு அப்போதே பட்டா வழங்குவதையும் சிறப்பு அம்சமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

சென்னை மற்றும் இதர நகரங்களில் மிகவும் பழுதடைந்துள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளை மீண்டும் அரசு கட்டித் தர வேண்டும். ஆதி திராவிடர்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்டோர்களுக்கு, நகர்ப்புறங்களின் அருகில் உள்ள பகுதிகளில் வீடுகள் கட்டித் தர வேண்டும்.

கூட்டுறவு வீட்டு வசதி சங்க ஊழியர்களுக்கு ஓராண்டுக் காலமாகச் சம்பளப் பாக்கி வழங்கப்படாததால், கடும் நெருக்கடியில் அவர்கள் சிக்கியுள்ளார்கள். எனவே, அவர்களுக்கு விரைவில் சம்பளப் பாக்கியை வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம், வால்மீகி அம்பேத்கர் திட்டம் போன்ற வீடு கட்டும் திட்டங்களின்கீழ் வழங்கப்பட்ட கடன்களை அரசு தள்ளுபடி செய்திட வேண்டும். வீட்டு வசதி வாரியத்தில் கடன் முழுவதும் செலுத்திய பிறகும், அவர்களுக்கு உரிய பத்திரம் வழங்கப்படுவதில்லை. துறை, உடனே பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் தமிழகத்தில் வேலைவாய்ப்பை உருவாக்குவதோடு, வருமானத்தைப் பெருக்கி ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும், வளர்ச்சியைப் பெருக்கிடவும், முக்கிய பங்களிப்பைத் தருகின்ற துறையாகும். சமூக முக்கியத்துவம் வாய்ந்த இந்த சிறு தொழில்கள் நாளுக்கு நாள் நலிவடைந்து வருவது, கவலையளிக்கின்றது. எனவே, இதனைப் போக்கிட அரசு தனிக் கவனம் செலுத்திட வேண்டும். இத்துறைக்கு ரூபாய் 98 கோடி ஒதுக்கியுள்ளது குறைவானதாகும். நலிவடைந்த சிறு தொழில்களை ஏலத்திற்குக் கொண்டுவருதல் போன்ற கடுமையான நடவடிக்கைகளில் வங்கி ஈடுபடாமல் இருக்க, அரசு நிதி உதவி

அளித்து, பின்னர் தவணை முறையில் திருப்பிச் செலுத்த, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறு, சிறு தொழில் செய்வோருக்கு அரசு அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். தொழிற்கூடங்கள் வாடகைக்குக் கொடுக்கப்பட வேண்டும். ஒன்றியத்திற்கு ஒரு சிட்கோ தொடங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்நுட்பக் கல்லூரிகளில் கண்டுபிடிக்கப்படும் கண்டுபிடிப்புகளை அரசு ஊக்கப்படுத்த வேண்டும். தொழில் துவங்கப்பட அரசு மூலதனம் கொடுக்க வேண்டும். அதேபோல, முதலீட்டு மானியம் வழங்கப்பட வேண்டும். வேளாண் சார்ந்த தொழில்களுக்கு அதிக மானியம் வழங்கப்பட வேண்டும். பொருள்களை விற்பதற்கு விற்பனைச் சந்தைகளை அமைப்பதுடன், அவற்றை ஏற்றுமதி செய்திட, உரிய வசதிகளை அரசு செய்து தர வேண்டும்.

கயிறு வாரியம்மூலம் கயிறு தொழிலுக்கு அரசால் புத்துயிர் ஊட்டப்பட்டு வருகின்றது; வரவேற்கிறேன். அதேவேளையில், எனது காவேரிப்பட்டினம் தொகுதியில் மூடப்பட்டிருக்கும் கயிறு தொழிற்சாலையைத் திறக்க அரசு முன்வர வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

சிப்காட், சிட்கோ தொழிற்பேட்டைகளில் உள்ள இடத்தை நலிவடைந்த குறு தொழில்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். வட்ட அளவில் தொழிற்பேட்டைகள் அமைக்கவும், தனியார் தொழிற்பேட்டைகள் அமைக்கவும் அரசு சில சலுகைகள் தர வேண்டும். கச்சாப் பொருட்கள் பெறுவதில் உள்ள சிக்கலை ஆராய்ந்து, குறைந்த மின் கட்டணம் கட்டவும் வழிவகைகளை அரசு ஏற்படுத்தித் தர வேண்டும்.

ஓசூர் போன்ற பகுதிகளில் குறு, சிறு தொழிற்சாலைகள் அதிக அளவில் மூடிக்கிடக்கின்றன. அவற்றைத் திறக்க அரசும், மாவட்ட நிருவாகமும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 12-35

எனது தொகுதியில் வெள்ளிச்சந்தை என்னும் கிராமத்தில் பேப்பர் மில் ஒன்று 1996 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு, அது கடந்த 10 ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கிறது. அதனைத் திறக்க

உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது அந்த நிலத்தையும், அந்தக் கட்டடத்தையும் வேறு ஒரு தொழிற்சாலைக்கோ அல்லது பள்ளிக்கோ ஒப்படைக்க வேண்டும். எனது தொகுதியில் தீப்பெட்டி, தீக்குச்சி தொழிற்சாலைக் கூடங்கள் நிறைய உள்ளன. அவற்றிற்குத் தேவையான கச்சாப் பொருட்களை அரசு குறைந்த விலையில் கிடைக்க வழிவகை செய்திட வேண்டும்.

விவசாய வருவாய் அடிப்படையில் பெறப்பட்ட விவசாயம் தவிர்த்த இதர கடன்களான வீட்டுக் கடன் போன்ற அத்தியாவசிய கடன்களுக்குரிய அபராத வட்டியை இரத்து செய்வதுடன், இதுவரை கட்டிய தொகையை அசலில் வரவு வைத்து, தவணைக் காலத்தை நீட்டித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன். அதேபோல, தமிழகத்தில் உள்ள மாநகராட்சி எல்லையிலிருந்து 16 கிலோ மீட்டர் தூரத்திற்கு இலவச மனைப் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது. இந்த முறையைப் போக்க வேண்டும்.

என்னுடைய தொகுதிப் பிரச்சினைகள். மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற அடிப்படையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி துவக்கப்பட வேண்டும். அதேபோல, எனது தொகுதியில் அரசு அல்லது தனியார் பொறியியல் கல்லூரிகள் இல்லை; கலைக் கல்லூரி இல்லை, சட்டக் கல்லூரி இல்லை; பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இல்லை. எனவே, தனிக் கவனம் செலுத்தி, எனது தொகுதியில் கல்வி நிறுவனம் துவக்கிட அரசு முன்வர வேண்டும்.

என்னுடைய மாவட்டத்தில் பல சமத்துவபுரங்களைத் திறந்துள்ள மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள், கருணைகொண்டு எனது தொகுதியான காவேரிப்பட்டினத்தில், ஒரு சமத்துவபுரம் அமைத்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். எனது காவேரிப்பட்டினம் தொகுதிக்குட்பட்ட நாகரசம்பட்டி காவல் நிலையம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அக்காவல் நிலையத்திற்குக் கட்டடமும், காவலர் குடியிருப்புக் கட்டடமும் கட்டித் தர வேண்டும்.

பண்ணந்தூர் கிராமத்திற்கும் அரசம்பட்டி கிராமத்திற்கும் இடையே செல்லும் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க வேண்டுகிறேன். எனது காவேரிப்பட்டினம் தொகுதியிலுள்ள

ராயக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு தனி தாலுகா உருவாக்கப்பட வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை. நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர்கூட தேர்தலின்போது அம்மக்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளார்கள்.

தமிழகத்திலே அதிக அளவில் மாங்கனி உற்பத்தி செய்யப்படும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், அரசு மாம்பழக் கூழ் உற்பத்தித் தொழிற்சாலையையும் மற்றும் ஏற்றுமதி மண்டலத்தையும் அமைத்துத் தர வேண்டும்.

எனது தொகுதியில், பஞ்சபள்ளி அணையிலிருந்து கொண்டலாம்பட்டி ஏரி வரை, உபரி நீர்க் கால்வாய் அமைத்தால், 20 கிராமங்கள் பயனடையும். எனவே, அதற்கு நிதியொதுக்கிடக் கேட்டுக்கொள்கிறேன். காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினம் அரசு சமுதாய உடல் நல மையம் மற்றும் கெலமங்கலம் ஒன்றியம், ராயக்கோட்டையில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. மேற்படி ஆரம்ப சுகாதார நிலையங்களை, மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்தக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது காவேரிப்பட்டினம் தொகுதி, பள்ளிப்பட்டிக்கும், சந்தாபுரத்திற்கும் இடையே செல்லும் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே தரைப் பாலம் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் விவசாயிகளின் நலன் கருதி, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே காவேரிப்பட்டினம், தளிஅள்ளி, பென்னேஸ்வரம், அகரம், அரசம்பட்டி ஆகிய பகுதிகளில் தடுப்பணைகள் அமைக்க அரசு முன்வரக் கேட்டுக்கொள்கிறேன்.

காவேரிப்பட்டினம் தொகுதி, தளிஅள்ளி, நெடுங்கல் கிராமங்களில் கால்நடைக் கிளை மருந்தகம் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில், போச்சம்பள்ளி அருகில் போக்குவரத்துப் பணிமனை ஒன்று அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) உரையை முடித்துவிடுகிறேன். சுனாமி பாதித்தபோது ரூபாய் 8 இலட்சம் கொடுத்து உதவிய கிருஷ்ணகிரி வழக்கறிஞர் சங்கத்திற்கு Law Chamber ஒன்று அரசு கட்டித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மத்திய கூட்டுறவு வங்கிமூலம் கறவை மாடுகளுக்குக் கடன் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் வழங்கப்படும்

கடனை எனது தொகுதி மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தாட்கோமூலம் வழங்கப்பட்டுள்ள விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் அதிக அளவில் மல்லிகைப் பூ விளைவதால், அதனை விற்பனை செய்ய, பெங்களூருவுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். ஆனால், 100 கிலோ மீட்டர் செல்லும்போது பூக்கள் மலர்ந்து, உதிர்ந்து விடுகின்றன, உலர்ந்தும் விடுகின்றன. எனவே மலரை உலராமல் எடுத்துச் செல்ல குளிர்சாதன வசதிகொண்ட இரண்டு வாகனங்களை அரசு வழங்கிட வேண்டும். எனது தொகுதியில் பண்ணந்தூரில், மலையாண்டஅள்ளி கிராமத்தில் வேளாண் விரிவாக்க மையம் ஒன்றை உருவாக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மேகநாதன், நிறைய கோரிக்கைகளை வைத்துவிட்டீர்கள், போதும். (குறுக்கீடு) சீக்கிரம் சொல்லுங்கள்.

திரு. த.அ. மேகநாதன்: தமிழகம் மழையின்றி வறட்சியால் சிக்கித் தவிக்கும் அவல நிலையில், சில நேரங்களில் குறிப்பாகச் சொல்லப் போனால், மழை வெள்ளச் சேதம் என்று இயற்கைச் சீற்றங்கள் பாதிப்பு தொடர்வதால், இதற்கு நிவாரணம் காலதாமதமின்றி உடனே வழங்க இயற்கை இடர்ப்பாடு நிதியம் என்ற ஒன்றை உருவாக்கி ஆண்டுதோறும் நிதியொதுக்கீடு செய்து தயார் நிலையில் வைத்து, நிவாரணம் வழங்க பா.ம.க. வற்புறுத்துகிறது.

கலைஞர் வீட்டு வசதித் திட்டம் வந்துள்ளது; வரவேற்கிறோம். ஏழையெளியவர்கள் பயன்பெறும் வகையில் குடிசைவாசிகளுக்கு உடனே பட்டா வழங்க வேண்டும். ஒரு குடும்பத்தில் அண்ணன், தம்பிகள் பாகப் பிரிவினை செய்துகொள்ளும் குறு, சிறு விவசாயிகளுக்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மேகநாதன், உரையாற்றியது போதும். (குறுக்கீடு) அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை, இயற்கைச் சீற்றங்கள்

குறித்த துயர் தணிப்பு, நகர்ப்புற வளர்ச்சி ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

இன்றைக்கு அரசு பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில், அரசு நலத் திட்டங்களையெல்லாம் அமலாக்கக்கூடிய நிலையில் இருக்கக்கூடிய ஒரு துறையாக வருவாய்த் துறை இருந்து கொண்டிருக்கிறது. சாதிச் சான்றிதழ்கள் உள்ளிட்ட 14 வகையான சான்றிதழ்களை வழங்கக்கூடிய துறையாக வருவாய்த் துறை இருக்கிறது. ஆனால், அந்த வருவாய்த் துறையில் இன்றைக்குப் போதுமான எண்ணிக்கையில் ஊழியர்கள் இல்லாமல், பல்வேறு பணிகள் நடைபெறாமல், ஒரு சுணக்கம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, தமிழகத்திலே நான்காயிரத்திற்கும் அதிகமான கிராம நிருவாக அலுவலர் பணியிடங்கள் காலியாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மறுபுறத்தில் 405 கிராம நிருவாக அலுவலர்களுக்கான Certificate Verification நடத்தி முடிக்கப்பட்டு, ஆறு மாதங்களுக்குப் பின்புகூட, இன்றுவரை அந்தப் பணிகள் வழங்கப்படாமல் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து அரசு நலத் திட்டங்களும் முழுமையாக அமலாக்கப்பட வேண்டுமென்றால், வருவாய்த் துறையிலே இருக்கக்கூடிய காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதோடு, இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கக்கூடிய மக்கள் தொகைக்கேற்ப புதிய வருவாய் வட்டங்களை உருவாக்க வேண்டும். திருவட்டாறு பகுதியிலே புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, இந்த வருவாய்த் துறையில் மிக முக்கியமாக, 2007 ஆம் ஆண்டிலிருந்து அரசாணை எண் 854-ன்படி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கக்கூடிய திட்டம் ஒன்று தமிழகத்திலே அமலாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதுவரை 2,22,692 பட்டாக்கள் இந்தச் சிறப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டிருப்பதாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில்கூட 2,300 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் 44 ஆண்டுகளுக்கு முன்பாக தாயகம் திரும்பிய பர்மா தமிழர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. தமிழகம் முழுவதும்

2,22,692 பட்டாக்கள்தான் வழங்கப்பட்டிருக்கின்றனவென்றால், சென்னை மாநகரத்தில் மட்டும் இன்றைக்கு ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் அரசினுடைய பல்வேறு துறைகளைச் சார்ந்த நிலங்களிலே குடியிருந்து கொண்டிருக்கிறார்கள்; அரசினுடைய பல்வேறு துறைகளைச் சார்ந்த நிலங்களிலே குடியிருக்கக்கூடிய அனைவருக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களையும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் எங்களது கட்சியினுடைய மாநிலத் தலைவர்கள் சந்தித்து கோரிக்கை வைத்தபோது, ஒரு குழு அமைக்கப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்று அன்றைக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால், சென்னை மாநகரத்தில் இதுவரை 6,200 வீட்டுமனைப் பட்டாக்கள் மட்டும்தான் வழங்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியில்கூட அரசால் குடியமர்த்தப்பட்ட 3 பகுதிகளுக்கு இன்னும் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதியிலும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதோடு, அரசினுடைய பல்வேறு துறைகளுக்குச் சொந்தமான இடங்கள், நில வகை மாற்றம் செய்யப்படுவதன் மூலம்தான், இந்தத் திட்டம் ஒரு சிறப்பான திட்டமாக, சென்னை மாநகரம் போன்ற பெரிய நகரங்களில் இருக்கக்கூடிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா கிடைப்பதற்கான ஒரு வழியாக அமையும் என்பதைப் பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று சென்னை மாநகரத்தில் இன்றைக்கு நூற்றுக்கணக்கான தனியார் இடங்களில் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் 100 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். வாரிசுகள் இல்லாமல் இருக்கக்கூடிய அந்தத் தனியார் இடங்களில் குடியிருப்பவர்களுக்கும் பட்டா வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தில் 1972 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட குடிசை மாற்று வாரியத்தினுடைய பல்வேறு திட்டப் பகுதியில் இன்றைக்கும் விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படாமல் இருக்கின்றன. இந்த விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படாமல் இருப்பதற்குக் காரணம், அரசினுடைய பல்வேறு துறைகளைச் சார்ந்த நிலங்கள்

இன்னும் குடிசை மாற்று வாரியத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படாத சூழ்நிலைதான். அதனால்தான் அவர்களுக்கு விற்பனைப் பத்திரம் கிடைக்காமல் இருக்கிறது ஆகவே, விற்பனைப் பத்திரம் கிடைப்பதற்கு அரசினுடைய வேறு துறைகளைச் சார்ந்த இடங்களை குடிசை மாற்று வாரியத் துறைக்கு மாற்றிக் கொடுப்பதோடு 1982 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் குடியிருக்கக்கூடியவர்களுக்கு ரூபாய் 2,000 கடன் வழங்கப்பட்டிருக்கிறது. வழங்கப்பட்ட கடனுக்கு, இன்றைக்கு 40,000-இல் இருந்து 50,000 ரூபாய் வரை வட்டியைக் குடிசை மாற்று வாரியம் கேட்டுக் கொண்டிருக்கிறது. இந்த வட்டி தள்ளுபடி செய்யப்படும்போதுதான், அந்தப் பகுதிகளிலே குடியிருக்கக்கூடியவர்களுக்கு விற்பனைப் பத்திரம் கிடைக்கும். ஆகவே, அதற்கான நடவடிக்கைகளையும் மாநில அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் இன்று தமிழகத்தில் இருக்கின்றன, அவை நிலமற்ற மக்கள் அனைவருக்கும் பிரித்துக் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இதுவரை இரண்டு இலட்சத்து நான்காயிரம் ஏக்கர் நிலங்கள், 1,74,000 பேருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. 2,04,000 ஏக்கர் வழங்கப்பட்டிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். அதேநேரத்தில் தமிழகத்தில் எவ்வளவு நிலங்கள்தான் இருக்கின்றன என்ற ஒரு விவரத்தை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்குமாறு பணிவன்போடு நாங்கள் கேட்கிறோம். ஏனென்றால் நீங்கள் சொல்லும்போதெல்லாம், “அவர்கள் சொன்னார்கள், நாங்களும் சொல்லுகிறோம்; அவர்கள் சொன்னார்கள் நாங்கள் சொன்னோம்” என்று சொல்லுகிறீர்கள். உண்மையில் தமிழகத்தில் தரிசு நிலங்கள் எவ்வளவு இருக்கின்றன என்ற புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

பிற்பகல் 12-45

அதேபோன்று காவேரிராஜபுரத்திலே நீதியரசர் அவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கக்கூடிய 450 ஏக்கர் நிலம் அரசால் கையகப்படுத்தப்பட்டு, அங்கே இருக்கக்கூடிய நிலமற்ற விவசாயிகளுக்கு 2 ஏக்கரா வீதம் பிரித்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட சமீபத்திலே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று கொடுக்கப்பட்ட பஞ்சமி நிலங்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறார். குஜிலியம்பாறை,

அரவக்குறிச்சி பகுதியிலே இருக்கக்கூடிய பஞ்சமி நிலங்கள், இன்றைக்கு Crescent சிமெண்ட் ஆலை நிருவாகத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த நிலங்களை மீட்டு, மீண்டும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு அந்த நிலங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

இன்றைக்கு வருவாய்த் துறையின் சார்பாக வழங்கப்படக்கூடிய சாதிச் சான்றிதழ்களைப் பொறுத்தவரையில், பழங்குடியின மக்களுக்கு சாதிச் சான்றிதழ்கள் வருவாய்த் துறைமூலமாக கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தந்தைக்கு அந்த சாதிச் சான்றிதழ் இருக்கும்போது பிள்ளைகளுக்கும் அந்தச் சான்றிதழ் வழங்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம் ஆணையிட்டதற்குப் பின்புங்கூட, தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளில் இன்றைக்குப் பழங்குடியின மக்களுக்கு அந்த சாதிச் சான்றிதழ்கள் கிடைப்பதில் சிரமம் இருந்து கொண்டிருக்கிறது. இந்தச் சிரமத்தைச் சரி செய்வதற்கான நடவடிக்கைகளை மாநில அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

'இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு' என்ற தலைப்பில், இன்றைக்கு தீப் பிடிக்கக்கூடிய வீடுகளுக்கு, வீடு முழுமையாக தீப் பிடித்திருந்தால், வெறும் *2,000* ரூபாயும், *5* கிலோ அரிசியும், ஒரு வேஷ்டி, சேலையும் வழங்கப்படுகிறது. கலைஞர் வீடு கட்டும் திட்டத்தில்கூட ஒரு வீட்டைக் கட்டுவதற்கு *60* ஆயிரம் ரூபாய் அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றால், தீப் பிடித்து எரியக்கூடிய வீடுகளைப் புனரமைப்பதற்குக் குறைந்தபட்சம் *25* ஆயிரம் ரூபாய் ஒவ்வொரு வீட்டிற்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் காரணமாக தமிழகத்தில் இருக்கக்கூடிய மீனவர்கள் பல்வேறு இழப்புகளைச் சந்தித்திருக்கிறார்கள். நாகப்பட்டினம் மாவட்டத்திலே சுனாமியால் பாதித்திருக்கக்கூடிய மீனவர்களுக்கு இன்னும் வீடுகள் கிடைக்கவில்லை என்ற கோரிக்கை வந்துகொண்டிருக்கிறது. முறையாக அந்தக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட உண்மையான மீனவர்களுக்கு சுனாமிக் குடியிருப்புகள் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில், திண்டுக்கல் மாவட்டத்தில் இருக்கக்கூடிய இராணி மங்கம்மாள் காலனிக்கும், அதேபோல், மதுரை, எல்லிஸ் நகரிலே இருக்கக்கூடிய மக்களுக்கும் விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்கான சிறப்புத் திட்டங்களை மாநில அரசாங்கம் உருவாக்கி அரசாணை வெளியிட்டு வழங்கியிருக்கிறார்கள். இதுபோன்று, தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலே வீட்டு வசதி வாரியத்தின்மூலம் விற்கப்பட்ட வீடுகளுக்கு இன்னும் விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படாமல் இருக்கின்றன. அந்தப் பகுதிகள் முழுவதும் கணக்கெடுக்கப்பட்டு, திண்டுக்கல் இராணி மங்கம்மாள் காலனிக்கு வழங்கப்பட்டதைப்போல, மதுரை, எல்லிஸ் நகருக்கு வழங்கப்பட்டதைப்போல, மற்றவர்களுக்கும் அந்த விற்பனைப் பத்திரங்கள் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் வாங்கிய கடன்கள், இன்றைக்கு பலரால் திருப்பிச் செலுத்த முடியாத நிலைமை இருக்கிறது. வட்டி, தண்ட வட்டி, கூட்டு வட்டி என்று பல இலட்சக்கணக்கான ரூபாய், வாங்கிய கடனைவிட வட்டி கூடுதலாக இருக்கக்கூடிய காரணத்தினால் வட்டி செலுத்த முடியாதவர்களது வீடுகள் இன்றைக்கு ஜப்தி செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) அந்த நிலைமை தீர்க்கப்படுவதற்கான முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

இன்றைக்கு தமிழகம் முழுவதும் வீட்டு வசதி வாரியத்தில் ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய வீடுகள் போக அடுக்குமாடிக் குடியிருப்புகளுடைய தேவைகள் என்பது தமிழகத்திலே அதிகரித்திருக்கின்றன. சென்னை மாநகரத்தில் 194 வீடுகளுக்கான விண்ணப்பங்கள் விற்கப்பட்டபோது, 3 இலட்சம் பேர் விண்ணப்பித்த நிலைமை, சென்னை மாநகரத்திலே ஏற்பட்டது. சென்னை மாநகரம், திருப்பூர் நகரம் போன்ற வளர்ந்து வரக்கூடிய நகரங்களில் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளை வீட்டு வசதி வாரியத்தின்மூலம் உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறு, சிறு தொழில் இன்றைக்குத் தமிழகத்தில் நலிவடைந்து கொண்டிருக்கிறது. நலிவடைந்து கொண்டிருக்கக்கூடிய இந்தத்

தொழிலைப் பாதுகாப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதோடு, கையினால் செய்யப்படக்கூடிய தீப்பெட்டிக்குத் தேவையான மூலப்பொருட்கள் மானிய விலையிலே கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய இலட்சக்கணக்கான தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையாளர் இருக்கையிலே அமர்வதற்கு நூற்றுக்கணக்கான பேர் வெளியில் நின்றுகொண்டு, அங்குத் தள்ளுமுள்ளு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதிக்கின்றவர்களை மட்டும், இங்கு அனுமதித்தால் பரவாயில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் வெளியே சென்று திரும்பி வர முடியவில்லை. அங்கு நூற்றுக்கணக்கானவர்கள் ஒரே நேரத்தில் பேரவைத் தலைவருடைய உத்தரவையும் மீறி உள்ளே வர முயற்சிக்கின்றார்கள். சபைக் காவலர்கள் தடுத்தபோது, அவர்களை நெட்டித் தள்ளி, அங்கே பிரச்சினை நடந்துகொண்டிருக்கிறது. அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைச் செயலாளரை இதுகுறித்து உடனே நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

பிற்பகல் 12-50

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணி நடைபெறத் தொடங்கியிருக்கிறது. இந்தப் பணி சுதந்திரம் பெற்றதற்குப் பின்னாலே ஏழாவது கணக்கெடுப்பாக நடைபெறுகிறது என்று நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பது, மக்களின் சமூக, பொருளாதார நிலைகளைப் பற்றியும், பிறப்பு, இறப்பு

விவரங்களைப் பற்றியும் உள்ளடக்கியதாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதிலே இருக்கின்ற நிலைமைகளிலே இப்போது மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணியை எடுக்கின்றபோது, முறையாகவும், சரியாகவும் பாகுபாடு இல்லாத முறையிலும் எடுக்க வேண்டுமென்பது இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினுடைய அழுத்தமான கருத்து.

இப்போது திட்டக் குழு ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறது. மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் திரு. சரத்பவார் அவர்கள், இப்போது ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறார். திட்டக் குழு, வறுமைக்கோட்டின் அளவு என்ன என்று அறிவிக்கின்றதோ அதன் அடிப்படையிலேதான் அதற்குரிய பொருட்கள் ஒதுக்கப்படும் என்று சொல்கிறார். அப்படியானால், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்களுடைய எண்ணிக்கை என்பது ஏற்றத்தாழ்வாக இருக்கிறது. ஆகவே, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பதையும், சாதி வாரியான கணக்கெடுப்பு என்பதையும், முறையாகவும், சரியாகவும் எடுக்க வேண்டும். இன்னும் 10 ஆண்டுகள் கழித்துத்தான் அதைத் திரும்ப எடுக்கப் போகிறோம். ஆகவே, இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பதை முறையாக, சரியாக செய்வதற்குரிய முயற்சியை நம்முடைய தமிழகத்திலே எடுக்க வேண்டும். இதைத் தேசிய அளவிலும் எடுக்க வேண்டும். இதிலே நம்முடைய தமிழ்நாடு அரசு தனித்த கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே மனைப் பட்டா குறித்துப் பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்பட்டுவிட்டன. இருந்தாலும், இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே 7,24,327 குடும்பங்களுக்கு மனைப் பட்டா அளிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வரவேற்கின்றேன்.

மானியம் மற்றும் இதர சலுகைகளைப் பெறுவதற்கு வழிமுறைகள் எளிதாக்கப்பட்டாலும், புதியதாக அறிமுகப்படுத்திய சலுகைத் திட்டங்கள் தொழில்முனைவோருக்குப் பெரிதும் ஊக்கம் அளித்ததாலும், வழங்கப்பட்ட மானியத் தொகை, முன் எப்போதும் இல்லாத வகையில் உயர்ந்துள்ளது. புதிய தொழில் கொள்கை ஆரம்பிக்கப்பட்ட முதலாம் ஆண்டு, அதாவது 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.19.95 கோடியாக வழங்கப்பட்ட முதலீட்டு மானியம் 2009-2010 ஆம் ஆண்டு ரூ.30 கோடியாக உயர்ந்துள்ளது. இந்த நல்ல முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு, இந்த நிதியாண்டில் 2010-2011 மானியச் சலுகைத் திட்டங்களுக்கு ரூ.50 கோடி வரை இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இவை தவிர, மின் மானியம்--L.T.P.T. Subsidy--பின் முனை வட்டி மானியம்--Back ended interest subsidy--மின்னாக்கி மானியம் Generator Subsidy--மற்றும் விற்பனை வரி மானியம்--VAT subsidy--ஆகிய மானியங்களுக்காக, சுமார் 12½ கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

தொழில் குழும மேம்பாட்டுத் திட்டங்கள். தமிழகத்தில் பல இடங்களில் தொழிற்சாலைகள் குவியலாக அமைந்துள்ளன. உதாரணமாக திருப்பூரிலே பனியன் தொழில்கள், சிவகாசியிலே தீப்பெட்டி, பட்டாசுத் தொழில்கள், வாணியம்பாடி, ஆம்பூரிலே தோல் தொழில்கள், சிங்கம்புணரி, பட்டுக்கோட்டை, பொள்ளாச்சியிலே கயிறு தொழில்கள். இதற்குக் குழுமம் அல்லது கிளஸ்டர் என்று பெயர். இந்த ஒவ்வொரு தொழிற்சாலையும் நவீன இயந்திரங்களை அதிக விலை கொடுத்து வாங்கும் நிலை இதுவரை உள்ளது. அதற்கு அரசே நிதியுதவி அளித்து பொது வசதியாக்க மையம்மூலம் அளிக்க முடிவு செய்துள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களைத் திறம்பட செயல்பட வைக்கும் நோக்கத்தில் குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 50 குழுமங்கள் கண்டறியப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் 14 குழுமங்களுக்கு 30 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் இப்போது மாநில, மத்திய அரசின் பங்காக 19 கோடி ரூபாய் நிதியுதவி பெற்றுத் தரப்பட்டுள்ளது. இதில், கோவையில் மாவு அரைக்கும் இயந்திரக் குழுமத்திற்கு ரூ.2.88 கோடியும், சேலத்தில், 'Sago Serve' குழுமத்திற்கு சுமார் 5 கோடியும், குடியாத்தம், கழுகுமலை, விருதுநகர், சாத்தூர் கோவில்பட்டி, மற்றும்

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் தீப்பெட்டிக் குழுமங்களுக்கு ரூ.9.36 கோடியும், சிவகங்கையில் கயிறு குழுமத்திற்கு ரூ.8.53 கோடியும், திருநெல்வேலியில் செங்கல் குழுமத்திற்கு ரூ.2.2 கோடியும் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 17,329 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் பயன்பெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், 22 குழுமத் திட்டங்களுக்காக, திட்ட அறிக்கைகள் 120 கோடி ரூபாயில் தயாரிக்கப்பட்டு, மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட உள்ளன. இந்தத் திட்டங்கள் 24,224 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்குப் பயனளிப்பதுடன், சுமார், 1 இலட்சத்து 60 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பினை நல்கும். மீதம் உள்ள 14 குழுமத் திட்டங்களுக்கான திட்ட அறிக்கைகள் விரைவிலே தயாரிக்கப்பட்டு, மைய அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகத்தினுடைய வேலைவாய்ப்பு இலக்காக, இந்தத் துறையின்மூலம் 10 இலட்சம் பேர்கள் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை 4 இலட்சத்து 6 ஆயிரத்து 974 நபர்களுக்கு இத்துறையின்மூலம் வேலைவாய்ப்பு பெறப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள இலக்கை அடைய வருங்காலங்களிலே தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

பாரதப் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம். இத்திட்ட மதிப்பீட்டில் 35 சதவிகிதம் வரை மானியம் வழங்கப்படும். பாரதப் பிரதமரின் வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டம்--PMEGP--மிகச் சிறந்த ஒரு திட்டம் ஆகும். இத்திட்டத்தின்கீழ், 2008-2009 ஆம் நிதியாண்டில், 1,201 திட்டங்களுக்கு ரூ.2,377.31 இலட்சம் தொகை மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக 19,802 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில் 2,401 தொழில் திட்டங்களுக்கு ரூ.5,029.93 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு 39,404 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-45

அக்டோபர் 2008-இலிருந்து உலகம் சந்தித்து வரும் உலகப் பொருளாதாரப் பின்னடைவின் காரணமாக, தொழில் நிறுவனங்களில் ஏற்பட்ட தாக்கத்தினைச் சீர்செய்யும் வகையில்

அந்நிறுவனங்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட கடன்களை வங்கிகளுக்குச் செலுத்தும்வீதம் Re-structuring மாற்றப்பட்டு இதுவரை 12,560 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வங்கிக் கணக்குகள் ரூ.3057.53 கோடி மதிப்பீட்டில் மறு சீரமைக்கப்பட்டன. மேலும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் வாயிலாக (TIIC) 504 வங்கிக் கணக்குகள் ரூ.36.09 கோடியில் மறு சீரமைக்கப்பட்டன. தமிழகத்திலுள்ள குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலுள்ள பெருந்தொழில் நிறுவனங்களுக்குத் தங்களுடைய உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்து அதற்குண்டான தொகைகளைப் பெறமுடியாமல் சில இடங்களிலே பிரச்சினை இருக்கிறது. ஆகவே, அவற்றையெல்லாம் சீர்செய்யும்பொருட்டு இத்துறை சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய நான்கு மண்டலங்களில் வசதியாக்க மன்றங்கள் அமைத்து, விவாதங்கள் நடத்தி, 2009-2010 ஆம் ஆண்டில் 157 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு ரூ.433.04 இலட்சம் பெற்றுத் தந்துள்ளது.

கூட்டுறவுத் தொழிற் சங்கங்கள். இந்தத் துறையில் 2005-2006 ஆம் ஆண்டில் 306 ஆக இருந்த இந்தத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை தற்போது 2009-2010 ஆம் ஆண்டில் 362 ஆக உயர்ந்துள்ளது. அதேபோல 2005-2006 ஆம் ஆண்டில் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் எய்திய மொத்த விற்பனை 395 கோடி ரூபாய். 2009-2010 ஆம் ஆண்டில் 588 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக, நிதானமாக 10 விழுக்காடு விற்பனை வளர்ச்சியை இந்தச் சங்கங்கள் எட்டியுள்ளன. மேலும், இந்தத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்மூலமாக 1 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

"Incoserve" தொழில் கூட்டுறவுத் தேயிலைச் சங்கங்கள். இத்துறையின்மூலம் நீலகிரி மாவட்டத்தில் சுமார் 20 ஆயிரம் குறு மற்றும் சிறு தேயிலை விவசாயிகளுக்குச் சேவை செய்யும்பொருட்டு 15 தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. இதிலே 9 தொழிற்சாலைகள் இலாபத்திலே இயங்கி வருகின்றன. கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனப்படுத்துவதற்காக 10.53 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக தேயிலையின் தொழில் தரம் மற்றும் உற்பத்தித் திறன் அதிகரித்துள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் 150 இலட்சம் கிலோவாக இருந்த தேயிலைத் தூள் உற்பத்தி 2009-2010 ஆம் ஆண்டில் 174

இலட்சம் கிலோவாக உயர்ந்துள்ளது. இதன் காரணமாக சிறு தேயிலை விவசாய உறுப்பினர்களுக்கு, சராசரியாக கிலோ ஒன்றுக்கு பசுந் தேயிலைக்கு 12 ரூபாய் 31 காசு வீதம் கொள்முதல் விலையாக வழங்கப்பட்டுள்ளது. இது 2005-2006 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பசுந் தேயிலை விலையான கிலோ ஒன்றுக்கு 4 ரூபாய் 80 பைசாவைவிட 250 விழுக்காடு அதிகம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேயிலைத் தொழிற்சாலைகளின் இணையமான "Incoserve" மாநிலத்தில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளின்மூலம் குறைந்த விலையில் ஊட்டி Tea என்ற பெயரில், தேயிலைத் தூள் விற்பனை செய்து வருகிறது. இதன்மூலம் நுகர்வோர்களுக்குக் குறைந்த விலையில் தேயிலைத் தூள் கிடைப்பதோடு சிறு தேயிலை விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கவும் உதவுகிறது. 2009-2010 ஆம் ஆண்டில் 'Incoserve' ரூ.16.53 கோடிக்கு ஊட்டித் தேயிலைத் தூளை விற்பனை செய்துள்ளது.

ஜவ்வரிசி-- 'Sagoserve' சேலம், நாமக்கல், தருமபுரி, ஈரோடு உள்ளடக்கிய 8 மாவட்டங்களில் சுமார் 800 ஜவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு உற்பத்திச் செய்யும் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த ஜவ்வரிசி மற்றும் கிழங்குப் பொருள்கள் 'Sago Serve' சங்கத்தின்மூலம் விற்கப்பட்டு அதன்மூலம் 85 ஆயிரம் எக்டேர் நிலங்களிலே சாகுபடி செய்யும் மரவள்ளிக் கிழங்கு விவசாயிகள் பயனடைந்து வருகிறார்கள். சென்ற ஆண்டுகளில் கிலோ ஒன்றுக்கு 5 ரூபாய்க்கு விற்ற மரவள்ளிக் கிழங்குகளின் விலை தற்போது 8 ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். 'Sago Serve' சங்கத்தின்மூலம் 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.307.45 கோடிக்கு விற்பனை நிகழ்த்தி 2.3 கோடி ரூபாய் அளவிற்கு இலாபம் ஈட்டி உள்ளது. மத்திய அரசின்மூலம் இந்த 'Sago Serve' சங்கத்திற்கு 5 கோடி ரூபாய் செலவில் ஒரு நவீன பகுப்பாய்வுக் கூடம் அமைக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

பிற்பகல் 1-50

தாய்கோ வங்கி--2005-2006 ஆம் ஆண்டில் 27 கிளைகளுடன் செயல்பட்ட இவ்வங்கி, கடந்த நான்கு ஆண்டுகளில் முதல்வர்

அவர்களுடைய ஆணையை ஏற்று, புதியதாக 16 கிளைகளைத் தொடங்கி, தற்போது 43 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் அனைத்து மாவட்டங்களிலும் இவ்வங்கியின் கிளைகள் செயல்பட்டு வருகின்றன. தாய்கோ வங்கி 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.477 கோடியை வைப்புத் தொகையாகப் பெற்றிருக்கிறது. ரூ.394 கோடியை advanceஆக, கடனாக வழங்கி இருக்கிறது. இதனுடைய மொத்த turn over வியாபாரம் சுமார் ரூ.4,800 கோடியாகும். நிகர இலாபம் சுமார் ரூ.2.90 கோடியாகும்.

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், கயிறுத் தொழிலில் கேரளாவுக்கு அடுத்தபடியாக தமிழகம் இரண்டாம் இடத்தை வகிப்பதுடன், பழுப்பு நார் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. பாரம்பரிய கயிறுத் தொழில்கள் புத்துயிரூட்டும் திட்டம், SFURTI திட்டத்தின்கீழ் கடலூர், சேலம், சிங்கம்புணரி, பெரியகுளம், பட்டுக்கோட்டை மற்றும் குடியாத்தம் ஆகிய பகுதிகளில் ஒவ்வொரு பகுதியிலும் தலா ரூ.88.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஆறு கயிறுக் குழுமங்களுக்கு ரூ.5.31 கோடி அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. கயிறுத் தொழிலைப் புத்துயிரூட்டுதல், நவீனப்படுத்துதல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் REMOT என்ற திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 616 கயிறு பின்னும் தொழிலகங்களும், 520 குடிசைத் தொழிலகங்களும், ரூ.39.32 கோடி மதிப்பீட்டில் இப்பொழுது இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை ரூ.20 கோடி மதிப்பீட்டிலான திட்டங்கள் அனுமதிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகின்றன. வருங்காலத்தில் மொத்தமுள்ள ரூ.19 கோடிக்கான திட்டங்கள் அனுமதிக்கப்பட்டு, பணிகள் நிறைவேற்றப்படும்.

தொழிற்பேட்டைகள். தொழில் வணிகத் துறையின்கீழ் 23 தொழிற்பேட்டைகள் இயங்கி வருகின்றன. சிட்கோ நிர்வாகத்தின்கீழ் 92 தொழிற்பேட்டைகள் இயங்கி வருகின்றன. ஆக மொத்தம் தமிழ்நாட்டில் 115 தொழிற்பேட்டைகள் இந்தத் துறையின்மூலமாக இயங்கி வருகின்றன.

சிட்கோ. சிட்கோ நிறுவனம் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் 1970 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 2006 ஆம் ஆண்டு முடிய இதுவரை 78 தொழிற்பேட்டைகள்தான் இருந்தன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இத்தொழிற்பேட்டைகளினுடைய

எண்ணிக்கையை நூறாக உயர்த்த வேண்டும் என்று ஆணையிட்டதைத் தொடர்ந்து, மேலும் 14 தொழிற்பேட்டைகளை உருவாக்கி, தற்போது 92 தொழிற்பேட்டைகளை சிட்கோ நிருவகித்து வருகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இதன் தொடர்ச்சியாக, தமிழகத்தில் மேலும் 16 இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்க, சுமார் 1,091 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தும் பணியில் சிட்கோ நிறுவனம் ஈடுபட்டுள்ளது. எனவே, வரும் ஆண்டில் 100 தொழிற்பேட்டைகளுக்குமேல் சிட்கோ நிருவகிக்கும் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கின்றேன். இத்தொழிற்பேட்டைகளில் 2,24,181 தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். அனைத்துத் தொழிற்பேட்டைகளிலும் நிறுவப்பட்டுள்ள 6,774 நிறுவனங்களில் ஆண்டு உற்பத்தி மதிப்பு ரூ.14,545 கோடி. இதில் உள்நாட்டு விற்பனைக்கான மதிப்பு ரூ.11,433 கோடி. ஏற்றுமதி செய்யும் பொருட்களின் மதிப்பு ரூ.3,112 கோடி. இந்நிறுவனங்களின்மூலம் மாநில அரசுக்கு 1,080 கோடி ரூபாய் வருமானமும், மைய அரசுக்கு 660 கோடி ரூபாய் வருமானமும் கிடைக்கிறது. சிட்கோ நிறுவனம்மூலம் மூலப்பொருட்கள் மொத்த விற்பனை ரூ.243.88 கோடியைப் பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கடந்த 2009-2010 ஆம் நிதியாண்டில் சிட்கோ நிறுவனம்மூலம் குறு, சிறு மற்றும் தொழில் நிறுவனங்களுடைய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.2.94 கோடி செலவில் காக்களூர், திருமுல்லைவாயல், வெண்மணியாத்தூர், ராசாத்தவலசு ஆகிய இடங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் குறிச்சி, ஊட்டி, முகுந்தராயபுரம் ஆகிய இடங்களில் ரூ.2.35 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. இவ்வரசினால் 1970 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சிட்கோ நிறுவனம் தற்போதைய ஆட்சியில் முன்னேற்றப் பாதையிலே முழு முனைப்புடன் சென்று கொண்டிருக்கிறது. 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.606 இலட்சம் இலாபத்தினையும், 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.848 இலட்சம் இலாபத்தினையும், 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.309 இலட்சம் இலாபத்தினையும், 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.1,103 இலட்சத்தையும் இலாபமாக ஈட்டியுள்ளது. கடந்த ஆண்டுகளில் ஆண்டுக்கு ரூ.87 இலட்சம் வீதம் ஆதாயப் பங்காக அரசுக்கு வழங்கி வருகிறது, இந்த ஆண்டும் வழங்கப்படும்.

2010 ஏப்ரல் 21] [திரு. பொங்கலூர் நா. பழனிசாமி]

பிற்பகல் 1-55

KPMG மற்றும் Indus Enterprise ஆகிய முன்னணி தொழில் ஆய்வு நிறுவனங்கள் இணைந்து அனைத்து மாநிலங்களிலும் உள்ள தொழில் முனைவோரிடம் ஆய்வு நடத்தி, அந்த ஆய்வறிக்கையில் தமிழகம் உள்ளிட்ட ஆறு மாநிலங்களில் தொழில் செய்வதற்குச் சாதகமான சூழல் நிலவுகிறது என்றும், தமிழ்நாட்டில் சிட்கோ நிறுவனம் தொழில் வளர்ச்சிக்காகப் பல்வேறு சிறப்புத் திட்டங்களையும் செயல்படுத்துகிறது என்றும், இரண்டாம் மற்றும் மூன்றாம் தர நகரங்களில் தொழில் வளர்ச்சியை விரிவுபடுத்துவதில் நாட்டிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்றும் கூறப்பட்டிருப்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர், உங்களுக்கு இன்னும் எவ்வளவு நேரம் தேவை?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: தலைவர் அவர்களே, ஐந்து நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். டான்சி, உள்ளே போகலாமா, வேண்டாமா என்றே தெரியவில்லை. (குறுக்கீடுகள்) டான்சி என்றால் என்ன என்று தமிழகத்தில் உள்ள எல்லோருக்கும் தெரியும். ** கலைஞர் ஆட்சியில் இப்பொழுது சிறப்பாக நடைபெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) மூடிக் கிடந்த தொழிற்சாலைகள் கடந்த ஆண்டு இந்தப் பேரவையில் அறிவித்தவாறு ஈரோடு, திருப்பூர், நாமக்கல் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் டாக்டர் கலைஞர் ஆட்சியில் மீண்டும் திறக்கப்பட்டு, உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்ற வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: ** (குறுக்கீடுகள்) உண்மையைச் சொல்ல முடியவில்லை. 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.60 கோடியாக இருந்த டான்சியின் உற்பத்தி மதிப்பீடு அதிகரித்து தற்போது ரூ.283 கோடியாக உயர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). நான்கு ஆண்டுகளில் உற்பத்தி விகிதம் 400 விழுக்காடு அடைந்ததற்கு முக்கிய காரணம், நமது தமிழக முதல்வர் அவர்களும் துணை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முதல்வர் அவர்களும்தான். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் காரணமாக, 2008-2009 ஆம் ஆண்டு தமிழக அரசுக்கு ஈவுத் தொகையாக டான்சி ரூ.18.50 கோடியை வழங்கியுள்ளது. இந்த ஆண்டு ஈவுத் தொகையாக ரூ.24.75 கோடியை வழங்க உள்ளது. அதையும் மீறி, ரூ. 12.93 கோடியை ஆதாயமாக ஈட்டும் நிலையில் உள்ளது என்பதை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் அனுமதியுடன் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவற்றுக்கெல்லாம் மணி மகுடமாக, முத்தாய்ப்பாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், டான்சி நிறுவனத்திற்கு அளவிட முடியாத பெருமையை அளித்துள்ளார்கள். பார் புகழும் இந்தப் பசுமைக் கட்டடத்திற்கு, குறிப்பாக இந்தப் பேரவையிலே நாம் அனைவரும் வசதியோடு அமர்ந்திருக்கின்ற இந்த இருக்கைகளையும், இதர அறைகலன்களையும் முதல்வர் ஆணையிட்ட காலத்திற்குள் (மேசையைத் தட்டும் ஒலி) தரத்துடன், அழகுடன், நேர்த்தியாகத் தயாரித்து வழங்கியது டான்சி என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தப் பெருமையை வழங்கிய டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும், கடந்த ஆண்டு நான் சட்டமன்றத்திலே கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த Order-ஐ வழங்கிய துணை முதல்வர் அவர்களுக்கும் எனது நன்றியை மீண்டும் சமர்ப்பித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வெளிநாட்டுத் தொழில் முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க தேடியும், நாடியும், ஓடியும் வரும் காலம் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய காலம். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் தாய்ப் பறவையின் அரவணைப்பில் சுகம் காணும் காலம், தலைவர் அவர்களின் காலம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கோரிக்கையை வைத்து உரையாற்றும் பேற்றினைப் பெற்றதற்கு மீண்டும் முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சில அறிவிப்புகள். அறிவிப்புகள் நிறைய இருக்கின்றன. ஒரே ஒரு முக்கியமான அறிவிப்பினை மட்டும் படித்துவிட்டு, மற்ற அறிவிப்புகளை@ நான் படித்ததாக ஏற்று, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

@ 376 முதல் 382 வரையிலான பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

2010-2011 ஆம் ஆண்டில் 'வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டம்'. இந்தத் திட்டம் இரண்டு நாட்களுக்கு முன்பு நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிந்தையில் உருவான திட்டம். வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு, சுய வேலைவாய்ப்பு வழங்கும் வகையில், சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மக்களும் பயன்பெறும் வகையில், இவர்கள் உற்பத்தி சார்ந்த தொழிலைத் தொடங்கினாலோ அல்லது சேவை மற்றும் வணிகம் சார்ந்த தொழில்களைத் தொடங்க விரும்பினாலோ, அவர்களுக்கு உதவிடும் வகையில் பதினைந்து விழுக்காடு மானியத்துடன் அதிகபட்சமாக ஐந்து இலட்சம் வரை வங்கிகள்மூலம் கடன் உதவி வழங்க 'வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' என்ற புதிய திட்டம் நடப்பு ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்மூலம் 100 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 10,000 பேருக்கு சுய வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

பிற்பகல் 2-00

குறு, சிறு மானியக் கொள்கையிலே சில சலுகைகளை அறிவித்திருக்கின்றோம். அதை உறுப்பினர்கள் படித்துக்கொள்ளலாம். அடுத்து குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 15 கீழ்க்கண்ட திட்டங்களுக்கு பொது வசதியாக்க மையங்களை நாங்கள் அமைத்திருக்கின்றோம். அவற்றையும் உறுப்பினர்கள் படித்துத் தெரிந்துகொள்ளலாம். சிறுபான்மையின உறுப்பினர்களுக்கு 200 ஆட்டோக்கள் வழங்கும் திட்டம் தாய்கோ வங்கியின்மூலமாகச் செயல்படுத்தப்பட இருக்கிறது. மின் ஆளுமை வசதிகளை ஏற்படுத்தித் தர இருக்கின்றோம். சிட்கோ தொழிற்பேட்டை ஒதுக்கீட்டில் 10 விழுக்காடு ஆதி திராவிட, பழங்குடியினர் மற்றும் திருநங்கைகளுக்கு ஒதுக்கப்படும். தூத்துக்குடி மாவட்டத்தில் மீன் குழுமத் தொழிற்பேட்டை பிடாநேரி கிராமத்தில் அமைக்கப்படும். வேலூர் மாவட்டத்தில் தோல் குழுமத் தொழிற்பேட்டை அமைக்கப்படும்.

புதிய தொழிற்பேட்டைகளைக் கீழ்க்கண்ட இடங்களிலே அமைக்க இருக்கின்றோம்; தஞ்சாவூரிலே, பாலையப்பட்டியிலே

[திரு. பொங்கலூர் நா. பழனிசாமி] [2010 ஏப்ரல் 21

103.03 ஏக்கரிலும், புதுக்கோட்டை, மாத்தூரிலே 19.92 ஏக்கரிலும், கரூரில் மணவாசியில் 121.58 ஏக்கரிலும்--பாலாஜி, கைதட்டுங்கள்-- வேலூர், ஆற்காடு, அல்லாலசேரி மற்றும் நாகலேரியில் 40 ஏக்கரிலும், கோயம்புத்தூரில் மயிலேரிபாளையத்தில் 22.23 ஏக்கரிலும், திருவள்ளூர், காவேரிராஜபுரத்தில் 200 ஏக்கரிலும், திருவள்ளூர், ஏனம்பாக்கத்தில் 200 ஏக்கரிலும், விருதுநகர், சத்திரப்பட்டியில் 60 ஏக்கரிலும், விழுப்புரம், பட்டணம் பகுதியில் 103.62 ஏக்கரிலும், திருநெல்வேலி, பாளையங்கோட்டையில் பொன்னாகுடியில் 96.90 ஏக்கரிலும் தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும். சென்னை மாநகரில் சிட்கோ வர்த்தக மையம் அமைக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் மூன்று பேர் இந்த மானியக் கோரிக்கையில், என்னுடைய துறையின்மீது உரையாற்றியிருக்கிறார்கள. உறுப்பினர்கள் 201 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் என்னுடைய அதிகாரிகளிடம் கொடுத்து, அதிலுள்ள கருத்துகளையெல்லாம் நாங்கள் உள்வாங்கி, எதிர்காலத்திலே அவற்றுக்குரிய நடவடிக்கைகளை எடுக்கவிருக்கின்றோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்று, எனது மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்னுமா உறுப்பினர்களுக்குச் சந்தேகம் இருக்கிறது? எவ்வளவு நேரமாக விவரங்களைச் சொல்லியிருக்கிறார்? (குறுக்கீடு) திரு. செந்தில் பாலாஜி, சொல்லுங்கள்.*

திரு. வே. செந்தில் பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நெரூர் வடபாகம் ஊராட்சியில், முழுக்க முழுக்க, காவிரி டெல்டா பாசன விவசாயிகள் நிறைந்த அந்தப் பகுதியிலே, தொழிற்பேட்டை அமைப்பது என்ற அறிவிப்பு விவசாயிகள் மத்தியிலே ஒரு கவலையை, அச்சத்தை உருவாக்கியிருக்கிறது. அதற்குப் பதிலாக, நெரூர் வடபாகத்தில் தொழிற்பேட்டை என்பதற்குப் பதிலாக மாற்று இடத்தைத் தேர்வு செய்து புதிய தொழிற்பேட்டையை*

உருவாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: கரூர் மாவட்டத்தில் எந்த இடத்தில் தொழிற்பேட்டை அமைத்தாலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இது முக்கியமான இடம், வேறு இடத்தில் அமையுங்கள் என்று சொல்கிறார்கள். அவர் வேறு ஏதாவது இடத்தினைக் காட்டினால் அங்கே எதிர்காலத்தில் அமைக்க முன்னுரிமை அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 சிறு தொழில்களுக்கெல்லாம் மானியம் கொடுத்து அவற்றுக்கு வங்கியின்மூலமாகக் கடன் பெறுவதற்கு உதவி செய்வது குறித்து இந்த அறிவிப்புகள்மூலமாக அறிவித்திருக்கிறீர்கள். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம், மெக்கானிக் ஷெட் வைப்பதற்கும், அதேபோல கார்களுக்குரிய பெயிண்ட் அடிக்கக்கூடிய அந்தத் தொழில்களைத் தொடங்குவதற்கும் அரசு list-லே இருக்கிற 15 தொழில்களோடு, இந்த இரண்டையும் சேர்க்க அரசுமுன்வருமா என அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன, ஒரு எல்லையே கிடையாதா?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: இந்த அறிவிப்புப் புத்தகத்திலே முதல் அறிவிப்பே அதுதான் அம்மா. வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் கடனுதவி வழங்குவதற்கு எந்தவிதமான நிபந்தனையும் கிடையாது, வயதும் கிடையாது, யாருக்கு வேண்டுமானாலும், 5 இலட்சம் ரூபாய் வரை கடன் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், உறுப்பினர்கள் கேட்கிற விளக்கங்களுக்குக் கடைசியில் ஒட்டுமொத்தமாகப் பதில் சொல்லுங்கள். திரு. தி. வேல்முருகன், சொல்லுங்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு மற்றும் குறு நிறுவனங்கள் துறைக்கான அறிவிப்பினை வெளியிட்டிருக்கிறார். சிறு தொழில்களில் மிக முக்கியமானது, கன்னியாகுமரி, கடலூர், விழுப்புரம், பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் உள்ள முந்திரி விவசாயம். அந்த முந்திரித் தோல்களைக்கொண்டு சிறு விவசாயிகள் ஒன்றுசேர்ந்து அதை உருக்கி, Oil Painting தயாரிக்கப் பயன்படுத்துகிறார்கள். முந்திரித் தொழும்புகள் வேறுவிதமாகப் பயன்படுத்தப்படுகின்றன. அதனால் கடலூர் மாவட்டத்தில் அந்த முந்திரித் தொழும்பு, முந்திரிப் பழங்கள், முந்திரியினுடைய உதிரிப் பாகங்களைக்கொண்டு ஒரு சிறு தொழிற்சாலை உருவாக்குவதற்கு மாண்புமிகு சிறு தொழில் அமைச்சரிடத்தில் இந்த நேரத்தில் கேட்டு விரைவில் அதை அமைப்பதற்கும் தாங்கள் ஆவன செய்வீர்களா என்பதையும் இந்த நேரத்திலே கேட்டு, அமைகிறேன். *(குறுக்கீடுகள்)*

பிற்பகல் 2-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் கேட்டது போதும். எல்லோரும் உட்காருங்கள். நேரங்காலம் தெரியாமல் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.98,13,02,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.13,06,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு

வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

6. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை 22-4-2010 வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ 22-4-2010, வியாழக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 22-4-2010 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

6. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை 22-4-2010 வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ 22-4-2010, வியாழக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 22-4-2010 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(22-4-2010)* வியாழக்கிழமை காலை *9-30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *2-06* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

62. மானியக் கோரிக்கை எண் *44*-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2010-2011. (தமிழ், ஆங்கிலம்)*

63. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், *2010-2011. (தமிழ், ஆங்கிலம்)*

64. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய "மக்கள் சாசனம்" *2010-2011. (தமிழ், ஆங்கிலம்)*

65. மானியக் கோரிக்கை எண் *41*-வருவாய்த் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் *51*-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2010-2011. (தமிழ், ஆங்கிலம்)*

66. மானியக் கோரிக்கை எண் *26*-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2010-2011. (தமிழ், ஆங்கிலம்)*

67. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2010-2011. (தமிழ்)*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(22-4-2010)* வியாழக்கிழமை காலை *9-30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

62. மானியக் கோரிக்கை எண் *44*-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2010-2011. (தமிழ், ஆங்கிலம்)*

63. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், *2010-2011. (தமிழ், ஆங்கிலம்)*

64. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய "மக்கள் சாசனம்" *2010-2011. (தமிழ், ஆங்கிலம்)*

65. மானியக் கோரிக்கை எண் *41*-வருவாய்த் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் *51*-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2010-2011. (தமிழ், ஆங்கிலம்)*

66. மானியக் கோரிக்கை எண் *26*-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2010-2011. (தமிழ், ஆங்கிலம்)*

67. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2010-2011. (தமிழ்)*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(22-4-2010)* வியாழக்கிழமை காலை *9-30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *2-06* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

62. மானியக் கோரிக்கை எண் *44*-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2010-2011.* (தமிழ், ஆங்கிலம்)

63. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், *2010-2011.* (தமிழ், ஆங்கிலம்)

64. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய "மக்கள் சாசனம்" *2010-2011.* (தமிழ், ஆங்கிலம்)

65. மானியக் கோரிக்கை எண் *41*-வருவாய்த் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் *51*-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2010-2011.* (தமிழ், ஆங்கிலம்)

66. மானியக் கோரிக்கை எண் *26*-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2010-2011.* (தமிழ், ஆங்கிலம்)

67. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2010-2011.* (தமிழ்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I

(131 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011

1. முன்னுரை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக, முதல் முறையாக பிரத்யேகமாக 'குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சட்டம், 2006' உருவாக்கப்பட்டதன்மூலம் நாட்டின் தொழில் வரலாற்றில் ஒரு புதிய வரலாறு படைத்துள்ளது. வேலைவாய்ப்பு உருவாக்கத்தில், இப்பிரிவின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததும், பரவலானதுமாகும். மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியிலும் இப்பிரிவு முக்கிய பங்கு வகிக்கிறது. அதிலும், பாரம்பரியமான கிராம, கைவினைத் தொழில்கள் முதல் மேம்பட்ட தொழில்நுட்பம் சார்ந்த தொழில் நிறுவனங்கள்மூலம் வேலைவாய்ப்பை அளிப்பதில் இந்நிறுவனங்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஆற்றும் முக்கிய பங்கினை உணர்ந்து, நாட்டிலேயே, முதல் முறையாக இப்பிரிவுக்கென பிரத்யேக கொள்கையாக தமிழ் நாடு அரசு 'குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கை - 2008' என அறிவித்தது.

தொழில் மற்றும் வணிகத் துறை, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டான்சிட்கோ), மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) ஆகியன குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான 'தொழில் அனுமதி மற்றும் மானியம் வழங்குதல்', 'தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்', 'தொழிலகங்களுக்கு தேவையான தளவாடங்களை வழங்குதல்' போன்ற முக்கிய பணிகளை செய்து வருகின்றன.

[2010 ஏப்ரல் 21

2. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டுச் சட்டம், 2006

'குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006' சிறு தொழில் பிரிவு என்ற பெயரை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பிரிவு என மாற்றி நிறுவன உட்பிரிவிற்கு உரிய முக்கியத்துவம் வழங்கியிருப்பதுடன், நடுத்தரத் தொழில் நிறுவனங்களையும் இப்பிரிவின்கீழ் கொண்டு வந்துள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம், உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்களை அவற்றின் இயந்திர தளவாடங்கள் / உபகரணங்கள் மீதான முதலீட்டின் அடிப்படையில் (நிலம் மற்றும் கட்டட மதிப்பு நீங்கலாக) கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தி உள்ளது:-

உற்பத்தி நிறுவனங்கள்

குறு உற்பத்தி நிறுவனங்கள்	ரூ.25 இலட்சம் வரை உள்ளவை
சிறு உற்பத்தி நிறுவனங்கள்	ரூ.25 இலட்சத்திற்கு மேல் ரூ.5 கோடி வரை உள்ளவை
நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள்	ரூ.5 கோடிக்கு மேல் ரூ.10 கோடி வரை உள்ளவை

சேவை நிறுவனங்கள்

குறு சேவை நிறுவனங்கள்	ரூ.10 இலட்சம் வரை உள்ளவை
சிறு சேவை நிறுவனங்கள்	ரூ.10 இலட்சத்திற்கு மேல் ரூ.2 கோடி வரை உள்ளவை
நடுத்தர சேவை நிறுவனங்கள்	ரூ.2 கோடிக்கு மேல் ரூ.5 கோடி வரை உள்ளவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 21]

3. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை – 2008

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை 2008-க்கான நோக்கம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் பிரிவின் போட்டித் தன்மையை அதிகரிக்கச் செய்வதும் இப்பிரிவின் வளர்ச்சியினை 10 விழுக்காடு வரை உயரச் செய்வதும் பதினோராவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், 10 இலட்சம் பேருக்கு நேர்முக மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு அளிப்பதுமாகும்.

10 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் நோக்குடன் மாநிலத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கையில் அறிவிக்கப்பட்ட பல்வேறு ஊக்க சலுகைகள் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள்மூலம் தொழில் முனைவோர் சுய வேலை மற்றும் தொழில் முயற்சிகளில் ஈடுபட ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் 11-வது திட்ட காலத்தில் வேலை வாய்ப்பு பெற்றவர்களின் பட்டியல்

வ.		வேலைவாய்ப்பு பெற்றவர்கள்			
எண்	திட்டத்தின் பெயர்	2007–08	2008–09	2009–10	மொத்தம்
1.	பிரதமரின் வேலை வாய்ப்பு திட்டம்/ பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்	52655	22712	20968	96335
2.	புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டம்	1180	370	343	1893
3.	குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பதிவறிக்கை (தொகுதி –II)	72972	63013	88036	224021
4.	குடிசைத் தொழில்களின் பதிவு	13958	14280	21644	49882
5.	கைவினைப் பொருட்களின் பதிவு	8134	8402	13905	30441
6.	தொழிற் கூட்டுறவு	1700	1569	1133	4402
	மொத்தம்	150599	110346	146029	406974

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 21

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்தில் மாநிலத்தில் உள்ள தொழில் நிறுவனங்களின் உள்கட்டமைப்பு வளர்ச்சியை மேம்படுத்துதல், தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய வட்டாரங்களில் நிறுவப்படும் உற்பத்தித் தொழில் நிறுவனங்களுக்கு மானிய திட்ட உதவிகள் வழங்குதல், திறன் மேம்பாடு மற்றும் சந்தை வாய்ப்பு ஏற்படுத்துதல், கட்டுப்பாடுகளைத் தளர்த்தி எளிமைப்படுத்தல், நிர்வாகச் சீர்திருத்தம் மற்றும் நலிவடைந்த தொழில் நிறுவனங்களைப் புனரமைத்தல் ஆகியவற்றை மையமாகக் கொண்டு இக்கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் ஏற்றுமதி வளர்ச்சியை ஊக்குவிக்க உருவாக்கப்பட்டு வரும் ஒரு தனிக் கொள்கை விரைவில் வெளியிடப்படும்.

4. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனப் பிரிவுக்கு கடன் வழிவகை

இந்திய அரசு, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தாராளமாக நிதி உதவி வழங்கிவருகிறது. மாநில அளவில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான கடன் சீராக வழங்கப்பட்டு வருவதை மாநில அளவிலான வங்கியாளர் குழு (SLBC) தொடர்ந்து கண்காணித்து வருகிறது. அவ்வாறே, மாவட்ட ஆட்சியரின் தலைமையில் நடைபெறும் மாவட்ட அளவிலான வங்கியாளர் குழுக் கூட்டங்களின் வாயிலாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான கடன் வழங்கப்பட்டு வருவது மாவட்ட அளவிலும் கண்காணிக்கப்படுகிறது. 11-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், வேளாண் சாரா பிரிவின்கீழ் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன் விவரம் பின்வருமாறு.

2010 ஏப்ரல் 21]

வ எண்	ஆண்டு	குறு, சிறு மற்றும் நடுத்தரத் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன் (ரூ கோடியில்)	முக்கியத்துவப் பிரிவுக்கு வழங்கப்பட்ட மொத்த கடன் (ரூ. கோடியில்)	குறு, சிறு மற்றும் நடுத்தரத் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன் சதவீதம் (%)
1.	2007–08	7617.16	33282.89	22.89
2.	2008–09	8260.98	37859.32	21.82
3.	2009–10 (டிசம்பர் 2009 வரை)	6629.68	31977.22	20.73

5. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைமூலமாக பொருளாதார பின்னடைவை எதிர்கொள்ளும் வகையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

உலக பொருளாதார பின்னடைவின் காரணமாக தொழில் துறை குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பொருளாதார பின்னடைவை எதிர்கொள்ளும் வகையில் மத்திய அரசு செப்டம்பர் 2008 முதல் 30 ஜுன் 2009 வரை கீழ்க்கண்ட சிறப்பு நடவடிக்கைகளை அறிவித்துள்ளன.

- பாரத ரிசர்வ் வங்கி இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கி (SIDBI) மூலம் குறு, சிறு நிறுவனங்களுக்கு நேரடியாகவோ அல்லது வங்கிகள் மற்றும் மாநில நிதி கழகம் மூலமாகவோ அதிகப்படியான நிதியுதவி வழங்கும் நோக்குடன் ரூ.7000 கோடி அளவுக்கு நிதியுதவி அளித்துள்ளது.
- கடன் ஈட்டுறுதி திட்டத்தின்மூலம் குறு, சிறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் பிணையம் இல்லா கடன் தொகையின் அளவு ரூ.50 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடி வரை உயர்த்தப்பட்டு பிணையம் இன்றி 50 சதவீதம் அளவிற்கு உத்தரவாதத்துடன் கடனுதவி அளிக்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 21

- உத்தரவாதம் செய்யப்பட்ட கடன் கணக்குகளை திருப்பி பெறுவதற்கான கால அவகாசம் (Lock in period) 24 மாதங்களில் இருந்து 18 மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மத்திய அரசு அறிவித்துள்ள சிறப்பு சலுகைகளின் செயல்பாடுகளை தொழில் சங்கத்தின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்ட மாநில அளவிலான சிறப்பு வங்கியாளர்களின் கூட்டத்தில் கண்காணித்து வருகிறது. மேலும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் மாதந்தோறும் நடத்தப்படும் வங்கியாளர் கூட்டத்தின்மூலம் இச்சிறப்பு சலுகைகள் சீராக வழங்கப்பட்டு வருவதை கண்காணிக்க மாவட்ட தொழில் மையப் பொது மேலாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்நடவடிக்கைகள்மூலமாக தமிழ்நாட்டிலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்குப் பொருளாதார பின்னடைவைச் சமாளிக்கும் நோக்குடன் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள்மூலம் 31-12-2009 வரை கீழ்கண்ட கூடுதல் நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன:

- 12560 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வங்கி கணக்குகள் ரூ.3057.53 கோடி மதிப்பில் மறு சீரமைக்கப்பட்டன. மேலும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலமாகவும் 504 வங்கிக் கணக்குகள் ரூ.36.09 கோடி மதிப்பில் மறு சீரமைக்கப்பட்டன.

- 11338 புதிய கணக்குகளுக்கு நடைமுறை மூலதன கடனாக ரூ.2362.29 கோடி ஒப்பளிக்கப்பட்டன.

- ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட 6797 அலகுகளின் கணக்குகளுக்கு கூடுதல் நடைமுறை மூலதன கடனாக ரூ.1004.96 கோடி ஒப்பளிக்கப்பட்டது.

- 92 கணக்குகளுக்கு மின்னாக்கி வாங்க ரூ.11.27 கோடி கடன் ஒப்பளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் புதியதாக ஒரு ஊக்குவிப்பு கடன் சலுகை (Liquidity Stimulus Package) ஒன்றை டிசம்பர் 2009 முதல் அறிமுகம் செய்து இத்திட்டம்மூலமாக 304 நிறுவனங்களுக்கு ரூ.13.90 கோடி அளவிலான ஊக்குவிப்புக் கடன் வழங்கியுள்ளது.

2010 ஏப்ரல் 21]

6. தொழில் வணிக ஆணையரகம்

தொழில் வணிக ஆணையரகம் தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஒருங்கிணைந்த முகமையாக விளங்குகிறது. இந்நிறுவனங்களை மையப்படுத்தி மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களை இந்த ஆணையரகம் செயல்படுத்தி வருகிறது. இதற்கென தமிழகத்தில் சென்னையைத் தவிர 30 மாவட்டங்களில் மாவட்ட தொழில் மையங்களும், சென்னையில் மண்டல இணை இயக்குநர் அலுவலகமும் செயல்பட்டு வருகின்றன. தொழில் தொடங்க முன்வரும் தொழில் முனைவோர்கள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களைத் தொடங்குவதற்குரிய அனைத்து உதவிகளையும் இவ்வலுவலகங்கள் செய்து வருகின்றன. மாவட்ட தொழில் மையங்கள் தொழில் முனைவோர்க்கு தொழில் பிரிவுகளைக் கண்டறிதல், தொழில் திட்டங்களைத் தயாரித்தல், நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவிகளை பெற்றுத் தருதல், தொழில் துவங்க அரசின் பல்வேறு துறை சார்ந்த ஒப்புதல்களைப் பெற்று அளித்தல், அரசு மானியங்கள் மற்றும் ஊக்குவிப்பு தொகைகளை வழங்குதல் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றன.

மாநிலத்தின் ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் அரசு, தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்களை மாநிலத்தின் ஏற்றுமதி ஆணையராக நியமித்து ஆணைகள் வெளியிட்டுள்ளன.

7. தொழில் முனைவோர் பதிவறிக்கை பதிவு செய்தல்

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் மேம்பாட்டுச் சட்டம் 2006-ன்படி தொழில் முனைவோர் பதிவறிக்கை குறு மற்றும் சிறு உற்பத்தி / சேவை சார்ந்த தொழில்களுக்கு விருப்பத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்படுகிறது. ஆயினும், நடுத்தர தொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு இப்பதிவு கட்டாயமானது. குறு மற்றும் சிறு தொழில் தொடங்க விருப்பம் உள்ள எவரும் தாமாக முன் வந்து, தேவைப்படும் உரிய படிவத்திலான தொழில்முனைவோர் பதிவறிக்கையினை, அந்தந்த மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளரிடமும் சென்னையைப் பொறுத்தவரை மண்டல இணை இயக்குநர் அலுவலகத்திலும் பதிவு செய்யலாம்.

[2010 ஏப்ரல் 21

இத்துறையின்மூலமாக இணையதளத்தின் வாயிலாகவும் பதிவறிக்கை - பகுதி 1 மற்றும் பகுதி 2 பதிவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் தொழில் முனைவோர் எவரும் மாவட்ட தொழில் மையத்திற்கு செல்லாமல் தாங்களாகவே இணையதளத்தின்மூலம் (www.msmeonline.tn.gov.in) தொழில் முனைவோர் பதிவறிக்கையினை பதிவு செய்து அதற்கான ஒப்புகையை உடனடியாக பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இணையதளத்தின்மூலம் பதிவு செய்யும் இத்திட்டம் தொழில்முனைவோரிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இணையதளம் வாயிலாக, 31-3-2010 வரையில் தொழில் முனைவோர் பதிவறிக்கை - பதிவு (பகுதி 1) இல் 76572 நிறுவனங்களும் (பகுதி 2)இல் 40533 நிறுவனங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

8. மானியத் திட்டங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் சலுகைத் திட்டங்கள் கீழ்வருமாறு:-

அ. குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கான சலுகைகள்

- தகுதியான இயந்திரத் தளவாடங்களின் மதிப்பில் 15 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் முதலீட்டு மானியம்.
- வணிக ரீதியில் உற்பத்தி தொடங்கிய நாள் அல்லது மின்இணைப்பு பெற்ற நாள் இவற்றில் எது பிந்தியதோ அந்நாளிலிருந்து 36 மாதங்களுக்கு 20 விழுக்காடுகள் குறைந்த அழுத்த மின் மானியம்.
- இயந்திர தளவாடங்கள்மீது செய்யப்பட்டிருக்கும் முதலீட்டின்மீது முதல் 6 ஆண்டுகளுக்குச் செலுத்தப்படும் நிகர மதிப்பு கூட்டுவரிக்கு ஈடான 100 விழுக்காடு மானியம்.
- வங்கிகளில் அடமானம் அல்லது பிணையமாக வைக்கப்பட்ட ஆவணங்களை பதிவு செய்வதற்கான முத்திரைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு.

2010 ஏப்ரல் 21]

ஆ. தொழில் ரீதியாக பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்ட வட்டாரங்களில் அமைக்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள் மற்றும் மாநிலத்தின் அனைத்து வட்டாரங்களிலும் அமைக்கப்படும் வேளாண்சார் தொழில் நிறுவனங்களுக்கான சலுகைகள்

அரசால் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளாக 251 வட்டாரங்கள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் அரசு மற்றும் அரசு முகமைகளான சிப்காட், சிட்கோ ஆகியவை உருவாக்கும் தொழிற்பேட்டைகளும் (சென்னை நகரின் மையப்பகுதியில் இருந்து 50 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் அமைந்துள்ள தொழிற்பேட்டைகள் தவிர்த்து) தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் அமைக்கப்படும் அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களும் மற்றும் மாநிலத்தின் 385 வட்டாரங்களில் அமைக்கப்படும் வேளாண்சார் நிறுவனங்களும் கீழ்க்கண்ட மானிய உதவி திட்டங்களின்கீழ் பயன்பெற தகுதியுடையனவாகும்.

- *தகுதியான இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 15 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் முதலீட்டு மானியம்.*

- *உற்பத்தி தொடங்கிய முதல் 5 ஆண்டுகளுக்குள் மூன்று ஆண்டுகள், குறைந்தபட்சம் 25 வேலையாட்களைப் பணியில் ஈடுபடுத்தும் நிறுவனங்களுக்கு அவற்றின் தகுதியான இயந்திர தளவாடங்களின் மீதான முதலீட்டின் 5 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.5 இலட்சம் கூடுதல் முதலீட்டு மானியம்.*

- *மகளிர், பட்டியலிடப்பட்ட இனம் / பட்டியலிடப்பட்ட பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் அரவாணிகள் ஆகியோர் தொழில் முனைவோராக இருக்கும் நேர்வுகளில் அவற்றின் தகுதியான இயந்திர தளவாடங்களின் மீதான முதலீட்டின் 5 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.2 இலட்சம், கூடுதல் முதலீட்டு மானியம்.*

- *மாசற்ற மற்றும் சுற்றுச்சூழலுக்கு இயைந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு, அதற்கான சுற்றுப்புறத் தூய்மையினைக் காக்கும் கருவிகள்*

நிறுவப்பட்டுள்ளன என தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சான்றளிப்பதன் அடிப்படையில் நிறுவப்பட்ட குறிப்பிட்ட, தகுதியான இயந்திர தளவாடங்கள் மீதான முதலீட்டின் மதிப்பில் *25* விழுக்காடு அதிகபட்சம் *ரூ.3* இலட்சம் கூடுதல் முதலீட்டு மானியம்.

- தொழில் முனைவோர், வணிக ரீதியில் உற்பத்தி தொடங்கிய நாள் அல்லது மின்இணைப்பு பெற்ற நாள் இவற்றில் எது பிந்தியதோ அந்நாளிலிருந்து *36* மாதங்களுக்கு *20* விழுக்காடுகள் குறைந்த அழுத்த மின் மானியம்.

இ. மாநிலத்தில் எப்பகுதியிலும் அமைக்கப்படும் சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கான சிறப்பு மூலதன மானியம்

தமிழ்நாட்டில் எப்பகுதியிலும் அமைக்கப்படும் *10* சிறப்பு வகை உற்பத்தி தொழில் பிரிவுகளான மின் மற்றும் மின்னணு பொருள்கள், தோல் மற்றும் தோல் பொருள்கள், வாகன உதிரி பாகங்கள், மருந்து மற்றும் மருத்துவப் பொருள்கள், சூரிய சக்தி பயன்பாட்டு உபகரணங்கள், ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள், மாசுக் கட்டுப்பாட்டு சாதனங்கள், விளையாட்டுப் பொருள்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் மற்றும் சிக்கன அடக்கவிலை கட்டுமானப் பொருள்கள் மற்றும் ஆயத்த ஆடைகள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கு, தகுதியான இயந்திர தளவாடங்கள் மீதான முதலீட்டு மதிப்பில் *15* விழுக்காடு, அதிகபட்சம் *ரூ.30* இலட்சம் சிறப்பு மூலதன முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

ஈ. மின்னாக்கி மானியம்

இத்திட்டத்தின்கீழ் மாநிலத்தில் எப்பகுதியிலும் அமைந்துள்ள குறு சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் வாங்கியுள்ள *125* KVA வரை திறன் உள்ள மின்னாக்கியின் மதிப்பில் *25* சதவிகிதம் அதிகபட்சமாக *ரூ.1.50* இலட்சம் வரை மின்னாக்கி மானியமாக வழங்கப்படும்.

உ. பின்முனை வட்டி மானியம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு கீழ்க்காணும் தேவைகளுக்காக அவற்றால் பெறப்பட்ட *ரூ.100*

2010 ஏப்ரல் 21]

இலட்சம் வரையுள்ள கடன்களின்மீது 3 விழுக்காடு, நிறுவனம் ஒன்றுக்கு அதிகபட்சமாக ஐந்தாண்டுக் காலத்தில் மொத்த வட்டி மானியம் ரூ.10 இலட்சம் வரை பின்முனை வட்டி மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

- தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனப்படுத்துதல்
- தேசிய பங்கு நிதித் திட்டம்
- ஐ.எஸ்.ஓ. தரச்சான்று பெறுதல்
- காப்புரிமை மற்றும் அறிவுசார் சொத்துரிமை பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள்
- கடன் உத்தரவாத நிதி ஆதாரத் திட்டம்.

9. தொழில்நுட்ப மேம்பாடு தொடர்பான உதவித் திட்டங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- உரிமைக்காப்பு (கண்டறிதல் உரிமை) பதிவு விண்ணப்பத்திற்கான தொகையில் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் 50 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.2 இலட்சம்.
- வர்த்தக குறியீடு பதிவு தொகையில் 50 சதவீதம் அதிகபட்சமாக ரூ.25,000/-.
- அரசு மற்றும் தனியார் கூட்டு முயற்சியின் மூலம் தொழில் குழுமங்கள் மற்றும் சிறு கருவி மையங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கு, அவற்றின் திட்டமதிப்பீட்டில் 25 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.1 கோடி வரை மானியம்.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் உற்பத்தி பிரிவில் தூய்மையான சக்தி திறனுள்ள தகவல் தொழில்நுட்பம் தொடர்புடைய தொழில்நுட்பங்களை ஏற்படுத்த வசதி செய்து தருவதில் உதவுதல்.
- திறன்மிகு மையங்கள் மற்றும் தொழில்நுட்ப வணிக சேவை வசதி வளர்ப்பகங்கள் உருவாக்கி அதன்மூலம் நவீன

உற்பத்தி உத்திகள் மற்றும் வடிவமைப்பு மேம்பாடு செய்ய ஒவ்வொரு தொழில்நுட்ப வணிக சேவை வசதி வளர்ப்பகம்/ திறன்மிகு மையத்திற்கும் ரூ.50 இலட்சம் வரை மானிய உதவி அளித்தல்.

10. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சித் திட்டங்கள்

திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி திட்டத்தின்கீழ் தொழில் தொடர்புடைய சங்கங்களால் ஏற்பாடு செய்யப்படும் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் திறன் மேம்பாடு திட்டங்களாகிய குறுகியகால பயிற்சி வகுப்புகள் நடத்த 50 விழுக்காடு பயிற்சிக் கட்டணம் திரும்ப வழங்கப்படும்.

11. சந்தை வாய்ப்பு உதவி

பின்வரும் சந்தை வாய்ப்பு உதவிகளையும் தமிழக அரசானது குறு மற்றும் சிறுதொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு வழங்கி வருகிறது.

- தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 இல் குறிப்பிடப்பட்டுள்ள உள்நாட்டு குறு மற்றும் சிறுதொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு 15 விழுக்காடு விலை முன்னுரிமை அளித்தல்.
- மாநில அரசால் அவ்வப்பொழுது வெளியிடப்படும் அறிவிக்கைகளின்படி அறிவிக்கப்படும் இனங்களுக்கு கொள்முதல் முன்னுரிமை அளித்தல்.
- ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்துகொள்வதற்கு அளிக்கும் முன்வைப்புத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்தல்.
- மாநிலத்திலும் மற்ற மாநிலங்களிலும் நடக்கும் பொருட்காட்சிகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் சார்புடைய சங்கங்கள் கலந்துகொள்ளும் நேர்வுகளில் அரங்க வாடகையில் 50 விழுக்காடு வழங்குதல்.
- பொதுவான பெயர் அல்லது பொது வணிக சின்னத்தில் விற்பனை செய்ய ஆதரவு அளித்தல்.

2010 ஏப்ரல் 21]

12. நலிவடைந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் புனரமைப்புக்கான கொள்கை

முதல்முறையாக குறு, சிறு மற்றும் நடுத்தர நலிவடைந்த நிறுவனங்களைப் புனரமைப்பதற்கான கொள்கை 2008 உரிய புனரமைப்பு உதவித் திட்டத்துடன் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையானது நலிவுற்ற நிறுவனங்களைப் புனரமைப்பது தொடர்பான விரைவான பகுப்பாய்வு, வழங்கப்பட வேண்டிய நிவாரணம் பற்றிய பரிந்துரைகளை இந்திய ரிசர்வ் வங்கி அமைக்கும் மாநில அளவிலான நிறுவனங்களுக் கிடையிலான குழுவினால் (SLIIC) வழங்கப்பட்டு, மாநில அளவிலான நிறுவனங்களுக்கு இடையிலான புனரமைப்புக் குழுவின் (SLRC) மூலம் தகுதி வாய்ந்த நிறுவனங்களைக் கண்டறிந்து புனரமைப்பு உதவிகள் வழங்கிட வகை செய்கிறது.

இக்கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிவாரண உதவி திட்டங்கள் குறித்த வழிகாட்டு நெறிமுறைகள் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் அமைக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான முனைப்புக் குழுவின் பரிந்துரைகளை / கருத்துகளை உள்ளடக்கி, மாநில அரசால் விரைவில் வெளியிடப்பட உள்ளது.

13. கொள்கை செயல்படுத்துதலை கண்காணிப்பதற்கான அதிகாரமூட்டப்பட்டக் குழு

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் கொள்கை செயல்படுத்துதலை கண்காணிப்பதற்கான ஒரு அதிகாரமூட்டப்பட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. தொழில் அமைப்புகளுடன் பலனுள்ள கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்த இக்குழுவில் பல்வேறு அரசு துறைகளின் உயர் அலுவலர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

14. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வாரியம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வாரியம், மாண்புமிகு அமைச்சர் (ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

[2010 ஏப்ரல் 21

இவ்வாரியத்தில் அரசு தலைமைச் செயலர் துணைத் தலைவராகவும், பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசு உயர்நிலை அலுவலர்கள் 23 பேர் அலுவல் சார் உறுப்பினர்களாகவும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் 12 பேர் அலுவல்சாரா உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாரியம், 6 மாதத்திற்கு ஒருமுறை கூடி குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான கோரிக்கைகள் மற்றும் பிரச்சினைகளை ஆராய்ந்து, அவற்றிற்குத் தகுந்த ஆலோசனைகளை வழங்கி அதன் பரிந்துரைகளை அரசுக்கு அளிக்கும்.

15. பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) - 2008

இந்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சகம், பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் கிராம வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஆகிய இரு திட்டங்களையும் இணைத்து முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் குறுந்தொழில் உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்களைத் துவங்க, பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் என்ற ஊக்கத் தொகையுடன்கூடிய புதிய கடனளிப்புத் திட்டம் 2008 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சேவை நிறுவனம் தொடங்குவதற்கு ரூ.10 லட்சம் வரையிலும், உற்பத்தி நிறுவனம் தொடங்குவதற்கு ரூ.25 லட்சம் வரையிலும் ஒரு பயனாளி இத்திட்டத்தின்கீழ் கடன் பெறுவதற்கு தகுதியுள்ளவராவர். இத்திட்டம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகத்தின் நிர்வாகத்தின்கீழ் உள்ள ஒரு முனை வழிகாட்டு முகமையான காதி மற்றும் கிராமத் தொழில் ஆணையம் (KVIC) மூலம் செயல்படுத்தப்படுவதுடன் தேசிய அளவிலான ஒற்றை முகமையாக இது செயல்படும். மாநில அளவில், இத்திட்டம் மாநில காதி மற்றும் கிராமத் தொழில் ஆணையம், காதி மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம் மற்றும் மாவட்ட தொழில் மையங்கள்மூலம் வங்கிகள் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான வழிகாட்டுதல்களை குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகம், இந்திய அரசு, புதுதில்லி வெளியிட்டுள்ளது.

பாரத பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் 2009-2010 ஆம் ஆண்டிற்கான இலக்கு மற்றும் செயல்பாட்டு விவரங்கள் பின்வருமாறு:

2010 ஏப்ரல் 21]

	இலக்கு			ஒப்பளிக்கப் பட்டவை		விளிம்பு தொகை மானியம் பட்டுவாடா செய்யப்பட்டவை		
செயல்-படுத்தும் முகமை	எண்ணிக்கை	விளிம்பு தொகை (ரூ. இலட்சத்தில்)	வேலை வாய்ப்பு	எண்ணிக்கை	விளிம்பு தொகை (ரூ. இலட்சத்தில்)	எண்ணிக்கை	விளிம்பு தொகை (ரூ. இலட்சத்தில்)	வேலை வாய்ப்பு
தொழில் வணிகத் துறை	2890	2060.96	28900	3088	5012.00	1208	2229.00	18568
காதி மற்றும் கிராமத் தொழில் ஆணையம்	2456	1807.12	24560	951	3125.11	626	1896.30	13599
தமிழ்நாடு காதி மற்றும் கிராமத் தொழில் வாரியம்	1575	1123.43	15750	825	1179.60	567	904.63	7237
மொத்தம்	6921	4991.51	69210	4864	9316.71	2401	5029.93	39404

16. ராஜீவ் காந்தி தொழில்முனைவோர் நட்புத் திட்டம்

இந்திய அரசு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின்கீழ் "ராஜீவ் காந்தி உத்யாமி மித்ரா யோஜனா" என்ற தொழில் முனைவோர் நட்புத் திட்டத்தை உருவாக்கி உள்ளது. இதன்மூலம் முதல் தலைமுறை தொழில் முனைவோர்களுக்கு, புதிதாகத் தொழில் ஆரம்பித்து நடத்த வேண்டிய உதவிகளை அளித்து கைகொடுத்து உதவ இயலும். மற்ற நிறுவனங்களுடன் சென்னையில் உள்ள தொழில் முனைவோர் வளர்ச்சி நிறுவனம், மாநில அளவிலான தொழில் முனைவோர் பயிற்சி மையமாக மத்திய அரசால் வகை இரண்டின்கீழ் உள்ள பட்டியலில் இடம் பெற்றுள்ளது. மேலும், 17 தொழில்முனைவோர் பயிற்சி மையம், மத்திய அரசு வகை மூன்றின்கீழ் ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசு திட்ட நிதியிலிருந்து முதல் தலைமுறை தொழில்முனைவோர்களுக்கு கைகொடுத்து உதவும் பொருட்டு மானிய உதவித் தொகையாக ரூ.21.14 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

[2010 ஏப்ரல் 21

17. குழும மேம்பாட்டுத் திட்டங்கள்

அ. தொழில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

தொழில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2003 ஆம் ஆண்டு மத்திய அரசின் திட்டமாக புதியதாக தொடங்கப்பட்டு, பொது மற்றும் கூட்டாண்மை முறையில் அமைக்கப்படும் குழுமங்களின் தரமான அடிப்படைக் கட்டமைப்பை அமைப்பதற்காகச் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் மத்திய அரசின் பங்காக குழுமம் ஒன்றிற்கு திட்ட மதிப்பில் 75 விழுக்காடு வரை, அதிகபட்சமாக 60 கோடி வரை உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மீதமுள்ள 25 விழுக்காட்டில் திட்ட மதிப்பில் 15 விழுக்காட்டிற்குக் குறையாமல் பயனாளி தொழிலகங்களின் பங்களிப்பாகவும் இருக்கும்.

10-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட 5 குழுமங்கள் செயல்படுத்தப்பட்டு உள்ளன.

1. திருப்பூர் பின்னலாடை குழுமம், திருப்பூர்.
2. வாகன உதிரி பாகங்கள் குழுமம், சென்னை.
3. தானியம், பயறு, பருப்பு மற்றும் இழைகள் அரைத்தல் குழுமம், மதுரை.
4. தோல் தொழில் குழுமம், ஆம்பூர்.
5. பம்ப் மோட்டார் மற்றும் பவுண்டரி குழுமம், கோயமுத்தூர்.

மேற்கூறப்பட்ட குழுமங்களின் தொழில் கட்டமைப்புப் பணிகளான சாலை, குடிநீர் விநியோகம் மற்றும் கழிவு நீரகற்று திட்டம், கழிவு நீர் சுத்திகரிக்கும் திட்டம், திடக்கழிவு, தகவல் தொழில்நுட்ப மற்றும் மேம்பாட்டுத் திட்டம், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம், பொது வசதி மையம், சந்தைப்படுத்துதலுக்கான கட்டமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய திட்டங்களுக்கான திட்ட மதிப்பீடு ரூ.360.09 கோடியில் மத்திய அரசின் மானிய உதவியாக ரூ.191.03 கோடி வரை பெறப்பட்டுள்ளது.

பம்ப் மோட்டார் மற்றும் பவுண்டரி குழுமம், கோயம்புத்தூர் பொறுத்தவரை தமிழக அரசால் ரூ.1.21 கோடி இக்குழுமத்திற்கு நவீன கருவி மையம் அமைக்க வழங்கப்பட்டுள்ளது.

2010 ஏப்ரல் 21]

வாகன உதிரி பாகங்கள் குழுமம், சென்னை பொறுத்தவரை ரூ.80.00 இலட்சம் தமிழக அரசின் பங்காக அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த சிட்கோ நிறுவனத்தின்மூலம் இக்குழுமத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் அம்பத்தூர் தொழிற் பேட்டையில் பொருட்கள் காட்சி மற்றும் தரக்கட்டுப்பாடு சோதனை மையம் அமைக்க, தமிழக அரசின் பங்காக, ரூ.10.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்மூலம் 1,59,000 நிறுவனங்கள் பயன்பெற்றுள்ளன.

ஆ. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் குழும மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் மத்திய அமைச்சகத்தின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் அமைச்சகம்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசின் உதவி, குழுமம் ஒன்றிற்கு திட்ட மதிப்பீட்டில் 70 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.15 கோடி வரை வழங்கப்படுகிறது. இம்மானிய உதவி நிலையான சொத்துக்கள் வாங்கப்படாமலும் நிறுவப்படாமலும் இருக்கும் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட மென் இடை நிகழ்வுத் திட்டத்திற்கு வழங்கப்படும் ரூ.25 இலட்சத்தையும் உள்ளடக்கியதாகும் (Soft Activities).

பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேம்படுத்த 50 குழுமங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றில் 14 குழுமத் திட்டங்களுக்கு (11 - கடின இடை நிகழ்வு மற்றும் 3 - மென் இடை நிகழ்வு) மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 15 பிரேரணைகளுக்கு மாநில அரசின் கொள்கை அளவில் ஒப்புதல் பெறப்பட்டு மைய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனினும், இக்குழுமத் திட்ட அறிக்கைகள் மைய அரசால் பிப்ரவரி 2010-ல் திருத்தியமைக்கப்பட்ட குழும மேம்பாட்டுத் திட்ட வழிமுறைகளின்படி திருத்தப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு விரைவில் அனுப்பப்படும். மேலும், 7 குழுமத் திட்டங்களின் பகுப்பாய்வு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள, குழுமத் திட்ட பகுப்பாய்வு அறிக்கைகள் மைய அரசின் திருத்திய குழும மேம்பாட்டுத் திட்ட வழிமுறைகளின்படி தயார் செய்யப்பட்டு விரைவில் மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்.

[2010 ஏப்ரல் 21

மைய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்ட 14 குழும திட்டங்களின் விவரம்

வ எண்	குழுமத்தின்பெயர்	திட்டமதிப்பு (ரூ இலட்சத்தில்)	குழுமங்களில் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை	விற்பனை மதிப்பு (ரூ இலட்சத்தில்)	வேலை வாய்ப்பு #
1.	மாவு அரைக்கும் இயந்திர குழுமம், கோவை	288.20	700	300.00	20000
2.	சேகோசர்வ் சேலம்	498.00	550	230.29	25000
3.	குடியாத்தம் தீப்பெட்டி குழுமம்	156.00	525	52.50	1000
4.	கழுகுமலை தீப்பெட்டி குழுமம்	156.00	525	52.50	1225
5.	விருதுநகர் தீப்பெட்டி குழுமம்	156.00	825	82.50	1500
6.	சாத்தூர் தீப்பெட்டி குழுமம்	156.00	1225	122.50	
7.	கோவில்பட்டி தீப்பெட்டி குழுமம்	156.00	1025	102.50	1100
8.	ஸ்ரீவில்லிப்புத்தூர் தீப்பெட்டி குழுமம்	156.00	525	52.50	750
9.	பீங்கான் குழுமம் விருதாச்சலம் கடலூர் மாவட்டம்	88.10	300	48.00	1200
10.	கயிறு குழுமம், சிங்கம்புணரி, சிவகங்கை மாவட்டம்	853.20	7219	39.66	7500
11.	செங்கல் குழுமம், திருநெல்வேலி	227.29	50	34.50	150
12.	பொறியியல் குழுமம், சென்னை	77.00	1191	400.00	6200
13.	மருந்து குழுமம், ஆலத்தூர்	*	189	1845	30000
14.	பிளாஸ்டிக் குழுமம் சென்னை	*	2480	1400	20000
	மொத்தம்	2967.79	17329	4762.45	115625

* மென் இடை நிகழ்வு

நேர் மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு

2010 ஏப்ரல் 21]

18. ஒற்றைச்சாளர முறை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் முக்கியத்துவம் கருதி மாநில அரசு தடையற்ற செயல்திறமிக்க கொள்கையை செயல்படுத்தி வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுவரும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், மாசுக்கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், தீயணைப்புத் துறை, பொதுசுகாதாரத் துறை, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஏனைய துறைகளிடமிருந்து பெற வேண்டிய சட்டபூர்வமான அனுமதிகளை விரைவில் பெற்றுத்தரும் ஒற்றைச்சாளர முகமைகளாக மாவட்டத் தொழில் மையங்கள் திகழ்கின்றன. 31-3-2010 முடிய 1188 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 1082 விண்ணப்பங்கள்மீது தீர்வு காணப்பட்டது (91.08 சதவீதம்) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை 2008இல் அறிவிக்கப்பட்டுள்ளபடி, மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் ஒற்றைச்சாளர குழுக்களை முறையான அமைப்பாக ஏற்படுத்தி, அனுமதி வழங்குவதற்கும் மற்றும் அனுமதி வழங்கப்பட்டதாக கருதப்படுவதற்கு உரிய கால அளவினை நிர்ணயிக்கவும் அதிகாரம் வழங்கும் தமிழ்நாடு தொழில் மேம்பாடு மற்றும் வசதியாக்கல் சட்டத்தை வடிவமைக்கும் பணிகளை அரசு மேற்கொண்டு வருகின்றது. அதற்கான சட்ட வரைவு சட்டமன்றத்தால் 21-7-2009 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

19. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் வசதியாக்கக் குழுக்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006-இன்படி அரசு, சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களில் குறு மற்றும் சிறு நிறுவனங்கள் தாம் விற்பனை செய்த பொருட்களுக்கு பெருந்தொழில் நிறுவனங்களிடமிருந்து வர வேண்டிய நிலுவைத் தொகைகளை விரைந்து பெற்றுத் தரும் நோக்கத்துடன் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான வசதியாக்கக் குழுக்களை அமைத்துள்ளது.

இக்குழுக்கள்மூலம் 2009-2010 ஆம் ஆண்டில் மாநிலத்திலுள்ள 215 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் காலதாமத பணப் பட்டுவாடா நேர்வுகள் தொடர்பாக 32 விவாதங்கள் நடத்தி, 157 இனங்கள்மீது, ரூ.433.04 இலட்சம் அளவுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

[2010 ஏப்ரல் 21

20. பரிசோதனை வசதிகள், பயிற்சி மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள்

(அ) பரிசோதனைக் கூடங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்கள் உற்பத்தி செய்யும் மின் மற்றும் மின்னணு பொருட்களையும் சாதனங்களையும் பரிசோதிக்கும் வசதிக்கெனவும் மற்றும் நுகர்வோர் நலன்களை பாதுகாக்கும் நோக்குடனும் அரசு பரிசோதனைக் கூடங்களை நிறுவியுள்ளது. இவற்றில் மேற்கொள்ளப்படும் சோதனைகளுக்கு குறைந்த சோதனைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மேலும் வேதியியல் பரிசோதனைக்கூடங்களில், பிரத்தியேகமாக குறு மற்றும் சிறு தொழில் முனைவோருக்கு சோதனைக் கட்டணத்தில் ரூ.50 விலக்கு அளிக்கப்படுகிறது.

i. மின் பரிசோதனை மையங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தர மின் மற்றும் மின்னணு தொழில் முனைவோர்கள் மற்றும் தரக்குறியீடு நிறுவனங்களின் தேவைக்கிணங்க காக்களூரில், மத்திய மின் பொருள் சோதனைக்கூடம் நிறுவப்பட்டுள்ளது. இந்த நவீனமயமாக்கப்பட்ட சோதனைக்கூடம், இந்தியத் தர நிர்ணய மையம் (பி.ஐ.எஸ்.) மற்றும் சோதனைக்கூடங்களுக்கான தேசிய அங்கீகாரக் குழுமம் (என்.எ.பி.எல்), ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்டு, வீட்டு உபயோக மின் சாதனங்கள், மின்வடங்கள், மின் விளக்குகள், திறன் அளவிகள் போன்ற 175-க்கும் மேற்பட்ட மின் மற்றும் மின்னணுச் சாதனங்கள் இந்திய தரக்குறிப்பேட்டின் வழிகாட்டுதலுக்கு இணங்க சோதனை செய்யப்படுகின்றன. மேலும், இந்த ஆண்டில் ரூ.20 இலட்சம் செலவில் மினியேச்சர் சர்க்யூட் பிரேக்கர்கள் சோதனை செய்யும் வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதன் பயனாக இந்திய தர நிர்ணயக் குழுமம், மத்திய அரசின் பொருட்கள் வழங்கல் துறை, தரக் கட்டுப்பாட்டு மற்றும் தரக் குறியீடு நிறுவனங்கள், தனியார் உற்பத்தியாளர்கள், மத்திய அரசு / மாநில அரசுத் துறைகள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் பெரிதும் பயனடைகின்றன.

இதனைத் தவிர்த்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சுற்றியுள்ள உற்பத்தியாளர்களின் மின் மற்றும் மின்னணுச் சாதனங்களின் தரத்தினை மேம்படுத்த, ஓசூரில் பொது வசதி

2010 ஏப்ரல் 21]

மையம் அமைக்கப்பட்டு சோதனை வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இச்சோதனைக் கூடங்களில் 2009-2010-ல் 6400 மின் பொருட்கள் மற்றும் சோதனைக் கட்டண வருவாய் ரூ.165 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்ட இலக்கில், மார்ச் 2010 வரை 7517 மின்பொருட்கள் சோதனை செய்யப்பட்டு அதன்மூலம் ரூ.165.14 இலட்சம் அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

ii. இரசாயனப் பரிசோதனைக் கூடங்கள்

இரசாயனப் பரிசோதனைக் கூடங்கள், சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. வளர்ந்து வரும் இரசாயனம், உலோகவியல் மற்றும் இதர தொழிலகங்கள் குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான பரிசோதனை தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு, இப்பரிசோதனைக் கூடங்களில், மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றைப் பரிசோதனை செய்வதற்காக, நவீன மற்றும் மிக உயர்ந்த தரம் வாய்ந்த உபகரணங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், இந்தப் பரிசோதனைக் கூடங்கள் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு 50 சதவீத சலுகைக் கட்டணத்தில் பரிசோதனை சேவையினை அளித்துவருகின்றன. தொழில் முனைவோர்களின் உபயோகத்திற்காக, சென்னையிலுள்ள இரசாயனப் பரிசோதனைக் கூடத்தில், 20,000 இந்திய தர நிர்ணய குறிப்பேடுகள், 6,100 புத்தகங்கள் மற்றும் 14 சஞ்சிகைகளைக் கொண்ட ஒரு தொழில் நுட்ப நூலகம் செயல்பட்டு வருகின்றது.

2009-2010 ஆம் ஆண்டுக்கு, 59,450 மாதிரிகள் சோதனை செய்தல் மற்றும் சோதனை கட்டண வருவாய் ரூ.131.62 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்ட இலக்கில், 66,085 மாதிரிகள் சோதனை செய்யப்பட்டு, ரூ.151.08 இலட்சம் சோதனை கட்டணமாக அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

iii. மின் மற்றும் மின்னணுத் தொழில் தகவல் மையம், சென்னை

இம்மையம் டாக்டர் விக்ரம் சாராபாய் தொழிற்பேட்டை, திருவான்மியூர், சென்னையில் உள்ளது. மாநிலம் தழுவிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்கள் (மின் மற்றும் மின்னணு) பயன்படுத்தும் வகையில் வாங்குவோர் மற்றும் விற்பனையாளர்கள் குறித்த தேவையான அடிப்படைத் தகவல்கள் அடங்கிய கையேடு பராமரிக்கப்பட்டுள்ளது. மேலும் குறிப்பிட்ட

[2010 ஏப்ரல் 21

தொழில்களுக்காக தொழில் திட்ட குறிப்பேடுகளும் அளிக்கப்படுகிறது. தொழில் முனைவோரின் பயனுக்கென ஒரு சிறந்த தொழில்நுட்ப நூலகம் உள்ளது. இந்நூலகம் மின்சாரம், மின்னணுவியல், தகவல் தொடர்பு நுண்கருவிகள் சம்பந்தப்பட்ட 1400 புத்தகங்கள் மற்றும் 100 சஞ்சிகைகளைக் கொண்டுள்ளது.

iv. தரக்கட்டுப்பாடு ஆணைகளின் அமலாக்கம்

தமிழ்நாட்டில் நுகர்வோரிடையே, தரமான மின்பொருட்களை உபயோகப்படுத்துதல் குறித்த விழிப்புணர்வுக்காக, தொழில் வணிக ஆணையரகத்தின் ஒரு பிரிவான "வீட்டு உபயோக மின் சாதனங்களின் தரக்கட்டுப்பாடு ஆணைகளைச் செயல்படுத்தும் மையம்" 1981 ஆம் ஆண்டு தரக் கட்டுப்பாடு ஆணை மற்றும் மின்கம்பிகள் மற்றும் வடங்கள், வீட்டு உபயோக பொருட்கள் மற்றும் மின் பாதுகாப்புக் கருவிகள் மற்றும் அதனைச் சார்ந்த பொருள்கள் (தரக்கட்டுப்பாடு) ஆணை 2003 ஆகிய இரண்டு ஆணைகளை அமல்படுத்துகிறது. மேற்கூறிய முதல் ஆணைக்கு எதிராக செயல்படுவது அத்தியாவசிய பொருட்கள் சட்டம் 1955இன்படி தண்டனைக்குரியதாகும். இரண்டாவது ஆணைமூலம் ஐ.எஸ்.ஐ. முத்திரை இல்லாத, குறிப்பிடப்பட்ட சில மின்பொருட்களைத் தயாரிக்கவும், அவற்றை விற்பனைக்குச் சேமிக்கவும் அல்லது விநியோகிக்கவும் தடை செய்துள்ளது. இந்த ஆணைக்கு எதிர்மாறாகச் செயல்படுவது பி. ஐ. எஸ். சட்டத்தின் கீழ் தண்டனைக்குரியதாகும். இந்த ஆணைகளை அமல்படுத்த "உரிய அலுவலர்" ஆக மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்களும் சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை துணை இயக்குநர் (மின் மற்றும் மின்னணு), தரக்கட்டுப்பாட்டு மையம், சென்னை அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். 2009-10 ஆம் ஆண்டில் 2753 மின் பொருள் விநியோகஸ்தர் மற்றும் விற்பனைக் கூடங்கள் சோதனை செய்யப்பட்டு விதி மீறல்களுக்காக 61 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

ஆ. பயிற்சி நிலையங்கள்

1. சென்னை, கிண்டியிலுள்ள அரசின் தொழில்நுட்ப பயிற்சி மையம்மூலம் மூன்றாண்டு பட்டயப் படிப்பு "கருவி மற்றும் அச்சுக்கலை" யிலும், மூன்றாண்டு பட்டயப் படிப்பு "குளிர்சாதனம்

2010 ஏப்ரல் 21]

மற்றும் குளிர்ப்பதனியல் கலை"யிலும் மற்றும் ஓராண்டு மேல்-பட்டயப் படிப்பு (முதிர்வு நிலை) "அச்சு மற்றும் கருவி வடிவமைப்பு" துறையிலும், வருடத்திற்கு 30, 40 மற்றும் 10 மாணாக்கர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

2. திண்டுக்கல்லிலுள்ள கருவிப் பொறியியல் மையத்தின்மூலம் மூன்றாண்டு "கருவி மற்றும் அச்சுக்கலை"யில் பட்டயப் படிப்பு வருடத்திற்கு 30 மாணாக்கர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

3. கடலூர் மாவட்டம், விருத்தாச்சலத்திலுள்ள அரசினர் பீங்கான் தொழில்நுட்ப பயிற்சி நிலையம் 3½ ஆண்டு "பீங்கான் தொழில்நுட்ப பட்டயப் பயிற்சி" என்ற சிறப்பு பயிற்சித் திட்டத்தை நடத்திவருகிறது. இப்பயிற்சிக்கு முதலாமாண்டில் 50 மாணவர்களும், இரண்டாம் ஆண்டில் நேரடிச்சேர்க்கைமூலம் 10 மாணவர்களும் சேர்க்கப்பட்டு வருகின்றனர். இப்பயிற்சி நிறுவனம் தொழில்நுட்ப கல்வித்துறையுடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், இத்தகைய பீங்கான் பயிற்சி நிறுவனம் மாநிலத்தில் இது ஒன்று மட்டுமே உள்ளது. இப்பயிற்சி நிறுவனம்மூலம் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் நாட்டிலுள்ள சிறந்த பீங்கான் மற்றும் பீங்கான் பொருட்களைச் செய்யும் தொழில் நிறுவனங்களில் உடனடியாக வேலைவாய்ப்பு பெறுகிறார்கள்.

4. சென்னை, கிண்டியிலுள்ள அரசினர் அறிவியல் கண்ணாடிப் பயிற்சி மையம்மூலம் அறிவியல் கண்ணாடிப் பொருட்கள் தயாரிப்பு குறித்து இரண்டு வருட சிறப்பு சான்றிதழ் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் இப்பயிற்சிக்கு 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 25 மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

21. அரசு தொழிற்பேட்டைகள்

i. பீங்கான் தொழிற்பேட்டை

மாநிலத்தில் பீங்கான் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, கடலூர் மாவட்டம், விருத்தாச்சலத்தில் 64 தொழிற்கூடங்களுடன்கூடிய பீங்கான் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கான தொழிற்பேட்டை 1964 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இங்குள்ள தொழிற்கூடங்கள், தொழில்முனைவோருக்கு மிகக் குறைந்த வாடகையான சதுர அடிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1.75 வீதம் வாடகைக்கு

TRUTH ALONE TRIUMPHS

விடப்பட்டுள்ளது. இத்தொழிற்பேட்டையிலுள்ள தொழிலகங்கள் குறைந்த மின்னழுத்த மின் கடத்தாப் பொருட்கள், கழிவறைப் பொருட்கள், கலைப்பொருட்கள், உயர் வெப்பம் தாங்கக்கூடிய செங்கற்கள் மற்றும் பொருட்களை தயாரிக்கின்றன.

ii. மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டைகள்

அரசு, குறு, சிறு மற்றும் நடுத்தர மின், மின்னணு மற்றும் அவை சார்ந்த தொழில்களின் வளர்ச்சிக்கென்றே மாநிலத்தில் எட்டு சிறப்பு தொழிற்பேட்டைகளை அமைத்துள்ளது. இந்த எட்டு தொழிற்பேட்டைகளில் இரண்டு சென்னையிலும் (திருவான்மியூர் மற்றும் பெருங்குடி) மற்றும் திருவள்ளூர் (காக்களூர்), மதுரை (கப்பலூர்), சேலம் (சூரமங்கலம்), கோயம்புத்தூர் மாநகரம், கிருஷ்ணகிரி (ஓசூர்), திருச்சிராப்பள்ளி (துவாக்குடி) என்று மாவட்டத்திற்கு ஒன்றாகவும் அமைக்கப்பட்டுள்ளன. இத்தொழிற்பேட்டைகளில் 517 மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் 140 தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட 8 தொழிற்பேட்டைகளையும் மற்றும் விருத்தாச்சலத்திலுள்ள பீங்கான் தொழிற்பேட்டையையும் பராமரிப்புக்காக சிட்கோவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

22. தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்

இ.டி.ஐ (EDI) என்று அழைக்கப்படும் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், சிறு தொழில் நிறுவனங்களின் தேவைகளை நிறைவு செய்ய ஒரு தனி நிறுவனம் அவசியம் என்ற நெடுநாள் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு 2001ஆம் ஆண்டில் ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கமாக தோற்றுவிக்கப்பட்டது. இம்மாநிலத்தில் தொழில் நிறுவனங்கள் அமைப்பதற்கான வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளுவதும், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வரும் தொழில் முனைவோர்களின் திறமைகளை வளர்த்து நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதும் இந்நிறுவனத்தின் முதன்மை நோக்கங்களாகும்.

23. தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

இம்மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களின் சமூக மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்தும் இரு முக்கியக்

2010 ஏப்ரல் 21]

குறிக்கோள்களுக்காகத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வறிய பிரிவினரைச் சுரண்டல் போக்குகளிலிருந்து பாதுகாத்து, வளங்களைப் பரவலாக்கிட வழிகோலுவதும், ஊரகக் கைவினைஞர், தொழிலாளர்கள் மற்றும் பாட்டாளிகள் போன்ற பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்க்கு ஆதாயகரமான வேலைவாய்ப்பு அளிப்பதும் முதன்மையான முக்கியக் குறிக்கோளாகும். இச்சங்கங்கள், சிறு தேயிலை பயிரிடுவோர் மற்றும் மரவள்ளிக்கிழங்கு சாகுபடியாளர்களின் விளைபொருளுக்கு ஆதாயகரமான விலையையும் உறுதி செய்கின்றன. முக்கியமாக, குறு மற்றும் சிறு தொழில் முனைவோர் தமது தொழில் அலகுகளை நடத்துவதற்கு ஏதுவான உட்கட்டமைப்புகளுடன்கூடிய மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளை ஒதுக்கீடு செய்வதன்மூலமாகவும், தொழிற் கூடங்களைக் கட்டிக் கொடுப்பதன் வாயிலாகவும் இத்துறையின் கீழ் அமைக்கப்பட்ட கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள் தொழில் வளர்ச்சியை உந்துவிக்கும் மூலாதாரப் பங்காற்றுகின்றன. தொழிற் கூட்டுறவுகள் தமது பிரிவுகளைப் பல்வேறு தொழில்வகைகளுக்கு விரிவாக்கி, தேயிலை, சவ்வரிசி, தீப்பெட்டித் தயாரிப்பு, தென்னைநார்க் கயிறு, வங்கிப் பணி, பாலிதீன், கைத்திறன் பொருள், தையல் பணி, ஒப்பந்தத் தொழிலாளர் சேவை, அச்சுத் தொழில், ஆட்டோ ரிக்சா சேவை, பொறியியல், உலோகத் தொழில், தொழிற்பேட்டைகள் என்பன போன்ற தொழில் வகைகளின்கீழ் இத்தகைய சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பாம்பு பிடித்தல், பின்னலாடை உற்பத்தி, குடை தயாரிப்பு, மூலிகைத் தாவரங்கள் வளர்த்தல், பூட்டு உற்பத்தி, பொருள் போக்குவரத்து போன்ற சில சிறப்புத் தொழில்வகைகளின் கீழும் இவ்வாறான தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், மாநிலத்தில் உள்ள தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பதிவாளராக உள்ளார்.

31-3-2010 நாளன்றுள்ளவாறு இத்துறையில் உள்ள 362 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில், 243 சங்கங்கள் நிகர ஆதாயத்தில் செயல்பட்டு வருகின்றன. 2009-2010 ஆம் ஆண்டில் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த விற்றுமுதல் ரூ.588.53 கோடியாகும். மேலும், இச்சங்கங்கள்மூலமாக 98,169 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு, ரூ.2448.19 இலட்சம் அளவுக்குக் கூலி வழங்கப்பட்டுள்ளது.

[2010 ஏப்ரல் 21

46 பதிவுற்ற தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், தீப்பெட்டித் தயாரிப்பு, தையல் பணி, பொறியியல், நிலக்கரி/கல்கரி விநியோகம், தோல் பதனிடல் மற்றும் இதர சிறப்புத் தொழில் வகைகளில் ஈடுபட்டு வருகின்றன.

24. தேயிலைத் தொழில் பிரிவு

தேயிலைத் தொழில் பிரிவு, நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை விவசாயிகளின் நல்வாழ்வுக்கு முக்கியப் பங்காற்றுகிறது. மாநிலத்திலுள்ள சுமார் 63,000 சிறு தேயிலை விவசாயிகளில், 20648 விவசாயிகள் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறு தேயிலை விவசாயிகளை தனியார் தேயிலை தொழிற்சாலைகளின் சுரண்டல்களிலிருந்து விடுவித்து, அவர்களின் பச்சை தேயிலைக்கு நியாயமான விலை கிடைக்கும் நோக்கத்தோடு 1961 ஆம் ஆண்டு முதல் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலை அமைக்கப்பட்டு, தற்போது 15 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளும், இரு தேயிலை சேவைச் சங்கங்களும் நீலகிரி மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய 15 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளில், சாலிஸ்பரி, பிதர்க்காடு மற்றும் பந்தலூர் ஆகிய இடங்களில் செயல்படுகின்ற மூன்று கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள், பன்னாட்டுத் தர நிர்ணய அமைப்பின் இடர் பகுப்பாய்வு மற்றும் முக்கியக் கட்டுப்பாட்டு முனையம் குறித்த தரச்சான்று (ISO-Hazard Analytical and Critical Control Point Certification) பெற்றுள்ளன. மேலும், இரு தேயிலை சேவைச் சங்கங்களில் ஒன்றான 'இண்ட்கோசர்வ்' சங்கம் பன்னாட்டுத் தர நிர்ணய அமைப்பின் தரச்சான்று (ISO-Certification) பெற்றுள்ளது.

25. கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள்

தொடக்கக் காலத்தில், சிறு தேயிலை விவசாயிகள், தேயிலைக் கொள்முதல் செய்யும் தனியார் தொழிற்சாலைகளுக்கு, வீசிஎறியும் அளவுக்கு மிகக் குறைவான விலையில் பசுந்தேயிலையை அளித்து வந்தனர். அவர்களைச் சுரண்டலிலிருந்து விடுவித்து, கைதூக்கி விடும் நோக்கில், அவர்களிடையே கூட்டுறவு இயக்கத்தை உருவாக்குவது என அரசு தீர்மானித்தது. நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டதையடுத்து, இத்தகைய சிறு தேயிலை விவசாயிகளால் தமது பசுந்தேயிலைக்கு

2010 ஏப்ரல் 21]

மேம்பட்ட விலையைத் தற்போது பெறமுடிகிறது. தற்போது இம்மாவட்டத்தில், 20648 உறுப்பினர்களைக் கொண்ட 15 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. 2009-10 ஆம் ஆண்டில் இத்தகைய 15 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் தமது உறுப்பினர்களிடமிருந்து 658.23 இலட்சம் கிலோ அளவிலான பசுந்தேயிலை இலைகளைக் கொள்முதல் செய்து, ரூ.11648.00 இலட்சம் மதிப்பிலான 174.27 இலட்சம் கிலோ தேயிலைத்தூளை உற்பத்தி செய்து, ரூ.11,467.01 இலட்சம் அளவுக்கு தேயிலை விற்பனை செய்துள்ளன. 2009-10 ஆம் ஆண்டில் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகள் தமது தேயிலை விவசாய-உறுப்பினர்களுக்குச் சராசரியாக கிலோ ஒன்றுக்கு ரூ.12.31 வீதம் பசுந்தேயிலைக்குக் கொள்முதல் விலையாக வழங்கியுள்ளன.

15 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுள், 9 ஆலைகள் 2009-10 ஆம் ஆண்டில் ரூ.2.33 கோடியளவுக்கு மொத்த ஆதாயம் ஈட்டியுள்ளன. எபநாடு கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை, சுமார் ரூபாய் ஒரு கோடி செலவு செய்து உற்பத்தியை தொடங்கியுள்ளது.

வெளியிலிருந்து பசுந்தேயிலையைக் கொள்முதல் செய்து தேயிலை உற்பத்தி செய்யும் தனியார் ஆலைகளுக்கு ஆதாயக் குவிப்பு என்பதே அடிப்படை நோக்காகவுள்ள நிலையில், கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் தம்மைச் சார்ந்துள்ள சிறு தேயிலை விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் நிறைவேற்றவேண்டிய சமூகப்பொறுப்பு காரணத்தால், தேயிலையின் சிறிதளவு தரக்குறைவு மற்றும் நிறுவுதிறனை முழுமையாக எட்ட இயலாமை போன்ற தமக்கே உரிய உள்ளார்ந்த நிர்பந்தங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளில் நிறுவப்பட்ட பொருத்தம் ஒருங்கமையாத இயந்திரங்கள், உற்பத்தியாகும் தேயிலையின் தரக்குறைவுக்கும், அதன் விளைவாக இயல்புக்கு மாறான அளவில் உற்பத்தி விலை உயர்வுக்கும், முதன்மைக் காரணமாக விளங்குகிறது என்பது தெளிவாக அறியவந்துள்ளது. எனவே, உற்பத்தியாகும் தேயிலையின் தரத்தை உறுதிப்படுத்திடவும், கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனை உயர்த்திடவும், ரூ.10.53 கோடி மதிப்பீட்டிலான 15 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளையும் நவீனப்படுத்திடும் வகையிலான "கூட்டுறவுத் தேயிலைத்தொழிற் பிரிவைப் புத்தாக்கம் செய்யும்

[2010 ஏப்ரல் 21

திட்டத்திற்கு'' 2008 ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. திட்டமதிப்பீட்டின் 25 விழுக்காட்டை மாநில அரசு தனது பங்குமுதல் பங்கேற்பாகவும், மற்றொரு 25 விழுக்காட்டைக் கடனாகவும் மொத்தம் ரூ.5.26 கோடியை விடுவித்துள்ளது.

26. இண்ட்கோசர்வ்

நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டவுடன், அவற்றின் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக ஒரு தலைமைச் சங்கத்தை உருவாக்கவேண்டிய தேவை உணரப்பட்டது. அதற்கமைய, 'இண்ட்கோசர்வ்' என அழைக்கப்படும் "தமிழ்நாடு சிறு தேயிலை விவசாயிகள் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளின் இணையம்" 1965 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் பல்வேறு பொருட்களின் கொள்முதலை ஒருங்கிணைத்திடுவதும், கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள், தமது விவசாயி-உறுப்பினர்களுக்குப் பசுந்தேயிலைக்கு உயரிய விலைபெற்றுத் தரும் வகையில் அவற்றின் உற்பத்தித் தேயிலைப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு உதவிபுரிவதுமே இந்த இணையத்தின் முதன்மை நோக்கமாகும். வணிகச் சின்னம் பொறிக்கப்பட்ட மற்றும் பொறிக்கப்படாத தேயிலைத்தூள், பொட்டலங்களில் நிரப்பப்பட்ட மற்றும் சிப்பங்கட்டப்படாத தேயிலைத்தூள், இயற்கைத் தேயிலைத்தூள் ஆகியவற்றை இந்தியாவிலும் வெளிநாட்டிலும் இவ்விணையம் விற்பனை செய்துவருகிறது. இவ்விணையம் தனது உறுப்பு-கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு குன்னூர், கோயம்புத்தூர் மற்றும் கொச்சியில் உள்ள தனது சேமிப்புக் கிடங்குகளில் கிட்டங்கி வசதிகளையும் அளித்து வருகிறது. இவ்விணையம், நீலகிரிதேயிலைக்குச் சந்தையில் தேவையை நிலைநிறுத்துவதற்காகவும், நீலகிரி தேயிலையை நுகர்வோருக்கு நியாயவிலையில் கிடைக்கச் செய்வதற்காகவும் 'ஊட்டித்தேயிலை'யை நியாயவிலைக் கடைகள்மூலம் விற்பனை செய்து வருகிறது. இவ்விணையம் 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.1653.99 இலட்சம் மதிப்பிலான 15.42 இலட்சம் கிலோ தேயிலைத்தூளை விற்பனை செய்து, ரூ.103.86 இலட்சம் அளவுக்கு நிகர ஆதாயம் ஈட்டியுள்ளது. கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளின் சிறுதேயிலை விவசாயிகளுக்கு சூலை 2008 வரை ரூ.1504.99 இலட்சம் அளவுக்கு, இவ்விணையம் தனது வரவிலிருந்து கழிமான/தள்ளுபடி

2010 ஏப்ரல் 21]

உதவித்தொகையாக வழங்கியுள்ளது. மேலும், இண்ட்கோசர்வ் கூடுதல் கிட்டங்கி ஒன்றை ரூ.109.25 இலட்சம் மதிப்பீட்டில் குன்னூரில் அமைத்திட உத்தேசித்து, அதற்கான கட்டுமானப் பணிகளை தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திடம் (சிட்கோ) ஒப்படைத்துள்ளது. சிறு தேயிலை விவசாயிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதில் இண்ட்கோசர்வ் மற்றும் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் பங்காற்றி வருவது அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

27. தேயிலை உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் (டீ சர்வ்)

தேயிலையின் முதன்மைச் சந்தை வாய்ப்புக்கான வெளிப்படையானதும், மேம்பட்ட விலை கண்டறியும் அமைப்பு முறையுமான "டீ சர்வ்" எனப்படும் மின்னணுத் தேயிலை ஏல விற்பனை மையம் 28-8-2002 அன்று பதிவு செய்யப்பட்டு, 3-9-2003 அன்று தனது வணிகத்தைத் தொடங்கியது. கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளும், வெளியிலிருந்து தேயிலை இலைகளைக் கொள்முதல் செய்யும் தனியார் தேயிலை ஆலைகளும் இந்த ஏல மையத்தின் உறுப்பினர்களாவர். இது, மின்னணு ஏல மையத்தில் நடைபெறும் தேயிலை விற்பனையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதுடன், தேயிலை விற்பனையில் இடைத்தரகர்களை முற்றாக நீக்கி, தேயிலை உற்பத்தி செய்வோருக்கு ஆதாயகரமான விற்பனை விலையைப் பெற்றுத் தருகிறது. இம்மையம் ரூ.1702.53 இலட்சம் மதிப்பிலான 16491 மெட்ரிக் டன் உற்பத்தித் தேயிலையை மின்னணு ஏலமுறையில் விற்பனை செய்துள்ளதுடன், 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.6.70 இலட்சம் நிகர ஆதாயத்தை ஈட்டியுள்ளது.

28. கயிறுத் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

மாநிலத்தில் உள்ள ஊரக மகளிர்க்கு வேலைவாய்ப்பளிப்பதில் கயிறுத் தொழில் மிக முக்கியப் பங்காற்றுகிறது. நம் நாட்டில் கயிறுத் தொழிலில் தமிழ்நாடு, கேரள மாநிலத்திற்கு அடுத்த, இரண்டாவது இடத்தினையும், பழுப்புநிறத் தென்னைநார் உற்பத்தியில் முதலாவது இடத்தையும் வகிக்கிறது. இம்மாநிலத்தில் உள்ள தேங்காய் மட்டைகளில் 48 விழுக்காடு அளவுக்கு நார்பிரிப்பில் பயன்படுத்தப்படுகிறது. தேங்காய் மட்டைகள் பயன்பாட்டின் தேசிய சராசரி 40 விழுக்காடு ஆகும். கயிறுத்

[2010 ஏப்ரல் 21

தொழில் தனியார் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் வளர்ச்சி பெற்று வருகிறது. கூட்டுறவுத் துறையின்கீழ், 10557 உறுப்பினர்-தொழிலாளர்கள் பயன்பெறுவதற்காக 75 கயிறுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள், அரசின் பங்குமுதல் பங்கேற்பான ரூ.222.22 இலட்சம் உள்ளிட்ட, ரூ.266.85 இலட்சம் பங்குமுதலைக் கொண்டுள்ளன. இவை 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.1224.81 இலட்சம் மதிப்பிலான தென்னைநார்க் கயிறுப் பொருட்களை விற்பனை செய்துள்ளன. மேலும், இவை 1424 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பளித்து, ரூ.135.43 இலட்சம் அளவுக்குக் கூலி வழங்கியுள்ளன.

29. கயிறுக் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சந்தை மேம்பாட்டு உதவித் திட்டம்

நாட்டில் தென்னைநார்க் கயிறு மற்றும் கயிறுப் பொருட்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கோடு, இந்திய அரசு, கயிறுவாரியத்தின் வாயிலாக, சந்தை மேம்பாட்டு உதவித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் முந்தைய மூன்றாண்டுகளின் சராசரி விற்பனை மதிப்பில் 10 விழுக்காடு அளவுக்கு உதவியளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. கயிறு கூட்டுறவுச் சங்கங்களில் கயிறுத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க உதவிடும் பொருட்டு, அவற்றின் கயிறுப் பொருட்களைத் தள்ளுபடி விற்பனைமூலம் விற்றுத் தீர்ப்பதற்கு இந்த நிதியுதவி அளிக்கப்படுகிறது. இந்த சந்தை மேம்பாட்டு உதவித் திட்டத்தின் 10 விழுக்காட்டுத் தொகையை மைய அரசும், மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து ஏற்றுக் கொள்கின்றன. இவ்வகையில் 2009-2010 ஆம் ஆண்டில் 58 கயிறுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.43.43 இலட்சம் அளவுக்கு, அதாவது மைய அரசின் பங்களிப்புத் தொகைக்கு இணையான தொகையை மாநில அரசு சந்தை மேம்பாட்டு உதவியாக வழங்கியுள்ளது.

30. பாரம்பரிய கயிறுத் தொழில்களுக்குப் புத்துயிரூட்டும் திட்டம் (ஸ்பர்ட்டி)

'ஸ்பர்ட்டி' (SFURTI) என அழைக்கப்படும், பாரம்பரிய கயிறுத் தொழில்களுக்குப் புத்துயிரூட்டும் திட்ட நிதியம் எனும் திட்டமொன்றுக்கு இந்திய அரசு ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டத்தில் புதிய பொருட்கள் உருவாக்கம், சந்தைவாய்ப்பு வசதி ஏற்படுத்துதல், செயல்திறன் உருவாக்கம் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கும், பொது வசதி மையத்தை அமைக்கவும்

2010 ஏப்ரல் 21]

உத்தேசிக்கப்பட்டுள்ளது. கயிறுத் தொழில் மற்றும் கிராமத் தொழில் ஆகியன இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், இம்மாநிலத்தில் கடலூர், சேலம், சிங்கம்புணரி, பெரியகுளம், பட்டுக்கோட்டை மற்றும் குடியாத்தம் ஆகிய ஆறு கயிறுக் குழுமங்கள் தெரிவு செய்யப்பட்டு, குழுமப் பகுதியில் உள்ள கயிறுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் மற்றும் தொழில் முனைவோர் பயன்பெறும் வகையில் பொது வசதி மையம் அமைப்பதற்கு, குழுமம் ஒன்றுக்கு ரூ.88.50 வீதம் ஆகக் கூடுதல் ரூ.531.00 இலட்சம் மதிப்பீட்டிலான திட்டத்திற்குக் கயிறு வாரியம் ஒப்புதளித்துள்ளது. அனைத்து கயிறுக் குழுமங்களும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நிலத்தை/இடத்தைக் கண்டறிந்துத் தெரிவு செய்துள்ளதுடன், சிறப்பு நோக்கு நிறுவனத்தையும் அமைத்துள்ளன. இந்தக் குழுமங்களினால் கயிறு தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 3000 நபர்கள் பயனடைய உள்ளனர். பயனாளிகள் செலுத்த வேண்டிய பங்குத் தொகைச் சுமையைக் குறைப்பதற்காக, தமிழ்நாடு அரசு இந்த ஆறு கயிறுக் குழுமங்களுக்குமாக மொத்தம் ரூ.59.50 இலட்சத்தைக் கடனாக வழங்க ஒப்புதல் அளித்து விடுவித்துள்ளது. பொது வசதி மையத்தை அமைக்கும் பணியை விரைவுபடுத்திடும் வகையில், தொழிற்கூடங்கள் கட்டுமானம் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் ஆகிய பணிகள் இந்த ஆறு கயிறுக் குழுமங்களிலும் நடைபெற்றுவருகின்றன.

31. கயிறு—புத்துயிரூட்டுதல், நவீனப்படுத்துதல் மற்றும் தொழில்நுட்பத் தரம் உயர்த்துதல் (ரிமோட்) (REMOT)

பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கயிறு வாரியம் மூலம் செயல்படுத்தும் வகையில் கயிறுத் தொழிலுக்குப் புத்துயிரூட்டுதல், நவீனப்படுத்துதல் மற்றும் தொழில்நுட்பத் தரமுயர்த்துதல் (ரிமோட்) திட்டத்திற்கு இந்திய அரசு ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டுக்கென 616 கயிறுதிரித்தல் அலகுகளுக்கும், 520 குறு/குடிசைத் தொழில் அலகுகளுக்குமாக மொத்தம் ரூ.3932 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கயிறு திரிக்கும் தொழிலகங்களுக்கு தலா ரூ.2.00 இலட்சம் வரையும், குறு/குடிசைத் தொழில் அலகுகளுக்கு தலா ரூ.5.00 இலட்சம் வரையும் நிதியுதவியளிக்க இத்திட்டம் வகைசெய்கிறது. இதன்கீழ் ஒவ்வொரு திட்டத்திற்கும், இந்திய அரசு 40 விழுக்காடு அளவுக்கு மானிய உதவியளிக்கிறது. வங்கிகளிலிருந்து கடனுதவி பெறுவதற்குக் கயிறு வாரியம் உதவி செய்கிறது.

[2010 ஏப்ரல் 21

2008-2009 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் 304 அலகுகளுக்கு மொத்த திட்ட மதிப்பீடு ரூ.1322.00 இலட்சத்திற்கு, கடன்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதற்கு ரூ.528.80 இலட்சம் இந்திய அரசின் மானியமாக கயிறு வாரியத்தால் விடுவிக்கப்பட்டுள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில் 127 கயிறு திரிக்கும் அலகுகள் மற்றும் 273 குறு/குடிசைத் தொழில் அலகுகளுக்குக் கடன் வசதி அளித்து, அதற்காக ரூ.6.476 கோடி மானிய உதவியளிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

32. சுனாமி மறு வாழ்வுத் திட்டம்

தமிழ்நாட்டில் கடலோரப் பகுதியில் வசிக்கும் கயிறுத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு, கீழ்க்காணும் 5 கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தலா ரூ.9.00 இலட்சம் வீதம், மொத்தம் ரூ.45.00 இலட்சம் சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் வழங்க மைய அரசால் ஒப்புதலளிக்கப்பட்டு, தொகை சங்கங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

(1) டாக்டர் அம்பேத்கார் கயிறு கால்மிதிவிரிப்பு மற்றும் தரை விரிப்பு தொழிற் கூட்டுறவுச் சங்கம், கடலூர் மாவட்டம்

(2) கோட்டூர் ஆதி திராவிடர் கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கம், நாகப்பட்டினம் மாவட்டம்

(3) தந்தை பெரியார் கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கம், மரக்காணம், விழுப்புரம் மாவட்டம்

(4) பேராவூரணி கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கம், தஞ்சை மாவட்டம்

(5) கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு இரப்பர் தொழிற்சாலை, கன்னியாகுமரி மாவட்டம்.

33. சேகோசர்வ்

மாநிலத்தில் சேலம், நாமக்கல், ஈரோடு, தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், பெரம்பலூர் மற்றும் கரூர் ஆகிய 8 மாவட்டங்களில் மரவள்ளிக் கிழங்கு சுமார் 85,000 ஹெக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு வருகிறது. மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள மரவள்ளிக்கிழங்குமாவு மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள், மரவள்ளிக்கிழங்கிலிருந்து உற்பத்தி செய்யப்படும் தமது பொருட்களைச் சந்தையில் விற்பனை செய்வதிலும், கடனுதவி பெறுவதிலும் பல்வேறு இடர்ப்பாடுகளைச் சந்தித்து வந்தனர்.

2010 ஏப்ரல் 21]

அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு வணிகர்கள் மிகக் குறைவான விலையையே அளித்து வந்தனர். அமைப்புரீதியிலான சந்தை வசதியோ, சேமிப்புக் கிடங்கு வசதியோ அக்காலத்தில் இல்லாத சூழலை இடைத்தரகர்கள் பயன்படுத்திக் கொண்டனர். இத்தகைய இடர்களிலிருந்து சவ்வரிசி/கிழங்குமாவு உற்பத்தியாளர்களை விடுவிப்பதற்காக, 'சேகோசர்வ்' எனப்படும் "சேலம் ஸ்டார்ச் மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம்" 21-7-1981 அன்று பதிவு செய்யப்பட்டது. 'சேகோசர்வ்' சங்கம் தோற்றுவிக்கப்பட்ட பின்னர், மரவள்ளிக்கிழங்குப் பொருட்களின் உற்பத்தியாளர்களின் சந்தைப் பேரத்திறன் பெருமளவுக்கு மேம்பட்டு, இடைத்தரகுமுறை முற்றாகத் தகர்ந்துபோயிற்று. இச்சங்கம் தனது உறுப்பினர்களுக்குச் சந்தையுதவியளிப்பது மட்டுமின்றி, சேமிப்புக் கிட்டங்கிச் சேவையையும், கடனுதவிகளையும் வழங்கி வருகிறது. சங்கமானது நுகர்வோர்களுக்குத் தரமான சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு பொருட்களை சந்தையில் பெறுவதற்குப் பெரிதும் உதவுகிறது. 31-3-2010 நாளன்றுள்ளவாறு, இச்சங்கம் ரூ.722.68 இலட்சம் பங்குமுதலுடன் கூடிய 368 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில், இச்சங்கம் ரூ.307.45 கோடியளவுக்கு தனது விற்றுமுதலைப் பதிவு செய்ததுடன், ரூ.2.06 கோடியளவுக்கு நிகர ஆதாயத்தை ஈட்டியுள்ளது.

சேகோசர்வ் சங்கத்தின் உறுப்பினர்கள் தமது அலகுகளை நவீனப்படுத்திக்கொள்ள ஊக்குவிப்பதற்காகவும், அதன் வாயிலாக உற்பத்திப் பொருட்களின் தரத்தை மேம்படுத்துவதற்காகவும், தமது உறுப்பினர்களின் சவ்வரிசி மற்றும் கிழங்குமாவு உற்பத்தி அலகுகளை நவீனப்படுத்தும் திட்டம் ஒன்றை 'சேகோசர்வ்' அறிமுகப்படுத்தியது. உறுப்பு அலகு ஒவ்வொன்றுக்கும் ரூ.4.00 இலட்சத்திற்கு மிகாமல், திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அளவுக்கு மானியம் வழங்க இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அளிக்கப்பட்ட மானியத்தில் 50 விழுக்காடு அளவுக்கு, அலகு ஒன்றுக்கு ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல், மாநில அரசு சேகோசர்வ் சங்கத்திற்கு மீள வழங்குகிறது. 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுகளுக்கென மாநில அரசால் வழங்கப்பட்ட மானியத் தொகை ரூ.65.15 இலட்சம் 74 உறுப்பினர்-அலகுகளுக்கு வழங்கப்பட்டு, முழுவதும் பயன்படுத்தப்பட்டுவிட்டது. இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக, பெருமளவு உறுப்பினர்கள் தமது அலகுகளை

நவீனப்படுத்தியதுடன், தமது உற்பத்திப் பொருட்களின் தரம் உயர்ந்து, அதன் வாயிலாக தமது பொருட்களுக்கு மேம்பட்ட விலை பெற முடிகிறது.

34. சவ்வரிசிக் குழுமம்

சேலத்தில் போதிய பகுப்பாய்வு/பரிசோதனை வசதிகளின்மையால், சேகோசர்வ் சங்கம் மற்றும் தன் உறுப்பினர்அலகுகள், தமது உற்பத்திப் பொருட்களின் மாதிரிகளை உடனுக்குடன் பகுப்பாய்வு பரிசோதனைகளை செய்து கொள்வதில் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வந்தன. இத்தகைய இடர்களைத் தவிர்த்திடும் வகையில், "குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள்-குழும மேம்பாட்டுத் திட்டத்தின்" கீழ் மைய அரசின் நிதியுதவியுடன் பொது வசதி மையத்தின் அங்கமாக, பகுப்பாய்வுக் கூடம் ஒன்றை அமைப்பது என முடிவெடுக்கப்பட்டது. இதன்படி, ரூ.498.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பொது வசதி மையம் அமைப்பதற்கான சவ்வரிசிக் குழுமத்திற்கு இந்திய அரசு ஒப்புதளித்துள்ளது. அதன் முதற்கட்டமாக, பகுப்பாய்வுக் கூடம் ஒன்றைப் பொது வசதி மையமாக அமைக்க ரூ.120.00 இலட்சம் மற்றும் பயிற்சித் திட்டம் உள்ளிட்ட மென் இடையீடுகளுக்காக ரூ.10.00 இலட்சம் வழங்க இந்திய அரசு ஒப்புதலளித்துள்ளது. இதில் ரூ.4.00 இலட்சம் இந்திய அரசால் மென் இடையீடுகளுக்காக ஒப்பளிப்பு செய்துள்ளது. பொது வசதி மையத்தில் பகுப்பாய்வுக் கூடம் அமைக்கத் தேவையான துணைக் கருவிகளும், இயந்திரங்களும் கொள்முதல் செய்யப்பட்டு, சேகோசர்வ் சங்கத்தில் நிறுவப்பட்டு, இதற்கான முதற்கட்ட மானியமாக ரூ.39.63 இலட்சம் இந்திய அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

35. தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி (வரையறுக்கப்பட்டது) (தாய்கோ வங்கி)

தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போதிய அளவில் கடன்களை வழங்கிட தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி 1961 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் வாயிலாக நபார்டு வங்கியின் மறுநிதியளிக்கும் திட்டத்தின்கீழ், மாநிலம் முழுவதிலும் கடன் வசதிகளை அளிப்பதற்குத் தாய்கோ வங்கிக்கு இந்திய ரிசர்வ் வங்கி அங்கீகாரம் வழங்கியுள்ளது. தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டுமின்றி, குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கும்

2010 ஏப்ரல் 21]

இவ்வங்கி நிதியுதவியளிப்பதை நீட்டித்துள்ளது. மேலும் இவ்வங்கி, பொதுமக்களுக்கு நகைக் கடன்கள், வீட்டுவசதி/வீட்டுஅடமானக் கடன்களையும், ஊதியம் பெறும் அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் பணியாளர்களுக்கு தனிநபர்க் கடன்களையும் விரிவாக்கம் செய்து வழங்கி வருகிறது. 2009-10 ஆம் ஆண்டில் இவ்வங்கி ரூ.477.00 கோடியளவுக்கு வைப்புத் தொகையைத் திரட்டி, ரூ.394.00 கோடியளவுக்குக் கடன்களையும், முன்பணங்களையும் வழங்கியதுடன், ரூ.2.90 கோடியை நிகர ஆதாயமாக ஈட்டியுள்ளது. இதன் அனைத்துக் கிளைகளும் கணினி மயமாக்கப்பட்டு, மாநிலம் முழுவதிலும் 43 கிளைகளுடன் இவ்வங்கி செயல்பட்டு வருகிறது.

36. செங்கல் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

ஊரகப் பகுதிகளில் கைத்திறம் வாய்ந்த தாழ்த்தப்பட்ட இனத்தை சார்ந்த தொழிலாளர்கள் தமது பிழைப்புக்கான/ வாழ்வாதாரத்திற்கான வேலைவாய்ப்புகளைப் பெறுவதில் பிரச்சினைகளை எதிர்கொண்டுவந்தனர். அத்தகைய தொழில்திறம் வாய்ந்த தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் நோக்கோடு, மாநிலத்தில் செங்கல் உற்பத்தி செய்யும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தும் வகையில் இத்துறை, திட்டம் வகுத்தது. தற்போது மாநிலத்தில் ஆறு செங்கல் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டுவருவதுடன், 955 ஆதி திராவிடர் செங்கல் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பளித்து வருகின்றன. ரூ.2.14 இலட்சம் அரசுப் பங்குமுதல் பங்கேற்பு உள்ளிட்ட, ரூ.8.78 இலட்சம் அளவுக்கு செலுத்தப்பட்ட பங்குமுதலை இச்சங்கங்கள் கொண்டுள்ளன. இவை, 2009-10 ஆம் ஆண்டில் ரூ.133.54 இலட்சம் அளவுக்கு விற்பனை செய்துள்ளன.

37. பாலிதீன் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

பாலிதீன் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டதன் முதன்மைக் குறிக்கோள், முன்னாள் இராணுவத்தினர்களின் மனைவியர் மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள ஆதி திராவிட மகளிர் ஆகியோருக்கு தொடர்ச்சியானதும், ஆதாயகரமானதுமான வேலைவாய்ப்பளிப்பதேயாகும். மரக்கன்றுகள்/வனநாற்றங்கால் அமைப்பதற்காக வனத் துறை மற்றும் வேளாண் துறை ஆகியவற்றின் பாலிதீன்பைகளின் தேவைகளை நிறைவு செய்வதே இச்சங்கங்களின் செயல்பாடுகளாகும். தற்போது இம்மாநிலத்தில்

செயல்படும் 11 பாலிதீன் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், 971 மகளிர்-தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வருகின்றன. இவை, 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.221.91 இலட்சம் அளவுக்கு விற்பனை செய்துள்ளன.

38. ஆட்டோ சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள்

பலவகைப்பட்ட ஏழை ஆட்டோரிக்சா ஓட்டுநர்களின் பொருளாதார நிலைகளை மேம்படுத்துவதற்காகவும், தவணைக் கொள்முதல் முறையில் அவர்களை ஆட்டோரிக்சாக்களின் உரிமையாளர்களாக ஆக்குவதற்காகவும், இம்மாநிலத்தில் ஆட்டோரிக்சா ஓட்டுநர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், சிறுபான்மை வகுப்பைச் சார்ந்த ஆட்டோ ஓட்டுநர்களின் நல்வாழ்வுக்காகவும் இவ்வாறான சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது மாநிலத்தில் செயல்படுகின்ற 50 ஆட்டோ தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுள், 18 சங்கங்கள் 'டாம்கோ' (தமிழ்நாடு சிறுபான்மையினர் மேம்பாட்டுக் கழகம்) ஆட்டோ கடன் திட்டத்தின்கீழ் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிப்பதற்கென்றே தொடங்கப்பட்டன. 'டாம்கோ' ஆட்டோ கடன் திட்டத்தின்கீழ் 6% வட்டியிலான கடனுதவிபெற்று, 814 ஆட்டோரிக்சாக்கள் சிறுபான்மைச் சமூக உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆட்டோரிக்சாக்கள் வழங்குவதைத் தவிர, சென்னையில் உள்ள 3 ஆட்டோ சங்கங்கள் நகரில் உள்ள ஆட்டோ ஓட்டுநர்கள் பயனடையும் வகையில் பெட்ரோல், டீசல் மற்றும் பெட்ரோலிய எரிவாயு போன்றவற்றைத் தமது விற்பனை நிலையங்கள்மூலம் விற்பனை செய்து வருகின்றன.

39. அச்சக சேவைத் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

சிறு தொழில் அச்சக அலகுகள், அமைப்புசாராத முறையில் செயல்படுவதன் காரணத்தால், பெருமளவிலான அச்சிடும் பணி ஆணைகளைப் பெறுவதில் இடர்பாடுகளை எதிர்கொண்டுவந்தன. அவற்றைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் குழுக்களாக ஒருங்கு சேர்த்திடும் வகையில் அச்சக சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, அச்சக அலகுகள், அச்சிடல் பணி ஆணைகளைப் பெறுவதிலும், அத்தகைய பணி ஆணைகளை உறுப்பினர்களின் அச்சக அலகுகளின் வாயிலாக நிறைவேற்றுவதிலும் உதவிபுரிந்து வருகின்றன. இவை

2010 ஏப்ரல் 21]

தவிர, அச்சக இயந்திரங்களைக் கொண்ட சில அச்சகக் கூட்டுறவுச் சங்கங்களும் அமைக்கப்பட்டு, அச்சிடல் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பும், சந்தையுதவியும் அளிக்கப்படுகின்றன. இத்தகைய சங்கங்கள், அரசுத் துறைகள், அரசுச்சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து அச்சிடும் பணி ஆணைகளைப் பெற்று, அவற்றைத் தமது உறுப்பு-அலகுகள் மற்றும் தொழிலாளர்களைக் கொண்டு நிறைவேற்றிவருகின்றன. மாநிலத்தில் 28 அச்சக சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும், 3 அச்சகத் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. 2009-10 ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் ரூ.2268.13 இலட்சமளவுக்கு அச்சுப்பணி ஆணைகள் நிறைவேற்றி, விற்பனை செய்துள்ளன.

40. ஒப்பந்தத் தொழிலாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

தொழிலகங்களில் ஒப்பந்தத் தொழிலாளர்முறை ஒழிக்கப்பட வேண்டியது, ஒப்பந்தத் தொழிலாளர் முறை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் உள்ள சட்டபூர்வக் கட்டாயமாகும். எனவே, மாநிலத்தில் தொழிலாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கியதன்மூலம், இந்த சட்டபூர்வத் தேவையை நடைமுறைப்படுத்துவதில் தமிழ்நாடு அரசு முன்னோடியாக விளங்குகிறது. இத்தகைய சங்கங்கள் தற்காலிகத் தொழிலாளர்களுக்கு முழுமையான ஊதியம் மற்றும் சட்டபூர்வ பயன்களுடன்கூடிய நிரந்தர வேலைவாய்ப்பு அளிப்பதன்மூலம், அவர்களுக்குப் புனர்வாழ்வளித்து வருகின்றன. கல்பாக்கம் அணுசக்தி நிலையம், சென்னை பெட்ரோலிய சுத்திகரிப்பு நிறுவனம், நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம், பாரத மிகுமின் கழகம் போன்ற அமைப்பு சார்ந்த தொழிற்பிரிவின்கீழ் இத்தகைய சங்கங்கள் நிறுவப்பட்டன. இதேபோன்று, அமைப்புசாரா தொழிற்பிரிவின்கீழ் மாநிலம் முழுவதும் பரவியுள்ள தொழில்திறனுள்ள தொழிலாளர்கள், கைவினைஞர், தொழில் நுட்பாளர்கள், தொழிற்பயிற்சி பெற்றவர்கள் போன்றோருக்காக ஒப்பந்தத் தொழிலாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் உள்ள அரசுத் துறைகள், அரசுச்சார்பு நிறுவனங்கள்/கழகங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து ஒப்பந்தப் பணி ஆணைகளைப் பெற்று அவற்றின்மூலம் இச்சங்கங்கள் வேலைவாய்ப்பளித்து வருகின்றன.

[2010 ஏப்ரல் 21

தற்போது இத்தகைய 39 ஒப்பந்தத் தொழிலாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. 2009-2010 ஆம் ஆண்டில், இச்சங்கங்கள் ரூ.2540.58 இலட்சத்தைக் கூலியாக வழங்கியுள்ளன.

41. கூட்டுறவுத் தொழிற் பேட்டைகள்

தொழில் முனைவோர்க்குக் குறைந்த விலையில் தொழிற்கூடங்கள்/மேம்படுத்தப்பட்ட தொழில்மனைகள், மின்சாரம், தண்ணீர் மற்றும் இதர வாய்ப்பு நலங்கள் மற்றும் வசதிகளை அளிப்பதன்மூலம், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக கூட்டுறவு அமைப்பின்கீழ் தொழிற்பேட்டைகள் அமைக்கப்படுகின்றன. இக்குறிக்கோளை எய்திடும் நோக்கோடு, 2204 குறு மற்றும் சிறு தொழில் முனைவோர்/ உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில், பல்வேறு மாவட்டங்களில் 14 கூட்டுறவுத் தொழிற்பேட்டைகளை இத்துறை உருவாக்கியுள்ளது. பெருமளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன், இத்தொழிற்பேட்டைகளில் செயல்படுகின்ற ஏற்றுமதி நோக்கிலான அலகுகள் வாயிலாக, மிகுதியான அந்நியச் செலாவணியையும் இத்தொழிற்பேட்டைகள் ஈட்டித்தருகின்றன.

42. சென்னை தொழிற்கூட்டுறவுப் பகுப்பாய்வுக் கூடம் (மைக்கால்)

ஆங்கில மருத்துவ முறை, ஆயுர்வேத/சித்தா மற்றும் யுனானி மருத்துவ முறை மருந்து உற்பத்தியாளர்கள் பயன்படுத்தும் மூலப் பொருட்கள் மற்றும் அவர்களின் உற்பத்திப் பொருட்களின் மாதிரிகளைப் பகுப்பாய்வு மற்றும் பரிசோதனை செய்தல் மற்றும் வரையறுக்கப்பட்ட தர அளவீடுகளின்படி அத்தகைய மாதிரிகள் உள்ளனவா எனச் சான்றளித்தல் ஆகிய குறிக்கோளோடு, சென்னை தொழிற் கூட்டுறவுப் பகுப்பாய்வுக் கூடம் அமைக்கப்பட்டது. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட இச்சங்கத்திற்குக் குன்னூரில் ஒரு கிளை உள்ளது. அக்கிளை, பன்னாட்டுத் தரக் கட்டுப்பாட்டு அமைப்பின் தர நிர்ணயச்சான்று பெற்றுள்ளது. இச்சங்கம் ரூ.3.43 கோடி மதிப்பீட்டிலான "குறு மற்றும் சிறுதொழில் குழும மேம்பாட்டுத் திட்டத்தின்" கீழ் இந்திய அரசின் நிதியுதவியில் மருந்தாக்கத் தொழிற் குழுமத்தின்கீழ் ஒரு "பொது வசதி மையத்தை" அமைப்பதற்கு முன்மொழிந்துள்ளது. மருந்து உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் மருந்து மாதிரிகள் நிர்ணயிக்கப்பட்ட தர அளவீடுகளின்படி உள்ளனவா என்பதைப்

2010 ஏப்ரல் 21]

பகுத்தாய்ந்து பரிசோதனை செய்துதருவதற்கு உதவுவதும், உறுப்பினர்-அலகுகள் பயன்படுத்தும் கருவிகள், துணைக் கருவிகள் மற்றும் ஆய்வுக் கருவிகள் ஆகியவற்றின் உள்ளளவுகளைக் கணக்கீடு செய்து செல்லுபடியாக்குதல், பகுப்பாய்வு மற்றும் கருவிகளின் உள்ளளவு கணக்கிடுதலில் பயிற்சியளித்தல் "மருந்தாக்கத் தொழிற் குழுமத்தில்" வகைசெய்யப்பட்டுள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில் இச்சங்கம் ரூ.51.50 இலட்சம் மதிப்பிலான பகுப்பாய்வு சேவைக் கட்டண வருவாய் ஈட்டியுள்ளது.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டான்சிட்கோ)

43. தமிழக அரசு குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு உதவிடவும், பாதுகாத்து மேம்படுத்தவும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தை 1970 ஆம் ஆண்டு நிறுவியது. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (டான்சிட்கோ) துவங்குவதற்கு முன், தொழில் வணிக இயக்குனரகம்மூலம் 35 தொழிற்பேட்டைகள் தமிழக அரசால் உருவாக்கப்பட்டன. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் துவக்கப்பட்டபின் மேற்கூறிய 35 அரசு தொழிற்பேட்டைகளையும் பராமரிப்பதற்காக அரசு ஆணை எண் 720, தொழில் துறை (சிறப்பு) நாள் 17-5-1974-ன்படி முகமை அடிப்படையில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திடம் 1974 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது. மேலும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் துவக்கிய 43 தொழிற்பேட்டைகளையும் சேர்த்து மொத்தம் 78 தொழிற்பேட்டைகளை தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் பராமரித்து வருகிறது.

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு அதிக வாய்ப்புகளை உருவாக்குவதற்காக மேலே கூறிய 78 தொழிற்பேட்டைகளுடன் மேலும் 22 தொழிற்பேட்டைகளை தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் அமைக்க திட்டமிடப்பட்டது. புதிதாக அமைக்க திட்டமிடப்பட்ட 22 தொழிற்பேட்டைகளில் 14 தொழிற்பேட்டைகளில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 8 தொழிற்பேட்டைகளை அமைப்பதற்குக் கையகப்படுத்துதல், நில மாற்றம் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

தொழில் வளர்ச்சிக்கு ஏதுவான இடங்களையும், மாவட்டங்களையும், ஆய்ந்தறிந்து, அங்கெல்லாம் புதிய

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 21

தொழிற்பேட்டைகள் அமைக்க தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இதன்மூலம் குறு மற்றும் சிறு தொழில் முனைவோர்களுக்கு ஒரு வழிகாட்டு நிறுவனமாக செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தினால் தற்போது இம்மாநிலத்தில் 92 தொழிற்பேட்டைகள் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்தொழிற்பேட்டைகள் சுமார் 6947.37 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 6658 மேம்படுத்தப்பட்ட மனைகளும், 4385 தொழிற்கூடங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. அனைத்து தொழிற்பேட்டைகளிலும் 1,01,906 ஆண் தொழிலாளர்களும், 1,22,275 பெண் தொழிலாளர்களும், ஆக மொத்தம் 2,24,181 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இங்கு செயல்படும் நிறுவனங்களின் ஆண்டு மொத்த உற்பத்தி ரூ.11,433 கோடி ஆகும். இதில் ஏற்றுமதி ஆகும் பொருட்களின் மதிப்பு சுமார் ரூ.3,112 கோடி ஆகும். இந்நிறுவனங்கள் மாநில அரசுக்கு ரூ.1,080 கோடியையும், மத்திய அரசிற்கு ரூ.660 கோடியையும் வருவாய் ஈட்டித் தருகிறது.

44. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முக்கிய செயல்பாடுகள்

(1) புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குதல்

(2) நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்

(3) மூலப்பொருட்களை விநியோகித்தல் மற்றும்

(4) சந்தைப்படுத்துதலில் உதவியளித்தல் ஆகியவையாகும்

44.1 புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குதல்

தண்ணீர் வசதி, சாலை வசதி, தெரு விளக்குகள், மழை நீர் வடிகால் வசதி மற்றும் தேவையான அடிப்படை வசதிகளுடன் புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குவது தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.

தொழில் நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப வெவ்வேறு அளவுகளில் தொழில் மனைகள் அமைக்கப்பட்டு முழு விலை செலுத்தும் திட்டத்திலோ அல்லது தவணை முறை திட்டத்திலோ தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் ஒதுக்கீடு செய்கிறது.

2010 ஏப்ரல் 21]

காலியாக உள்ள தொழில் மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தப்பட்டு, ஒதுக்கீடுகள் வெளிப்படையான முறையில் செய்யப்படுகிறது. தகுதியான விண்ணப்பதாரர்கள், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், தொழில் மற்றும் வணிகத் துறை மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியவற்றின் அலுவலர்களும், தமிழ்நாடு குறு மற்றும் சிறு தொழில் சங்கத்தின் (TANSTIA) பிரதிநிதியும் அடங்கிய தேர்வுக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

வெளிப்படையான ஒளிவு மறைவற்ற குலுக்கல் முறையில் தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தொழிற்பேட்டைகளை பொறுத்த அளவில் அனைத்து அளவிலான தொழில் மனைகளும் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரால் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணைகள் வழங்கப்படுகின்றன. அரசு தொழிற்பேட்டைகளை பொறுத்த அளவில் 5000 சதுர அடிகளுக்கு குறைவாக உள்ள தொழில் மனைகள் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

5000 சதுர அடிக்கு மேலுள்ள தொழில் மனைகள் அரசு ஆணை எண் 877, தொழில் துறை 1-7-1982-ன்படி ஒதுக்கீட்டு ஆணைக்காக அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டு, அரசின் அனுமதி பெற்று ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

44.2 தற்போதுள்ள தொழிற்பேட்டைகளை மேம்படுத்துதல்

மத்திய அரசு மற்றும் தமிழக அரசின் நிதி உதவி பெற்று தற்போதுள்ள தொழிற்பேட்டைகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் எடுத்து வருகிறது.

குறு, சிறு நிறுவனங்கள் - குழும வளர்ச்சித் திட்டம் (MSE-CDP), தொழிற்உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (IIUS), கூடுதல் மத்திய உதவித் திட்டம் (ACA) மற்றும் ஏற்றுமதிக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக மாநில அரசுக்கு உதவும் திட்டம் (ASIDE) ஆகிய திட்டங்களின்மூலம் நிதி உதவி பெறப்பட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 21

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மத்திய அரசின் உதவித் திட்டங்கள் தவிர, மாநில அரசும் நிதி உதவி செய்கிறது. தொழில் நிறுவனங்களும் மேம்பாட்டு பணிகளுக்கான அவர்களது நிதி பங்களிப்பை செலுத்தி வருகிறார்கள்.

44.2.1 குறு சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டம் (முந்தைய ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்)

தொழிற்பேட்டைகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் குழுமத் திட்டத்தினை (Micro and Small Enterprises - Cluster Development Programme) மைய அரசு நடைமுறைப்படுத்தி உள்ளது. இத்திட்டத்தின் மூலம் ரூ.10 கோடி வரை உட்கட்டமைப்பு வசதிகளையும், பொது சேவை வசதிகளையும் அமைத்துக் கொள்ள ஒவ்வொரு தொழிற்பேட்டைக்கும் உதவி வழங்கப்படுகிறது. இதில் 60 விழுக்காடு தொகையை மத்திய அரசு முற்றிலும் மானியமாக வழங்குகிறது. மீதமுள்ள 40 விழுக்காட்டுத் தொகையை மாநில அரசும், பயனாளிகளும் ஏற்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2009-2010 ஆம் ஆண்டில் முகுந்தராயபுரம் மற்றும் ஊட்டி தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று, மார்ச் 2010-க்குள் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன. குறிச்சி தொழிற்பேட்டையில் பயனாளிகளின் பங்களிப்புக்கேற்ப ரூ.87.39 இலட்சம் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மார்ச் 2010-க்குள் முடிக்கப்பட்டுவிட்டன.

44.2.2 உட்கட்டமைப்பு மேம்படுத்தும் பணிகளுக்காக கீழ்வரும் தொழிற்பேட்டைகளுக்கு முன்மொழிவுகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. இத்திட்டத்தின் புதிய வழிகாட்டுதல்களின்படி முன்மொழிவுகளை திருப்பி சமர்ப்பிக்குமாறு, மத்திய அரசு பணித்ததினால், புதிய முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட உள்ளன.

1. ஆலத்தூர் - காஞ்சிபுரம் மாவட்டம்
2. ஆத்தூர் (கரூர்) - கரூர் மாவட்டம்
3. கோவில்பட்டி - தூத்துக்குடி மாவட்டம்
4. காக்களூர் - திருவள்ளூர் மாவட்டம்

2010 ஏப்ரல் 21]

44.2.3 கூடுதல் மத்திய உதவித் திட்டம் (ACA)

2002-2003 ஆம் ஆண்டு மழை வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்களை சரிசெய்வதற்காக மாநில அரசுகளுக்கு உதவும் வகையில் இத்திட்டத்தை மத்திய அரசு அறிவித்தது.

கூடுதல் மத்திய உதவித் திட்டத்தின்கீழ் கப்பலூர் (பகுதி-1) தொழிற்பேட்டையில் பயனாளிகளின் பங்களிப்புக்கேற்ப ரூ.80.20 இலட்ச செலவில் மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்தும் முடிக்கப்பட்டுவிட்டன. மேலும், பயனாளிகளின் பங்களிப்புக்கேற்ப ரூ.39 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 2010 செப்டம்பருக்குள் முடிக்கப்படும்.

44.2.4 கிண்டி தொழிற்பேட்டை உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (GIEUC)

கிண்டி தொழிற்பேட்டை மேம்பாட்டுக்காக நிறுவப்பட்ட சிறப்பு நோக்கு நிறுவனமாகிய (SPV), கிண்டி தொழிற்பேட்டை உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் ரூ.2794.50 இலட்சங்கள் திட்ட மதிப்பில் மேம்பாட்டுப் பணிகளை செய்து வருகிறது. மேம்பாட்டுப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இப்பணிகள் ஜூன் 2010-க்கு முன்னர் முடிக்கப்படும். மத்திய அரசு ரூ.1712.00 இலட்சங்கள் நிதி உதவி செய்துள்ளது. தமிழக அரசு ரூ.200.00 இலட்சங்கள் நிதி உதவி அளித்துள்ளது. சென்னை மாநகராட்சி வசூலிக்கப்பட்ட சொத்துவரிகளின் பங்காக ரூ.120.00 இலட்சங்கள் வழங்கியுள்ளது. மேலும் சொத்து வரிகளின் பங்காக ரூ.200 இலட்சங்கள் வழங்கும்படி சென்னை மாநகராட்சியிடம் கோரப்பட்டுள்ளது. மீதியுள்ள நிதி பயனாளிகளிடமிருந்து அவர்களது பங்களிப்பாக பெறப்பட்டுள்ளது. இதனால் இங்கு இயங்கிவரும் 576 நிறுவனங்களும், இதில் பணியாற்றி வரும் 50000 தொழிலாளர்களும் பெரும் பயனடைந்துள்ளார்கள்.

44.2.5 தொழில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

அம்பத்தூர், திருமுடிவாக்கம் மற்றும் திருமழிசை தொழிற்பேட்டைகளில் தொழில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் உதவியுடன் ரூ.61.10 கோடி திட்ட செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேம்பாட்டுப் பணிகள் ஜூன் 2010-க்குள் முடிக்கப்படும். மேற்படி பணிக்காக சென்னை வாகன உதிரி பாகங்கள்

உட்கட்டமைப்பு மேம்படுத்தும் நிறுவனம் (CAAIIUC) என்ற சிறப்பு நோக்க நிறுவனம் உருவாக்கப்பட்டு இந்நிறுவனம் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

44.2.6 பகுதி II திட்டங்கள்

2008-2009 ஆம் நிதி ஆண்டில் தமிழக அரசு பகுதி-2 திட்டத்தின் கீழ் தமிழக அரசு வழங்கிய ரூ.20 இலட்சங்கள் மற்றும் சிட்கோ நிதி ரூ.100 இலட்சங்கள்மூலம் தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் காஞ்சிபுரம் தொழிற்பேட்டைகளில் மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

புதிய பொதுவான பொருட்காட்சி மையம் தமிழக அரசு வழங்கிய ரூ.5 இலட்சங்கள்மூலம் உருவாக்கப்படவுள்ளது.

தமிழக அரசின் 2009-2010 பகுதி-2 திட்டத்தின்கீழ் அம்பத்தூர், திருமுல்லைவாயல் மற்றும் கப்பலூர் தொழிற்பேட்டைகளில் கனரக மற்றும் இலகுரக வாகனங்களை நிறுத்தும் “பொது நிறுத்த வசதி” உருவாக்க ஒரு தொழிற்பேட்டைக்கு ரூ.5 இலட்சம் வீதம் ரூ.15 இலட்சம் மதிப்பில் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக தமிழக அரசு ரூ.5 இலட்சங்கள் தனது பங்காக வழங்கியுள்ளது.

அம்பத்தூர், திருமுடிவாக்கம்; மற்றும் திருமழிசை தொழிற்பேட்டைகளில் மூன்றாண்டுத் திட்டத்தில் ரூ.75 இலட்சம் திட்ட மதிப்பில் தானியங்கி குழுமத் திட்டத்தின்கீழ் சக்தி திறன் வளர்ச்சி, தொழில்நுட்பம் மற்றும் திறன் மேம்பாட்டினை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தமிழக அரசு தனது பங்காக ரூ.10 இலட்சங்களை முதல் ஆண்டில் வழங்கியுள்ளது. இதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கும் பொறுப்பு குஜராத் மாநிலம் காந்திநகரில் உள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ரூ.10.00 இலட்சம் மதிப்பில் பொதுக்கழிப்பிட வசதி அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது. தமிழக அரசு தனது பங்காக ரூ.5.00 இலட்சத்தை வழங்கியுள்ளது.

45. புதிய தொழிற்பேட்டைகள்

45.1 2008-2009 மற்றும் 2009-2010 ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட புதிய தொழிற்பேட்டைகளின் விவரம்:—

2010 ஏப்ரல் 21]

2008–2009 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட புதிய தொழிற்பேட்டைகள்

வ. எண்	தொழிற்பேட்டைகள்	மாவட்டம்	தொழில் மனைகளின் எண்ணிக்கை
1	கப்பலூர் (மகளிர் தொழிற்பேட்டை)	மதுரை	70
2	வாழவந்தான்கோட்டை (பகுதி –3)	திருச்சி	60
3	விண்ணமங்கலம்	வேலூர்	38
4	மயிலாடுதுறை	நாகப்பட்டினம்	64
5	கடகத்தூர்	தருமபுரி	25
6	வள்ளியூர் (பகுதி –2)	திருநெல்வேலி	66
7	கும்பக்குடி	திருச்சி	50
8	அரக்கோணம் (பகுதி –2)	வேலூர்	119
9	ஆசனூர்	விழுப்புரம்	145
10	எலம்பலூர்	பெரம்பலூர்	89
11	காக்களூர் (பகுதி –2)	திருவள்ளூர்	359

2009-2010 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட புதிய தொழிற்பேட்டைகள்

வ. எண்	தொழிற்பேட்டைகள்	மாவட்டம்	தொழில் மனைகளின் எண்ணிக்கை
1	பர்கூர் (நிலை – 2)	கிருஷ்ணகிரி	71
2	புதுக்கோட்டை(சிப்காட்) (நிலை – 2)	புதுக்கோட்டை	94
3	போலுப்பள்ளி	கிருஷ்ணகிரி	135

அரசு அறிவித்தபடி, கீழ்க்கண்ட புதிய தொழிற்பேட்டைகளைத் தொடங்குவதற்கு பணிகள் துவங்கப்பட்டு, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன:

1) கண்டியன்கோயில் - திருப்பூர் மாவட்டம்

2) நஞ்சைஊத்துக்குளி - ஈரோடு மாவட்டம்

3) போளூர் - திருவண்ணாமலை மாவட்டம்

4) சங்ககிரி - சேலம் மாவட்டம்

5) சேடப்பட்டி - மதுரை மாவட்டம்

6) தண்டரை - காஞ்சிபுரம் மாவட்டம்

7) வடமுகம் காங்கேயம்பாளையம் - ஈரோடு மாவட்டம்

8) வைப்பூர் - திருவாரூர் மாவட்டம்

9) வாழ்க்கை - திருவாரூர் மாவட்டம்

10) ஒட்டன்சத்திரம் - திண்டுக்கல் மாவட்டம்

11) வடமதுரை - திண்டுக்கல் மாவட்டம்

12) நெரூர் வடபாகம் - கரூர் மாவட்டம்

13) சடயம்பாளையம் - திருப்பூர் மாவட்டம்

14) செங்கரை - திருவள்ளூர் மாவட்டம்

15) விருதுநகர் (நகரம்) - விருதுநகர் மாவட்டம்

16) ஏ. சாத்தனூர் - விழுப்புரம் மாவட்டம்

45.2 தொழில் மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் விற்பனை

2009-2010 ஆம் ஆண்டில் 01-04-2009 முதல் 31-03-2010 வரை மொத்தம் 573 மனைகளும் மற்றும் 6 தொழிற் கூடங்களும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தினால் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2010-2011 ஆம் ஆண்டில் பல்வேறு தொழிற்பேட்டைகளில் 244 மனைகளை அமைத்து 150 தொழில் மனைகளை விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2008-2009 ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் ரூ.309.52 இலட்சங்களை இலாபமாக ஈட்டியுள்ளது. அரசுக்கு இலாபப் பங்குத் தொகையாக ரூ.87.00 இலட்சத்தை வழங்கியுள்ளது.

2009-2010 ஆம் நிதி ஆண்டின் இலாபம் ரூ.1103.05 இலட்சமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

46. அடுக்குமாடித் தொழிற்கூடங்கள்

அடுக்குமாடித் தொழிற்கூடங்களை கீழ்க்காணும் இடங்களில் அமைத்து குறுந்தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது:

2010 ஏப்ரல் 21]

1) கிண்டி - சென்னை மாவட்டம்

2) பெருங்குடி - காஞ்சிபுரம் மாவட்டம்

3) அம்பத்தூர் - திருவள்ளூர் மாவட்டம்

4) மாதவரம் - திருவள்ளூர் மாவட்டம் மற்றும்

5) திருமழிசை - திருவள்ளூர் மாவட்டம்

மேற்கூறிய 5 இடங்களில் முதல் கட்டமாக கிண்டி தொழிற்பேட்டையில் அடுக்குமாடி தொழில் வளாகம் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.28.00 கோடி நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது

கிண்டி தொழிற்பேட்டையில் 1.91 ஏக்கர் நிலம் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு மாற்றம் செய்வதற்கான அரசு ஆணை பெறப்பட்டுள்ளது. விரிவான வரைபடம் மற்றும் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, விரைவில் பணிகள் தொடங்கப்படும்.

47. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைமை அலுவலகம்

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் புதிய தலைமை அலுவலகம் கிண்டி திரு.வி.க தொழிற்பேட்டையில் அமைப்பதற்காக ரூபாய் 57.21 கோடிகளில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டடத்தில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், தொழில் மற்றும் வணிகத் துறை இயக்ககம் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் ஆகிய அலுவலகங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி பணிசார்ந்த ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அதன் ஒப்பந்ததாரர் முடிவு செய்யப்பட்டுள்ளார். இதன் கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

48. மூலப் பொருட்கள் விநியோகம்

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான மூலப்பொருட்களான இரும்பு மற்றும் எஃகு, மெழுகு மற்றும் பொட்டாசியம் குளோரேட் ஆகியவற்றை அம்பத்தூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சிவகாசி மற்றும் சாத்தூரில் உள்ள தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 6 மூலப் பொருள் கிடங்குகள்மூலமாகவும் மற்றும் அதன் 4 கிளை

[2010 ஏப்ரல் 21

அலுவலகங்களான தஞ்சாவூர், வேலூர், சேலம் மற்றும் ஈரோடு ஆகியவற்றின்மூலமாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

2009-2010 ஆம் நிதியாண்டில் மார்ச் 2010 வரை இநநிறுவனம் ரூபாய் 57.43 கோடி மதிப்புள்ள மூலப்பொருள்களை விற்பனை செய்துள்ளது. மேலும் மார்ச் 2010 வரை ரூபாய் 9.92 கோடி மதிப்புள்ள தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் காகிதம் மற்றும் நகல் காகிதத்தை இந்நிறுவனத்தின் 10 விற்பனை நிலையங்கள்மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்த விற்பனை நிலையங்கள் சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, கிருஷ்ணகிரி, மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி, திருச்சி, வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

49. விற்பனை உதவித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திடம் பதிவு செய்துள்ள குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் சார்பாக மாநில அரசுத் துறைகள்மூலம் கேட்கப்படும் ஒப்பந்தப் புள்ளிகளில் பங்கேற்று கொள்முதல் ஆணைகளைப் பெற்று குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்குப் பகிர்ந்து அளித்து விற்பனை செய்ய உதவுகிறது.

2008-2009 ஆம் நிதியாண்டில், ரூ.55 இலட்சங்களுக்கு கொள்முதல் ஆணைகள் பெறப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. 2009-2010 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் ரூ.86.92 இலட்சங்களுக்கு கொள்முதல் ஆணைகளைப் பெற்று நிறைவேற்றி உள்ளது.

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி)

50. உருவாக்கம்

• மாநிலத்தில் தொழில் நடவடிக்கைகள் குறைவாக இருந்த போது திட்ட காலங்களில், தொழில் மற்றும் வணிகத் துறையினால் மாநிலம் முழுவதும் நிறுவப்பட்ட 64 சிறுதொழில் கூடங்களைத் தொகுத்து 1965 ஆம் ஆண்டு, தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) உருவாக்கப்பட்டது. டான்சி நிறுவனம், தொழிற் சார்ந்த இரும்பு மற்றும் மர அறைகலன்கள், உயர்கட்டுமானப் பொருட்கள்,

2010 ஏப்ரல் 21]

துத்தநாக முலாம் பூசுதல், இலகு பொறியியல் தயாரிக்கும் நிறுவனங்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்தது. இதற்கு பின்புதான் பெரும்பாலான நடவடிக்கைகளில் தனியாரின் முயற்சி ஆரம்பமானது.

தனியார் தொழில் முனைவோர் அங்கங்கு பல நிறுவனங்களை ஆரம்பித்துவிட்டபடியால் டான்சி தன்னுடைய நடவடிக்கைகளை குறைத்துக்கொண்டது. தற்பொழுது 22 உற்பத்திக் கூடங்கள் மற்றும் 14 திட்டக் குழுமங்கள் இயங்கி வருகின்றன. சென்னையில் ஒரு காட்சியகம் உள்ளது.

டான்சி, 5 திட்டக் குழுமங்களை, மூடிய தொழிற்கூடங்கள் இருந்த ஈரோடு, நாமக்கல், பொள்ளாச்சி, திருப்பூர் மற்றும் தூத்துக்குடியிலும் இரண்டு காட்சியகங்களை மதுரை மற்றும் திருச்சியிலும் துவக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

51. நடவடிக்கைகள்

துத்தநாக முலாம் பூசப்பட்ட மின்கடத்தி மற்றும் நுண் அலை கோபுரங்கள், பல வகையான உயர் கட்டுமானங்கள், துத்தநாக முலாம் பூசுதல், ஆழ்குழாய் கைப்பம்புகள், தரமிக்க மரம் மற்றும் எஃகினாலான அறைகலன்கள் உற்பத்தி செய்வதில் டான்சி தன் முத்திரையை பதித்து தனித்தன்மை பெற்றுள்ளது. டான்சி நிறுவனம், சர்வசிக்சா அபியான், கரும்பலகை செயல் திட்டம், வறட்சிக் காலத்தில் குடிநீர் பம்புகள் அமைத்தல் மற்றும் குழாய் உதிரி பாகங்கள் ஆகியவற்றை மாநிலம் முழுவதும் தொடர் முறையில் வழங்கி வருகிறது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம், பாரத மிகு மின் நிலையம் தமிழ்நாடு மின்வாரியத்தின் "ராஜீவ் காந்தி கிராமிய மின் வழங்கல் திட்டம்" மற்றும் இந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் நிறுவனம் ஆகியவற்றிற்கு மிகவும் நுட்பமான உதிரி பாகங்களை வழங்குகிறது.

டான்சியின் இரு ஆழ் குழாய் கைப்பம்புகள் நிறுவனங்கள், வேலூர், பழனி, இராஜபாளையத்திலுள்ள அறைகலன்கள் மற்றும் டான்சி துணை நிறுவனமான தமிழ்நாடு வர்ணம் மற்றும் உபபொருட்கள் லிமிடெட் (டாப்பாப்) தயாரிப்பு நிறுவனங்கள் ISO 9001-2000 தரச் சான்றிதழ் பெற்றுள்ளது.

[2010 ஏப்ரல் 21

52. செயல்பாடுகள்

2008-2009, 2009-2010 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் செயல்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(ரூ. இலட்சத்தில்)

விவரம்	2008-2009 செயல்பாடு	2009-2010	
		இலக்கு	செயல்பாடு
உற்பத்தி (வழக்கமான பணி) (சிறப்பு பணி)	 12831.00 —	 15990.00 14010.00	 16650.10 11656.90
மொத்தம்	12831.00	30000.00	28307.00
விற்பனை	12355.00	30000.00	27702.00
செயல்முறை இலாபம்	2277.65	3500.00	3767.70
விற்பனை வரி தள்ளுபடி	4811.00	—	—
கழிக்க: நியமனக் கட்டணம்	1851.33	2475.00	2475.00
இலாபம்	5237.32	1025.00	1292.70

53. சாதனைகள்

பல்வேறு அரசுத் துறைகள், வாரியங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்குத் தேவையான, குறிப்பாக மக்களுக்கு குடிநீர் வழங்கல், பள்ளிக் கூடங்களுக்குத் தேவையான அறைகலன்கள் மற்றும் கல்வி போதனை உபகரணங்கள் வழங்குதல், மின்சார வினியோகத்திற்குத் தேவையான துத்தநாக முலாம் பூசப்பட்ட கோபுரத் தளவாடங்கள், மின்கடத்திப் பொருட்கள் செய்து வழங்குதல் மற்றும் அவ்வப்போது தேவைப்படும் சேவைகளின்மூலம் அரசின் சமூகப் பணிகளில் தொடர்ந்து டான்சி பங்கு கொண்டு வருகிறது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 21]

'அனைவருக்கும் கல்வி' என்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். எனவே, நபார்டு உதவித் திட்டத்தின்கீழ் ரூ.69 கோடிக்கு தமிழ்நாடு முழுவதுமுள்ள பள்ளிகளுக்கு டெஸ்க்குகள், பெஞ்சுகள், நாற்காலிகள் மற்றும் மேஜைகள் வழங்கும் மிகப் பெரிய ஆணை டான்சிக்கு 2008-2009 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. அந்த ஆணை, மிகச் சிறப்பான முறையில் குறித்த காலத்தில் முடிக்கப்பெற்றது. அதன் காரணமாக, 2009-2010 ஆம் ஆண்டில் 'அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ்' ரூ.49 கோடியளவுக்கு மற்றொரு ஆணை டான்சிக்கு கிடைக்கப்பெற்றது. அது முடிவுறும் நிலையில் உள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியம் "ராஜீவ் காந்தி கிராமிய மின் வழங்கல்" திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிலுள்ள 26 மாவட்டங்களில், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களுக்கு, மின் இணைப்பு வழங்கிட, ஒட்டுமொத்த ஒப்பந்த முறையில், ரூ.250 கோடி மதிப்புள்ள பணியினை 31-03-2010-க்குள் முடித்திடும் வகையில் பணி ஆணையினை, டான்சி நிறுவனத்திடம், வழங்கியுள்ளது.

புதிதாக அமையவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற வளாகத்திற்கு ரூ.10 கோடியளவு அறைக்கலன்கள் வழங்கிடும் பணி ஆணை டான்சிக்கு வழங்கப்பட்டு அது முடிவுறும் தருவாயில் உள்ளது.

டான்சி, 2008-2009 ஆம் ஆண்டில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டதால், ரூ52.37 கோடி இலாபமடைந்து, அரசுக்கு நியமனக் கட்டணமாக ரூ.18.51 கோடி வழங்கியுள்ளது.

2009-2010 ஆம் ஆண்டில் டான்சி ரூ.37.68 கோடி (தோராயமாக) இலாபமடையும் என்று எதிர்பார்க்கப்பட்டு இந்த ஆண்டும் அரசுக்கு டான்சி ரூ.24.75 கோடியை நியமனக் கட்டணமாக வழங்க உள்ளது.

டான்சியின் துணை நிறுவனமான தமிழ்நாடு வர்ணம் மற்றும் உபபொருட்கள் நிறுவனம் (டாப்பாப்) பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் அரசு சார்பு துறைகளுக்குத் தேவைப்படும் சிவப்பு ஆக்ஸைடு வர்ணம், சாலைகளில் போக்குவரத்துக் குறியிடும் இரப்பர் கலந்த வர்ணம் மற்றும் இதர வர்ணங்களை உற்பத்தி செய்து வழங்கி வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 21

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

கோரிக்கை எண் 44

(ரூபாய் ஆயிரங்களில்)

கணக்குத் தலைப்பு	2009-2010 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு	2009-2010 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு	2010-2011 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு
2851 கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும்	893036	692193	886471
2852 தொழில்கள்	61595	53855	70930
3451 தலைமைச் செயலகம் பொருளாதாரப் பணிகள்	23659	18181	23903
4425 கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு	2	1517	1302
4551 மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு	1	1	1
4851 கிராமத் தொழில்கள் சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு	3	7266	3
6851 கிராமத் தொழில்கள் சிறுதொழில்களுக்கான கடன்கள்	1	0	0
மொத்தம்	**978297**	**773013**	**982610**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 21

இணைப்பு II

(132ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 41-வருவாய்த் துறை மானியக் கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011

அத்தியாயம்-I

முன்னுரை

சங்க காலம் தொட்டே அரசுகளுக்கு நிலவரியே முக்கிய வருவாய் ஆதாரமாக இருந்து வந்துள்ளது. நிலத்தினுடைய தன்மை மற்றும் பயிர் விளைச்சலின் அடிப்படையில் நிலவரி முறையாக நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளது. சில சமயம் அரசரால் கடுமையான வரி விதிக்கப்பட்டபோது சான்றோர் பெருமக்களும், புலவர்களும் அரசருக்கு தவறைச் சுட்டிக்காட்டி, இடித்துரைத்து அறிவுரை வழங்கி அரசை நெறிப்படுத்தியுள்ளனர்.

"காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறைவு இல்லதும் பன்னாட்கு ஆகும்
நூறுசெறு ஆயினும் தமித்துப் புக்குணினே
வாய்புகுவ தனினும் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே
கோடியாத்து நாடு பெரிது நந்தும் "

என்ற புறநானூற்றுப் பாடல் வாயிலாகப் பாண்டிய மன்னன் அறிவுடை நம்பிக்கு புலவர் பிசிராந்தையார் நிலவரி விதிப்பு முறை எவ்வாறு இருக்கவேண்டுமென அறிவுறுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

"ஒரு மா அளவிற்கும் குறைவான நிலமாகவே இருந்தாலும், விளைந்த நெல்லை முறையாக அறுத்துக் கவளமாக ஆக்கி யானைக்குக் கொடுத்தால் அது பல நாட்களுக்கு உணவாகும். நூறு தளையுடைய வயல்களாக இருந்தாலும், யானை புகுந்து

[2010 ஏப்ரல் 21

தனித்து உண்ண நேர்ந்தால் அதன் வாயில் புகுவதைவிடக் காலால் மிதிபட்டு அழியும் நெல் அதிகம் ஆகும். அது போல, அறிவுடைய வேந்தன், அறநெறியறிந்து குடிமக்களிடமிருந்து வரிகளைப் பெறுவானாயின், கோடிக்கணக்காக செல்வம் குவிந்து நாடு பெரிதும் ஆக்கம் பெறும்."

ஆனால், ஆங்கிலேயர்கள் நம் நாட்டை அடிமைப்படுத்தி ஆண்ட காலத்தில், நியாயமான நிலவரி விதிப்பு எனும் நிலையை மாற்றி, வருவாயைப் பெருக்கும் நோக்கினை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு, நில விளைச்சலில் பாதி அளவு வரை குடியானவர்களிடமிருந்து வசூலிக்கலாம் என்ற கொள்கையை (Half-net-principle) பின்பற்றி அதன் அடிப்படையில் நிலவரியை வசூலித்தனர்.

இதனால் ரயத்துகள் எனும் குடியானவர்கள் பெரும்பாதிப்புக்கு உள்ளானார்கள். இந்த நிலையில், ஜமீன்தாரர்கள் மற்றும் பாளையக்காரர்கள் ஆகியோர்மூலமாக நிலவரி வசூலிக்கப்பட்டு வந்த நிலையை மாற்றி குடியானவர்களிடமிருந்து நேரடியாக அரசே நிலவரியை வசூலிக்கும் ரயத்துவாரி முறை (Ryotwari Settlement) அறிமுகப்படுத்தப்பட்ட பின்பு நிலைமை ஓரளவு சீரடைந்தது என்றாலும், ஆங்கிலேயர் ஆட்சியில் குடியானவர்களின் நிலவரிச் சுமை குறைந்தபாடில்லை.

நாடு விடுதலை அடைந்தபின் மக்களாட்சி ஏற்பட்டதன் விளைவாக தொடர்ந்து பல்வேறு நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டு மக்கள் நலம் சார்ந்த பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இந்நிலையில், நிலவரி என்பதை அரசின் வருவாய் ஆதாரமாகக் கருதாமல், நிலங்களின்மீது பட்டாதாரர்கள் மற்றும் பயனாளர்களுக்கு உள்ள உரிமையை உணர்த்தும் மற்றொரு ஆதாரமாகவே கருதும் நிலை ஏற்பட்டது.

நிலச்சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதிலும், பல்வேறு மக்கள் நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் நாட்டிலேயே முன்னோடியாக இருந்துவரும் தமிழக அரசு, விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு கடந்த ஆண்டு நிலவரி விதிப்பில் பெரும் சீர்திருத்தம் செய்து, ஏற்கெனவே வசூலிக்கப்பட்டு வந்த, புன்செய் நிலத்திற்கு ஏக்கர் ஒன்றுக்கான சராசரி நில வரியை

2010 ஏப்ரல் 21]

ரூபாய் 15/-லிருந்து ரூபாய் 2/- ஆகவும், நன்செய் நிலத்திற்கு ஏக்கர் ஒன்றுக்கான சராசரி நிலவரியை ரூபாய் 50/-லிருந்து ரூபாய் 5/- ஆகவும் குறைத்து, அதன்படி நடப்பு பசலி (1419) ஆண்டிலிருந்து பெயரளவு நிலவரி வசூலிக்கப்பட்டு வருகிறது. இதனால் விவசாயிகள் அனைவரும் ,பெருமகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இவ்வாறு, காலப்போக்கில் வருவாய்த் துறை அரசுக்கு வருவாய் ஈட்டும் துறையாகக் கருதப்படாமல், நில நிருவாகம், நிலச்சீர்திருத்தம் ஆகிய பணிகளை உள்ளடக்கிய பல்வேறு முக்கியமான மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்துகின்ற துறையாகவும், மாவட்ட அளவில் சட்டம் ஒழுங்கினை நிருவகிக்கின்ற "பொது நிருவாகத் துறையாக"வும் செயல்பட்டு வருகிறது.

மேலும் புயல், பெருமழை, வெள்ளம், பூகம்பம், வறட்சி, நிலச்சரிவு மற்றும் ஆழிப்பேரலை போன்ற இயற்கைப் பேரிடர் நேரும்போதெல்லாம் குடிமக்களின் இடுக்கண் களைவதில் வருவாய்த் துறை 'உற்ற நண்பனாக' சிறப்பாகச் செயலாற்றி வருகிறது.

மாநில அளவில் வருவாய்த் துறையின் பணிகள், வருவாய் நிருவாக ஆணையர், நில நிருவாக ஆணையர், நிலச்சீர்திருத்த ஆணையர் மற்றும் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர் ஆகியோரால் மேற்பார்வை செய்யப்படுகிறது. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்ட அலுவலர், வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிருவாக அலுவலர் மற்றும் பல்வேறு பணியாளர்கள்மூலமாக வருவாய்த் துறையின் பணிகள் செம்மையாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் நவீன மேலாண்மை உத்திகளைக் கையாளுதல், புல வரைபடங்களை கணினி மயமாக்குதல், நில உரிமை சார்ந்த விவரங்களை கணினி வலைத்தளம்மூலம் பயனாளிகளுக்கு எளிதில் கிடைக்கச் செய்தல் ஆகியவற்றுடன் தொடுதிரைக் கணினி மற்றும் பொது சேவை மையங்கள்மூலம் பொது மக்களின் தேவைகளை விரைந்து நிறைவேற்றி, வருவாய்த் துறை தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

[2010 ஏப்ரல் 21

அத்தியாயம்-II

வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் தணிப்புத் துறை

2.1 வருவாய் நிருவாகம்

வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் தணிப்புத் துறை மாநிலத்தில் பல்வேறு முக்கிய பணிகளைச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, நிலவரி வசூலித்தல், பேரிடர் மேலாண்மை, இயற்கை இடர்பாடுகள் மற்றும் பிற இடர்பாடுகள் தணிப்பு, சான்றிதழ்கள் வழங்குதல், சமூகப் பாதுகாப்பு சார்ந்த ஓய்வூதியம் மற்றும் பல நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகிய பணிகளை, திறம்பட அமைக்கப்பட்ட மாவட்டம், கோட்டம், வட்டம் மற்றும் கிராம அளவிலான நிருவாக அலுவலகங்கள் மூலம் இத் துறை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களை செயல்படுத்தும் வருவாய்த் துறை அலுவலர்கள், பொதுமக்களின் குறைகளைத் தீர்வு செய்வதிலும் அவர்களின் துயரைத் துடைப்பதிலும் முக்கிய பங்கு வகித்து வருகின்றனர்.

2.2 ஆட்சி எல்லைகளை சீரமைத்தல்

வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்டவாறு 2009-2010 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் இரண்டு புதிய வருவாய்க் கோட்டங்கள், ஒன்பது புதிய வட்டங்கள், ஆறு புதிய குறுவட்டங்கள் கடந்த ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன:—

புதிய வருவாய் கோட்டங்கள்	அமைந்துள்ள மாவட்டம்
1. உடுமலைப்பேட்டை	திருப்பூர்
2. தாம்பரம்	காஞ்சிபுரம்
புதிய வருவாய் வட்டங்கள்	
1. திருவெறும்பூர்	திருச்சிராப்பள்ளி
2. குத்தாலம்	நாகப்பட்டினம்
3. குறிஞ்சிப்பாடி	கடலூர்
4. கடவூர்	கரூர்
5. மாதவரம்	திருவள்ளூர்
6. மடத்துக்குளம்	திருப்பூர்

2010 ஏப்ரல் 21]

7. ஆலந்தூர்	காஞ்சிபுரம்
8. சோழிங்கநல்லூர்	காஞ்சிபுரம்
9. ஆம்பூர்	வேலூர்
புதிய வருவாய் குறுவட்டங்கள்	
1. சிட்லப்பாக்கம்	காஞ்சிபுரம்
2. மாடம்பாக்கம்	காஞ்சிபுரம்
3. பம்மல்	காஞ்சிபுரம்
4. பல்லாவரம்	காஞ்சிபுரம்
5. சோழிங்கநல்லூர்	காஞ்சிபுரம்
6. மேடவாக்கம்	காஞ்சிபுரம்

மேலும், திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டத்திலுள்ள ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தருமத்துப்பட்டி, பலகனூத்து மற்றும் ரெட்டியார்சத்திரம் குறுவட்டங்கள் திண்டுக்கல் வட்டத்துடன் இணைக்கப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் (தெற்கு) வட்டத்திலுள்ள இக்கரைபோளுவாம்பட்டி வடக்கு மற்றும் இக்கரைபோளுவாம்பட்டி தெற்கு ஆகிய கிராமங்களின் எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டு இக்கரைபோளுவாம்பட்டி (வடக்கு) மற்றும் செம்மேடு கிராமங்கள் எனவும் சீரமைக்கப்பட்டுள்ளன.

மாநிலத்தில் தற்போது 32 மாவட்டங்கள், 76 வருவாய் கோட்டங்கள், 220 வட்டங்கள், 1127 வருவாய் குறுவட்டங்கள் மற்றும் 16564 வருவாய் கிராமங்கள் உள்ளன.

2.3 வருவாய்த் துறையில் காலிப் பணியிடங்களை நிரப்புதல்

2001 முதல் 2005 ஆம் ஆண்டு வரை நேரடி நியமனம்மூலம் தேர்வு செய்ய அரசு தடையாணை விதித்திருந்ததால், வருவாய்த் துறையில் அமைச்சுப் பணியில் உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்து தட்டச்சர்கள் போன்ற பதவிகளும் மற்றும் இதர பணிகளான ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர்கள், காவலர்கள் மற்றும் தொலைபேசி இயக்குபவர்கள் போன்ற பணிகளில் காலியாக இருந்த பணியிடங்களை நிரப்ப இயலாத நிலை இருந்தது. மேற்படி

[2010 ஏப்ரல் 21

தடையாணை 2006-ல் விலக்கிக்கொள்ளப்பட்ட பிறகு இந்தத் துறையில் 8165 பணியிடங்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மற்றும் இதர வழிகள்மூலம் நிரப்புவதற்கு அரசாணை வெளியிடப்பட்டு, அதில் 4971 பணி இடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு துரித நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

2.4 கிராம நிருவாகம்

(i) கிராம நிருவாக அலுவலர்கள் நியமனம்

மாவட்ட வருவாய் நிருவாகத்திற்கு முதன்மை ஆதாரமாக கிராம நிர்வாகம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. 'பகுதிநேர கிராம அலுவலர்கள்' என்ற முறை 14-11-1980 முதல் நீக்கப்பட்டு, மாநிலத்தில் உள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் முழுநேர கிராம நிருவாக அலுவலர்கள் பணி நியமனம் செய்யப்பட்டனர். இப்பதவிகள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டன. மாநிலத்தில் தற்போது ஒப்பளிக்கப்பட்ட கிராம நிருவாக அலுவலர் பதவிகள் 12506 ஆகும்.

சமீபத்தில், 2007 முதல் 2010 வரையில் ஏற்பட்ட காலியிடப் பணியிடங்களில் 1576 கிராம நிருவாக அலுவலர்களை நேரடி நியமனம்மூலம் நியமனம் செய்திட, அரசாணை நிலை எண் 123, வருவாய்த் துறை, நாள் 11-03-2010 இல் ஆணையிடப்பட்டுள்ளது. இது தவிர கருணை அடிப்படை நியமனம்மூலம் 525 கிராம நிருவாக அலுவலர்களை நியமிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

(ii) கிராம உதவியாளர்கள்

ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் குறைந்தது ஒரு கிராம உதவியாளராவது இருக்க வேண்டும் என்ற கொள்கையை அரசு கடைபிடித்து வருகிறது. அதற்கேற்றவாறு தற்போதுள்ள காலிப்பணியிடங்களில் 2174 கிராம உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட அரசாணை (நிலை) எண் 155, வருவாய்த் துறை, நாள் 26-03-2010 இல் ஆணையிடப்பட்டுள்ளது. இவற்றுள் 25 விழுக்காடு கருணை அடிப்படை நியமனம்மூலம் நிரப்பப்படும்.

2.5 அலுவலகக் கட்டடங்கள்

புதிய மாவட்டங்கள் உருவானதன் விளைவாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பிற அலுவலகங்கள், குடியிருப்புகள்,

2010 ஏப்ரல் 21]

அனைத்தும் ஒருங்கிணைந்து அமையும் விதத்தில் மாவட்ட பெருந்திட்ட வளாகங்கள் மாவட்ட தலைமையிடத்தில் உருவாக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் தேவையான புதிய கட்டடங்கள், கூடுதல் அலுவலகக் கட்டடங்கள், குடியிருப்புக் கட்டடங்கள் ஆகியவற்றைக் கட்டவும், உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், வருவாய்த் துறைக் கட்டடங்களைப் பராமரித்து பழுது பார்க்கவும் தேவைப்படும் நிதி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

(i) மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள்

மாநிலத்திலுள்ள 32 மாவட்டங்களில், 30 மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. சேலத்தில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் இதர அரசு அலுவலகங்களுக்கான கட்டடம் கட்ட ரூ.25 கோடி நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2010 செப்டம்பர் மாதத்தில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரியலூர் மாவட்டத்திற்கான புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக் கட்டடம் கட்ட ரூ.12.88 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கட்டடம் கட்ட ரூ. 12.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டு கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி 2011 ஏப்ரல் மாதத்தில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திருப்பூர் ஒருங்கிணைந்த விற்பனைக் கூட வளாகத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது. திருப்பூர் மாவட்ட பெருந்திட்ட வளாகம் அமைக்கத் தேவையான இடம் விரைவில் தேர்வு செய்யப்படும்.

(ii) வருவாய் கோட்ட அலுவலகக் கட்டடங்கள்

மாநிலத்தில் உள்ள 76 வருவாய் கோட்ட அலுவலகங்களில் 73 வருவாய் கோட்ட அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட அரூர் வருவாய் கோட்ட அலுவலகம் கட்ட ரூ.85.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இப்பணி 2010 ஜுன் மாதத்தில் நிறைவடையும். புதிதாக தோற்றுவிக்கப்பட்ட தாம்பரம் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய 2 வருவாய் கோட்டங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்கான இடம் விரைவில் தேர்வு செய்யப்படும்.

[2010 ஏப்ரல் 21

(iii) வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்

மாநிலத்தில் உள்ள 220 வட்டாட்சியர் அலுவலகங்களில், 204 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 16 வட்டாட்சியர் அலுவலகங்களில், குந்தா (நீலகிரி மாவட்டம்), காரியாப்பட்டி (விருதுநகர் மாவட்டம்), வாழப்பாடி (சேலம் மாவட்டம்) மற்றும் பரமக்குடி (இராமநாதபுரம் மாவட்டம்) ஆகிய நான்கு வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டும் பணி நடந்தேறி வருகிறது. மீதமுள்ள புதிதாக தோற்றுவிக்கப்பட்ட 12 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்ட தகுந்த இடத்தினைத் தேர்வு செய்து முன்மொழிவுகளை அனுப்புமாறு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(iv) வருவாய் ஆய்வாளர்களுக்கான அலுவலகத்துடன் கூடியக் குடியிருப்புக் கட்டடங்கள்

மாநிலத்தில் உள்ள 1127 வருவாய் ஆய்வாளர்களில் 1099 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 28 வருவாய் ஆய்வாளர்களுக்கான கட்டடங்கள் கட்டுவதற்குத் தகுந்த இடத்தினை தேர்வு செய்து முன்மொழிவுகளை அனுப்புமாறு மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(v) கிராம நிருவாக அலுவலர்களுக்கான கட்டடங்கள்

மாநிலத்தில் உள்ள 12,506 கிராம நிருவாக அலுவலர்களில் 12,074 கிராம நிருவாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடங்களும் 226 கிராம நிருவாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகளும் கட்டப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 206 கிராம நிருவாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்கள் படிப்படியாகக் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2.6 சான்றிதழ்கள் வழங்குதல்

பொதுமக்களுக்கு பல்வேறு பயன்களுக்குத் தேவையான பின்வரும் சான்றிதழ்கள் வருவாய்த் துறைமூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

(i) வகுப்புச்சான்று

(ii) பிறப்பிட/இருப்பிடச்சான்று

(iii) வருமானச்சான்று

(iv) நாட்டினச்சான்று

2010 ஏப்ரல் 21]

(v) வாரிசுச்சான்று
(vi) சொத்து மதிப்புச்சான்று
(vii) பிறப்பு / இறப்புச்சான்று
(viii) ஆதரவற்ற விதவைச்சான்று
(ix) கலப்புத் திருமணச்சான்று
(x) பள்ளிச்சான்று தொலைந்ததற்காக வழங்கப்படும் சான்று
(xi) கணவனால் கைவிடப்பட்டவர் என்பதற்கான சான்று
(xii) வேலை வாய்ப்பற்றோர் உதவித்தொகைப் பெற ஒருங்கிணைந்த சான்று
(xiii) பட்டாதாரியில்லாத குடும்பச்சான்று
(xiv) வறுமையிலுள்ள குடும்பச்சான்று

2.7 சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

மாநிலத்தில் வயது முதிர்ந்தோர் மற்றும் ஆதரவற்றோருக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு அரசு, பயனாளிகளுக்கு மாதம் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.400/- வீதம் கீழ்க்காணும் ஓய்வூதியத் திட்டங்கள்மூலம் வழங்கி வருகிறது:-

வரிசை எண்	திட்டத்தின் பெயர்	பயனாளிகளின் எண்ணிக்கை (31-3-2010 வரை)
மைய அரசின் உதவித் திட்டம்		
1	இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசிய திட்டம் (19-11-2007 முதல்)	9,19,069
மாநில அரசின் திட்டங்கள்		
1	ஆதரவற்ற மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் (1-11-1974 முதல்)	1,08,335
2	ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் (1-6-1975 முதல்)	6,30,128
3	ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம் (15-3-1981 முதல்)	1,89,348
4	கணவனால் கைவிடப்பட்ட / ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம் (25-4-1986 முதல்)	1,03,010
5	50 வயதினை எட்டியும் திருமணம் ஆகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் (1-7-2008 முதல்)	11,860
	மொத்தம்	19,61,750

[2010 ஏப்ரல் 21

இத்திட்டங்களை வட்ட அளவில் தனி வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்) ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகிறார். பயனாளிகளுக்கு மாதாந்திர ஓய்வூதியத் தொகை பணவிடைமூலம் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், இந்திரா காந்தி விதவையர் ஓய்வூதிய தேசிய திட்டம் மற்றும் இந்திரா காந்தி மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதிய தேசிய திட்டம் ஆகிய இரு புதிய ஓய்வூதியத் திட்டங்களை 19-02-2009 முதல் மைய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தை செம்மையாக நிறைவேற்ற சமூக நலத் துறைமூலமாக மாவட்ட ஆட்சியர்களுக்கு உரிய நெறிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஆண்டுக்கு இருமுறை, அதாவது பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகையின் போது இத்திட்டப் பயனாளிகளுக்கு வேட்டி சேலைகள் வழங்கப்படுகின்றன. இவ்வாண்டு பொங்கல் பண்டிகையின்போது 14,52,413 சேலைகள் மற்றும் 4,66,556 வேட்டிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மேலும், பயனாளிகள் அனைவருக்கும் கீழ்க்குறிப்பிடப்பட்ட அளவுகளின்படி இலவச அரிசி வழங்கப்படுகிறது.

(i) சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் ஒருமுறை தலா 4 கிலோ சன்னரக அரிசி.

(ii) சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் ஒருமுறை தலா 2 கிலோ சன்னரக அரிசி.

(i) விபத்து நிவாரணத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் கிராம கைவினைஞர்கள் உட்பட 44 வகை தொழிலாளர்கள், தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது விபத்துமூலம் இறப்பின், ரூ.15,000/- அரசாணை நிலை எண் 471, நிதித்துறை, நாள்: 23-5-1989-ன்படி, நிவாரணத் தொகையாக் வழங்கப்படுகிறது. மேலும், காயம் ஏற்படினும் மற்றும் அவயங்களை இழப்பினும் அதன் தன்மைக்கேற்ப ரூ.7,500/-லிருந்து ரூ.15,000/- வரை இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டமும் தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு, வழங்கப்படும் தொகையான ரூ.15,000/-த்தில் மைய அரசின் பங்கு ரூ.10,000/-மும், மாநில அரசின் பங்கு ரூ.5,000/-மும் ஆகும்.

2010 ஏப்ரல் 21]

2009-2010 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் 443 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

(ii) நலிந்தோர் நிவாரணத் திட்டம்

அரசாணை நிலை எண் 470, நிதித் துறை நாள்:23-5-1989-ன்படி வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களில் பிரதான வருவாய் ஈட்டும் நபர் இயற்கையில் இறப்பின், அக்குடும்பத்திற்கு, மத்திய அரசால் ரூ.10,000/- நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டம் தேசிய சமூக உதவித் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு மைய அரசால் வழங்கப்படும் கூடுதல் மைய நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2009-2010 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் 13.925 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

2.8 இலவச சேலைகள் / வேட்டிகள் வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் பண்டிகையின் (தமிழ்ப் புத்தாண்டு) போது வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை எளிய மக்களுக்கு இலவச சேலைகள்/வேட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாண்டு பொங்கல் பண்டிகையின்போது பயனாளிகளுக்கு 160.00 இலட்சம் சேலைகள், 159.51 லட்சம் வேட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. சென்ற சில ஆண்டுகளில் வழங்கப்பட்ட இலவச வேட்டி, சேலைகள் விவரம் பின்வருமாறு:—

ஆண்டு	எண்ணிக்கை விவரம் (இலட்சங்களில்)	
	சேலைகள்	வேட்டிகள்
2006	100.60	84.56
2007	155.41	155.27
2008	160.23	159.64
2009	159.44	158.80
2010	160.00	159.51

[2010 ஏப்ரல் 21

2.9 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல்

மகளிரிடையே பொது அறிவை வளர்த்திடவும் மற்றும் அவர்களது பொழுதுபோக்கிற்காகவும், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் 2006 ஆம் ஆண்டு அரசால் அறிமுகம் செய்யப்பட்டது.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் செம்மையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக, ஐந்து கட்டங்களில் ஒரு கோடியே 52 இலட்சத்து 80 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்ய அரசால் ஆணையிடப்பட்டு, இதுவரை ஒரு கோடியே 12 இலட்சத்து 37 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பயனாளிகளின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய 40 இலட்சத்து 43 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இவ்வாண்டு இறுதிக்குள் வழங்கப்படும்.

2.10 பொதுமக்கள் குறைதீர்வு

(i) மக்கள் குறைதீர்வு முகாம்கள்

1969 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இத்திட்டத்தின் குறிக்கோள் பொதுமக்களின் குறைகளுக்கு விரைவாக தீர்வு காண்பதே ஆகும். இத்திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் ஆகியோர் ஒவ்வொரு மாதமும் பல்வேறு துறை அலுவலர்களுடன் தங்களது ஆளுகைக்குட்பட்ட ஒரு கிராமத்திற்குச் சென்று மனுக்களைப் பெற்று, அந்தந்த கிராம மக்களின் குறைகளை அந்தந்த இடத்திலேயே தீர்வு செய்கின்றனர். இத்திட்டத்தின்கீழ் கிராமங்கள் சுழற்சி முறையில் தேர்வு செய்யப்பட்டு, உரிய முன்னறிவிப்பு செய்யப்பட்டு பிரதி மாதம் இரண்டாவது புதன்கிழமையன்று மக்கள் குறைதீர்வு முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

(ii) பொது மக்கள் குறை தீர்க்கும் நாள்

ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் 1986 ஆம் ஆண்டு முதல் மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களாலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியர்கள் பொது மக்களிடமிருந்து மனுக்களைப்

2010 ஏப்ரல் 21]

பெற்று அவர்களது குறைகளை வருவாய் அலுவலர் மற்றும் பிற துறை அலுவலர்கள் முன்னிலையில் கேட்டறிந்து அவற்றை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கின்றனர். இத்திட்டத்தின் கீழ் குறை தீர்க்கும் நாளான திங்கட்கிழமை பெறப்பட்ட அனைத்து மனுக்களும் துரித நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகளுடன் உடனடியாக அனுப்பப்படுகின்றன. மனுதாரர்களுக்கு அவர்களது மனுக்களைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகையாக 'வெள்ளை அட்டைகள்' கொடுக்கப்படுகின்றன. இம்மனுக்களின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய முன்னேற்றத்தை மாவட்ட ஆட்சியர்கள் தொடர்ந்து ஆய்வு செய்து கண்காணித்து வருகின்றனர்.

(iii) மாண்புமிகு அமைச்சர்கள் / நாடாளுமன்ற உறுப்பினர்கள் / சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள்

மாண்புமிகு முதலமைச்சரின் தனிப் பிரிவிலிருந்து பெறப்படும் மனுக்கள்மீது விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு 15 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட மனுதாரருக்கு பதிலும் அளிக்கப்படுகிறது. இதே போல் மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதிகளுக்குச் செல்லும்போது, பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு தக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்பி வைக்கின்றனர். அவ்வாறு பெறப்படும் மனுக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், சட்டமன்ற / நாடாளுமன்ற தொகுதி வாரியாகப் பிரிக்கப்பட்டு அவர்களது மனுக்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்கள் மனுதாரர்களுக்கு தெரிவிக்கப்படுகின்றன.

2.11 நிலவரி

(i) நிலவரியைக் குறைத்து வரிவிதிப்பை எளிமையாக்குதல்

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, நிலவரி விதிப்பு முறை மற்றும் கிராமக் கணக்குகளை எளிமைப்படுத்துவது தொடர்பாக அரசாணை (நிலை) எண் 223, வருவாய்த் துறை, நாள் 7-7-2009-ல் முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களைத் தலைவராகக் கொண்ட நிலவரிச் சீர்திருத்தக் குழு ஒன்றை அமைத்து அரசு ஆணையிட்டுள்ளது.

[2010 ஏப்ரல் 21

குழுவின் பரிந்துரைகளை எதிர்நோக்கி 1419 ஆம் பசலி முதல் நிலவரியை வெகுவாகக் குறைத்து, புன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றிற்கு ரூ.2/- வீதமும், நன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றிற்கு ரூ.5/- வீதமும் வசூலிக்கவும், நிலவரியுடன் வசூல் செய்யப்பட்டு வந்த தலவரி, தலமேல்வரி உள்ளிட்ட பிற வரிகளைத் தள்ளுபடி செய்தும் அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

(ii) நிலவரி தள்ளுபடி

2008-2009-ல் வடகிழக்குப் பருவமழைக் காலத்தின் போது ஏற்பட்ட பெருமழை மற்றும் வெள்ளம் காரணமாக நமது மாநிலத்தில் 14.25 இலட்சம் ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்ட நெல் மற்றும் பிற பயிர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது. இதனால் பாதிக்கப்பட்ட 10.40 இலட்சம் விவசாயிகளுக்கு ரூபாய் 388.00 கோடி இழப்பீடாக வழங்கப்பட்டது. 2009-2010 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, அரசாணை (நிலை) எண் 2 வருவாய்த் துறை, நாள் 4-1-2010-ல் கடலூர், நாகப்பட்டினம், திருவள்ளூர், திருவாரூர், புதுக்கோட்டை, அரியலூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர், தஞ்சாவூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 11 மாவட்டங்களில், பாதிக்கப்பட்ட 8.93 இலட்சம் ஹெக்டேர் நிலத்திற்கு உண்டான நிலவரி மற்றும் அதனுடன் சேர்த்து வசூலிக்கப்படும் தண்ணீர்த் தீர்வை, தலவரி, தலமேல்வரி போன்ற இனங்களுக்கான மொத்தவரி ரூ.21.34 கோடியை தள்ளுபடி செய்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

2.12 மக்கள்தொகை கணக்கெடுப்பு — 2011

இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பு இந்நாட்டில் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் மிகப் பெரிய நிருவாக செயல்முறை ஆகும். இதன்மூலம் நாட்டின் மொத்த மக்கள்தொகை, பல்வேறு சமூக பொருளாதார நிலை மற்றும் பிறப்பு -இறப்பு பற்றிய விவரங்கள் கணக்கெடுக்கப்படுகின்றன.

- 2011-ல் மக்கள்தொகை கணக்கெடுப்பு என்பது, 1872 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் மக்கள்தொகை கணக்கெடுப்புகளில் பதினைந்தாவது மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆகும். இது சுதந்திர இந்தியாவில் மேற்கொள்ளப்படும் ஏழாவது மக்கள்தொகை கணக்கெடுப்பாகும். தமிழ்நாட்டில் மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணி 01-06-2010 முதல் துவங்கவிருக்கிறது.

2010 ஏப்ரல் 21]

(i) தேசிய மக்கள்தொகை பதிவேடு

தேசிய மக்கள்தொகை பதிவேடு என்பது, இந்நாட்டில் வசிக்கும் மக்கள் அனைவரையும் பற்றிய குறிப்புகள் அடங்கிய பதிவேடு ஆகும். அரசின் நலத் திட்டங்கள், சலுகைகள் பற்றிய மேலான இலக்கினை விரைந்து எட்டுவதற்கும், முறையான திட்டமிடுதலை மேம்படுத்தவும், நாட்டின் பாதுகாப்பினை வலுப்படுத்துவதற்கும் இந்த அடையாள விவரத் தொகுப்பு பயன்படும். நாட்டில் முதன் முதலாக இத்தகைய பதிவு மேற்கொள்ளப்படுகிறது.

தேசிய மக்கள்தொகை பதிவேடு, மக்கள்தொகை கணக்கெடுப்பின் போது குறிக்கப்படும் அனைத்து விவரங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும். மேலும் 15 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு தனிநபரின் கைரேகைப் பதிவுகள் (Bio Metric) பதிவு செய்யப்பட்டு, அவர்களுக்கான பிரத்தியேக அடையாள எண்ணும் அளிக்கப்படும். இவ்விவரங்கள் தேசிய மக்கள்தொகை பதிவேட்டில் பதிவு செய்யப்படும். கைரேகை மற்றும் தேசிய அடையாள எண்ணுடன்கூடிய தேசிய அடையாள அட்டை வழங்கப்படும். தொடக்கத்தில் கடலோர கிராமங்களில் வசிப்போருக்கும், பின்னர் கடலோர நகரங்களில் வசிப்போருக்கும், அதன் பின்னர் நாட்டில் உள்ள அனைவருக்கும் படிப்படியாக தேசிய அடையாள அட்டை வழங்கப்படும்.

தேசிய அடையாளப் பதிவு தயாரிக்கும் பணி தமிழகத்தில் 12 கடலோர மாவட்டங்களான காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள 225 கடலோர கிராமங்களில் முதற்கட்டமாக மேற்கொள்ளப்படுகிறது.

முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் மக்கள்தொகை கணக்கெடுப்பு-2011 மற்றும் தேசிய அடையாளப் பதிவு தயாரிக்கும் பணிகளுக்கு தொடர்பு அலுவலராக செயல்பட்டு வருகிறார்.

2.13 இயற்கை இடர்பாடுகள் மற்றும் பேரிடர் மேலாண்மை

வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்புத் துறை, இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பேரிடர்களை மேலாண்மை செய்வதிலும், துயர் தணிப்புப்

[2010 ஏப்ரல் 21

பணிகளைச் செயல்படுத்தி முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் இது தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், நிவாரணம் மற்றும் மறுவாழ்வுத் திட்டங்களையும் செயல்படுத்தும் பொறுப்பினையும் இத்துறை ஏற்றுள்ளது. வருவாய் நிருவாக ஆணையர், 'மாநில நிவாரண ஆணையர்' என நியமிக்கப்பட்டுள்ளார்.

பேரிடர் மேலாண்மை குறித்த நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் 'மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்' அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையத்திற்கு உதவி புரிவதற்காக, மாநில செயலாட்சிக் குழு ஒன்று தலைமைச் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல், மாநில நிவாரண ஆணையரின் பொறுப்பாகும். மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இப்பணிகளைச் செயல்படுத்தி கண்காணித்து வருகின்றனர்.

(i) தமிழ்நாட்டில் பருவமழை

பொதுவாக, தமிழ்நாட்டின் பருவ காலங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்: (1) குளிர்காலம் (ஜனவரி-பிப்ரவரி) (2) கோடைக்காலம் (மார்ச்-மே) (3) தென்மேற்கு பருவமழைக் காலம் (ஜுன்-செப்டம்பர்) மற்றும் (4) வடகிழக்கு பருவமழைக் காலம் (அக்டோபர்-டிசம்பர்).

தமிழ்நாட்டில் சராசரியாக வருடத்திற்கு 990 மி.மீ. மழையளவு பதிவாகிறது. இதில் ஏறக்குறைய 34 விழுக்காடு தென்மேற்கு பருவமழைக் காலத்திலும், 48 விழுக்காடு வடகிழக்கு பருவமழைக் காலத்திலும் பெறப்படுகிறது.

வடகிழக்கு பருவமழைக் காலத்தில், தமிழகத்தின் கடலோர மாவட்டங்களான திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்கள் அதிக அளவு மழை பெறுவதோடு, புயல்/வெள்ள தாக்குதலாலும் பெருமளவு பாதிக்கப்படுகின்றன. நீலகிரி மற்றும் தேனி தென்மேற்கு பருவமழைக் காலத்தில் நல்ல அளவு மழை

2010 ஏப்ரல் 21]

பெறுகின்றன. திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு ஆகிய இரு பருவமழைக் காலங்களிலும் மழை பெறுகிறது.

(ii) பருவமழைக் காலங்களுக்கு முன்னதான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள்

வடகிழக்கு பருவமழைக் காலம் தொடங்குவதற்கு முன்பாக, ஒவ்வொரு வருடமும் ஆகஸ்டு அல்லது செப்டம்பர் மாதத்தில் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் கூட்டம், தலைமைச் செயலர் அவர்களால் நடத்தப்படுகிறது. சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள், இந்திய வானிலை ஆராய்ச்சி மையம், பாதுகாப்புப் படையினர், தன்னார்வ நிறுவனங்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் பங்கேற்கின்றனர். இக்கூட்டத்தில் வெள்ளம், புயல் ஆகிய பேரிடர்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தவிர்க்க ஆலோசனை செய்யப்படும். மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் மற்றும் ஆணைகள் வழங்கப்படுகின்றன.

இதேபோன்று, மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர் தலைமையில் சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் பிற நிறுவனங்களுடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இக்கூட்டத்தில் பெறப்படும் ஆலோசனைகள் மற்றும் கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில், பருவமழை தொடங்குவதற்கு முன்னதாகவே மாவட்ட ஆட்சியர்களால் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மேலும் தொடர்புடைய துறை அலுவலர்கள் மற்றும் நிறுவனங்கள் பங்கேற்கும் மாதிரி செயல்முறைப் பயிற்சியும் நடத்தப்படுகிறது.

(iii) பேரிடர் மேலாண்மை தொடர்பான பயிற்சி

புதுதில்லியிலுள்ள தேசிய பேரிடர் மேலாண்மைப் பயிற்சி நிலையத்தின்மூலம் பேரிடர் மேலாண்மை குறித்த பயிற்சி, தொடர்புடைய துறைகளின் மூத்த மற்றும் நடுத்தர அலுவலர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், பேரிடர் மேலாண்மைப் பயிற்சிக்கு ஒருங்கிணைப்பு நிறுவனமான சென்னை அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிலையம்மூலம் பல்வேறு துறைகளைச் சார்ந்த மாவட்ட அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

[2010 ஏப்ரல் 21

(iv) அவசர கால செயல் மையம்

பேரிடர்கள் குறித்த தகவல்களை உடனுக்குடன் தெரிவிக்க, மாநில அளவிலான அவசர கால செயல் மையம், மாநில நிவாரண ஆணையர் அலுவலகத்தில் இருபத்திநான்கு மணி நேரமும் ஆண்டு முழுவதும் செயல்பட்டு வருகிறது. இந்த மையம் உரிய உட்கட்டமைப்பு வசதியுடன்கூடிய நிரந்தர கட்டுப்பாட்டு மையமாக செயல்படும். பொதுமக்களிடமிருந்து பேரிடர் குறித்த தகவல் பெறுவதற்கென, 1070 என்ற எண்ணில் கட்டணமில்லா பொது உபயோக தொலைபேசி நிறுவப்பட்டுள்ளது.

இதுபோல் மாவட்ட ஆட்சியர்கள் பருவமழைக் கால நிலவரங்களை எப்போதும் கண்காணிக்கும் வகையில் 1077 என்ற இலக்கம் கொண்ட கட்டணமில்லா தொலைபேசி மாவட்ட கட்டுப்பாட்டு அறைகளில் நிறுவப்பட்டுள்ளது.

(v) இந்திய வானிலை ஆராய்ச்சி மையம்

வானிலை மற்றும் மழை தொடர்பான தகவல்களை இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் நாள்தோறும் மாநில நிவாரண ஆணையருக்கும், அவசர கால செயல் மையத்திற்கும் அனுப்புகிறது. இதன் அடிப்படையில், மாநில நிவாரண ஆணையர் / வருவாய் நிருவாக ஆணையரால் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

(vi) மழைமானிகள்

தமிழ்நாட்டில், மாநிலம் முழுவதும் பரவலான இடங்களில் 383 மழைமானி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த நிலையங்களில் நாள்தோறும் பெறப்படும் மழையளவு பதிவு செய்யப்பட்டு, மாநில நிவாரண ஆணையர் அலுவலகத்திற்கு நாள்தோறும் அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த மழைமானி நிலையங்கள், அவ்வப்போது இந்திய வானிலை ஆராய்ச்சி மைய அதிகாரிகளாலும் வருவாய்த் துறை அதிகாரிகளாலும் ஆய்வு செய்யப்படுகின்றன.

(vii) புயல் பாதுகாப்பு இல்லங்கள்

தமிழ்நாட்டில், 124 புயல் பாதுகாப்பு இல்லங்கள் உள்ளன. கடலோரப் பகுதிவாழ் மக்களின் பாதிப்பினை போக்கும் திட்டம்

2010 ஏப்ரல் 21]

மூலமாக சுமார் ரூ.290 கோடி செலவில் மேலும் 145 பாதுகாப்பு இல்லங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(viii)தினசரி நிலை அறிக்கை

மாவட்ட நிருவாகத்தினரால் நாள்தோறும் பெய்யும் மழை மற்றும் அது தொடர்பான விவரங்கள் http://revenue.tn.nic.in என்ற இணையதளத்தில் தினசரி முறையில் ஆண்டு முழுவதும் பதிவேற்றப்படுகிறது. இந்தஇணைய தளத்திலுள்ள தகவல்கள் மாநில நிவாரண ஆணையரால் அரசுக்கும் இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்திற்கும் நாள்தோறும் அனுப்பி வைக்கப்படுகிறது.

(ix) பேரிடர் நிவாரண நிதி

நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஒவ்வொரு நிதியாண்டிலும் பேரிடர் நிவாரண நிதிக்கு 75 விழுக்காட்டை திட்டத்தில் சேராத மானியமாக மைய அரசும், எஞ்சிய 25 விழுக்காட்டை மாநில அரசும் அளித்து வருகின்றன. கடந்த 2009-2010 நிதியாண்டில், மொத்தம் ரூ.254.13 கோடி பேரிடர் நிவாரண நிதிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் மைய அரசின் பங்கீடாக ரூ.190.60 கோடியும், மாநில அரசின் பங்கீடாக ரூ.63.53 கோடியும் அளிக்கப்பட்டுள்ளது. பேரிடர் நிவாரண நிதி, தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட மாநில அளவிலான குழுவினால் நிர்வகிக்கப்படுகிறது.

(x) வடகிழக்குப் பருவமழை 2009

2009 ஆம் ஆண்டில் வடகிழக்கு பருவமழை 29-10-2009 அன்று தொடங்கியது. 01-10-2009 முதல் 31-12-2009 வரையிலான காலத்தில் 546.9 மி.மீ. மழை பெய்துள்ளது. இது இயல்பான பருவமழை அளவான 474.2 மி.மீ.-ஐ விட 15 சதவீதம் கூடுதலாகும். வானிலை ஆய்வு மைய அளவுகோலின்படி இது இயல்பான மழையளவாகும்.

வடகிழக்குப் பருவமழை காலத்தில் நீலகிரி மாவட்டம் மற்றும் கடலோர மாவட்டங்களில் அதிக அளவு மழை பதிவாகியுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய நிலச்சரிவு மற்றும் கடலோர மாவட்டங்களில் வீசிய புயலினால் மாநிலத்தில் 114 பேர் உயிரிழந்துள்ளனர். 578 கால்நடைகள் இறந்துள்ளன. 10,241 குடிசைகள் சேதமடைந்துள்ளன. நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில் அரசால் மேற்கொள்ளப்பட்டன.

[2010 ஏப்ரல் 21

நீலகிரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள உள்கட்டமைப்புகளை உடனடியாக சீரமைக்கும் பணிக்காக அம்மாவட்டத்திற்கு ரூ.25.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில் நவம்பர் மாதத்தில் பெய்த பெருமழையின் காரணமாக ஆழியார் அணை அருகில் சம உயர அளவுள்ள கால்வாய் (காண்டூர் கேனால்) மற்றும் ஆழியாறு வாய்க்கால்களில் ஏற்பட்ட சேதத்தினை சீரமைத்திட தற்காலிக சீரமைப்புப் பணிகளுக்கு ரூ.120 இலட்சம் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(xi) வறட்சி நிவாரணம்

2009 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாக வேலூர், விருதுநகர், திருவண்ணாமலை, விழுப்புரம், திருவள்ளூர், தூத்துக்குடி, இராமநாதபுரம், திண்டுக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் புதுக்கோட்டை ஆகிய 11 மாவட்டங்களில் ஏற்பட்ட வறட்சிநிலை காரணமாக குடிநீர் பற்றாக்குறையைப் போக்கிட, பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ரூ.24.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(xiii) மத்திய அரசு மற்றும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பின் ஆதரவுடனான பேரிடர் இன்னல் மேலாண்மைத் திட்டம்

பல்முனை இன்னல்களுக்கு உள்ளாகும் தன்மை கொண்ட பகுதிகளில் மக்கள் எதிர்கொள்ளும் இயற்கை இடர்பாடுகளைக் குறைக்கும் நோக்குடன் மத்திய அரசும், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பும் இணைந்து பேரிடர் இன்னல் மேலாண்மைத் திட்டம் என்ற திட்டத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருகின்றன.

இத்திட்டம் இரண்டு கட்டமாக திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி, நீலகிரி, விழுப்புரம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய 13 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வந்தது.

இத்திட்டத்தின்கீழ் 4.10 இலட்சம் அரசு ஊழியர்கள், கிராம தன்னார்வ அமைப்பு உறுப்பினர்கள், அரசுசாரா அமைப்புகளின் உறுப்பினர்கள், ஆசிரியர்கள், தேசிய பாதுகாப்புத் திட்ட தன்னார்வ

2010 ஏப்ரல் 21]

உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டங்களில் அவசரகால செயல் மையங்கள் கட்டி முடிக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

இத்திட்டம் முழுமைக்கும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்ட அமைப்பு நிதி வழங்கியது. மொத்த நிதி அளிப்பு ரூ.11.91 கோடியாகும். இத்திட்டம் 2009 ஜூன் மாதத்தில் முடிவுற்றது.

2.14 சுனாமி நிவாரணம் மற்றும் மறுவாழ்வு

26-12-2004 அன்று ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதி வாழ் மக்களின் மறுவாழ்விற்காகவும், அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும் தமிழக அரசு பல்வேறு மறுவாழ்வு மற்றும் மேம்பாட்டுப் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில், மத்திய அரசு, உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, பிரதமரின் தேசிய நிவாரண நிதி, தேசிய மற்றும் பன்னாட்டு அரசுசாரா நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியோடு, மாநில அரசு கீழ்க்காணும் பணிகளை செயல்படுத்தி வருகிறது.

(i) குடியிருப்புகள் கட்டுதல்: (முதற்கட்டம்)

முதற்கட்ட திட்டத்தின்கீழ் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 53,660 வீடுகள் கட்டுவதற்காக அரசு (22,628 வீடுகள்) மற்றும் அரசுசாரா நிறுவனங்கள் (31,032 வீடுகள்) ஆகியவற்றால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றில், இதுவரை 44,647 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. 9,013 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

(ii) எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய கடலோரப் பகுதிகளில் பேரிடர் தாங்கும் அமைப்புகளைக் கொண்ட வீடுகளை மீளக் கட்டுதல் (இரண்டாம் கட்டம்)

இரண்டாம் கட்ட திட்டத்தின்கீழ் உயர்மட்ட அலைக் கோட்டிலிருந்து 1,000 மீட்டர் தூரம் வரை உள்ள பகுதியில், எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பகுதிகளில் பேரிடர்களைத்

தாங்கிடும் அமைப்புகளைக் கொண்ட 42,192 வீடுகள் அந்தந்த இடத்தில் அரசால் கட்டப்பட்டு வருகின்றன. இதில் ராஜீவ் காந்தி மறுவாழ்வு திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வரும் 25,192 வீடுகளும், கடலோர பகுதிவாழ் மக்களின் பாதிப்பினைக் குறைக்கும் திட்டத்தின்கீழ் உலக வங்கி நிதியுதவி அளிக்கும் அவசர கால சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தின்மூலம் கட்டப்பட இருக்கும் 17,000 வீடுகளும் அடங்கும்.

(iii) மீனவர் நலன்:

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களாகிய நார் வலுவூட்டப்பட்ட பிளாஸ்டிக் படகுகள், இயந்திரப் படகுகள், கட்டுமரங்கள், வள்ளம் மற்றும் வலைகள் ஆகியவற்றைப் பழுதுபார்த்து சீரமைக்கவும், புதிதாக வாங்குவதற்கும் உடனடி நிவாரணத் தொகையாக 152.15 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டது.

ஏற்கெனவே பயனடைந்த 42,000 மீனவர்களுக்கு 110.36 கோடி ரூபாய் செலவில் கூடுதல் நிவாரணப் பொருள்களாக அதிக பளு ஏற்றத்தக்க மிதிவண்டிகள், மறு மின்னூட்டு ஒளிவிளக்குகள், உயிர் காப்பு கவச உடைகள், ஐஸ் பெட்டிகள் மற்றும் வலைகள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

9.40 கோடி ரூபாய் செலவில் 47,000 மீனவர்களுக்கு முதலுதவிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 0.59 கோடி ரூபாய் செலவில் 591 மீனவ கிராமங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1.90 கோடி ரூபாய் செலவில் மனமகிழ் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டிலேயே முதன்முறையாக, கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களின் பாதுகாப்பிற்காக ஒரு முன்மாதிரித் திட்டமாக, இராமநாதபுரம் மாவட்டத்தில் 7.73 கோடி ரூபாய் செலவில், கம்பியில்லாத் தொலை தொடர்பு வலைத்தளம் ஏற்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு இத்திட்டத்திற்கான பணிகள் தமிழ்நாடு மின்னணு கழகத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம் அனைத்து கடலோர மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

2010 ஏப்ரல் 21]

(iv) இதர உட்கட்டமைப்பு பணிகள்:—

வ. எண்	திட்டம்	எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள்	முடிக்கப்பட்ட பணிகள்	நடைபெற்று வரும் பணிகள்
1.	சாலைகள்	1552.50 கி. மீ.	1542.18 கி. மீ	10.32 கி. மீ
2.	பாலங்கள்	62	37	25
3.	குடிநீர் வழங்கல் மற்றும் வடி கால்	40	40	முழுமையாக நிறைவேற்றப் பட்டுள்ளது
4.	கால்வாய்களைத் தூர்வாருதல்	10	10	
5.	திடக்கழிவு மேலாண்மை	36	36	
6.	சிறு துறைமுகங்களைப் புனரமைத்தல்	23	23	
7.	பொதுக் கட்டடங்கள்	226	226	
8.	புயல் பாதுகாப்பு மையங்கள் மற்றும் நினைவிடங்கள்	114	114	
9.	விவசாயம் மற்றும் தோட்ட நிலங்களைப் பண்படுத்துதல்	8844.35 எக்டேர்	8844.35 எக்டேர்	
10.	பாதுகாப்புக் காடுகள் மற்றும் சதுப்பு நிலக்காடுகள் ஏற்படுத்துதல்	6940 எக்டேர்	6940 எக்டேர்	
11.	மீன்பிடி துறைமுகம் மற்றும் மீன்பிடி இறங்கு தளங்கள் புதுப்பித்தல், புனரமைத்தல் மற்றும் புதிதாகக் கட்டுதல், மீன் பதப்படுத்த குளிர்சாதன அறை அமைத்தல்	33	16	17
12.	கடல் உயர் மட்ட அலைப்பகுதி வரைபடம் தயாரித்தல், உயர்மட்ட அலைக்கோட்டில் கல்தூண் நடுதல், கடல் சார் மேலாண்மைத் திட்டம் தயார் செய்தல் மற்றும் நீர் நிலை ஆதாரங்களைப் புனரமைத்தல்	4	1	3
13	சுனாமியால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளில் சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளுதல்	16	5	11

வரிசை எண் 1, 9, 10 தவிர பிற பணிகள் எண்ணிக்கையில் தரப்பட்டுள்ளன

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 21

(v) சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் பணிகள்:

(அ) ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம்: (RGRP)

இத்திட்டத்தின்கீழ், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குதல், விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கும் திட்டச் செயலாக்கம், கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், மீனவர்களுக்கான மானிய உதவித் தொகை, வங்கிகளிடமிருந்து கடனுதவி, மீன்பிடித் துறைமுகங்களை பழுது பார்ப்பதற்கான மானியம் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான வீடு கட்டும் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இத்திட்டதிற்காக 2,347.19 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு இதுவரை 1,857.02 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

(vi) பிரதமரின் தேசிய நிவாரண நிதியின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

(அ) பிரதமரின் கல்வி உதவித் தொகை திட்டம்:

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு அவர்களுடைய பள்ளி செல்லும் செலவுகளுக்காக மாதந்தோறும் ரூ.300 கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2009-2010 ஆம் ஆண்டில் 97,424 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.26.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(vii) உலக வங்கி – 'திருத்தியமைக்கப்பட்ட அவசர சுனாமி மறுசீரமைப்புத் திட்டம்' (ETRP)–கடலோரப்பகுதிவாழ் மக்களின் பாதிப்பினை குறைக்கும் திட்டம் (VRCC):–

இத்திட்டத்தின்கீழ், எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய கடலோரப் பகுதிகளில் பேரிடர்களையும் தாங்கும் அமைப்புகளைக் கொண்ட 17,000 புதிய வீடுகள் கட்டுதல், 145 பாதுகாப்பு மையங்கள் அமைத்தல், 150 கி.மீ. வழித்தடங்கள் ஏற்படுத்துதல், 1,000 முன்னெச்சரிக்கை கருவி மையங்கள் அமைத்தல் ஆகிய பணிகளுக்காக உலக வங்கி ரூ.1,959.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. திருத்தி அமைக்கப்பட்ட அவசர சுனாமி மறுசீரமைப்புத் திட்டம் (ETRP) மற்றும் கடலோரப்

TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 21]

பகுதிவாழ் மக்களின் பாதிப்பினைப் போக்கும் திட்டம் (VRCC) தொடர்பான ஒப்பந்தம் 13-8-2009 அன்று உலக வங்கியுடன் கையெழுத்தானது. பயனாளிகள் தேர்வு பட்டியல் இறுதி செய்யப்பட்டுள்ளன. வீடுகள் கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளி நடைமுறை மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

(viii) ஆசிய வளர்ச்சி வங்கி (ADB)– 'சுனாமி அவசர உதவித் திட்டம்': (TEAP)

ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்கீழ் வாழ்வாதாரத்தினை மீட்பித்தல், நகராட்சிகள் மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் உள்ள சாலைகள், பாலங்கள், துறைமுகங்கள் ஆகியவற்றைச் செப்பனிடுதல், 13 கடலோர மாவட்டங்களில் குடிநீர் வழங்குதல் மற்றும் வடிகால்களை சீரமைத்தல் ஆகிய பணிகள் ரூபாய் 620 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டம் கடந்த 2009 அக்டோபர் மாத இறுதியில் முடிவு பெற்றது.

(ix) ஆசிய வளர்ச்சி வங்கியின் வழியான வறுமைக் குறைப்பிற்கான ஜப்பான் நிதி (JFPR) :

இத்திட்டத்தின்கீழ் ஜப்பான் நிதி உதவியுடன், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாற்று வாழ்வாதார வேலை வாய்ப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பில்லாத மீன் வளர்ப்புத் தொழில் மேற்கொள்ளுதல் ஆகிய பணிகள் 16.70 கோடி ரூபாய் மதிப்பில் ஆசிய வளர்ச்சி வங்கியின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டம் 2010 அக்டோபர் வரை செயல்படுத்தப்படும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மறு வாழ்வினை மேம்படுத்திட பல்வேறு திட்டங்களின்கீழ் மொத்தம் ரூ.5,257.62 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் இதுவரை ரூ.3,171.84 கோடி நிதி செலவிடப்பட்டுள்ளது.

[2010 ஏப்ரல் 21

அத்தியாயம்-III

நில நிருவாகத் துறை

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு நிலங்களுக்கும் வருவாய்த் துறையே காப்பாளராக விளங்குகிறது. நில ஒப்படை வீட்டுமனை ஒப்படை, குத்தகை, நில உரிமை மாற்றம், நில மாற்றம், நில எடுப்பு, அரசு நிலங்களில் ஆக்கிரமணங்களை அகற்றுதல், ஜமீன் / இனாம் ஒழிப்புச் சட்டம், திரையரங்கச் சட்டம் ஆகியவை தொடர்பான பணிகள் நில நிருவாகத் துறையால் நிர்வகிக்கப்படுகின்றன.

3.1 ஒப்படை

(அ) இலவச வீட்டுமனை ஒப்படை வழங்குதல் (வழக்கமான திட்டம்)

சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் அடிப்படைத் தேவையை நிறைவேற்றும் நோக்குடன் வீடற்ற ஏழை மக்களுக்கு அரசு இலவசமாக வீட்டுமனைகளை வழங்கி வருகிறது. இலவச வீட்டுமனைகளைப் பெறுவதற்கு குடும்பத்தின் ஆண்டு வருமானம் ஊரகப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு ரூ.30,000/- எனவும், நகர்ப்புறங்களில் வாழும் குடும்பங்களுக்கு ரூ.50,000/- எனவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மகளிருக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு குடும்பத் தலைவியின் பெயரில் அல்லது குடும்பத்தில் உள்ள பெண் உறுப்பினர் பெயரில் மட்டுமே அரசால் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வருகின்றன. நடைமுறையில் உள்ள விதிகளின்படி உயர்ந்தபட்சமாக கிராமங்கள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் 3 சென்ட் நிலமும், நகராட்சிகளில் 1½ சென்ட் நிலமும், மாநகராட்சிகளில் 1 சென்ட் நிலமும் இலவசமாக ஒப்படை செய்யப்பட்டு வருகின்றன.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றில் வீட்டுமனைப் பட்டாக்களை அடமானம் வைத்து கடன் உதவி பெற்று வீடு கட்டுவதற்கு ஒப்படைதாரர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின்கீழ் பின்வரும் முன்னுரிமை வரிசைப்படி வீட்டுமனை ஒப்படை செய்யப்படுகிறது:

2010 ஏப்ரல் 21]

1. எல்லைப்புற பாதுகாப்புப்படை மற்றும் இராணுவப்படை உட்பட முப்படையில் பணியில் இருந்தபோது உயிரிழந்த அல்லது செயலிழந்தவர்களின் குடும்பங்கள்
2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்
3. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள்
4. முன்னாள் இராணுவத்தினர்
5. நிலமற்ற ஏழை மக்கள்

வீட்டுமனை ஒப்படை தகுதியுள்ள பயனாளிகளுக்கு விரைவில் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில், வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு நிதி அதிகார வரம்பு பின்வருமாறு அளிக்கப்பட்டுள்ளது:-

வ. எண்	அலுவலர்கள்	நிதிவரம்பு (நில மதிப்பு)
1.	வட்டாட்சியர்	ரூ.30,000/- வரை
2.	கோட்டாட்சியர்	ரூ.50,000/- வரை
3.	மாவட்ட வருவாய் அலுவலர்	ரூ.1,00,000/- வரை
4.	மாவட்ட ஆட்சித் தலைவர்	ரூ.4,00,000/- வரை
5.	நில நிருவாக ஆணையர்	ரூ.5,00,000/- வரை
6.	அரசு	ரூ.5,00,000/-க்கு மேல்

(ஆ) ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப் பட்டா வழங்கும் சிறப்புத் திட்டம்

அரசாணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை நாள் 30-12-2006-ல், அரசு புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேல் ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டி குடியிருப்பவர்களுக்கு, வீட்டுமனைப் பட்டா வழங்க, ஒப்படை செய்ய, நடைமுறையில் இருந்த தடையாணையை தளர்வு செய்து, மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

அதிக அளவில் ஏழைகள் பயன்பெறுவதை உறுதிப்படுத்த அரசாணை (நிலை) எண் 498, வருவாய்த் துறை, நாள் 5-9-2007-ல், இத்திட்டத்தின் காலம் 31-3-2008 வரை நீட்டிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியர்களுக்கு சில கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அரசாணை (2டி) எண் 711, வருவாய்த் துறை, நாள் 30-11-2007-இல்,

[2010 ஏப்ரல் 21

இச்சிறப்புத் திட்டத்திற்கென இலவச வீட்டுமனை ஒப்படை பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பை அரசு நீக்கம் செய்தது. மேலும் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கான பரப்பளவை ஊரகப் பகுதிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் 4 சென்ட் என்றும், நகராட்சிப் பகுதிகளில் 2½ சென்ட் என்றும், மாநகராட்சிப் பகுதிகளில் 2 சென்ட் என்றும் அரசு உயர்த்தியுள்ளதுடன், இத்திட்டத்தின்கீழ் ஏற்கெனவே வெளியிடப்பட்ட அரசாணைப்படி 30-12-2006-க்கு பின் நிலக்கிரயம் செலுத்தி வீட்டுமனைப் பட்டா பெற்றவர்களுக்கு, அவர்கள் செலுத்திய தொகை மீண்டும் அவர்களுக்கே வழங்கப்படும் எனவும் ஆணையிட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 34, வருவாய்த் துறை, நாள் 23-01-2008-ல் இத்திட்டத்திற்குரிய தகுதியான குடியிருப்புக் கால அளவை 10 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாகக் குறைத்து ஆணையிடப்பட்டது. அரசாணை (நிலை) எண் 366, வருவாய்த் துறை, நாள் 8-10-2009-ன்படி இத்திட்டத்தின் காலம் மீண்டும் 30-9-2010 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்துவதற்கு தகுதியான குடியிருப்புக் கால அளவை 5 ஆண்டுகளில் இருந்து 3 ஆண்டுகளாகக் குறைத்து அரசாணை (நிலை) எண் 43, வருவாய்த் துறை நாள் 29-1-2010-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

(இ) இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் சாதனை

இச்சிறப்புத் திட்டத்தின்கீழ் 1-1-2007 முதல் 31-3-2010 வரை **2,22,692** வீட்டுமனைப் பட்டாக்களும், நடைமுறையில் உள்ள வழக்கமான திட்டத்தின்கீழ் 1-4-2006 முதல் 31-3-2010 வரை ***5,01,635*** வீட்டுமனைப் பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் இத்திட்டங்களின்கீழ் ***7,24,327*** குடும்பங்கள் இலவச வீட்டுமனைப் பட்டா பெற்று பயனடைந்துள்ளன.

இனவாரியான பயனாளிகள் விவரம் பின்வருமாறு:—

வகுப்பினர்	பயனாளிகள்
ஆதி திராவிடர்	189860
பழங்குடியினர்	14124
மிகவும் பிற்படுத்தப்பட்டோர்	214309
பிற்படுத்தப்பட்டோர்	274715
ஏனையோர்	31319
மொத்தம்	***724327***

2010 ஏப்ரல் 21]

(ஈ) இலவச விவசாய நில ஒப்படை (வழக்கமான திட்டம்)

நிலமற்ற ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு, வருவாய் நிலை ஆணை எண் 15-ன்கீழ் பயிரிடுவதற்கேற்ற தரிசு நிலங்கள் விவசாய நோக்கத்திற்காக ஒப்படை செய்யப்படுகின்றன. கிராமப்புறங்களில் ஆண்டு வருமானம் ரூ.30,000/-க்கும் குறைவாக உள்ள குடும்பங்களுக்கும், நகர்ப்புறங்களில் ரூ.50,000/-க்கும் குறைவாக உள்ள குடும்பங்களுக்கும் இலவசமாக அரசின் தரிசு நிலம் ஒப்படை செய்யப்படுகிறது. இலவச வீட்டுமனை ஒப்படை செய்வதில் கடைப்பிடிக்கப்படும் அதே முன்னுரிமை வரிசை விவசாய நில ஒப்படையிலும் கடைபிடிக்கப்படுகிறது.

இலவச வீட்டுமனை ஒப்படைக்கு வழங்கப்பட்டுள்ளது போலவே நிதி அதிகார வரம்பு வருவாய் அலுவலர்களுக்கு விவசாய நில ஒப்படை செய்வதற்கும் கீழ்க்காணுமாறு அளிக்கப்பட்டுள்ளது:

வ. எண்	அலுவலர்கள்	நிதிவரம்பு (நில மதிப்பு)
1.	வட்டாட்சியர்	ரூ.30,000/- வரை
2	வருவாய் கோட்ட ஆட்சியர்	ரூ.50,000/- வரை
3	மாவட்ட வருவாய் அலுவலர்	ரூ.1,00,000/- வரை
4	மாவட்ட ஆட்சியர்	ரூ.4,00,000/- வரை
5	நில நிருவாக ஆணையர்	ரூ.5,00,000/- வரை
6	அரசு	ரூ.5,00,000/-க்கு மேல்

(உ) நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு அரசு தரிசு நிலம் வழங்கும் சிறப்புத் திட்டம்:–

நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தரிசு நிலம் இலவசமாக வழங்கும் சிறப்புத் திட்டம் ஒன்றை 2006 ஆம் ஆண்டு அரசு அறிமுகப்படுத்தியது.

இச்சிறப்புத் திட்டம் கீழ்க்காணும் மூன்று பிரிவுகளைக் கொண்டது:-

(i) எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லாத அரசு புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்தல்;

[2010 ஏப்ரல் 21

(ii) நிலமற்ற சிறு மற்றும் குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அரசு புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்தல்;

(iii) சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குச் சொந்தமான பட்டா தரிசு நிலங்களைப் பண்படுத்தி / மேம்பாடு செய்து வழங்குதல்;

நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு இச்சிறப்புத் திட்டத்தின்மூலம் வழங்கப்படும் நிலங்கள், அரசின் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளின்மூலமாக செயல்படுத்தப்படும் திட்டங்களின்வாயிலாக விவசாய நிலங்களாக பண்படுத்தி / மேம்படுத்தி விவசாயத்திற்கு ஏற்றதாக மாற்றிய பிறகே அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

இந்தச் சிறப்புத் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திருவள்ளூர் மாவட்டத்தில் 17-9-2006 அன்று துவக்கி வைக்கப்பட்டது, இத்திட்டத்தின்மூலம் 31-3-2010 முடிய 2,12,164 ஏக்கர் நிலங்கள் 1,78,198 ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இனவாரி பயனாளிகளின் விவரம்:–

வகுப்பினர்	பயனாளிகள்
தாழ்த்தப்பட்ட வகுப்பினர்	41,826
பழங்குடியினர்	3,275
மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்	57,919
பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்	66,492
மற்றவர்கள்	8,686
மொத்தம்	1,78,198

3.2 நிலக் குத்தகை

அரசுக்குச் சொந்தமான நிலங்கள், வேளாண்மை அல்லாத பிற நோக்கங்களுக்காக உள்ளாட்சி அமைப்புகள், நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், பிற சங்கங்கள், நம்பகங்கள், தனியார் மற்றும் தனியார் அமைப்புகளுக்கு வருவாய் நிலையாணை 24-A-இன்

2010 ஏப்ரல் 21]

கீழ் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்கும், அதிகபட்சமாக 30 ஆண்டுகளுக்கும் குத்தகைக்கு வழங்கப்படுகின்றன.

தற்போது நடைமுறையிலுள்ள ஆணைகளின்படி ஆண்டு ஒன்றுக்கு வணிகமற்ற நோக்கத்திற்கு நிலத்தின் சந்தை மதிப்பில் 7 விழுக்காடும், வணிக நோக்கத்திற்கு 14 விழுக்காடும் குத்தகைக் கட்டணமாக விதிக்கப்படுகிறது.

ஆண்டு குத்தகைக் கட்டணம் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை மறுநிர்ணயம் செய்யக்கூடியது. இருப்பினும், சில சிறப்பு நேர்வுகளில் பொது நலன் கருதி பெயரளவு ஆண்டு குத்தகையும், நீண்டகால குத்தகையும் அரசால் வழங்கப்படுகிறது.

3.3 நில மாற்றம்

வருவாய் நிலை ஆணை எண் 23-A இன்கீழ் அரசு புறம்போக்கு நிலங்கள், அரசின் மற்ற துறைகளுக்கு இலவசமாக சில குறிப்பிட்ட பயன்பாட்டிற்கு நில மாற்றம் செய்யப்படுகின்றன. பொதுவாக மைய அரசின் துறைகளுக்கு அரசு புறம்போக்கு நிலங்கள் வருவாய் நிலை ஆணை எண்.23-இன்கீழ் சந்தை மதிப்பினை வசூல் செய்துக் கொண்டு நிலமாற்றம் செய்யப்படுகின்றன.

சிறிய பரப்பளவுள்ள ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களை அரசுத் துறைகளுக்கு நில மாற்றம் செய்வதற்கு மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 'மேய்க்கால்' மற்றும் 'மந்தைவெளிப் புறம்போக்கு' நிலங்கள் நில மாற்றம் செய்யப்படும் நேர்வுகளில், நில மாற்றம் செய்யப்படும் நிலத்திற்குச் சமமான மாற்று நிலம் கேட்புத் துறை வழங்க வேண்டும். மேலும், நில மேம்பாட்டுக் கட்டணமாக ஒரு ஏக்கருக்கு ரூ.6,000/- அல்லது ஒரு எக்டேருக்கு ரூ.15,000/- வீதம் கேட்புத் துறை வழங்க வேண்டும். சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்கள் மாற்று நிலமாக வழங்கப்பட்ட நிலத்தை மேய்க்கால் நிலமாக, மந்தைவெளி நிலமாக மக்களின் பொது பயன்பாட்டிற்கு மேம்படுத்தி பராமரிக்க வேண்டும்.

3.4 நில உரிமை மாற்றம்

அரசு புறம்போக்கு நிலங்கள் பொது நோக்கங்களுக்காக உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைகழகங்கள், தமிழ்நாடு மின் வாரியம், டிட்கோ, சிட்கோ, சிப்காட் முதலிய பொதுத் துறை நிறுவனங்களுக்கு வருவாய் நிலை ஆணை 24 இன்கீழுள்ள

[2010 ஏப்ரல் 21

நிபந்தனைகளுக்குட்பட்டு நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு, குடிசைவாழ் மக்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்காக நிலக்கிரயமின்றி நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு இதர வணிக நோக்கங்களுக்காக நிலங்கள் தேவைப்பட்டால், மனை ஒன்றுக்கு பெயரளவு நிலக்கிரயமாக ரூ.5,000/- வசூலித்த பின்னர் நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு இலவசமாக நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. அரசு புறம்போக்கு நிலங்கள் அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்பு கட்டுவதற்காக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு அனுமதிக்கப்படுகிறது. மேலும் வீடுகள் கட்டும் திட்டங்களுக்காகவும் புறம்போக்கு நிலங்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு நிலமதிப்பை வசூலித்தப்பின் அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு துணை மின் நிலையம் அமைக்கும் பொருட்டு ஒரு மடங்கு சந்தை மதிப்பு வசூலித்துக்கொண்டு நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு பேருந்து முனையம் மற்றும் பயணியர் பேருந்து நிறுத்துமிடங்கள் அமைக்கத் தேவைப்படும் நிலத்தின் சந்தை மதிப்பில் 50 விழுக்காடு நிலக்கிரயம் வசூலித்த பின்னர் உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. சிப்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வுகளில் ஒரு மடங்கு சந்தை மதிப்பு வசூலிக்கப்படுகிறது. இதர கேட்பு நிறுவனங்களுக்கும் மற்றும் இதர நோக்கங்களுக்கும் ஒரு மடங்கு சந்தை மதிப்பு அல்லது அதற்கு மேல் வசூலித்துக்கொண்டு நிலம் உரிமை மாற்றம் செய்யப்படுகிறது.

நிலம் எந்த நோக்கத்திற்காக நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறதோ அதற்காக மட்டுமே அந்நிலத்தை பயன்படுத்த வேண்டும். உரிமை மாற்ற நிபந்தனைகள் மீறப்படும் நேர்வுகளில், நில மதிப்பு திரும்ப வழங்கப்படாமல் நிலத்தினை மீளப்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

3.5 ஆக்கிரமணங்களை அகற்றுதல்:–

அரசு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்தல் சட்டப்படி குற்றமாகும். அரசு நிலங்கள் பொது பயன்பாட்டிற்கும், எதிர்காலத் தேவைக்கும் அவசியமாகிறது. ஆக்கிரமிப்பில் இருந்து அரசு நிலங்களைப் பாதுகாப்பது வருவாய்த் துறை மற்றும் பயன்பாட்டுத் துறைகளின் முக்கிய கடமையாகும். அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்கள்

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2010 ஏப்ரல் 21]

தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905 மற்றும் நடைமுறையில் உள்ள இதர சட்டங்களின்படியும் அகற்றப்பட்டு வருகின்றன.

நீர் நிலைகள், குளங்கள், ஆறுகள், ஏரிகள், குட்டைகள் மற்றும் பிற நீர்நிலைப் புறம்போக்குகளில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமணங்கள் முன்னுரிமை அடிப்படையில் பொதுப் பணித் துறை மற்றும் காவல் துறை உதவியுடன் அகற்றப்பட்டுவருகின்றன.

மேலும் வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, வனத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த அலுவலர்களும் தங்கள் துறையின் பயன்பாட்டில் உள்ள புறம்போக்கு நிலங்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமணங்களை அகற்ற கீழ்க்காணும் சட்டங்களின்படி அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது:-

1. தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905
2. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920
3. தமிழ்நாடு ஊராட்சி சட்டம், 1958
4. தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், 2001
5. தமிழ்நாடு வனச் சட்டம், 1882
6. தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் சட்டம், 2007

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில், பொதுப் பணித் துறை, வனத் துறை, காவல் துறை, மற்றும் பிற துறைகள் அலுவலர்களை உள்ளடக்கிய மாவட்டக் குழு அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணிகளை கண்காணிக்கிறது. அரசு தலைமைச் செயலாளர் மற்றும் குறிப்பிட்ட அரசுத் துறை செயலாளர்கள், இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள், நகர்ப்புற உள்ளாட்சிமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் தலைமையிலான குழு ஆக்கிரமணங்களை அகற்றும் பணி முன்னேற்றத்தை மாநில அளவில் கண்காணிக்கிறது. இவ்வுயர்மட்டக்குழுவின் கூட்டம் சமீபத்தில் 23-2-2010 அன்று நடைபெற்றது.

01-1-2009 முதல் 31-3-2010 வரையிலான காலகட்டத்தில் மாநிலம் முழுவதும் 1,53,976 ஆக்கிரமணங்கள் அகற்றப்பட்டுள்ளன.

[2010 ஏப்ரல் 21

3.6 நில எடுப்புப் பணிகள்

பல்வேறு வளர்ச்சி மற்றும் பிற திட்டங்களுக்காகத் தேவைப்படும் நிலங்கள் நில எடுப்புச் சட்டம், 1894 (சட்டம் 1/1894), தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், 2001 (சட்டம் 34/2002), தமிழ்நாடு ஆதி திராவிடர் நலத் திட்டங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1978 (சட்டம் 31/1978) மற்றும் தமிழ்நாடு தொழில் சார்ந்த நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1997 (சட்டம் 10/1999) ஆகிய பல்வேறு நில எடுப்புச் சட்டங்களின்கீழ் பட்டா நிலங்கள் அரசால் கையகப்படுத்தப்படுகின்றன.

(i) நில எடுப்புச் சட்டம், 1894 (மத்திய சட்டம் 1/1894)

மத்திய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களுக்காகத் தேவைப்படும் நிலங்கள் நில எடுப்புச் சட்டம், 1894-ன் (மைய சட்டம் 1/1894) கீழ் கையகப்படுத்தப் படுகின்றன. இச்சட்டத்தினைப் பயன்படுத்தி மூன்று வருடங்களுக்குள் நில எடுப்புப் பணிகள் சாதாரண நிகழ்வுகளில் முடிக்கப்படும். ஆனால் நில எடுப்புச் சட்டப் பிரிவு 17(1) மற்றும் 17(2)-னைப் பயன்படுத்தி 180 நாட்களில் அவசர நிகழ்வாக நில எடுப்பு செய்ய இயலும். நில எடுப்புப் பணிகளை விரைந்து முடிக்கும் வகையில், திட்ட ஆய்வு உத்தி அட்டவணை (PERT CHART) அறிமுகப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் கால அளவுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

நில எடுப்பு நேர்வுகளில் தீர்ப்பாணை பகர வருவாய்த் துறை அலுவலர்களுக்கு நிதிவரம்பு பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:-

வ.எண்	அலுவலர்கள்	நிதி வரம்பு
1.	வட்டாட்சியர்கள்/ சிறப்பு வட்டாட்சியர்கள்	ரூ.2,50,000/– வரை
2.	கோட்டாட்சியர் /துணை ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலர்கள்	ரூ.2,50,000/–க்கு மேல் ரூ.7,50,000/– வரை
3.	மாவட்ட ஆட்சித் தலைவர்கள் /கூடுதல் மாவட்ட ஆட்சியர்கள்/ மாவட்ட வருவாய் அலுவலர்கள்	ரூ.7,50,000/–க்கு மேல் ரூ20,00,000/– வரை
4.	நில நிர்வாக ஆணையர்	ரூ.20,00,000/–க்கு மேல்

2010 ஏப்ரல் 21]

நில எடுப்புப் பணிகளை விரைந்து முடிப்பதற்கு ஏதுவாக அரசாணை (நிலை) எண் 285, வருவாய்த் துறை, நாள் 10-02-1966, அரசாணை (நிலை) எண் 2556, வருவாய்த்துறை, நாள் 16-12-1975, மற்றும் அரசாணை (நிலை) எண் 205, வருவாய்த் துறை, நாள் 10-03-1993, ஆகிய அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளின்படி அரசால் சிறப்பு தற்காலிக பணியிடங்கள் அவ்வப்போது தோற்றுவிக்கப்படுகின்றன.

நில எடுப்புச் சட்டங்களின்கீழ் நில எடுப்பு செய்யப்படும் போது ஏற்படக்கூடிய காலதாமதங்கள் மற்றும் இதர தடங்கல்களைத் தவிர்த்து, நேரடி பேச்சுவார்த்தைமூலம் தனியார் நிலங்களை நில எடுப்பு செய்வதற்கு அரசாணை (நிலை) எண் 885, வருவாய்த் துறை, நாள் 21-09-1995 மற்றும் அரசாணை (நிலை) எண் 1246, வருவாய்த் துறை, நாள் 22-11-1996ன்படி. மாவட்ட மற்றும் மாநில அளவிலான குழுக்கள் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேற்கண்ட அரசாணைகளில் வகுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி, நேரடி பேச்சுவார்த்தையில் நிர்ணயிக்கப்படும் நில மதிப்பு ரூபாய் இருபது இலட்சத்திற்குக் குறைவாகவும் மற்றும் வழிகாட்டி பதிவேட்டு மதிப்பு (Guideline Register Value) / சந்தை மதிப்பில் 150 விழுக்காட்டிற்கு உட்பட்டிருந்தால், நேரடிப் பேச்சுவார்த்தைமூலம் நிலத்தை வாங்குவதற்கு மாவட்ட அளவிலான குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. நேரடி பேச்சுவார்த்தைமூலம் நிர்ணயிக்கப்பட்ட நிலமதிப்பு ரூபாய் இருபது இலட்சத்திற்கு அதிகமாகவும் வழிகாட்டிப் பதிவேட்டு மதிப்பு / சந்தை மதிப்பில் 150 விழுக்காட்டிற்கு உட்பட்டும் இருந்தால், மாநில அளவிலான குழுவுக்கு நிலங்களை வாங்குவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. நேரடி பேச்சுவார்த்தையில் நிர்ணயிக்கப்படும் தொகை ரூபாய் இருபது இலட்சத்திற்கு அதிகமாகவும், வழிகாட்டிப் பதிவேட்டு மதிப்பு / சந்தை மதிப்பில் 150 விழுக்காட்டிற்கு அதிகமாகவும் இருந்தால், நிலத்தை வாங்குவதற்கு அரசின் ஆணை பெறப்படவேண்டும்.

3.7 மரப்பட்டா திட்டம்

“2சி பட்டா” என அழைக்கப்படும் மரப்பட்டா வருவாய் (நிலை) ஆணை எண் 18 இன்கீழ் வழங்கப்பட்டுவருகிறது.

[2010 ஏப்ரல் 21

இத்திட்டத்தின்கீழ், அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களின் இலைகள், கனிகள் மற்றும் இதர பயன்படும் பொருட்களின் பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமை அருகில் உள்ள நில உரிமையாளருக்கோ அல்லது அம்மரங்களைப் பராமரிக்கக் கூடிய தகுதியுடைய பிறருக்கோ வழங்கப்பட்டு வருகிறது. ஆயினும், அரசு நிலங்கள் மற்றும் அவற்றில் உள்ள மரங்களின் மீதான உரிமை அரசிடமே தொடர்ந்து இருந்து வரும். மரப்பட்டா வழங்குவதில், நலிந்த பிரிவினைச் சார்ந்த பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 21]

அத்தியாயம்-IV

நில அளவை மற்றும் நிலவரித் திட்டம்

4.1 நில அளவை

நில அளவைப் பதிவேடுகள் துறை, வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் பழமையான துறைகளில் ஒன்றாகும். முறையான நில அளவை பணியானது, தமிழகத்தில் முதலாம் ராஜராஜ சோழன் ஆட்சிக்காலத்தில் தொடங்கி பல்வேறு முன்னேற்றங்களைக் கண்டு, தற்போது நவீன நில அளவை உபகரணங்களாகிய 'பூகோள நிலை காட்டும் முறை' (ஜி.பி.எஸ்) மற்றும் 'மின்னணு மொத்த நிலையம்' (Electronic Total Station) கருவிகளைக் கொண்டு, துல்லியமாக நில அளவை செய்து, ஆவணங்களைப் பராமரிக்கும் நிலைக்கு உயர்ந்துள்ளது.

இத்துறையால் நத்தம் நில அளவை, நகர நில அளவை மற்றும் மறு நில அளவைப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நில உரிமை தொடர்பாக நிகழும் நில மாற்றப்பதிவு, விற்பனை, மற்றும் பாகப் பிரிவினை அடிப்படையில் உட்பிரிவு மேற்கொண்டு நில ஆவணங்களில் பதிவு செய்வது மற்றும் பராமரிப்பது இத்துறையின் அன்றாடப் பணியாகும். இத்துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறு:-

4.2 கடாஸ்ட்ரல் நில அளவைத் திட்டங்கள்

(i) நகர நில அளவை

நகரம் மற்றும் மாநகரங்களில் மேற்கொள்ளப்படும் அளவை நகர நில அளவை ஆகும். கடாஸ்ட்ரல் நில அளவையில பரப்பளவு ஏர்ஸ் மற்றும் எக்டேரில் குறிக்கப்படுகிறது. நகர நில அளவையில் உட்பிரிவு ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு பரப்பளவு சதுர மீட்டரில் பதிவு செய்யப்படுகிறது.

நகர நில அளவைத் திட்டத்தின்கீழ் இதுவரை 1801 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு நில அளவை செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

[2010 ஏப்ரல் 21

வ.எண்	விவரம்	நகராட்சிகள்	மாநகராட்சிகள்
1.	மொத்த நகரங்கள் / மாநகரங்கள்	148	10
2.	நில அளவைப் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவை	106	7
3.	பணி முடிவுற்றவை	98	5
4.	பணி முன்னேற்றத்தில் உள்ளவை	*8	**2
5.	பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை	42	3

*நகராட்சிகள் - வேதாரண்யம் (நாகப்பட்டினம் மாவட்டம்)
கூடலூர் (தேனி மாவட்டம்)
அம்பாசமுத்திரம் (திருநெல்வேலி மாவட்டம்)
திருத்தங்கல் (விருதுநகர் மாவட்டம்)
கீழக்கரை (இராமநாதபுரம் மாவட்டம்)
திருப்பரங்குன்றம் (மதுரை மாவட்டம்)
காயல்பட்டினம் (தூத்துக்குடி மாவட்டம்)
கத்திவாக்கம் (திருவள்ளூர் மாவட்டம்)

**மாநகராட்சிகள்- சென்னை மாநகராட்சி
திருப்பூர் மாநகராட்சி

(ii) நத்தம் நில அளவை

நிலவரித் திட்டத்தின்போது கிராம நத்தம் என்பது 'நத்தம் புறம் போக்கு' என வகைப்படுத்தப்பட்டு அவ்வாறே நிலவரித் திட்டப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அவை களம், மேய்ச்சல் நிலம் போன்ற பொது பயன்பாட்டிற்குரிய பிறவகை புறம்போக்குகளிலிருந்து வேறுபட்டவையாகும் நத்தம் புறம்போக்குப் பகுதிகளில் குடியிருப்போர், அவர்கள் குடியிருக்கும் பகுதிக்கு சட்டப்படியான உரிமையுடையவராவர். ஆனால், வருவாய் ஆவணங்களில் அனுபவப்படி தனித்தனி உட்பிரிவு இல்லாமல் இருந்து வந்தது.

2010 ஏப்ரல் 21]

எனவே, நத்தம் நில அளவையில் உட்பிரிவு செய்யப்பட்டு, அனுபவத்தில் உள்ள பரப்பு எக்டேர், ஏர்ஸ் மற்றும் சதுர மீட்டரில் பதிவு செய்யப்படுகிறது.

நத்தம் நில அளவைப் பணி முடிவுற்ற விவரங்கள் பின்வருமாறு:

வ.எண்	பணி விவரம்	வட்டங்களின் எண்ணிக்கை
1.	மொத்த வட்டங்கள்	220
2.	பணி முடிக்கப்பட்டவை	215
3.	பணி முன்னேற்றத்தில் உள்ளவை	5*

* கீழ்க்காணும் வட்டங்களில் நத்தம் நில அளவைப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(1) திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டத்தில் உள்ள 29 நத்தம் கிராமங்களில், 21 கிராமங்களில் பணிகள் முடிவடைந்துள்ளன.

(2) திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டத்தில் உள்ள 26 நத்தம் கிராமங்களில், 19 கிராமங்களில் பணிகள் முடிவடைந்துள்ளன.

(3) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டத்தில் உள்ள 15 நத்தம் கிராமங்களில், 13 கிராமங்களில் பணிகள் முடிவடைந்துள்ளன.

(4) காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் வட்டத்திலுள்ள 7 நத்தம் கிராமங்களில் 5 கிராமங்களில் பணிகள் முடிவடைந்துள்ளன.

(5) காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டத்திலுள்ள 22 நத்தம் கிராமங்களில், 9 கிராமங்களில் பணிகள் முடிவடைந்துள்ளன.

மேற்காணும் வட்டங்களில் எஞ்சிய நத்தம் கிராமங்களில் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

4.3 நில ஆவணங்களை கணினிமயமாக்கும் திட்டம் (CLR)

- நில ஆவணங்களை கணினி மயமாக்குவதற்காக, "தமிழ் நிலம் " (Tamil Nadu Info System on Land Administration and Management) எனப்படும் தமிழ்நாடு நில நிர்வாகம்

[2010 ஏப்ரல் 21

மற்றும் மேலாண்மைத் திட்டத்தினை, தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறை செயல்படுத்தியுள்ளது. தமிழ் நிலம் எனும் இத்திட்டம் மாநிலத்திலுள்ள அனைத்து கிராமப்புற வட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நில ஆவணங்கள் குறித்த பரிவர்த்தனை அனைத்தும் கணினிமூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

- நில ஆவணங்களை கணினி மயமாக்கும் திட்டம், இத்துறைமூலம் மாநிலத்தில் அமல்படுத்தப்பட்டு வருகிறது.
- மாநிலத்தில், 215 வட்டங்களில் உள்ள கிராமப்புறப் பகுதிகளில் (சென்னை நீங்கலாக) 'அ' பதிவேடு மற்றும் சிட்டா பதிவேடுகள் கணினிமயமாக்கப்பட்டு, கணினிமூலம் நில ஆவண நகல்கள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.
- கணினிமூலம் வழங்கப்பட்ட நில ஆவண நகல்கள் வாயிலாக 05-03-2010 வரை ரூ.35.05 கோடி கட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ளது.
- மாவட்டங்களில் அடங்கல் பதிவேடுகள் கணினி மயமாக்கப்பட்டு பதிவுகளை சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. சென்னை மாவட்டத்திற்குட்பட்ட நகர்ப்புற நில ஆவணங்களை கணினிமயமாக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- வட்ட அலுவலகங்கள், வருவாய் கோட்ட அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் நில அளவை மற்றும் நிலவரித் திட்ட ஆணையரகம் ஆகிய அனைத்து அலுவலகங்களுக்கும் கணினி மற்றும் இதர உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- புலப்படங்களை கணினிமயமாக்கும் பணி (FMS) துறைப் பணியாளர்களைக் கொண்டு 27 மாவட்டங்களில் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதுவரை 3.66 இலட்சம் புலப்படங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் 2 மாவட்டங்களில் தேவையான உள்கட்டமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2010 ஏப்ரல் 21]

- புலப்படங்களை கணினிமயமாக்கும் பணி முடிவுற்றபின், நிலவியல் புள்ளிவிவரங்கள் 'தமிழ்நிலம்' தகவல் களஞ்சியத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு பராமரிக்கப்படும்.
- தமிழ்நாட்டிலுள்ள விவசாய நிலங்களின் நில உரிமை குறித்த பட்டா, சிட்டா விவரங்கள் மற்றும் 'அ' பதிவேட்டின் விவரங்களை அறியும் வகையில் "எங்கிருந்தும், எந்நேரத்திலும் இணைய வழிசேவை" என்னும் மின்னணு சேவையின்கீழ் (e-governance) *15-05-2008* அன்று தமிழ்நாடு அரசு துவக்கியுள்ளது. www.eservices.tn.gov.in என்ற இணையத்தளத்தின்மூலம் பட்டா, சிட்டா விவரங்கள் மற்றும் 'அ' பதிவேட்டின் விவரங்களை பொது மக்கள் அறிந்துகொள்ளலாம். இத்தளத்தில் உள்ள நில ஆவண விவரங்கள் ''தமிழ்நாடு அகன்ற பரப்பு கணினி வலையமைப்பு" (TNSWAN) மூலமாக தேசிய தகவல் தொடர்பு மையத்தினால் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

4.4 வருவாய் நிருவாகத்தினை மேம்படுத்துதல் மற்றும் நில ஆவணங்களை புதுப்பித்தல் (SRA&ULR)

- அனைத்து மாவட்டங்களின் கிராம வரைபடங்கள் ஒளிப்பதிவு (Scan) செய்யப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. மாநில ஆவணக் காப்பகத்தில் உள்ள நில அளவை மற்றும் நிலவரித் திட்ட ஆவணங்களும் ஒளிப்பதிவு செய்து பராமரிக்கப்படவுள்ளன.
- கணினிமயமாக்கப்பட்ட புல வரைபட மையம் மத்திய நில அளவை அலுவலகத்துடன் இணைக்கப்பட்டு நவீன உபகரணங்களைக் கொண்டு மேம்படுத்தப்பட்டுள்ளது. இதர உபகரணங்களாகிய நவீன வரையும் கருவி, வரைபட மென்பொருள் ஆகியவைகளும் இம்மையத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. கிராம, வட்ட மற்றும் மாவட்ட வரைபடங்கள் கணினிமூலம் தயாரிக்கப்படுகின்றன. பல்வேறு வரைபடங்கள் இவ்வரைபட மையத்திலிருந்து பொது மக்களுக்கு வழங்கப்படுகிறது.
- இத்துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களைச் செம்மையாக செயல்படுத்தவும், கூர்ந்து கண்காணிக்கவும் இத்துறையை கணினிமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[2010 ஏப்ரல் 21

- பொதுமக்களுக்கு கிராம, வட்ட, மாவட்ட வரைபடங்கள் மாவட்ட அளவிலேயே வழங்க ஏதுவாக ஒவ்வொரு மாவட்ட நில அளவை அலகுக்கும் தலா ஒரு வரையும் கருவி (வண்ண ப்ளாட்டர்) வழங்கப்பட்டுள்ளது.

- மாவட்ட நில அளவை அலுவலகங்கள் அனைத்திற்கும் தலா ஒரு ஜெராக்ஸ் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளன. 14 மாவட்ட உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கும், 5 துணை இயக்குநர் அலுவலகங்களுக்கும் நிகரி இயந்திரமும் வழங்கப்பட்டுள்ளன.

4.5 பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு

- வருவாய் மற்றும் நில அளவைத் துறையைச் சேர்ந்த 8872 பணியாளர்களுக்கு கணினியில் அடிப்படைப் பயிற்சி மற்றும் தமிழ்நிலம் மென்பொருள் கையாளுதல் ஆகியவற்றில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

- நவீன நில அளவை உபகரணங்களைக் கையாள ஏதுவாக சுமார் 1780 நில அளவைப் பணியாளர்களுக்கு சென்னை அண்ணா பல்கலைக்கழகத்திலுள்ள நில அளவை மற்றும் ஆராய்ச்சி மையம் (Center for Survey Training and Research) மூலம் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

- இத்துறையைச் சார்ந்த 55 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஜியோஸ்பேசியல் டெக்னாலஜி முறையில் துல்லியமாக நில அளவை செய்து வரைபடம் தயாரித்தல் தொடர்பாக ஹைதராபாத்தில் உள்ள சர்வே ஆஃப் இந்தியா நிலையத்தில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

4.6 நிலவரித் திட்டம்

தமிழக அரசு பெருமளவில் மேற்கொண்ட நிலச் சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாக அரசுக்கும் ரயத்துகளுக்கும் இடையிலிருந்த அனைத்து இடைத்தரகர்களை நீக்குமுகமாக எஸ்டேட் மற்றும் இனாம் ஒழிப்புச் சட்டம் போன்ற பல்வேறு ஒழிப்புச் சட்டங்களை இயற்றி மாநிலம் முழுவதும் ரயத்துவாரி நிலவரித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

தமிழ்நாடு இனாம் எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963-ன்படி மேற்கொள்ளப்பட்ட

2010 ஏப்ரல் 21]

ரயத்துவாரி நிலவரித் திட்டப் பணிகள் நீதிமன்ற வழக்குகள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் நிலுவையாக உள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அரயபுரம் தட்டிமால்படுகை மற்றும் சூரிய நாராயணபுரம் கிராமங்கள், நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள இராமச்சந்திரன் கோவில்பத்து கிராமம், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கழனிவாய்ப்பட்டி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள சென்னசந்திரம், மாரசந்திரம், உளியாலம், பைரசந்திரம், இளையசந்திரம் மற்றும் திம்மசந்திரம் ஆகிய கிராமங்களில் இப்பணிகள் நிலுவையிலுள்ளன.

தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963-ன்படி மேற்கொள்ளப்பட்ட நிலவரித் திட்டப்பணிகள் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள காரணப்பட்டி, கோதண்டராமபுரம், நிலையப்பட்டி கிராமங்களிலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள அகஸ்தியம்பள்ளி கிராமம், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள தாரிம்கொம்பன் கிராமம் ஆகிய கிராமங்களிலும் நீதிமன்ற வழக்குகள் உட்பட பல்வேறு காரணங்களினால் நிலுவையாக உள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1969-ன்படி மேற்கொள்ளப்பட்ட நிலவரித் திட்டப் பணி முன்னேற்றத்தில் உள்ளது. மொத்தமுள்ள 80,087.74 ஏக்கர் ஜென்மம் நிலங்களில் 28,087.03 ஏக்கர் பரப்பில் நிலவரித் திட்டப் பணி முடிக்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள 52,000.71 ஏக்கரில் 42,752.62 ஏக்கர் நிலம் நிலவரித் திட்ட அலுவலரால் (கூடலூர் ஜென்ம நிலம்) அரசுக்கு மீட்சி செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து உதகை இனாம் ஒழிப்பு தீர்ப்பாயத்தில் தொடரப்பட்ட வழக்குகளும் இச்சட்டத்தின் செல்லத்தக்க நிலையை ஆட்சேபித்து உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நான்கு வழக்குகளும் நிலுவையில் உள்ளன.

(i) நத்தம் நிலவரித் திட்டம்

அரசாணை (நிலை) எண் 1971 வருவாய்த் துறை நாள் 14-10-1988-ன்படி நத்தம் நிலவரித் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு தமிழ்நாடு முழுவதிலுமுள்ள 188 வட்டங்களில் நத்தம்

[2010 ஏப்ரல் 21

நிலவரித் திட்டப் பணி முடிக்கப்பட்டு மொத்தம் 74,16,470 பட்டாக்கள் வழங்கப்பட்டன. தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அகஸ்தீஸ்வரம், தோவாளை, விளவங்கோடு, கல்குளம் ஆகிய வட்டங்களிலும், நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி, குந்தா, கூடலூர் மற்றும் பந்தலூர் ஆகிய வட்டங்களிலும், காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள தாம்பரம், ஆலந்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் வட்டங்களிலும் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள அம்பத்தூர் மற்றும் மாதவரம் வட்டங்களிலும் நத்தம் நிலவரித் திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இதுவரை மேற்குறிப்பிட்ட 12 வட்டங்களில் 15,215 நத்தம் மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. சென்னை மாவட்டம், அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சிகளிலும் நத்தம் நிலவரித் திட்டம் பணி தொடங்கப்பட வேண்டியுள்ளது.

(ii) வருவாய் பின்தொடர் பணி

1937 ஆண்டிலிருந்து மறு நிலவரித் திட்டப் பணி நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் இரயத்துவாரி நிலவரித் திட்டத்தின்போது அறிமுகப்படுத்தப்பட்ட வருவாய் ஆவணங்களை மேம்படுத்தும்பொருட்டும், அரசு புறம்போக்கு நிலங்களின் எல்லைகளை வரையறுக்கும்பொருட்டும், தற்போதைய நில உடமைதாரர்களுக்கு பட்டா வழங்கும்பொருட்டும், வருவாய் ஆவணங்களான 'அ' பதிவேடு, சிட்டா, 2சி பதிவேடு ஆகியவற்றை புதியதாக தயாரித்து ஒப்படைப்பதற்காகவும் வருவாய் பின்தொடர் பணி தொடங்கப்பட்டுள்ளது.

(அ) மலைக்கிராமங்களில் வருவாய் பின்தொடர் பணி

67 மலைக்கிராமங்களில் வருவாய் பின்தொடர் பணி துவக்கப்பட்டு 60 மலைக்கிராமங்களில் மேற்படி பணி முடிக்கப்பட்டுள்ளது. பின்வரும் 7 கிராமங்களில் இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது:-

(1) ஏலகிரி (வேலூர் மாவட்டம்) (2) பச்சமலை (சேலம் மாவட்டம்) (3) ஆணைமலை-வால்பாறை (கோயம்புத்தூர் மாவட்டம்) (4) அடுக்கம் புதுக்கோம்பை (5) சித்தூர்நாடு (6) பெலாப்பாடி நாடு மற்றும் (7) குண்டூர் நாடு (நாமக்கல் மாவட்டம்).

2010 ஏப்ரல் 21]

(ஆ) நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் வருவாய் பின்தொடர் பணி

அரசாணை எண் (1டி) எண் 103, வருவாய்த் துறை, நாள் 1-3-2007-ல் 6 மாநகராட்சிகள் (பழைய சென்னை நகரம் நீங்கலாக) மற்றும் அனைத்து நகராட்சிகளில் வருவாய் பின்தொடர் பணிகளை அறிமுகப்படுத்த ஆணையிடப்பட்டது. அவற்றில் முதற்கட்டமாக கீழ்க்காணும் 9 நகராட்சிகளிலும், 2 மாநகராட்சிகளிலும் துவங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

1. வாலாஜாபேட்டை (வேலூர் மாவட்டம்), 2. ஆரணி (திருவண்ணாமலை மாவட்டம்), 3. பண்ருட்டி (கடலூர் மாவட்டம்), 4. அறந்தாங்கி (புதுக்கோட்டை மாவட்டம்), 5. துறையூர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), 6. பெரியகுளம் (தேனி மாவட்டம்), 7. பழனி (திண்டுக்கல் மாவட்டம்), 8. பவானி (ஈரோடு மாவட்டம்), 9. ராசிபுரம் (நாமக்கல் மாவட்டம்) ஆகிய நகராட்சிகளிலும் தூத்துக்குடி மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 21,672 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் மீதமுள்ள நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் இப்பணி நீட்டிக்கப்பட வேண்டியுள்ளது.

4.7 வக்ஃப் வாரிய சொத்துகளின் நில அளவை:

வக்ஃப் வாரிய சொத்துகளை நல்முறையில் நிர்வாகம் செய்வதற்கும், அது தொடர்பான விவகாரங்களை முறையாக கவனிப்பதற்காகவும் இந்திய அரசு 'வக்ஃப்' சட்டம் 1995ஐ இயற்றியது. நில அளவை மற்றும் நிலவரித் திட்ட ஆணையர் தமிழ்நாட்டின் வக்ஃப் சொத்து கணக்கெடுப்பு ஆணையராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். மாநிலம் முழுவதும் இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது.

[2010 ஏப்ரல் 21

அத்தியாயம்-V

நிலச் சீர்திருத்தம்

5.1 நிலச் சீர்திருத்தம் மற்றும் உபரி நிலத்தைப் பகிர்ந்தளித்தல்:

விவசாய நிலங்கள் சிலரிடம் மட்டுமே மிக அதிக அளவில் இருப்பதால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைப் போக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடன் 1961 ஆம் ஆண்டின் தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/1961) இயற்றப்பட்டது. இச்சட்டம், விவசாய நில உடமைகளுக்கு உச்சவரம்பினை நிர்ணயிக்கவும் உச்சவரம்பிற்கு மேல் உள்ள நிலங்களை உபரி நிலமாக அறிவிக்கவும் அத்தகைய உபரி நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்குவதற்கும் அதன்மூலம் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்பாடு அடையச் செய்து சமுதாயத்தில் அவர்களின் நிலையை உயர்த்துவதற்கும் வழிவகை செய்கிறது.

தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம் 1961-ன்படி ஐந்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 30 தர ஏக்கர் (Standard Acres) நிலமும், குடும்பத்தில் 5 உறுப்பினர்களுக்குக் கூடுதலாக இருக்கும்பட்சத்தில் ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் கூடுதலாக ஐந்து தர ஏக்கர் நிலமும் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரு குடும்பத்திற்கு ஒட்டுமொத்த உச்சவரம்பாக 60 தர ஏக்கர் என நிர்ணயிக்கப்பட்டது. அது தவிர, குடும்பத்திலுள்ள பெண் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் சீதன நிலமாக 10 தர ஏக்கர் நிலம் கூடுதலாக அனுமதிக்கப்பட்டது.

நிலச் சீர்திருத்தத்தின் பயன்களை அதிகரிக்கும் நோக்கத்துடன் முதன்மைச் சட்டத்திலுள்ள நடைமுறைகளை மேலும் சீர்படுத்தி தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு குறைத்தல்) சட்டம், 1970 (தமிழ்நாடு சட்டம் 17/1970) இயற்றப்பட்டது. அதன்படி, 5 நபர் கொண்ட ஒரு குடும்பத்திற்கான விவசாய நிலத்தின் உச்சவரம்பு 30 தர ஏக்கரிலிருந்து 15 தர ஏக்கராக குறைக்கப்பட்டது. மேலும், முதன்மைச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 58/1961) ஒரு குடும்பத்திற்கு (5 நபருக்கு மேல் இருந்தால்) நிர்ணயிக்கப்பட்ட ஒட்டுமொத்த உச்சவரம்பான 60 தர ஏக்கர் அளவினை, தமிழ்நாடு சட்டம் 20/1972 (திருத்தச் சட்டம் 20/1972)-ன்மூலம் 40 தர ஏக்கர் அளவிற்குக் குறைக்கப்பட்டது. பின்னர், இந்த ஒட்டுமொத்த

2010 ஏப்ரல் 21]

உச்சவரம்பானது 30 தர ஏக்கர் அளவாக தமிழ்நாடு சட்டம் 39/1972ன்மூலம் குறைக்கப்பட்டது. தற்போது நடைமுறையிலுள்ள நில உச்சவரம்பு அளவு பின்வருமாறு:-

வ. எண்	விவரம்	அனுமதிக்கப்பட்ட நிலப்பரப்பு
1.	ஐந்து நபர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு (தனியார் நம்பகம் மற்றும் கம்பெனி உட்பட)	15 தர ஏக்கர்
	i) ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கு	5 தர ஏக்கர்
	ii) மொத்த உச்சவரம்பு	30 தர ஏக்கர்
2.	(அ) சட்ட துவக்க நாளில் அறக்கட்டளை நிறுவனங்களுக்கு (ஆ)சட்ட துவக்க நாளில் மத சார்பான பொதுநம்பகங்கள் அல்லது மதசார்பான நிறுவனங்களுக்கு	5 தர ஏக்கர் நில உச்சவரம்பு சட்டம் பொருந்தாது.
3.	1-3-72-க்குப் பிறகு எந்த ஒரு பொது நம்பகமும் விவசாய நிலங்கள் பெறுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது.	–
4.	தமிழ்நாடு சட்டம் 29/87 சட்டப்பிரிவு 37(பி) -ன்படி பொது நம்பகங்கள் கல்வி மற்றும் மருத்துவமனை பயன்பாட்டிற்காக 1-3-1972-க்குப் பிறகு நிலங்களை வைத்துக் கொள்ள அல்லது வாங்குவதற்கு அரசின் அனுமதி பெற மனுச் செய்ய வேண்டும்.	–

உபரி நிலம் மற்றும் ஒப்படை செய்தல்:

1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட மிகை நிலங்கள், 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (மிகை நில விநியோகம்) விதிகளின்கீழ் தகுதியுடைய

[2010 ஏப்ரல் 21

நிலமற்ற நபர்களுக்கு ஒப்படை செய்யப்படுகிறது. 1961-ல் சட்டமியற்றப்பட்டாலும் 1970-1980-ல்தான் மிக அதிக அளவில் உபரி நிலம் அறிவிக்கப்பட்டு ஏழை எளியவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டது. 1970-1980 ஆண்டுகளில் அதற்குமுன் இல்லாத அளவாக உபரியாக அறிவிக்கப்பட்ட மொத்த நிலம் 1,08,132 ஏக்கர் ஆகும். இக்கால கட்டத்தில் மொத்தம் 70,730 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டு 51,244 பேர் பயனடைந்தனர். அவ்வாறே 1980-1990 ஆம் ஆண்டுகளில் 50,834 ஏக்கர் நிலம் உபரியாக அறிவிக்கப்பட்டு அதற்குமுன் உபரியாக அறிவிக்கப்பட்டிருந்த நிலத்தையும் சேர்த்து 59,647 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டு 53,494 நபர்கள் பயனடைந்தனர்.

நிலச் சீர்திருத்தச் சட்டம் செயல்படுத்தப்பட்ட நாளிலிருந்து 28-2-2010 வரையில் உள்ள மிகை நிலமென அறிவிப்பு செய்யப்பட்ட மொத்தப் பரப்பின் விவரம், அதிலிருந்து நில ஒப்படை (பயனாளிகள்) பெற்ற ஏழை எளியவர்களின் எண்ணிக்கை, நிலப்பரப்பு ஆகியவற்றின் விவரம் பின்வருமாறு:-

ஆண்டு	உபரியாக அறிவிக்கப்பட்ட நிலம்	ஒப்படை செய்யப்பட்ட நிலம்	பயனாளிகளின் எண்ணிக்கை
	(ஏக்கரில்)		
1961-1970	19,028	14,074	7,978
1970- 1980	1,08,132	70,730	51,244
1980- 1990	50,834	59,647	53,494
1990- 1996	15,093	34,953	21,297
1996- 2001	7,156	10,459	8,334
2001- 2006	6,603	8,371	6,439
2006- 2007	1,160	1,011	773
2007- 2008	201	659	600
2008- 2009	176	284	257
2009- 2010 **(28-2-2010 வரை)**	40	70	75
மொத்தம்	2,08,423	(*) 2,00,258	1,50,491

(*) இதில் பொது நோக்கத்திற்காக, அதாவது பொதுமக்கள் பயனுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 10,185 ஏக்கர் நிலமும் அடங்கும்.

2010 ஏப்ரல் 21]

வகுப்புவாரியாக உபரி நிலம் ஒப்படை பெற்ற பயனாளிகளின் விவரம் பின்வருமாறு:-

பயனடைந்தோர் (இனவாரியாக)	நபர்கள்	ஒப்படை செய்யப்பட்ட பரப்பு (ஏக்கரில்)
ஆதி திராவிடர்	66,448	71,298
பழங்குடியினர்	236	320
மற்றவர்கள்	83,807	1,18,455
மொத்தம்	1,50,491	1,90,073
பொது நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலம்		10,185
கூட்டுமொத்தம்		2,00,258

ஒப்படை வழங்கப்பட வேண்டிய மீதமுள்ள நிலங்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகளுக்குட்பட்ட நிலங்களின் விவரம் பின்வருமாறு:-

விவரம்	பரப்பு (ஏக்கரில்)
மிகை நிலமாக அறிவிக்கப்பட்ட நிலப்பரப்பு	2,08,423
நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலப்பரப்பு	1,90,073
1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (மிகை நில விநியோகம்) விதிகளின் விதி 13–இன் கீழ் பொது நலனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப்பரப்பு	10,185
மொத்தம் ஒப்படை செய்யப்பட்டது	2,00,258
மீதியுள்ள நிலப்பரப்பு	8,165
உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம், நில ஆணையர், மற்றும் சார்பு நீதிமன்றங்கள் ஆகியவை பிறப்பித்துள்ள தடையாணைக்குட்பட்ட நிலம்	8,044
ஒப்படை செய்யப்பட வேண்டிய மீதி நிலம்	121

2009-2010 ஆம் நிதியாண்டில் 28-2-2010 வரை 75 நபர்களுக்கு 70 ஏக்கர் மிகை நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டுள்ளன. இதில் 47 ஆதி திராவிட பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட 36 ஏக்கர் நிலமும் அடங்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 21

5.2 குடிவாரச் சட்டங்கள்

(i) 1955 ஆம் ஆண்டின் தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1955)

இச்சட்டம், குத்தகைதாரர்களை அவர்கள் பயிரிட்டு வரும் நிலங்களை விட்டு, தக்க காரணமில்லாமல் வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பதற்காக இயற்றப்பட்டுள்ளது. அதன்படி குத்தகை நிலத்திற்கோ அல்லது அந்நிலத்தில் விளையும் பயிர்களுக்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்படுதல், நிலத்தில் பயிர் செய்யாமல் இருத்தல், வேளாண்மை அல்லது தோட்டப்பயிர் செய்யாமல் வேறு காரணத்திற்காக நிலத்தினை உபயோகித்தல், நில உரிமையாளரின் உரிமையைப் பறித்தல் ஆகிய காரணங்களன்றி வேறு காரணங்களுக்காக குத்தகைதாரர்கள் அவர்கள் குத்தகை சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதைத் தடை செய்து இச்சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது. வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களினால் குத்தகைதாரர்கள் பாதிக்கப்படும்பொழுது குத்தகை பாக்கித் தொகையை வசூலிப்பதை தனிச் சட்டத்தின் மூலம் அவ்வப்பொழுது அரசால் ஒத்தி வைத்து நிவாரணம் அளிக்கவும் வழி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக நில உரிமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்களிடையே ஏற்படும் தகராறுகள் வருவாய் நீதிமன்றங்கள்மூலம் தீர்வு செய்யப்படுகின்றன.

(ii) 1956 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்களின் நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/1956)

இச்சட்டத்தின்படி நிலத்தைப் பயிரிடும் குத்தகைதாரர் சாதாரண மொத்த விளைச்சலில் 25 விழுக்காடு மட்டும் நிலச் சொந்தக்காரருக்கோ அல்லது அறக்கட்டளைகளுக்கோ (Trusts) பயிரிடும் குத்தகைதாரர்கள் செலுத்த வேணடிய நியாயக் குத்தகையாக நிர்ணயித்துள்ளது. குத்தகையை பணமாகவோ, விளை பொருளாகவோ செலுத்தலாம். ஆனால் நில உரிமையாளர்கள் செலுத்த வேண்டிய நிலவரி தவிர, பயிரிடுவதற்கான மற்ற செலவுகள் முழுவதையும் குத்தகைதாரர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இச்சட்டத்தின்கீழ் நிலஉடமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்கள் இடையே ஏற்படும் தகராறுகள் அனைத்தும் வருவாய் நீதிமன்றங்களால் தீர்வு செய்யப்படுகின்றன.

2010 ஏப்ரல் 21]

(iii) 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்களின் நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 57/1961)

இச்சட்டத்தின்கீழ், பொது அறக்கட்டளைகள் (Public Trusts) தங்களுடைய சொந்த சாகுபடிக்கு அதிகபட்சமாக 20 தர ஏக்கர் நிலம் மட்டும் வைத்துக்கொள்வதற்கும், அதற்கு மேலுள்ள விவசாய நிலத்தை கட்டாயமாக பிறருக்கு சாகுபடி குத்தகைக்கு கொடுக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டம் பொது அறக்கட்டளைகளுக்கும் விவசாய குத்தகைதாரர்களுக்குமிடையே உள்ள உறவை வரைமுறைப்படுத்த வழிவகை செய்கிறது. இது தொடர்பாக எழும் பிரச்சினைகளும் வருவாய் நீதிமன்றங்களால் தீர்வு செய்யப்படுகின்றன.

(iv) 1969 ஆம் ஆண்டின் தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் ஆவணம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1969)

இச்சட்டத்தின்படி பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களைக் குத்தகைதாரர்களாக பதிவு செய்து கொள்வதன்மூலம் அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. வட்டாட்சியர்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு அலுவலர்களாக செயல்படுகின்றனர். அவர்களுக்கு உதவிபுரிய அலுவல் சார்பற்றவர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுக்கள் உள்ளன. 28-2-2010 வரை மொத்தம் 2,63,412 நபர்கள் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

(v) 1971 ஆம் ஆண்டின் தமிழ்நாடு குடியிருப்பு அனுபவதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/1971) திருத்தியவாறு

இச்சட்டத்தின்படி 19-6-1971 அன்று குத்தகைதாரராகவோ அல்லது உரிமம் பெற்றவராகவோ குடியிருப்பு அமைத்து, அனுபவித்து வரும் விவசாயி அல்லது விவசாயத் தொழிலாளருக்கு குடியிருப்பு உரிமை (பட்டா) வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. 1976 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கிராமப்புற கைவினைஞர்கள் (குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குதல்) சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 38/76), 1-7-1975-இல் குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள சொந்த வீட்டுமனை இல்லாத கிராமப்புற கைவினைஞர்களும் குடியிருப்புப் பட்டா பெற வகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இரு சட்டங்களின் கீழும், சட்டம் (39/1990)-ன்படி 1-4-1990 வரை குடியிருப்பு கால எல்லை

[2010 ஏப்ரல் 21

நீட்டிக்கப்பட்டுள்ளது. 28-2-2010 வரையில் இச்சட்டத்தின்கீழ் குடியிருப்புப் பட்டா பெற்று பயனடைந்தோர் விவரங்கள் பின்வருமாறு:-

வகுப்பினர்	நபர்களின் எண்ணிக்கை			மொத்தம்
	சட்டம் 40/1971 (விவசாயிகள் / விவசாய தொழிலாளர்கள்)	சட்டம் 38/1976 (கிராமப்புற கைவினைஞர்கள்)	சட்டம் 39/1990 (விவசாயிகள் / விவசாய தொழிலாளர்கள் மற்றும் கிராமப்புற கைவினைஞர்கள்)	
ஆதிதிராவிடர்	1,00,218	62	1,052	1,01,332
பழங்குடியினர்	2,317	17	412	2,746
ஏனையோர்	80,022	363	308	80,693
மொத்தம்	1,82,557	442	1,772	1,84,771

(vi) 1969 ஆம் ஆண்டின் தமிழ்நாடு வேளாண்மை தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 19/1969)

நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறுபட்ட விவசாயப் பணிகளுக்காக நியாய ஊதியம் நாள் ஒன்றுக்கு 6 மணி நேர வேலை செய்யும் ஆண் தொழிலாளர்களுக்கு ரூ.54/- முதல் ரூ.100/- வரை ஊதியமும், நாள் ஒன்றுக்கு 5 மணி நேர வேலை செய்யும் பெண் தொழிலாளர்களுக்கு ரூ.45/- என ஊதியமும் வழங்க இச்சட்டத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள இதர மாவட்டங்களைப் பொறுத்தவரை குறைந்தபட்ச ஊதியச் சட்டம் 1948 பொருந்தும்.

(vii) வருவாய் நீதிமன்றங்கள்

தமிழ்நாடு முழுவதும் ஆறு வருவாய் நீதிமன்றங்கள் கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தனித்துணை ஆட்சியர்களின்கீழ் தற்போது செயல்பட்டு வருகின்றன. 1969 ஆம் ஆண்டின் தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமை ஆவணச்) சட்டத்தின்கீழ் வட்டாட்சியர்களின் ஆணைக்கு எதிராகத் தொடரப்படும் மேல்முறையீட்டு மனுக்களை விசாரணை செய்து முடிவுசெய்யும் பணியினை இந்த நீதிமன்றங்கள் மேற்கொள்கின்றன. இது தவிர

2010 ஏப்ரல் 21]

மேலே குறிப்பிட்டுள்ள பல்வேறு குடிவாரச் சட்டங்களையும் இவை செயல்படுத்தி வருகின்றன.

5.3 தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம்

விவசாயத் தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும்பொருட்டு, அரசாணை (நிலை) எண் 62, வருவாய்த் துறை, நாள் 9-2-2001-ல் 'தமிழ்நாடு விவசாய தொழிலாளர் சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம்-2001 என்ற திட்டம் துவங்கப்பட்டது. பின்னர், அரசாணை (நிலை) எண் 509, வருவாய்த் துறை, நாள் 7-8-2006-இல் "தமிழக முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2005" என்ற திட்டத்திற்குப் பதிலாக, மேம்படுத்தப்பட்ட திட்டமான "தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்-விவசாயிகள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் 2006" என்ற புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு ஆணையிட்டது. இந்த திட்டம் 22-12-2006 முதல் வருவாய்த் துறை மூலம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாவட்ட ஆட்சியர்களின் மேற்பார்வையின்கீழ் பணியாற்றும் சிறப்பு வட்டாட்சியர்கள் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பினை வகிக்கிறார்கள். மாநில அளவில் தமிழ்நாடு விவசாய தொழிலாளர் நல வாரியம் இத்திட்டத்தின் செயல்பாட்டினை கண்காணித்து வருகிறது. நிலச்சீர்திருத்த இயக்குநர் இவ்வாரியத்தின் உறுப்பினர்-செயலாளராகச் செயல்படுகிறார். இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்களுக்கு பின்வருமாறு நிதி உதவி/நிவாரணம் வழங்கப்படுகிறது:—

வரிசை எண்	நிவாரணம் / உதவி	தொகை (ரூபாயில்)
1.	விபத்து நிவாரணம் (அ) விபத்தினால் மரணம்	1,00,000
	(ஆ) இரண்டு கைகள் இழப்பு	1,00,000
	(இ) இரண்டு கால்கள் இழப்பு	1,00,000
	(ஈ) ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு	1,00,000

[2010 ஏப்ரல் 21

வரிசை எண்	நிவாரணம் / உதவி	தொகை (ரூபாயில்)			
	உ) இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழப்பு	1,00,000			
	ஊ) ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு	50,000			
	எ) மேலே கண்ட இனங்கள் தவிர வேறு கடுமையான காயம் ஏற்பட்டு உடல் உறுப்பு இழப்பு	20,000			
2.	இயற்கை மரணம்	10,000			
3.	ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை	2,500			
4.	உறுப்பினரின் மகன் / மகள் கல்வி உதவித் தொகை	விடுதியில் தங்காதோர்		விடுதியில் தங்கிப் படிப்போர்	
		மாணவர்	மாணவியர்	மாணவர்	மாணவியர்
	அ) பத்தாம் வகுப்பு தேர்ச்சி	1250	1500	–	–
	ஆ) பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி	1750	2000	–	–
	இ) தொழிற் பயிற்சி (I.T.I.) மற்றும் பல்தொழில் நுட்ப பயிற்சி (Polytechnic) (ஆண்டுஒன்றிற்கு)	1250	1750	1450	1950
	ஈ) இளங்கலைப் பட்டப்படிப்பு (ஆண்டு ஒன்றிற்கு)	1750	2250	2000	2500
	உ) முதுகலைப் பட்டப்படிப்பு (ஆண்டு ஒன்றிற்கு)	2250	2750	3250	3750
	ஊ) சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற தொழில் கல்விகள் இளங்கலை (ஆண்டு ஒன்றிற்கு)	2250	2750	4250	4750

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 21]

வரிசை எண்	நிவாரணம் / உதவி	தொகை (ரூபாயில்)			
	ஏ) முதுகலை தொழில் கல்விகள் (ஆண்டு ஒன்றிற்கு)	4250	4750	6250	6750
5.	திருமண உதவி அ) உறுப்பினரின் திருமணம் (i) ஆண் (ii) பெண்	3000 5000			
	ஆ) உறுப்பினரின் மகன் / மகள் திருமணம் (i) ஆண் (ii) பெண்	3000 5000			
6.	மகப்பேறு/கருச்சிதைவு/ கருக்கலைப்பு உதவித் தொகை (i) மகப்பேறு (ii) கருச்சிதைவு (iii) கருக்கலைப்பு	6000 (மாதம் ஒன்றிற்கு ரூ.1000 வீதம் ஆறு மாதங்கள் கருவுற்ற ஏழாவது மாதம் முதல்) 3000 3000			
7.	முதியோர் ஓய்வூதியம் (மாதம் ஒன்றுக்கு)	400			

இத்திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட உதவித்தொகை விவரங்கள் பின்வருமாறு:—

ஆண்டு	வழங்கப்பட்டத் தொகை (ரூபாய் கோடியில்)	பயனாளிகளின் எண்ணிக்கை
2006-2007	7.63	25,618
2007-2008	136.34	2,33,913
2008-2009	139.19	1,38,379
2009-2010 (28-2-2010 வரை)	132.29	1,12,594
கூடுதல்	415.45	5,10,504

[2010 ஏப்ரல் 21

இத்திட்டத்தின்கீழ் 28-2-2010 வரையில் 76 லட்சம் குடும்பங்களைச் சார்ந்த 173 லட்சம் நபர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதுவரை 5.10 லட்சம் பயனாளிகளுக்கு ரூ.415 கோடி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை வரும் நிதியாண்டில் தொடர்ந்து செயல்படுத்த ரூ.152 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.4 பூமிதான வாரியம்

பூமிதான இயக்கம் ஆச்சார்ய வினோபாபாவே அவர்களால் 1951 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. பூமிதான இயக்கத்திற்கு பயிரிடும் நிலங்களை தானம் செய்வது இதன் சிறப்பு அம்சமாகும். ஆச்சார்ய வினோபாபாவே அவர்கள் தமிழ்நாட்டில் 13.3.1956 முதல் 18-4-1957 வரை பல்வேறு மாவட்டங்களில் பாதயாத்திரையாக விரிவான சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இந்த இயக்கத்திற்கு நில உரிமையாளர்கள் தாமாக முன்வந்து விவசாய நிலங்களை தானமாக வழங்கினர். அவ்வாறு பெறப்பட்ட தானத்தை முறைப்படுத்தி நில உடைமையை பூமிதான வாரியத்தின் பெயரில் மாற்றி அதனை நிலமில்லாத ஏழைகளுக்கு வழங்கவும், கிராமதான கிராமங்களை ஏற்படுத்தவும் "தமிழ்நாடு பூமிதான இயக்கச் சட்டம் 1958" இயற்றப்பட்டது. பின்னர் பூமிதானச் சட்டத்தின் விதிமுறைகள் 1959ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

தற்பொழுது தமிழ்நாடு பூமிதான வாரியத்தினை மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 14 உறுப்பினர்களுடன் அரசு திருத்தி அமைத்து ஆணையிட்டுள்ளது.

பூமிதானமாக பெறப்பட்ட மொத்தம் 28,060.41 ஏக்கர் நிலங்களில், 6-2-2001 வரை 20,485.35 ஏக்கர் நிலங்கள் நிலமில்லாத ஏழைகளுக்கு விவசாயப் பயன்பாட்டிற்காக தானமாக வழங்கப்பட்டுள்ளன.

5.5 தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு (ம) முறைப்படுத்துதல்) சட்டம் 1978

நகர்ப்புற நிலங்கள் ஒரு சிலரிடம் மட்டும் மிக அதிகமாக இருப்பதைத் தடுக்கவும் நகர்ப்புற நிலங்களை வாங்குவது மற்றும் விற்பதை முறைப்படுத்தவும் நகர்ப்புற வெற்று நிலங்களுக்கான உச்சவரம்பு நிர்ணயிக்கும் நோக்குடன் தமிழ்நாடு நகர்ப்புற நில

2010 ஏப்ரல் 21]

(உச்சவரம்பு (ம) முறைப்படுத்துதல்) சட்டம் 1978 (மைய அரசு சட்டம் 33/1976-ன்படி) இயற்றப்பட்டது. இச்சட்டம் 3-8-1976 முதல் நடைமுறைக்கு வந்தது. சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு (ம) முறைப்படுத்துதல்) சட்டம் 1978, தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு (ம) முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டம் 1999 (தமிழ்நாடு சட்டம் 20/99)ன் மூலமாக 16-6-1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டது. முதன்மைச் சட்டத்தின்கீழ் 15-6-1999 வரை கையகப்படுத்தப்பட்டு அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்களுக்கு, இந்நீக்கறவுச் சட்டம் பொருந்தாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நீக்கறவுச் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு கையகப்படுத்தப்பட்ட மிகை நகர்ப்புற வெற்று நிலத்தினை பொது நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்வது குறித்து அரசாணை (நிலை) எண் 353, வருவாய்த் துறை, நாள் 30-6-2000-ல் நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. இவ்வாறு கையகப்படுத்தப்பட்ட நிலங்கள், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், உள்ளாட்சி அமைப்புகள், தமிழ்நாடு மின்சார வாரியம், போக்குவரத்து மற்றும் இதர அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

இச்சட்டத்தின்கீழ் 2472 எக்டேர் மிகை வெற்று நிலம் கையகப்படுத்தப்பட்டது. இதில் இதுவரை பொது நோக்கங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலங்கள், வழக்குகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளால் கைவிடப்பட்டவை போக மீதமுள்ள 1,148 எக்டேர் மிகை வெற்று நிலம் ஒதுக்கீடு செய்ய கையிருப்பில் உள்ளது. இவற்றில் அறியாமல் கிரயம் பெற்ற நபர்களின் வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் நிலப்பரப்பும் அடங்கும்.

(i) விவரம் அறியாது நிலம் வாங்கியவர்களுக்கான முறைப்படுத்தும் திட்டம்

நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழான நடவடிக்கைகள் பற்றி விவரத்தை அறியாமல் நிலத்தைக் கிரயம் பெற்ற பொதுமக்களின் சிரமத்தினைப் போக்கும் வகையில் அரசாணை

[2010 ஏப்ரல் 21

(நிலை) எண் 649, வருவாய்த் துறை, நாள் 29-7-1998ல் திட்டத்தை அரசு அறிவித்தது. இத்திட்டத்தின்படி 1½ கிரவுண்டு வரை, குடியிருப்பு வீடு கட்டுவதற்காக நிலம் வாங்கியிருப்பின் அதனை அரசு நிர்ணயித்த மதிப்பினைச் செலுத்தி வரன்முறைப்படுத்திக் கொள்ளலாம். அதன்பின்னர், இச்சட்டம் பற்றி அறியாமல் கிரயம் பெற்ற அனைத்து தரப்பினரும் தாங்கள் கிரயம் பெற்ற பரப்பளவிற்கு ஏற்றவாறு அரசால் நிர்ணயிக்கப்பட்ட நில மதிப்பினை செலுத்தி கிரயத்தினை வரன்முறைப்படுத்திக் கொள்ளலாம் என அரசாணை நிலை எண் 565, வருவாய்த் துறை, நாள் 26-09-2008ல், ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிலங்களை வரன்முறைப்படுத்த அரசால் வசூலிக்கப்படும் வரன்முறைத் தொகை பின்வருமாறு:

மண்டலம்	ஒரு கிரவுண்டுக்கு நிலமதிப்பு (ரூபாயில்)
(1)	(2)
(அ) சென்னை நகர கூட்டுப்பகுதி	
தியாகராய நகர், மயிலாப்பூர் எழும்பூர், தண்டையார்பேட்டை	5,57,500
பூந்தமல்லி, மாதவரம், தாம்பரம், ஆலந்தூர், குன்றத்தூர்	55,750
அம்பத்தூர்	22,300
(ஆ) மற்ற நகர கூட்டுப்பகுதிகள்	
சேலம்	1,42,162
கோயம்புத்தூர்	66,343
திருச்சிராப்பள்ளி	47,388
மதுரை	30,105
திருநெல்வேலி	12,544

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 21]

(i) 1½ கிரவுண்டு பரப்பளவு வரை நிலம் கிரயம் பெற்றவர்கள் மேற்கூறிய தொகையை செலுத்த வேண்டும்.

(ii) 1½ கிரவுண்டு முதல் 3 கிரவுண்டு பரப்பளவு வரை நிலம் கிரயம் பெற்றவர்கள் மேற்குறிப்பிட்ட நில மதிப்பில் இரண்டு மடங்கு தொகையை செலுத்த வேண்டும்.

(iii) 3 கிரவுண்டுக்குமேல் நிலம் கிரயம் பெற்றவர்கள் மேற்குறிப்பிட்ட நிலமதிப்பில் மூன்று மடங்கு தொகையை செலுத்த வேண்டும்.

1½ கிரவுண்டு பரப்பளவு வரை உள்ள நிலத்தை வரன்முறைப்படுத்தும் அதிகாரம் நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளது. 1½ கிரவுண்டு பரப்பளவுக்கு மேல் உள்ள நிலத்தை வரன்முறைப்படுத்தும் அதிகாரம் அரசிடம் உள்ளது. 28-2-2010 வரை 808 இனங்கள் வரன்முறைப்படுத்தப்பட்டு அதில் கட்டணமாக ரூ.3.55 கோடி தொகை வசூலிக்கப்பட்டு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5.6 தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் முதன்முதலில் 1-7-1963 முதல் சென்னை மாநகரில் செயல்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் எல்லா நகர்ப்புற நிலங்களுக்கும் சந்தை மதிப்பில் 0.4 சதவீதம் நகர்ப்புற நிலவரியாக விதிக்கப்பட்டது. இச்சட்டம், திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம் மற்றும் கோயம்புத்தூர், ஆகிய நகரங்களுக்கு 1-7-1971 முதல் விரிவுபடுத்தப்பட்டது. சென்னை நகர எல்லையிலிருந்து 16 கி.மீட்டருக்கு உட்பட்ட புறநகர் பகுதிக்கு 1-7-1975 முதல் சட்ட திருத்தம் மூலம் நீட்டிக்கப்பட்டது. பின்னர் இச்சட்டம் திருநெல்வேலி மாநகராட்சி பகுதிக்கு 1-7-1981-லிருந்தும் மேலும் 23 நகராட்சிகளுக்கு 1-7-1991 லிருந்தும் விரிவுபடுத்தப்பட்டது. நகர்ப்புற நிலவரிச் சட்டம் நடைமுறையில் உள்ள எல்லா பகுதிகளுக்கும் 1-7-1981 அன்றைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு 1-7-1991 முதல் வரி விதிக்கப்படுகிறது. நகர்ப்புற நிலவரி விதிப்பு விகிதங்கள் பின்வருமாறு:-

[2010 ஏப்ரல் 21

சென்னை மாநகராட்சி மற்றும் இதர மாநகராட்சி/நகராட்சி பகுதிகளில் உள்ள நிலங்கள்		சென்னை புறநகர்ப்பகுதியில் உள்ள நிலங்கள்	
முதல் 2 கிரவுண்டு	வரி இல்லை	முதல் 3 கிரவுண்டுகள்	வரி இல்லை
2 கிரவுண்டுக்கு மேல் 5 கிரவுண்டுக்குள்	சந்தை மதிப்பில் 0.7 விழுக்காடு	3 கிரவுண்டுக்கு மேல் 7 கிரவுண்டுக்குள்	சந்தை மதிப்பில் 0.7 விழுக்காடு
5 கிரவுண்டுக்கு மேல் 10 கிரவுண்டுக்குள்	சந்தை மதிப்பில் 1 விழுக்காடு	7 கிரவுண்டுக்கு மேல் 10 கிரவுண்டுக்குள்	சந்தை மதிப்பில் 1 விழுக்காடு
10 கிரவுண்டுக்கு மேல் 20 கிரவுண்டுக்குள்	சந்தை மதிப்பில் 1.5விழுக்காடு	10 கிரவுண்டுக்கு மேல் 20 கிரவுண்டுக்குள்	சந்தை மதிப்பில் 1.5 விழுக்காடு
20 கிரவுண்டுக்கு மேல்	சந்தை மதிப்பில் 2 விழுக்காடு	20 கிரவுண்டுக்கு மேல்	சந்தை மதிப்பில் 2 விழுக்காடு

இந்தச் சட்டத்தின் பிரிவு 29-ன் கீழ் மத்திய, மாநில அரசு நிலங்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான நிலங்கள், பொதுச் சாலைகளாக பயன்படும் நிலங்கள், பொது நூலகங்கள், மாநில அரசின் உதவி பெறும் மருத்துவமனை நிலங்கள், பொது பூங்காக்கள் மற்றும் அருங்காட்சியகங்கள் உள்ள நிலங்கள், மயானபூமி நிலங்கள், ஆதரவற்றோர் மற்றும் அனாதை விடுதிகள் உள்ள நிலங்கள் ஆகியன நகர்ப்புற நிலவரியிலிருந்து விலக்கு பெறுகின்றன. பொது வழிபாட்டிற்கு பயன்படுத்தப்படும் நிலங்கள், குடிசைப்பகுதி என அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்கள் மற்றும் தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழக நிலங்கள் ஆகியனவும் வரி விதிப்பிலிருந்து விலக்கு பெறுகின்றன. அறக்கட்டளைகள், மத சம்பந்தமான நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்கள், தங்கள் நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் 'அதிக சிரமம்' இருப்பின் அரசிற்கு மனு செய்து கொண்டால் பரிசீலனை செய்யப்பட்டு உரிய இனங்களில் அரசு, பிரிவு 27(1)ன் கீழ் தகுதி அடிப்படையில் வரி விலக்களிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும்,

2010 ஏப்ரல் 21]

(i) சொந்தக் குடியிருப்பு வீடுகள் உள்ள நிலங்கள், இசை அரங்குகள், பொழுதுபோக்குக் கூடங்கள் மற்றும் திரைப்பட படப்பிடிப்பு அரங்குகள் ஆகியவற்றுக்கும் 50 விழுக்காடு வரிச்சலுகை வழங்கப்படுகிறது.

(ii) சிறுதொழில் சான்று பெற்ற நில உரிமையாளர்கள் நடத்தும் தொழிற்சாலைகளுக்கு 25 விழுக்காடு வரிச்சலுகை வழங்கப்படுகிறது.

(iii) திரை அரங்குகள் மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு 10 விழுக்காடு வரிச்சலுகை வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி திருத்தச் சட்டம் 1991-ன்கீழ் 28-2-2010 வரை 1,85,881 இனங்களில் வரி விதிப்பு செய்யப்பட்டு ரூ.40.19 கோடி நகர்ப்புற நிலவரியாக நிர்ணயம் செய்யப்பட்டது. இவற்றில் பல பிரிவுகளில் விலக்களிக்கப்பட்ட இனங்கள் மற்றும் திருத்திய வரிவிதிப்பு உத்தரவுகளின்படி குறைக்கப்பட்ட கேட்புத்தொகை போக நடப்பு ஆண்டில் வரித்தொகை சுமார் ரூ.19.00 கோடி ஆகும்.

ஏப்ரல் 2009 முதல் பிப்ரவரி 2010 வரை ரூ.9.55 கோடி, (நிலுவை மற்றும் நடப்பு) நகர்ப்புற நிலவரி வசூலிக்கப்பட்டுள்ளது. 1-3-2010 அன்று நிலுவையிலுள்ள வசூல் செய்யப்பட வேண்டிய தொகை ரூ.95.12 கோடி ஆகும்.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 21

இணைப்பு III

(132 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011

1. முன்னுரை

1.1 மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான வீட்டு வசதித் தேவைகளை நிறைவு செய்வதை முதன்மைக் கடமையாகக் கொண்டு தமிழக அரசு திட்டம் தீட்டி வருகிறது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வீடு என்ற பேராவலுடன்கூடிய இலக்கை அடைய புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் மேம்பட்ட வேலைவாய்ப்புகளைத் தேடி நகர மையங்களுக்கு மக்கள் குடிபெயர்தலின் பொருட்டு வீடுகளுக்கான தேவை அன்றாடம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. எனவே, வீட்டு வசதிக் கொள்கையானது எல்லா மக்களுக்கும் போதுமான அளவில் கட்டுபடியான விலையில் வீடுகள் மற்றும் வீட்டுமனைகள் வழங்குதல், அதற்கான நிதி உதவி, சுற்றுச் சூழலுக்கு உகந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் ஆகிய அம்சங்களை உள்ளடக்கியதாக உள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நகர் மற்றும் ஊரமைப்புத் துறை, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் ஆகியவை தகுந்த திட்டங்களைத் தீட்டி ஒருங்கிணைந்த முறையில் ஈடுபாட்டுடன் வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

1.2 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்நாட்டின் நகர்ப்புற மக்கள்தொகை *2861.10* இலட்சம். இது மொத்த மக்கள் தொகையின் *27.8* சதவீதம் ஆகும். மொத்த நகர மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதி மக்கள் *(37.85%)* பத்து இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட *35* நகரங்களில் வசித்து வருகின்றனர். *1991* முதல் *2001* வரையிலான

2010 ஏப்ரல் 21]

பத்தாண்டுகளில், பத்து இலட்சத்திற்குமேல் மக்கள்தொகை கொண்ட நகரங்களின் எண்ணிக்கை 23 லிருந்து 35 ஆக உயர்ந்துள்ளது. இந்த எண்ணிக்கை 2011-ல் 50ஆக உயரும் வாய்ப்புள்ளது. 2011-ல் மொத்த நகர்ப்புற மக்கள் தொகை 780 இலட்சம் கூடுதலாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பத்து இலட்சத்திற்குமேல் மக்கள் தொகை கொண்ட 50 நகரங்களின் மொத்த மக்கள் தொகை 390 இலட்சமாக உயரக்கூடும் என்பதனை கணக்கிட்டுப் பார்க்கும்போது மேற்படி நகரங்களின் மக்கள் தொகை 2010-2011-ல் 12 இலட்சம் சராசரியாக அதிகரிக்கும் எனக் கருதப்படுகிறது. இந்த மிகப்பெரிய மக்கள் தொகை பெருக்கம், ஏற்கெனவே பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள பத்து இலட்சத்திற்குமேல் மக்கள் தொகை கொண்ட நகரங்களில் மேலும் மிகப்பெரிய பிரச்சினைகளை உருவாக்கக்கூடும். இந்தப் பின்னணியில், 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவிலேயே மொத்த மக்கள் தொகையில் 43.9% என்ற அளவுக்கு அதிகம் நகர்ப்புற மக்கள்தொகை கொண்ட மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இது பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் மற்றும் குறைந்த வருவாய் ஈட்டும் பிரிவு மக்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலையில் வீட்டுவசதி அளிப்பதற்கு பெரும் சவாலாக உள்ளது. எனவே இந்தப்பிரிவு மக்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு வீட்டு வசதிக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுக்க வேண்டியுள்ளது.

1.3 1971 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டம் இயற்றப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அச்சட்டத்தின் கூறுகளைச் செயல்படுத்தும் அதிகாரம் பெற்ற அலுவலரான நகர் ஊரமைப்புத்துறை இயக்குனர் தலைமையில் முழுமைத்திட்டம், விரிவான மேம்பாட்டுத்திட்டம் மற்றும் பிற சட்டப்படியான திட்டங்களை தயாரித்து செயல்படுத்துதலில் ஈடுபட்டுள்ள உள்ளூர் திட்ட அலுவலர்களுக்கு ஆலோசனைகள் வழங்கும் பணியை நகர் ஊரமைப்பு இயக்ககம் மேற்கொண்டு வருகிறது. மேலும் இந்த இயக்ககம், ஒழுங்கு முறையிலான வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழலுடன் இயைந்த குடியிருப்புகள் மற்றும் சூழ்நிலைகளை உறுதி செய்யும் வகையில் உரிய திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருகிறது. மாநிலத்தில் உள்ள நகர்ப்புறத் திட்டங்களை செயல்படுத்துவதற்கான நிதிகளுக்கு வழிவகை செய்வதற்கான ஒருங்கிணைப்புப் பணிகளையும் இவ்வியக்ககம் மேற்கொண்டு வருகிறது.

[2010 ஏப்ரல் 21

1.4 சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை நகரம், 16 நகராட்சிகள், 20 பேரூராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 214 கிராமங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய 1,189 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள பகுதியை தமது அதிகார எல்லையாகக் கொண்டுள்ளது. அப்பகுதிகளில் அரசுக் கொள்கைகளை செயல்படுத்தும் முதன்மை முகமையாக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் செயல்பட்டு வருகிறது. இக்குழுமம் ஏற்கெனவே சாலைப் போக்குவரத்தை மேம்படுத்துதல், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் நிலை உயர்த்துதல் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த பல முன்முயற்சிகளை எடுத்துள்ளது.

வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2010–2011

சுருக்கம்

துறை/ நிறுவனம்	வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
	[ரூபாய் ஆயிரத்தில் (*தொகு மொத்தம்*)]			
தலைமைச் செயலகம்	5,32,53	--	125,00,00	130,32,53
நகர் ஊரமைப்புத் துறை	313,78,01	16,31,01	--	330,09,02
கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்	7,30,63	--	--	7,30,63
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்	3,80,01	750,87,53	1	754,67,55
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்	19,99,03	2,72,26	--	22,71,29
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்	45,80,51	179,99,00	--	225,79,51
மொத்தம்	396,00,72	949,89,80	125,00,01	1,470,90,53

2010 ஏப்ரல் 21]

2010–2011ஆம் ஆண்டு பகுதி – II திட்டங்கள்		(ரூ. இலட்சத்தில்)
வ. எண்	திட்டப் பணிகளின் விபரம்	திட்டச் செலவு 2010–11
	தலைமைச் செயலகம்	
1.	32 கணினிகள் துணை பாகங்களுடன் வாங்குதல்	9.92
2.	20 லேசர் ஜெட் பிரிண்டர் மற்றும் 57 டாட்–மேட்ரிக்ஸ் பிரிண்டர்கள் வாங்குதல்	12.32
3.	கணினி சர்வர் வசதி ஏற்படுத்துவதற்காக கம்பி வடம் பொருத்துதல்	2.00
4.	ஒரு நகல் எடுக்கும் இயந்திரம் வாங்குதல்	0.75
	தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்	
5.	விழுப்புரம், மற்றும் பெரம்பலூரில் தமிழ்நாடு அரசு வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் அடுக்ககங்களைக் கட்டுதல்	272.26
	தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்	
6.	செம்மஞ்சேரியில் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டத்தின்கீழ் அடிப்படை கட்டமைப்பு மற்றும் ரிவர்ஸ் ஆஸ்மாசிஸ் பிளான்ட் நிறுவுதல்	90.00
7.	குடிசைமாற்றுத் திட்டங்களின்கீழ் கட்டப்படும் அடுக்ககங்களில் குடிபுகுவோருக்கு பயோமெட்ரிக் அடையாள அட்டை வழங்குதல்	30.00
8.	சென்னை மற்றும் இதர நகரங்களின் குடிசைப் பகுதிகளில் வாழும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பிற்கான வாழ்வியல் தொழிற்பயிற்சி அளித்தல்	20.00
9.	சேலம் கோட்ட அலுவலகத்திற்கு அலுவலகக் கட்டடம் அமைத்தல்	35.00
10.	தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய தலைமையகத்தில் அதிக அலுவலக இடங்களை உருவாக்குதல்	17.75
	நகர் ஊரமைப்புத் துறை	
11.	திருவள்ளூர் கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிக்கான முழுமைத் திட்டத்தை, புவியமைப்புத் தகவல் முறை, தொலையுணர்வு/வான்வெளி நிழற்படம் எடுத்தல் போன்ற நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்குதல்	10.00
	மொத்தம்	500.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 21

2. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

அனைவருக்கும் வீடு அளித்தல் என்ற நோக்கத்தினை கருத்திற்கொண்டு 1961ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழகம் முழுவதும் கடந்த காலங்களில் புதிய நகரங்களை உருவாக்கியதில் மூல காரணியாக உள்ளது. சென்னையின் கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு விரிவாக்கத்தின் பெருமை முழுவதும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினையே சாரும். அதேபோல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தமிழகத்தின் மாவட்ட தலைநகரங்கள் மற்றும் பல நகரங்கள் விரிவாக்கம் அடைந்ததில் முக்கிய பங்கு வகிக்கிறது. கடந்த ஆண்டுகளில் "அனைவருக்கும் வீடு" என்ற வாரியக் கொள்கை, "வாங்கத்தக்க விலையில் அனைவருக்கும் வீடு" என மாற்றம் அடைந்துள்ளது. இதில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பங்களிப்பு நினைவு கொள்ளத்தக்க வகையில் உள்ளது. தற்போது இவ்வாரியம் வாங்கத் தக்க விலையில் வீட்டு வசதித் திட்டங்களை உருவாக்குவதில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை சுமார் 4 இலட்சம் வீட்டு வசதி அலகுகளை உருவாக்கியுள்ளது. இவற்றில் 2,89,500 அலகுகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர், குறைந்த வருவாய்ப் பிரிவினர் மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்காக உருவாக்கப்பட்டுள்ளது.

2.1 செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

தற்போது ரூ.348.82 கோடி மதிப்பீட்டில் 5,451 குடியிருப்பு அலகுகளுக்கான வீட்டு வசதி திட்டங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், ரூ.88.50 கோடி மதிப்பீட்டில் 1,925 அலகுகளுக்கான திட்டப்பணிகளின் ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு கட்டுமானப்பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன. 1,150 அலகுகளை உள்ளடக்கிய 7 திட்டங்களுக்கு ரூ.43.28 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப் புள்ளி கோரப்படவுள்ளது. சுமார் 4,700 குடியிருப்புகள் உருவாக்குவதற்கான திட்டச் செயற்குறிப்பு தயாரிப்பில் உள்ளது.

2.2. வாங்கத்தக்க விலையில் வீடுகள்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு, குறைந்த வருவாய்ப் பிரிவு மற்றும் நடுத்தர வருவாய்ப்

2010 ஏப்ரல் 21]

பிரிவு மக்களுக்கு, வாங்கத்தக்க விலையில் தேவையான எண்ணிக்கையில் குடியிருப்புகளை உருவாக்க சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. பல்வேறு நடவடிக்கைகளின்மூலம் கட்டுமான விலையினை குறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நகரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காக வட்டி மானியத்துடன் வீடுகட்ட கடன் வழங்கும் மைய அரசின் திட்டத்திற்கு (ISHUP) தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் பொறுப்பு நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் சீரிய முறையில் செயல்படுத்த தேவையான கட்டமைப்பினை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இத்திட்டத்தின் பயன்கள் குறித்து மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வங்கிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள்மூலம் விளம்பரம் செய்யப்பட்டு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதுவரையில் 31,256 விண்ணப்பங்கள் தகுதியுள்ள நபர்களிடமிருந்து பெறப்பட்டு, அவை வங்கிகள் கடன் ஒப்புதல் வழங்குவது தொடர்பான ஆய்வில் உள்ளன. மாவட்ட ஆண்டு கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் இலக்கினை நிர்ணயித்து. வங்கிகள்மூலம் கடன் வழங்குவதை கண்காணிக்குமாறு மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

2.3 கூட்டு முயற்சித் திட்டம்

கூட்டு முயற்சித் திட்டத்தின்கீழ் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் உடைமைகளை மேம்படுத்தும் வழிவகைகளை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ஆய்வு செய்யும். இதேபோன்று சென்னைப் பெருநகர இருப்பூர்தி நிறுவனத்தின் (Chennai Metro Rail Ltd.) வழித்தடங்களுக்கு அருகில் உள்ள தமிழ் நாடு வீட்டுவசதி வாரியத்தின் உடைமைகளில் சென்னைப் பெருநகர இருப்பூர்தி நிறுவனத்துடன் கூட்டு முயற்சித் திட்ட முறையில் வளர்ச்சிப் பணி மேற்கொள்ளப்படும். 2010-2011 ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் இரண்டு திட்டங்களை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இறுதி செய்யப்படும்.

2.4 தக்கைக்கல் தொழிற்சாலை

எண்ணூரில் செயல்படாமல் உள்ள தக்கைக்கல் தொழிற்சாலையை கூட்டு முயற்சித் திட்டத்தின்கீழ் மீண்டும்

[2010 ஏப்ரல் 21

துவக்க திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டு முயற்சி நிறுவனத்தை தேர்ந்தெடுக்கத் தேவையான ஒப்பந்த ஆவணங்கள் (Bid document) மற்றும் சலுகை அளிப்பவரின் ஒப்பந்தம் (Concessionaire Agreement) தயாரிப்பதற்கு தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) ஆலோசனை வழங்கும் நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளன. வாரிய ஒப்புதல் பெறப்பட்ட பின் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும். கூட்டு முயற்சித் திட்டத்தின்கீழ் *2010-2011* ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை மீண்டும் துவக்கப்பட்ட பின், பசுமைக் கட்டடத் திட்டத்தின்கீழ், சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் குறைந்த எடையுள்ள, தளம் மற்றும் சுவர்களுக்குத் தேவையான கட்டுமானப் பொருட்களை உற்பத்தி செய்யும்.

2.5 பட்டினப்பாக்கத்தில் உலகத்தரம் வாய்ந்த நகர் உருவாக்கம்.

நீண்ட காலமாக நிலுவையில் இருந்த பட்டினப்பாக்கத்தில் உள்ள பழுதடைந்த அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளை இடிக்கும் பணி முடிவுற்றுள்ளது. இவ்விடத்தில் மீண்டும் உலகத் தரம் வாய்ந்த நகரினை உருவாக்க மாதிரி திட்ட வரைவு (Conceptual Plan) தயாரிக்கப்பட்டுள்ளது. *2010-2011* ஆம் நிதியாண்டில் பட்டினப்பாக்கத்தில் மறுகட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

2.6 வைப்பு நிதித் திட்டம்

அண்ணா நகரில், சுமார் ரூ. 70 கோடி மதிப்பீட்டில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனத்திற்காக அலுவலகம் மற்றும் குடியிருப்புகளை கட்டும் பணி தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனத்திற்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் *25-5-2009* அன்று கையொப்பமிடப்பட்டது. இத்திட்டத்திற்கான விரிவான உருவரைபடம் தயாரிக்க கட்டட கலைஞர் நியமிக்கப்பட்டுள்ளார். உருவரைபடம் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெற்றபின் வரும் நிதியாண்டில் கட்டுமானப்பணிகளை ஆரம்பிக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 21]

தமிழ் நாட்டில், 10 மாவட்டத் தலைமையிடங்களில் சுமார் ரூ.957 இலட்சம் மதிப்பீட்டில் கூட்டுறவு வீட்டுவசதி சங்க மாவட்ட பதிவாளர் மற்றும் இணைப் பதிவாளர் அலுவலக வளாகங்கள் கட்டுவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் தமிழ் நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்க பதிவாளர் இடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான கட்டட வரைபடம் முடிவு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டப்பணிகள் 2011 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2.7 விலை இறுதியாக்கம்

வீட்டுவசதி வாரிய திட்டங்களில் பயன்படுத்தப்பட்ட அரசு நிலங்களுக்கு நீண்ட காலமாக விலை இறுதியாக்கம் செய்யப்படாமல் உள்ள பிரச்சினைக்கு தற்போது தீர்வு காணப்பட்டுள்ளது. அரசு நிலங்கள், வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்படுவதன்மூலம் 26 திட்டங்களில் உள்ள ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்குவது எளிதாகும். இதனால் சுமார் 13,244 ஒதுக்கீட்டுதாரர்கள் பயன் அடைவர்.

2.8 நிலக்கொள்கை

மிகப்பெரிய வீட்டுவசதித் திட்டங்கள்/நகரியங்கள் அமைக்கும் திட்டங்களை நில உடைமைதாரர்களின் முழுமையான பங்களிப்புடன், வளர்ச்சிப்பணியில் அவர்களை சம பங்குதாரர்களாகக் கொண்டு செயல்படுத்திட, வரும் நிதியாண்டில் மாற்று நில மேம்பாட்டுக் கொள்கை தயாரிப்பதில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கவனம் செலுத்தும்.

2.9 விற்பனைப் பத்திரம் வழங்குதல்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் இதுவரை 1,89,266 ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கியுள்ளது. 2009-2010ஆம் ஆண்டில் மட்டும், 12,474 விற்பனைப் பத்திரங்களை வாரியம் வழங்கியுள்ளது. 2010-2011 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பல்வேறு திட்டங்களிலுள்ள

[2010 ஏப்ரல் 21

ஒதுக்கீடுதாரர்களின் கணக்குகளை முறைப்படுத்தவும், விற்பனைப் பத்திரங்களை வழங்குவதற்கும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். மேலும், உத்தேச விலையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பல்வேறு திட்டங்களுக்கு விலை இறுதியாக்கம் செய்வதற்கு ஏதுவாக, நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகளை முடிவுக்குக் கொண்டுவர விரைவு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2.10 விற்பனையாகாமல் தேக்க நிலையிலுள்ள குடியிருப்புகளை விற்பனை செய்தல்

2009-2010 ஆம் நிதியாண்டில் 568 மனைகள், 175 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 154 வீடுகள் மற்றும் 35 வணிக மனைகள் ரூ. 89.35 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2010-2011 ஆம் நிதியாண்டில் விற்பனையாகாமல் தேக்க நிலையிலுள்ள 4,948 மனைகள் 35 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் 915 வீடுகளை விற்பனை செய்ய உரிய விலைக் கொள்கையை (Rationalized pricing policy) உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதேபோல், விற்பனையாகாமல் உள்ள 488 வணிக மனைகளை, தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டு விற்பனை செய்யப்படும்.

2.11 கணினி மயமாக்கல்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் அனைத்து செயல்பாடுகளையும், எளிய மற்றும் விரைவு முறையில் வெளிப்படையான தகவல்களை அறிந்து கொள்ளவும், ஒருங்கிணைந்த வகையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் அன்றாட தகவல் குறிப்புகளை இணையதளத்தின்மூலம் அறிந்து கொள்ளவும், வாரியம், நவீன முறையில் புதிய உத்திகளை செயல்படுத்தியுள்ளது. அதன்படி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் அனைத்து செயல்பாடுகளையும் மேம்படுத்த நிறுவன வள வாய்ப்புத் திட்டம் (Enterprises Resource Planning) சுமார் 3 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். மேற்குறிப்பிட்ட நிறுவன வள வாய்ப்புத் திட்ட மென்பொருள் மற்றும் தொடர்பு இணைப்புக்கான கருவிகள் அமைத்தல் ஆகிய பணிகள் 2010-2011ஆம் நிதியாண்டில் முழுவதுமாக நிறைவேற்றப்படும்.

TRUTH ALONE TRIUMPHS LEGISLATIVE ASSEMBLY

2010 ஏப்ரல் 21]

2.12 பகுதி – 1 திட்டங்கள்

தமிழ்நாடு முழுவதும் உள்ள தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்பு, சட்டமன்ற உறுப்பினர் விடுதி மற்றும் தொழிலாளர் மானிய (Subsidised Industrial Housing Scheme) குடியிருப்புகளின் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள 2009-2010 ஆம் நிதியாண்டில் பகுதி-1 திட்டத்தின்கீழ் ரூ.1,027.41 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்பட்டுள்ளது. செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள அத்திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்தப்பட்டு தொகை முழுவதும் செலவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்பு, சட்ட மன்ற உறுப்பினர் விடுதி மற்றும் தொழிலாளர் மானிய குடியிருப்புகளின் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள 2010-2011 ஆம் நிதியாண்டிற்கு பகுதி-1 திட்டத்தின் கீழ் ரூ.1,076 இலட்சம் ஒதுக்கீடு செய்ய கோரப்பட்டுள்ளது.

2.13 பகுதி – 2 திட்டங்கள்

2009-2010ஆம் நிதியாண்டில், ஆண்டுத் திட்டம் (Annual Plan) பகுதி - 2 திட்டத்தில், கீழ்க்கண்ட பணிகளுக்காக அரசு ரூ. 345.53 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய செயல்பாடுகள் அனைத்தையும் கணினி மயமாக்குதல்	..	ரூ.65.00 இலட்சம்
தமிழ்நாடு முழுவதும் உள்ள தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளில் சிறப்புப் பழுதுபார்க்கும் பணி	..	ரூ.180.53 இலட்சம்
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட குடிசை மாற்று குடியிருப்புகளைப் பழுதுபார்க்கும் மற்றும் புதுப்பிக்கும் பணி	..	ரூ.100.00 இலட்சம்

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்துப் பணிகளும் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டு ஒதுக்கப்பட்ட நிதி முழுவதும் செலவிடப்பட்டுள்ளது.

[2010 ஏப்ரல் 21

2010-2011 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின் கீழ், சுமார் ரூ.*272.26* இலட்சம் மதிப்பீட்டில் விழுப்புரத்தில் *12* அரசு அலுவலர் வாடகை அடுக்குமாடிக் குடியிருப்புகளும், பெரம்பலூரில் *18* அரசு அலுவலர் வாடகை அடுக்குமாடிக் குடியிருப்புகளும் கூடுதலாகக் கட்ட மாநில திட்டக் குழு பரிந்துரை செய்துள்ளது.

3. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

3.1 நகர குடிசைப் பகுதிகளின் மேம்பாடு மற்றும் மறுகுடியமர்வு பணிகளுக்காக தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஒரு முன்னோடி நிறுவனமாக, தமிழகத்தில் நகர குடிசைப் பகுதிகளை மாற்றுதல் மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்காக "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற நோக்கத்துடன் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் *1970* ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் நகர குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்தும்பொருட்டு இவ்வாரியம் பல்வேறு வீட்டு வசதி, குடிசைப் பகுதி மேம்பாடு மற்றும் மறுகுடியமர்வு திட்டப்பணிகளைச் செயல்படுத்தி வருகின்றது.

3.2 குடிசைப் பகுதிகளுக்கான கொள்கை

குடிசைப் பகுதிகளை மேம்படுத்த மற்றும் மாற்ற தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் கடந்த பல ஆண்டுகளாக கீழே கூறப்பட்டுள்ள மூன்று யுக்திகளைப் பின்பற்றி வருகின்றது:-

(i) களப் பகுதிகளில் மனை மேம்பாடு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாடு

கள மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு ஏற்றவாறு அமைந்துள்ள குடிசைப் பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு அப்பகுதிகளை மக்கள் வாழ்வதற்கேற்றவாறு மேம்படுத்த, கள மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பின்னர் அந்நிலம் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு நிலமாற்றம் செய்யப்பட்ட பின் ஒதுக்கீடுதாரர்களுக்கு நில உரிமை வழங்கப்படுகிறது.

(ii) களப் பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல்

நகரப் பகுதிகளில் ஆட்சேபகரமற்ற புறம்போக்கு இடங்களில் உள்ள குடிசைப் பகுதிகள் மற்றும் நிலத்தினை அனைவருக்கும்

2010 ஏப்ரல் 21]

சமமாகப் பங்கிட்டு அளிக்க இயலாமல் உள்ள பகுதிகளில் உள்ள குடிசைகளை அகற்றி அப்பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கப்படுகின்றன.

(iii) புனரமைப்பு மற்றும் மறுகுடியமர்வு திட்டப்பணிகள்

மறுகுடியமர்வு திட்டத்தின்கீழ் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அல்லது கள மேம்பாட்டுப் பணிகள் அமைக்க இயலாத இடங்களுக்கு, குறிப்பாக நீர்வழித் தடங்கள் போன்ற ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு அருகாமையில் உள்ள மாற்றிடங்களில் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் உரிய அடிப்படை வசதிகளுடன் அமைக்கப்படுகின்றன. குடிசைகள் அப்புறப்படுத்தப்பட்டபின் அப்பகுதி உரிய பயன்பாட்டிற்காக ஒப்படைக்கப்படுகின்றன.

3.3 இதர திட்டங்கள்

(i) இவை தவிர, இராஜீவ் காந்தி மறுகுடியமர்வு திட்டம் போன்ற பிற திட்டங்களின்கீழ் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் தனி வீடுகள் அமைக்கப்படுகின்றன.

(ii) ஏழை மக்களின் ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் பொருளாதாரத்தில் ஏழை மக்களின், குறிப்பாக பெண்கள் மற்றும் இளைஞர்களின் உயர்வினை உறுதி செய்ய இவ்வாரியம் சமுதாய வளர்ச்சிப் பணிகளை குடிசைப் பகுதிகளில் மேற்கொண்டு அதன்கீழ் வேலை வாய்ப்புப் பயிற்சிகளை அளித்து வருகின்றது.

3.4 கடந்த 40 ஆண்டுகால சாதனைகள்

(i) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தோற்றுவிக்கப்பட்டது முதல் 2006 வரை 77,627 குடியிருப்புகளை அமைத்துள்ளது. மேலும் 2006 முதல் 2010 வரை 27,373 அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டிமுடித்துள்ளது. ஆகமொத்தம் 1.05 இலட்சம் அடுக்குமாடிக் குடியிருப்புகளை வாரியம் அமைத்துள்ளது மற்றும் 19,277 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

(ii) மேலும் சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்

[2010 ஏப்ரல் 21

504 குடிசைப் பகுதிகள் மேம்படுத்தப்பட்டு 1.30 இலட்சம் குடும்பங்கள் பயனடைந்துள்ளன. அவற்றுள் 1.08 இலட்சம் மனைகள் மேம்படுத்தப்பட்டு ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

(iii) மாநிலத்தின் பல்வேறு நகர பகுதிகளில் உள்ள குடிசைப் பகுதிகளுக்கு பெருமளவில் மேம்பாட்டுப் பணிகள் ரூ.81.45 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3.5 மூலதன செலவு

கடந்த 2006-2007 முதல் 2009-2010 வரையிலான ஆண்டுகளில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட மூலதன செலவின விபரம் பின்வருமாறு:-

வரிசை எண்	ஆண்டு	மூலதன செலவினம் (ரூ.கோடி)
1	2006-07	65.32
2	2007-08	79.14
3	2008-09	279.26
4	2009-10	400.00
	மொத்தம்	**823.72**

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 65.32 கோடியாக இருந்த மூலதன செலவினத்தை 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.400.00 கோடியாக அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

3.6. 2006–2011 ஆம் ஆண்டு காலத்திற்கான திட்டப்பணிகள்

2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டு காலத்தில் 80,000 குடியிருப்புகளை ரூ.3,000 கோடி செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டது. இவற்றுள் 46,650 அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன அல்லது முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள 33,350 அடுக்குமாடிக் குடியிருப்புகள்/ வீடுகள் கட்டும்பணி, குடியிருப்புகளுக்கான வடிவமைத்தல், திட்டக் கள ஆய்வு மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோருதல் போன்ற பல்வேறு நிலைகளில் உள்ளது.

2010 ஏப்ரல் 21]

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக 2009-2010 ஆம் ஆண்டில் 10,000 குடியிருப்புகள் அமைத்து முடிக்கப்படும். 2010-2011 ஆம் ஆண்டில் 20,000 குடியிருப்புகள் அமைத்து முடிக்கப்படும்.

3.7.2009–2010 மற்றும் 2010–2011 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் கீழ்க்குறிப்பிடப்பட்ட திட்டப்பணிகளை 2010-2011ஆம் ஆண்டில் நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளது:-

(i) ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள பெருநகரங்களை 2013ஆம் ஆண்டிற்கு முன்னர் குடிசைப் பகுதி அற்ற நகரமாக மேம்படுத்த திட்டமிடப்பட்டு, சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகரங்களில் ஆட்சேபகரமான மற்றும் ஆட்சேபகரமற்ற பகுதிகளில் வாழும் மீதமுள்ள குடும்பங்களை மறுகுடியமர்வு செய்ய, அடிப்படை வசதிகளுடன்கூடிய தன்னிறைவான அடுக்குமாடிக் குடியிருப்புகளை அமைக்க ஒரு மாபெரும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மைய, மாநில அரசு மற்றும் பயனாளிகளின் பங்களிப்புகளை 50:40:10 என்ற விகிதாச்சாரத்தில் பெற்று ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக நகர ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் பெருமளவில் வீடுகள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகரங்களில் 35,270 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.1,504.05 கோடி செலவில் கீழே கூறப்பட்டுள்ள இடங்களில் "ஒருங்கிணைந்த நகரங்களாக" அமைக்கப்படும்:—

வ. எண்.	திட்டப்பகுதியின் பெயர்.	குடியிருப்பு-களின் எண்ணிக்கை.	தொகை (ரூபாய் கோடி).	தற்போதைய நிலை.
1.	சென்னை, எழில் நகர் அ. ஒக்கியம் துரைப்பாக்கம்	6000	198.10	நீதிமன்றத் தடையாணையால் பணி தற்காலிகமாக நிறுத்தப் பட்டுள்ளது
	ஆ. பெரும்பாக்கம்	3936	175.36	முன்னேற்றத்தில் உள்ளது.

[2010 ஏப்ரல் 21

2.	கோவை, உக்கடம்	2904	85.59	முன்னேற்றத்தில் உள்ளது.
3.	கோவை, அம்மன் குளம்	936	31.90	முன்னேற்றத்தில் உள்ளது.
4.	மதுரை, பெரியார் நகர்	1566	47.76	முன்னேற்றத்தில் உள்ளது.
5.	சென்னை, பெரும்பாக்கம் – I	10452	515.59	ஆக்கிரமிப்பாளர்கள் நீதிமன்றம் சென்று தடையாணை பெற்றதால் பணிகள் தாமதப்பட்டன. நீதிமன்ற தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்டு தற்சமயம் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன
6.	சென்னை, பெரும்பாக்கம் –II	9476	449.75	ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் நிலையில் உள்ளது.
	மொத்தம்	35270	1504.05	

இத்திட்டத்தின்கீழ் 10,818 குடியிருப்புகள் அமைக்கும் திட்டப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. அவற்றுள் 5,400 குடியிருப்புகள் ரூ.147.72 கோடி செலவில் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள 29,870 அடுக்குமாடி குடியிருப்புகள் இன்னும் 2 ஆண்டுகளில் ரூ.1,356.33 கோடி செலவில் அமைத்து முடிக்கப்படும்.

(ii) சுனாமி ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டு வசதி

சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் சுனாமி ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை மறுகுடியமர்வு செய்ய தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் உலக வங்கியின் நிதி உதவியுடன் அவசர சுனாமி மறுகுடியமர்வு

2010 ஏப்ரல் 21]

திட்டத்தின்கீழ் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கும் பணிகளை மேற்கொண்டுள்ளது. மேலும் எட்டு கடலோர மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்க வாய்ப்புகள் உள்ள பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு மைய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இராஜீவ் காந்தி புனரமைப்பு திட்டத்தின்கீழ் வீடுகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) அவசர சுனாமி மறுகுடியமர்வு திட்டம்

உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் அவசர சுனாமி மறுகுடியமர்வு திட்டத்தின்கீழ் சென்னையில் 11,520 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.570.72 கோடி செலவில் அமைக்கும் திட்டப்பணிகளை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னை திருவொற்றியூர், அகில இந்திய வானொலி நிலைய நிலத்தில் 3616 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.139.51 கோடி செலவில் அமைக்கும் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. மேலும் சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 2,048 அடுக்குமாடிக் குடியிருப்புகளை ரூ.96.51 கோடி செலவில் அமைக்கும் பணிகள் நீதிமன்றத் தடை உத்தரவின் காரணமாக தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இவ்வழக்கு முடிவுற்று விரைவில் பணிகள் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சென்னை மெரினா கடற்கரைக்கு அருகே நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை உள்ள பகுதிகளில் 5,856 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.334.70 கோடி செலவில் அமைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, 2280 அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடிக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மெரினா திட்டப்பகுதியில் 2,280 அடுக்குமாடிக் குடியிருப்புகளை மீண்டும் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த மெரினா மறுமேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மீதமுள்ள 3,576 அடுக்குமாடிக் குடியிருப்புகளை அமைக்கும் பணிகள் 2010-2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

(ஆ) இராஜீவ் காந்தி சுனாமி மறுகுடியமர்வு திட்டம்-1 - தன்னார்வ நிறுவனங்களால் அமைக்காமல் விடுபட்ட வீடுகளை அமைத்தல்

சுனாமி ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தன்னார்வ நிறுவனங்களால் அமைக்க திட்டமிடப்பட்டு, பின்னர்

[2010 ஏப்ரல் 21

அவர்களால் அமைக்கப்படாத 1,217 வீடுகளை ரூ.45.03 கோடி செலவில் அமைக்கும் பணிகளை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மீதமுள்ள பணிகள் 2010-2011 ஆம் ஆண்டில் அமைத்து முடிக்கப்படும்.

(இ) இராஜீவ் காந்தி சுனாமி மறுகுடியமர்வு திட்டம் II - சுனாமி ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்படக்கூடிய இடங்களில் வாழ்வோருக்கு வீடுகள் அமைத்தல்

தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் கடற்கரையிலிருந்து 200 மீட்டர் தொலைவிற்குள் சுனாமி ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்படக் கூடிய இடங்களில் வாழும் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளுடன்கூடிய வீடுகள் அமைக்கப்படும். இராஜீவ் காந்தி புனரமைப்புத் திட்டம் பகுதி-II-ன்கீழ் 6,521 வீடுகள், ரூ.241.95 கோடி செலவில் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 5,441 வீடுகள் கட்டுவதற்கு தேவையான நிலம் கிடைக்கப்பெற்றுள்ள இடங்களில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் 3,868 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகள் 2010-2011ல் கட்டி முடிக்கப்படும்.

(iii) பன்னிரண்டாவது நிதிக் குழு சிறப்புத் தேவை மானியம்

இத்திட்டத்தின்கீழ் சென்னை மற்றும் இதர நகரங்களில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு 9,711 அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல் அல்லது மீண்டும் அமைத்தல் மற்றும் இதர குடிசைப்பகுதி மேம்பாட்டுப்பணிகள் ரூ.250.00 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன:—

12-வது நிதிக் குழு-சிறப்புத் தேவை மானியம்

(அ) புது குடியிருப்புகள்

வரிசை எண்	திட்டப் பகுதியின் பெயர்	குடியிருப்புகள்
1.	ஜி.எம். பேட்டை, சென்னை.	552
2.	செம்மஞ்சேரி, சென்னை	1404
3.	ஒக்கியம் துரைப்பாக்கம் (ம) பாரதி நகர்	2000
4.	ஒக்கியம் துரைப்பாக்கம், சென்னை.	1726

2010 ஏப்ரல் 21]

5.	காமராஜர் நகர், சென்னை	15
6.	மீர்பக்ஷி அலி தெரு, சென்னை.	32
7.	தோமையப்பன் தெரு, சென்னை.	60
8.	பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, சென்னை.	120
9.	வலையங்குளம், மதுரை.	88
10.	திடீர் நகர், மதுரை.	480
11.	கீரனூர், ஒட்டன் சத்திரம்.	200
12.	கண்ணங்காடு, சேலம்.	240
13.	எழில் நகர், ஓசூர்.	504
14.	ஆண்டவர் நகர், நாமக்கல்.	196
15.	பிள்ளையார்பட்டி, தஞ்சாவூர்.	300
16.	அரியமங்கலம், திருச்சிராப்பள்ளி.	90
17.	சாயல்குடி, இராமநாதபுரம்.	192
18.	தொம்பன் குடிசை, மன்னார்குடி.	80
19.	நேரு நகர், திருநெல்வேலி.	306
20.	சுத்தமல்லி காந்தி நகர், திருநெல்வேலி.	166
	மொத்தம்	8753

(ஆ) பழுதடைந்த குடியிருப்புகளை இடித்துவிட்டு மீண்டும் அமைத்தல்

வ.எண்	திட்டப் பகுதியின் பெயர்	குடியிருப்புகள்
1.	சென்னை - குப்பைமேடு	16
2.	சென்னை - வியாசர்பாடி	270
3.	சென்னை - கோட்டூர்புரம்	44
4.	சென்னை - கௌதமபுரம்	36
5.	மதுரை - எல்லீஸ் நகர்	496
6.	மதுரை - அருப்புக்கோட்டை ரோடு	96
	மொத்தம்	958
	ஆக மொத்தம் (அ+ஆ)	9711

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 21

இ. குடியிருப்புகளை பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்

சென்னை மற்றும் இதர நகரங்களில் ரூ.23.16 கோடி செலவில் 2,1470 குடியிருப்புகளில் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பிக்கும் பணிகளை வாரியம் மேற்கொண்டது.

ஈ. குடிசைப் பகுதி மேம்பாடு மற்றும் குடிசைப் பகுதிவாழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பயிற்சி.

(iv) சென்னை துறைமுகம் முதல் மதுரவாயல் வரை உயர சாலைத் திட்டப்பணிகளால் பாதிக்கப்படும் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்தல்

(அ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் உயர விரைவு சாலைத் திட்டத்தின்கீழ் பாதிக்கப்படும் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்யும் பணிகளைச் செயலாக்கும் முகமை நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கூவம் நதிக்கரையில் உயர சாலைப் பணிகளுக்குத் தேவைப்படும் இடங்களில் குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்கள் தன்னிறைவான அடிப்படை வசதிகள் மற்றும் சமுதாயப் பணிகளுடன்கூடிய குடியிருப்புகளில் மறுகுடியமர்வு செய்யப்படுவார்கள். தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 8,000 குடும்பங்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகளும், இக்களப்பகுதியில் வணிக நிறுவனங்கள் நடத்திவரும் குடும்பங்களுக்கு சென்னையைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதியில் ரூ.400 கோடி செலவில் ஆட்டோ நகர் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. இதற்கான கணக்கெடுப்புப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. இத்திட்டத்தின்கீழ் அடுக்குமாடிக் குடியிருப்பு அமைக்கும் பணிகள் அதற்கான உரிய நிலம் ஒப்படைக்கப்பட்டபின் மேற்கொள்ளப்படும்.

(v) நகர குடிசைப் பகுதிகளுக்கு சுற்றுப்புற மேம்பாட்டுப் பணிகள்

நகர குடிசைப் பகுதிகளை மேம்படுத்தவும், மக்கள் வாழ்வதற்கேற்றவாறு அமைக்கவும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு மின்விளக்கு, குடிநீர் வசதி, மழை நீர் வடிகால், கழிப்பறைகள் போன்றவற்றை 2009-2010 ஆம் ஆண்டில் 20,000 குடும்பங்களுக்கு ரூ.10.00 கோடி செலவில் பல்வேறு நகரங்களில் அமைத்துள்ளது.

2010 ஏப்ரல் 21]

(vi) 2010–2011 ஆம் ஆண்டுக்கான பகுதி – II திட்டம்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 2010-2011 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தில் கீழே கூறப்பட்டுள்ள பணிகளை ரூ.192.75 இலட்சம் செலவில் நிறைவேற்ற திட்டமிட்டுள்ளது:-

வரிசை எண்.	திட்டத்தின் பெயர்	செலவினம் (ரூபாய் இலட்சம்)
1	மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டத்தின் கீழ் அடிப்படை கட்டமைப்பு மற்றும் ரிவர்ஸ் ஆஸ்மாசிஸ் பிளாண்ட் செம்மஞ்சேரியில் நிறுவுதல்	90.00
2	குடிசைமாற்றுத் திட்டங்களின்கீழ் கட்டப்படும் அடுக்ககங்களில் குடிபுகுவோருக்கு பயோமெட்ரிக் அடையாள அட்டை வழங்குதல்	30.00
3	சென்னை மற்றும் இதர நகரங்களின் குடிசைப்பகுதிகளில் வாழும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பிற்கான வாழ்வியல் தொழிற்பயிற்சி அளித்தல்	20.00
4	சேலம் கோட்ட அலுவலகத்திற்கு அலுவலக கட்டடம் அமைத்தல்	35.00
5	தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய தலைமையகத்தில் அதிக அலுவலக இடங்களை உருவாக்குதல்	17.75
	மொத்தம்	192.75

(vii) சிறப்பு உள்ளடக்கத் திட்டம் 2010–2011

நகரப் பகுதிகளில் வாழும் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கான திட்டப் பணிகள்

நகர குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுள் 26 சதவீதத்தினர் ஆதி திராவிடர் மக்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 2010-2011 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்களின் மூலம் அவர்கள் பயன்பெறுவர். அதன் விவரம் பின்வருமாறு:-

திட்டத்தின் பெயர்	சிறப்பு உள்ளடக்கத் திட்டம்	
	குடியிருப்புகளின் எண்ணிக்கை	செலவினம் (ரூ.கோடியில்)
நகர குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல்	5,200	208.00

(viii) சமுதாய வளர்ச்சிப் பணிகள்

வீட்டு வசதி திட்டப்பணிகளை ஒருங்கிணைத்து முழுமையாக்க சமூகப் பொருளாதார மற்றும் வாழ்வியல் திட்டப்பணிகளும் செயல்படுத்தப்படுகின்றன. சென்னை மற்றும் மாநிலத்தின் இதர மாவட்டங்களில் குடிசைப் பகுதி வாழ் மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக முக்கிய திட்டங்களாக வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம், மறுகுடியமர்வுக்கு பின்னர் வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் வாழ்வியல் ஆதாரப் பணிகளுக்கான திட்டம் ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்களின் விவரம் பின்வருமாறு:-

வரிசை எண்	திட்டத்தின் பெயர்	சாதனைகள்	
		நபர்கள்	செலவினம் (ரூபாய் இலட்சத்தில்)
1	வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி	13,441	266.09
2	சுனாமி அவசர உதவி திட்டத்தின்கீழ் வாழ்வியல் ஆதாரப் பணிகள்	22,521	497.30
	மொத்தம்	35,962	763.39

2010 ஏப்ரல் 21]

2010–2011ஆம் ஆண்டிற்கான திட்டப்பணிகள்

2010-2011 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டப்பணிகள் செயல்படுத்தப்படும்:-

வரிசை எண்	திட்டத்தின் பெயர்	செலவினம் (ரூபாய் இலட்சத்தில்)
1	சுனாமி ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார பணிகள் (TEAP II)	70.00
2	சென்னை மற்றும் இதர மாவட்ட நகரங்களில் வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம் (2010-2011-க்கான பகுதி–2 திட்டம்)	20.00
3	இளைஞர் மேம்பாடு	15.00
4	உயர விரைவு சாலை / ஜவஹர்லால் நேரு நகர சீரமைப்புத் திட்டம் – வாழ்வாதாரப் பணிகள்	611.00
	மொத்தம்	716.00

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(ix) அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் மனைகளுக்கு விற்பனை பத்திரங்கள் வழங்குதல்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், குடியிருப்புகள் மற்றும் மனைகளில் வாழும் குடும்பங்களுக்கு அக்குடியிருப்புகள் மற்றும் மனைகளுக்கான விற்பனைப் பத்திரங்களை வழங்கி வருகின்றது. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 2010-2011 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களின்கீழ் 10,000 குடியிருப்புகளுக்கு ஒதுக்கீட்டு ஆணைகளும் 4,,000 குடியிருப்புகள்/ மனைகளுக்கு விற்பனைப் பத்திரங்களும் வழங்கப்படும்.

[2010 ஏப்ரல் 21

3.8 புதிய திட்டங்கள்

(i) பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சி

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் சென்னை நகரில் பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் தேய்மானம் மற்றும் சுற்றுப்புறக் காற்றில் உப்புத்தன்மை காரணமாக மிகவும் பழுதடைந்துள்ளன. சில அடுக்குமாடிக் குடியிருப்புகள் நல்ல நிலையில் இல்லாததன் காரணமாக மாடி முகப்புகள் இடிந்து விழுதல் மற்றும் கூரை தளம் இடிந்து விழுதல் போன்ற விபத்துக்கள் ஏற்படுகின்றன. பெரும்பாலான திட்டப் பகுதிகளில் குடிசைகள் அமைத்து ஆக்கிரமிப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனவே அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப்பகுதிகளை அரசு வரவு செலவு திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கீடு பெறாமல் தனியார் துறையில் உள்ள தொழில்நுட்ப முறைகளைக் கொண்டு பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சிமூலம் மறுமேம்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் செயலாக்கக் கூடிய பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகள் படிப்படியாக மறுமேம்பாடு செய்யப்படும். இதன் மூலம் குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படுவதால் நல்ல தரமான வாழ்க்கை முறையினை அவர்கள் கடைப்பிடிக்க ஏதுவாகும். மேலும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் ஆக்கிரமிப்புகளில் வாழும் குடும்பங்களுக்கு பெரிய கட்டட பரப்பு கொண்ட வீடுகள் உரிய அடிப்படை வசதிகள் மற்றும் சமுதாய கட்டமைப்புகளுடன் அமைக்கப்படும். பெரும்பாலான திட்டப்பகுதிகள் வணிக முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் அமைந்துள்ளதால் நிலக்கிரயத்திலிருந்து நிதி ஆதாரம் பெற்று செயல்படுத்தப்படும்.

(ii) பதின்மூன்றாவது நிதிக் குழு

தமிழ்நாட்டில் நகர குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகளை 2010-2015ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ள மைய அரசின் பதின்மூன்றாவது நிதிக் குழு, ரூ.300 கோடி சிறப்பு மானியமாக வழங்கியுள்ளது. இந்நிதியுதவியினைக் கொண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 7,500 வீடுகளை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பணிகள் 2010-2011-க்குள் தொடங்கப்படும்.

2010 ஏப்ரல் 21]

(iii) நீலகிரி மாவட்டத்தில் குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுக்கு வீட்டு வசதி

நீலகிரி மாவட்டத்தில் வாழும் நகர குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் கீழே கூறப்பட்டுள்ள பகுதிகளில் 1,968 வீடுகள் ரூ.71.48 கோடி செலவில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பணிகள் 2010-2011 ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

வரிசை எண்	நகரத்தின் பெயர்	வீடுகள்	மொத்த செலவினம் (ரூ.கோடி)
1	குன்னூர் நகராட்சி	673	
2	கோத்தகிரி பேரூராட்சி	568	71.48
3	உதகை நகராட்சி	287	
4	கேத்தி பேரூராட்சி	140	
5	கூடலூர் நகராட்சி	100	
6	உள்ளிக்கல் பேரூராட்சி	100	
7	ஜகதலா பேரூராட்சி	100	
	மொத்தம்	1968	71.48

(iv) சென்னை நதிகள் சீராக்க நிறுவனம்

சென்னை நகரில் செல்லும் பல்வேறு நதிகள் மற்றும் நீர் நிலைகளை சீராக்கம் செய்யவும், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் உட்பட பல்வேறு துறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும் சென்னை நதிகள் சீராக்க நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை நகரில் செல்லும் நீர்நிலைகள் மற்றும் கூவம் ஆற்றின் கரைகளில் உள்ள குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்யும் திட்டப்பணிகள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

[2010 ஏப்ரல் 21

கூவம் மற்றும் இதர நீர்நிலைகளின் கரைகளில் வாழும் குடும்பங்களை சென்னை நகருக்கு அருகே தன்னிறைவான அடுக்குமாடிக் குடியிருப்புகளில் போதிய வசதிகளுடன் மறுகுடியமர்வு செய்ய தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

(v) இராஜீவ் வீட்டு வசதித் திட்டம்

நாட்டின் குறிப்பிட்ட 25 அல்லது அதற்கு மேற்பட்ட நகரங்களை ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்திற்குள் குடிசைப்பகுதிகள் அற்ற நகரமாக மேம்படுத்த இராஜீவ் வீட்டு வசதித் திட்டம் என்ற புதிய திட்டத்தினை மைய அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காக தமிழ்நாட்டில் சென்னை மற்றும் மதுரை நகரங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டப்பணிகளுக்காக தமிழ்நாட்டிற்கு போதிய நிதி உதவி பெறவும், சென்னை மற்றும் மதுரை நகரங்களில் குடியிருப்புகள் மற்றும் வீடுகள் அமைத்து அவற்றை குடிசைப் பகுதிகள் அற்ற நகரங்களாக ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் மேம்படுத்தவும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. குடிசைப் பகுதி மற்றும் அப்பகுதியில் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை 2010-11-ல் மதிப்பீடு செய்யப்பட்டு இதற்கான பணிகள் தொடங்கப்படும்.

(vi) புனரமைப்பு மற்றும் மறுகுடியமர்வுத் திட்டப் பணிகள்

மறுகுடியமர்வு திட்டங்கள் செயல்படுத்தப்படும் நேர்வுகளில் அனைத்து தேவையான வசதிகள் ஏற்படுத்துவதற்கும் மற்றும் பணியாளர்களை திட்டத்தின் துவக்க நிலையிலேயே நியமிப்பதற்கும் வசதியாக தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் அனைத்து மறுகுடியமர்வு திட்டப்பகுதிகளுக்கும் பொருந்தும் வகையில் ஒரு சீரான கொள்கை மற்றும் வழிகாட்டு முறைகள் வகுக்கப்படும்.

3.9 திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிரமங்கள்

(i) சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் திட்டப்பகுதியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டம் மற்றும் அவசர சுனாமி மறுகுடியமர்வு திட்டங்களின்கீழ் 8,000

2010 ஏப்ரல் 21]

அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ322.11 கோடி செலவில் அமைக்க திட்டமிடப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டன. இத்திட்டப்பணிகளுக்காக மைய, மாநில அரசுகள் மற்றும் இதர நிறுவனங்களிடமிருந்து அனைத்து ஒப்புதல்களும் பெறப்பட்டிருந்த போதிலும் அடித்தளப்பணிகள் முடிவுற்ற பின்னர் சில நபர்களால் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு தடையாணை வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கு, விசாரணைக்கு எடுக்கப்பட்டு நீதிமன்ற தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டபின் விரைவாக வேலை தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) இதேபோல், சென்னை பெரும்பாக்கம் பகுதியில் சுமார் 24,000 குடியிருப்புகள் ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்பு திட்டத்தின்கீழ் அமைக்க திட்டமிடப்பட்டு திட்டப்பணிகள் தொடங்கப்பட இருந்த நிலையில், இத்திட்டப்பணியிடத்தில் உள்ள ஆக்கிரமிப்புதாரர்கள் பெற்ற உயர் நீதிமன்ற தடை உத்தரவு காரணமாக ஒரு வருடத்திற்கு மேலாக பணிகளைத் தொடங்க இயலவில்லை. நீதிமன்ற தடை உத்தரவு திரும்பப் பெறப்பட்டபின் இத்திட்டப் பணியிடத்தில் இருந்த ஆக்கிரமிப்புகள் மிகுந்த சிரமங்களுக்கு இடையே வருவாய்த் துறை மற்றும் காவல் துறையின் ஒத்துழைப்புடன் அகற்றப்பட்டதால் நிலம் மீளப் பெறப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட நிலப்பகுதியில் அண்மையில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

(iii) பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடித்துவிட்டு மீண்டும் அமைத்துத்தரும் பணி நடைபெறும்போது தமக்கு மாற்று குடியிருப்புகள் வழங்கப்படவேண்டுமென குடியிருப்புதாரர்களால் கேட்கப்படும் காரணத்தால் அவர்களின் ஒத்துழைப்பின்மை காரணமாக பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே குடியிருப்புதாரர்களை இடமாற்றம் செய்து குடியமர்த்திவிட்டு பழுதடைந்த கட்டடங்களை இடிக்கும் பணியை மேற்கொள்வதில் தாமதம் ஏற்படுகிறது.

மேற்கூறப்பட்ட காரணங்களினால் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் கட்டுமானப் பணிகளைத் தொடங்கி திட்டப்பணிகளை உரிய காலகட்டத்தில் முடிப்பதில் சிரமம் ஏற்படுகின்றது.

[2010 ஏப்ரல் 21

இவ்வாறான பல இடையூறுகள் இருப்பினும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் *2009-2010*ஆம் ஆண்டில் *10,000* அடுக்குமாடிக் குடியிருப்புகளை அமைத்து முடித்துள்ளது. மேலும் *2010-2011* ஆம் ஆண்டில் *20,000* அடுக்குமாடி குடியிருப்புகளை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

4. கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள்

கூட்டுறவு இயக்கத்தின்மூலம் மக்களின் வீட்டு வசதித் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்குடன் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் துறை ஏற்படுத்தப்பட்டது. வீடுகளை பதிவு செய்வதற்கான முத்திரைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து கட்டுபடியான விலையில் மக்கள் வீடுகள் வாங்கவும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவதில் உள்ள சிரமங்களை குறைத்து தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள்மூலம் கடன் வசதி அளித்து வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், கடன் வழங்கும் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் தலைமைக் கடன் வழங்கும் நிறுவனமாக செயல்படுவதற்காக தொடங்கப்பட்டது. கடந்த ஆண்டுகளில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மற்றும் இணையத்தின்மூலம் *11,64,434* குடும்பத்தினருக்கு வாங்கத்தக்க விலையிலான வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் தற்போது *1,034* கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் இயங்கி வருகின்றன. பல ஆண்டுகள் சிறப்புற சேவை செய்த கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் அண்மைக்காலமாக கடுமையான சிரமத்தில் உள்ளன. மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அவை சிறப்புற செயல்படுவதற்காக அவற்றை புத்தாக்கம் செய்யப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது. அவற்றில் காணப்படும் முரண்பாடுகளைக் களைந்து தேவையான மறு சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு கூட்டுறவு வீட்டு வசதி துறைக்கு மீண்டும் பெருமை சேர்த்திட தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க அரசு உறுதி பூண்டுள்ளது.

கடன்கள் வசூல்

நடப்பு ஆண்டில் கூட்டுறவு வீட்டு வசதி இணையத்திற்கு கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் செலுத்த வேண்டிய, காலங்கடந்த கடன் நிலுவை ரூ. *1513.71* கோடியாகும். அச்சங்கங்களை நிலைத்திருக்கச்

2010 ஏப்ரல் 21]

செய்ய கூட்டுறவு சங்க உறுப்பினர்களிடமிருந்து கடன் நிலுவைகளை வசூலிப்பதற்கு எல்லாவிதமான முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு கடன் வழங்கியுள்ள வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் அவை வழங்கிய கடன்களின் கட்டமைப்பைச் சீரமைப்புச் செய்யுமாறு கேட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு கடன் கட்டமைப்பை சீரமைப்பு செய்வதன்மூலம் கிடைக்கும் பயன்கள் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் கொடுக்க வேண்டிய சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகளுக்கான தேவைகளை நிறைவு செய்ய அச்சங்கங்களுக்கு வழங்கப்படும். தனி உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய கடன்களின் கட்டமைப்புகளை சீரமைப்பு செய்யும் சாத்தியங்கள் பற்றியும் அரசு ஆய்வு செய்யும்.

5. அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டம்

அரசு அலுவலர்களுக்கு வீடுகட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ், கீழே குறிப்பிட்டுள்ள நோக்கங்களுக்காக வீடுகட்ட முன்பணம் வழங்கப்படுகிறது:-

1. வீட்டு மனை வாங்கி அதில் வீடு கட்டுதல்
2. புதிதாக வீடு கட்டுதல்
3. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு/வீடு வாங்குதல்
4. தனியாரால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு/ வீடு வாங்குதல்
5. தற்போதுள்ள வீட்டை விரிவாக்குதல்
6. தற்போதுள்ள வீட்டை மேம்படுத்துதல்.

இத்திட்டத்தின்கீழ் மாநில அரசு அலுவலர்களுக்கு உயர்ந்தபட்சமாக ரூ.15.00 இலட்சமும், அனைத்திந்திய பணி அலுவலர்களுக்கு உயர்ந்தபட்சமாக ரூ.25.00 இலட்சமும் வீடு கட்ட முன்பணம் வழங்கப்படுகிறது. வீட்டை விரிவாக்கவும் மற்றும் மேம்படுத்தவும் தற்போது நடைமுறையில் உள்ள உயர்ந்தபட்ச முன்பணத் தொகையில் 50 சதவீதம் வழங்கப்படுகிறது.

2010-2011 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில், அரசு ஊழியர்கள் மற்றும் அனைத்திந்திய பணி அலுவலர்களுக்கு வீடுகட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ.125 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2010 ஏப்ரல் 21

6. இடவசதிக் கட்டுப்பாடு

6.1 தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம், 1960) (1973 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டம் எண் 23) இடவசதிக் கட்டுப்பாடு, வாடகைக் கட்டுப்பாடு மற்றும் வெளியேற்றுக் கட்டுப்பாடு ஆகிய நோக்கங்களை உள்ளடக்கியதாகும்.

6.2 தமிழ்நாடு கட்டடங்கள் குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம், 1960 ஒருங்கியல் சட்டம் என்பதால் எந்தவித திருத்தங்களுக்கும் மைய அரசின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம், 1960-ன்கீழ் வரும் பிரிவுகள் 3, 3ஏ, 12 13 மற்றும் 22 ஆகியவை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான இடவசதிக் கட்டுப்பாட்டு அதிகாரியால் கவனிக்கப்பட்டு வருகின்றன. சென்னையைப் பொறுத்தவரை சென்னை மாவட்ட ஆட்சியர் இச்சட்டத்தின் கூறுகளை செயல்படுத்தும் அதிகாரம் பெற்ற அலுவலர் ஆவார். தற்போது சென்னையில் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள வீடுகளுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் சட்டப்பூர்வமான வாடகைதாரர் என்பதால் வீட்டிற்கான வாடகை செலுத்துதல், பராமரித்தல் ஆகிய பொறுப்புகள் அவரைச் சார்ந்ததாகும்.

6.3 இச்சட்டத்தின் பிரிவு 3-ன்கீழ் கட்டடங்கள் அரசுக் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு அரசு ஊழியர்களுக்கு குடியிருப்பு நோக்கத்திற்கும், அரசு அலுவலகங்களுக்கு குடியிருப்பு அல்லாத நோக்கத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இச்சட்டத்தின்படி கட்டடங்களை எடுத்துக் கொள்ளுதல் அவ்வப்போது அரசு வழங்கும் நிர்வாக அறிவுறுத்தல்களின்படி நடைபெறும் ஒரு சட்டப்பூர்வ நடவடிக்கை ஆகும்.

6.4 பொதுப் பணித் துறையின் கணக்கீட்டு முறைப்படி கணக்கிடப்படும் வாடகை மிகவும் அதிகமாக உள்ள காரணத்தால் க்டந்த இருபது வருடங்களாக சென்னை மாநகரில் எந்த கட்டடங்களும் அரசுக் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்படவில்லை. தற்போதைய நில மதிப்பானது, மிகவும் பழைய மற்றும் அடிப்படை வசதிகளற்ற கட்டடங்களின் வாடகை மதிப்பீட்டை மிகவும் உயர்த்தி விடுகிறது. யாரும் கட்டடத்திற்கு குடிவர விரும்பாத நிலையில், அரசு அதற்கான வாடகையை

2010 ஏப்ரல் 21]

செலுத்த வேண்டியுள்ளது. ஆதலால் நிதிநிலை அடிப்படையில் எந்த ஒரு கட்டடத்தையும் அரசு கட்டுப்பாட்டில், சட்டப் பிரிவு 3-ன்கீழ்க் கொண்டு வருவது நன்மை பயக்கக்கூடியதாக இல்லை. சட்டப்பூர்வமான வாடகைதாரர் என்ற முறையில் அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள கட்டடத்தைப் பராமரிக்கும் பொறுப்பு அரசைச் சார்ந்ததாகும்.

6.5 முதன் முதலில் 1949-ஆம் ஆண்டில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்யும் வசதிக்கான உரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது அரசு ஊழியர்களின் இடவசதிக்கான தேவைகளை கவனிக்க வீட்டு வசதி வாரியம் மற்றும் வீடு கட்ட முன்பணம் வழங்குதல் போன்ற வசதிகள் உள்ளன. வீடு ஒதுக்கீடு கேட்டு விண்ணப்பம் ஏதும் நாளது தேதியில் பெறப்படவில்லை.

6.6 தற்போது அரசு கட்டுப்பாட்டில் 16 கட்டடங்கள் சென்னை மாவட்டத்தில் உள்ளன. இந்த வீடுகளின் குடியிருப்பு உரிமை விடுவிக்கப்பட்டு உரிமையாளர்கள் வசம் ஒப்படைக்கப்படும் வரை அரசே இந்த வீடுகளின் குடியிருப்புதாரர் ஆகும். அரசு கட்டுப்பாட்டில் உள்ள வீட்டுக்கு நியாயமான வாடகை நிர்ணயம் செய்தல், வேண்டுமென்றே சட்ட நிபந்தனைகளை மீறுதல், உள்வாடகைக்கு விடுதல் மற்றும் நிலுவைத் தொகை செலுத்தாத காரணத்தால் காலி செய்தல் ஆகிய இனங்கள் தொடர்பான நான்கு வழக்குகள் பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ளன.

6.7 தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம் 1960, சட்ட சம்பந்தமுடையதுடன் அரசின் கொள்கை தொடர்பானது என்பதால் இடவசதிக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு சட்டத்தின் பிரிவு 29-ன் கீழும் பொறுப்புகள் உள்ளன. அரசாணை (பல்வகை) எண் 43, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 25-1-2001-ல் உள்ள ஆணைகளின்படி ஒரு குறிப்பிட்ட கட்டடம் தொடர்பாக உண்மையான சந்தேகம் அல்லது தகராறு, வீட்டு உரிமையாளர் அல்லது வாடகை வசூலிக்க உரிமை பெற்றவர் இடையே பிரச்சினைகள் ஏற்படும் நேர்வுகளில் இடவசதிக் கட்டுப்பாட்டு அலுவலர் என்ற வகையில் தனியார் குடியிருப்புதாரார்கள் வைப்பீடு செய்யும் வாடகையை பெற மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி சட்டம் மாநிலம் முழுவதிலும் அறிவிக்கை

செய்யப் பெற்ற பகுதிகளில் உள்ள வாடகைக் கட்டடங்கள் தொடர்பாக, கட்டட உரிமையாளர்களுக்கும் அவற்றின் வாடகைதாரர்களுக்கும் இடையிலான தொடர்புகளை நெறிப்படுத்துகிறது.

7. நகர் ஊரமைப்புத் துறை

7.1 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மகாராட்டிர மாநிலத்திற்கு அடுத்தபடியாக அதிகமான நகர்மயமாதலைக் கொண்டு நாட்டிலேயே இரண்டாவது இடம் வகித்த தமிழ்நாடு, 2001 ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி மகாராட்டிராவை விஞ்சியுள்ளது. மிகச் சிறிய மாநிலங்களான கோவா (49.77 சதவிகிதம்) மற்றும் மிசோராம் (49.50 சதவிகிதம்) ஆகியவற்றை அடுத்து தமிழகம் 43.9 சதவிகித நகர்ப்புற மக்கள் தொகையைக் கொண்டு மூன்றாம் இடம் வகிக்கிறது. 2001 ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் 2.72 கோடி மக்கள் 832 நகர மையங்களில் வசிக்கின்றனர்.

நகர்ப்புற வளர்ச்சி விகிதத்தின் போக்கு, வெவ்வேறு காரணங்களினால் மக்கள் கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புற குடியேற்றங்களுக்கு அதிகப்படியாக இடம்பெயர்வதைக் குறிக்கிறது. விரைவான நகர்ப்புற வளர்ச்சியானது உள்கட்டமைப்பு வசதிகளை மக்களுக்கு வழங்குவதில் சிரமத்தை உண்டாக்குகிறது. இது நகர்ப்புற சேவைகளின் தேவை மற்றும் வழங்கலில் இடைவெளியை அதிகரிக்கிறது. இதன் விளைவாக, மாசு, சுற்றுச்சூழல் சீர்கேடு, வேலையில்லாத் திண்டாட்டம், நகர்ப்புற வறுமை, போதுமான நிதியின்மை மற்றும் மோசமான ஆளுகை போன்ற தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

பெரிய நகரங்களின் வளர்ச்சிக்கு அதிகமான முதலீடுகள் செய்யப்பட்டுள்ளதால், சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் வளர்ச்சி அடைய இயலவில்லை என்றும், இதனால் கிராமப்புறங்களில் இருந்தும் சிறிய நகரங்களிலிருந்தும் மக்கள், பெரு நகரங்களை நோக்கி இடம் பெயர்ந்து விட்டனர் என்று நகர்மயமாதல் குறித்த தேசியக் குழு தனது கருத்தினை தெரிவித்துள்ளது. நகரங்களுக்கான முதலீடுகளுக்கு சரியான முன்னுரிமை அளிப்பது மற்றும் எதிர்கால விரைவான நகர வளர்ச்சிக்கான உரிய நகர்ப்புற அபிவிருத்தி நெறிமுறைகளை ஏற்படுத்துவது ஆகியன இதுபோன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும்.

2010 ஏப்ரல் 21]

7.2 நகர்ப்புற அபிவிருத்திக்கான உத்தி

சரியான முதலீடுகளைச் செய்வதன் வாயிலாக, குறைவாகக் கிடைக்கும் வளத்தினால் ஏற்படும் தடைகளை நீக்கி, நகர்ப்புற குடியிருப்புகளில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுத்தும் சூழலை உருவாக்குவது நகர்ப்புற அபிவிருத்திக்கான உத்தியின் நோக்கமாகும். நமது வளங்கள் வரையறுக்கப்பட்டதாக இருப்பதால், கிடைத்துள்ள வளத்தை சமமாகப் பங்கிட்டு அனைத்துப் பெருநகரங்கள் மற்றும் நகரங்களில் முதலீடு செய்வதற்குப் பதிலாக திறன், மண்டலத்தின் சமச்சீரான வளர்ச்சி மற்றும் அதனால் ஏற்படும் மாநிலத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சி போன்ற நோக்கங்களைக் கருத்திற் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நகர் மையங்களில் முதலீடு செய்வது சிறந்ததாகும்.

மக்கள் தொகை மிக வேகமாக அதிகரித்து வருவதன்பொருட்டு குடியிருப்பு, பொழுதுபோக்கு, போக்குவரத்து, தொழிற்சாலை மற்றும் இதர வசதிகள் குறித்த தர நிர்ணயத்தை மறு ஆய்வு செய்வது உள்ளிட்ட தகுந்த நகர்ப்புற அபிவிருத்தி உத்திகளை வகுப்பதில் மிகுந்த கவனம் எடுத்துக்கொள்ளச் செய்துள்ளது. இதர நகர் மையங்களின் அபிவிருத்திக்கு அதிகமான ஊக்கச் சலுகைகள் வழங்குவதன் வாயிலாக, ஏற்கெனவே அபிவிருத்தி அடைந்துள்ள நகர் மையங்களின் அபிவிருத்தியின் வேகத்தைத் தாமதப்படுத்தும் வகையிலான முறையான நெடுங்காலத் திட்டமிடல் தேவைப்படுகிறது. மாநிலத்தில் குறைந்த அளவே நகர்ப்புற அபிவிருத்தி அடைந்துள்ள வட்டங்களில் அமைந்துள்ள சிறிய நகரங்களைக் கண்டறிந்து அவற்றை அபிவிருத்தி அடையச் செய்வதற்கு சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

நகர் மையங்களின் அபிவிருத்தி, மண்டல அளவிலான ஒட்டு மொத்த அபிவிருத்தியின் அடிப்படையில் அமைய வேண்டும். மாநிலத்தின் வெவ்வேறு மண்டலங்களின் நகர்ப்புற மக்கள் தொகையை மண்டலங்களுக்கிடையே பகிர்ந்தளித்து சமச்சீராக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். இரு பெருநகரங்கள்/நகரங்களுக்கிடையே அமைந்துள்ள பிரதான சாலைகளை ஒட்டி ஏற்படும் அபிவிருத்திகளை தக்க உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதன்மூலம் ஒழுங்குபடுத்த வேண்டும். அவ்வாறு செய்வது நகரத்தின் மையப் பகுதியில் ஏற்படும் நெரிசலை நெடுங்கால அடிப்படையில் குறைக்க உதவும்.

[2010 ஏப்ரல் 21

விரைவான நகர்மயமாதலின் விளைவுகளை எதிர்கொள்ளும் வகையில் சமாளிப்பதற்கு கீழ்க்காணும் இனங்களுக்கு முக்கியத்துவம் அளித்து செயல்படுத்த வேண்டியுள்ளது:-

அ. நகர எல்லைக்குட்பட்ட பகுதி மற்றும் அதை மையமாகக் கொண்டு ஒட்டி அமைந்துள்ள சில பகுதிகளுக்கு மட்டுமின்றி இரண்டு பெரு நகரங்கள்/நகரங்களுக்கு இடையே அமைந்துள்ள பிரதான சாலையை ஒட்டி நீள்வாக்கிலாக அபிவிருத்தியடையும் பகுதிகளுக்கும் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்குத் தக்கவாறு முழுமைத் திட்டங்கள், புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள், விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரித்து செயல்படுத்துதல். பலவகையான நில உபயோகத்திற்கு சரியானபடி நிலங்களை ஒதுக்கீடு செய்தல், சாலைகள் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்றவை சட்டப்படியிலான திட்டங்களின் நோக்கமாகும்.

ஆ. போக்குவரத்து மேலாண்மை, புராதன நகர்ப் பகுதி பாதுகாப்பு, மிகக் குறைந்த அளவே நகர்புற வளர்ச்சியடைந்த வட்டங்களின் அபிவிருத்தி மற்றும் இதர அபிவிருத்திகளுக்கு, தக்க சிறப்புத் திட்டங்கள் தயாரித்து செயல்படுத்துதல்.

இ. விரைவான நகர்ப்புற வளர்ச்சியினால் ஏற்படும் சவால்களை முன்பே கணித்து வரும்முன் காக்கும் வண்ணம் அதற்கேற்றவாறு தக்க திட்டங்களைத் தயாரிப்பதற்கு வான்வழி புகைப்படம், தொலையுணர்வு, புவியமைப்பு தகவல் முறை போன்ற மிக நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் இதர தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துதல்.

ஈ. சட்டப்படியான திட்டங்களில் குறிப்பிட்டுள்ள திட்டங்களை செயல்படுத்துவதற்கு உள்ளாட்சிகள் / உள்ளூர் திட்டக் குழுமங்கள் ஆகியவற்றிற்கு உதவுவதற்கெனத் தனியே நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியைப் பயன்படுத்திக்கொள்ளுதல்.

உ. ஒவ்வொரு முன்னுரிமை வாய்ந்த நகரமும் தனது முதலீடு மற்றும் ஊக்கப் பங்கை பெறும் வகையில் நிதி உதவி வழங்கும் முறையை சீர்படுத்துதல்.

TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 21]

7.3 சட்டப்படியான திட்டங்கள் தயாரித்தல்

அ) முழுமைத் திட்டம் / புதுநகர் வளர்ச்சித் திட்டம்

முழுமைத் திட்டம் / புதுநகர் வளர்ச்சித் திட்டம் என்பது நகரங்களின் திட்டப் பகுதியில் உள்ள நிலங்களின் ஒழுங்கான வளர்ச்சியை உறுதி செய்வதற்கான ஒழுங்குபடுத்தும் வழிகாட்டு நெறிமுறைகளுடன்கூடிய திட்டமாகும். பெரும்நோக்கில், நிலப் பயன்பாட்டை ஒழுங்குபடுத்துதல் மற்றும் திறன்வாய்ந்த சாலை அமைப்பு, புறவழிச் சாலைகள், வட்டச் சாலைகளுக்கான போக்கினை நிர்ணயித்தல் ஏனையவை இதன் நோக்கமாக அமைந்துள்ளது. நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மறுசீரமைப்பிற்கான பெரிய அளவிலான ஒருமித்தத் திட்டத்தை வரையறுத்தல், ஒருமுகப்படுத்துதல் மற்றும் வழங்குதல் போன்ற ஒரு தொடர் முறையை இது உள்ளடக்கியதாகும். நலமான வாழ்வுக்கான உள்ளூர் குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையிலும், மேலும் உடனடி மற்றும் வருங்காலத் தேவை ஆகியவற்றின் அடிப்படையிலான சமூக மற்றும் பொருளாதார சம்பந்தமானவற்றை மறைமுகமாக உள்ளடக்கியதாக இது வடிவமைக்கப்படுகிறது.

இத்துறை, இதுகாறும் 117 நகரங்களுக்கு முழுமைத் திட்டம்/ புதுநகர் வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்துள்ளது. இத்திட்டங்கள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மறு ஆய்வு செய்யப்படுகின்றன. 2009-2010 ஆம் ஆண்டில் 6 நகரங்களுக்கு முழுமைத் திட்டம்/ புதுநகர் வளர்ச்சித் திட்டம் தயாரிக்க/மறுஆய்வு செய்ய எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 2010-11 ஆம் ஆண்டில் 6 முழுமைத் திட்டங்கள்/புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்க/ மறுஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆ) விரிவு மேம்பாட்டுத் திட்டம்

இவை நுண்ணிய அளவிலான மற்றும் பெரிய அளவிலான முழுமைத் திட்டத்தை ஒத்து அமையும் வகையில் நகர்ப்புற பகுதிகளுக்கெனத் தயாரிக்கப்படும் செயல் திட்டங்களாகும். முழுமைத் திட்ட வரம்பிற்குள் சமச்சீரான வளர்ச்சிக்கு வசதி செய்வதற்கு குறிப்பிட்ட நில உபயோகம், பூங்கா மற்றும் விளையாடுமிடங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள், சிறிய இணைப்புச் சாலைகள், முறையான போக்குவரத்து சுழற்சிக்கான

[2010 ஏப்ரல் 21

சாலைகள், பொது உபயோகங்கள், வணிகம் மற்றும் தொழிற் பகுதிகள் மற்றும் பிறவற்றின் சீரான வளர்ச்சிக்கு இத்திட்டத்தில் விரிவான வகையில் நிலப்பங்கீடு செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தரம் 1 (மக்கள் தொகை 1,00,000-க்கு மேல்) மற்றும் தரம் 2 (மக்கள் தொகை 50,000-லிருந்து 99,999 வரை) நகரங்களுக்கு மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இதுவரை 1,625 விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவை வரைவு, இணக்கம் மற்றும் ஒப்புதல் ஆகிய நிலைகளில் உள்ளன.

2009-10 ஆம் ஆண்டில் 50 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டு இலக்கு அடையப்பட்டுள்ளது. விரைவாக வளர்ச்சியடையும் பகுதிகளுக்கு 2010-11 ஆம் ஆண்டில் 50 விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இ) திட்டப் பகுதிகளை அறிவிப்புச் செய்தல்

புவியமைப்புத் தகவல் முறையைப் பயன்படுத்தி புதிய பகுதிகளுக்கான சட்டப்படியான திட்டங்களைத் தயாரிக்கும் பணி 2009-10 ஆம் ஆண்டில் அரியலூர், திருப்பெரும்புதூர், மாமல்லபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய பகுதிகளுக்கு மேற்கொள்ளப்பட்டது. 2010-11 ஆம் ஆண்டில் (1) ஆத்தூர்-நரசிங்கபுரம் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்கள் மற்றும் (2) உடுமலைப்பேட்டை மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் மேலும் இரு புதிய கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகளை அறிவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7.4 சிறப்புத் திட்டங்கள் மற்றும் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து செயல்படுத்தப்படும் நடைமுறையில் உள்ள திட்டங்கள்

அ) புராதன நகர வளர்ச்சித் திட்டம்

புராதனத் தலங்களைப் பாதுகாப்பதும், அதன் சுற்றுப்புறத்தை அனைத்து வகையான மாசுபாடுகளிலிருந்து பாதுகாப்பதும் மிகவும் அவசியமாகிறது. இந்நோக்கத்தை நிறைவேற்ற அறிவிப்பு செய்யப்பட்ட 38 பாரம்பரிய நகரங்களுக்கு வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அரசு ஏற்கெனவே 49 நகரங்கள்/இடங்களை புராதனத் தலங்களாக அறிவிப்பு செய்துள்ளது. புராதனத் தலங்களின் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்த நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து ஒவ்வொரு நகரத்திற்கும்

2010 ஏப்ரல் 21]

அதிகபட்சமாக ரூ.50.00 இலட்சம் வீதம் மானியமாக நிதியுதவி வழங்கப்படுகிறது. இதுகாறும் 49 நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றின் திட்டச் செயலாக்கம் பல நிலைகளில் உள்ளன. 2010-11 ஆம் ஆண்டில் மேலும் 5 நகரங்களில் இத்திட்டத்தை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆ) போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டங்கள்

மாநிலத்தின் மாநகரங்கள் மற்றும் நகரங்களில் தற்போதுள்ள போக்குவரத்து நடைமுறைகளை ஆராய்ந்து, நீண்டகாலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, போக்குவரத்து நெரிசலை நீக்கி சீரான முறையில் போக்குவரத்தை ஏற்படுத்துவதை முக்கிய நோக்கமாகக்கொண்டு போக்குவரத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

போக்குவரத்துத் திட்டத்தைத் தயாரிக்க நகர மையங்களில் ஏற்படும் முக்கிய பிரச்சினையைக் குறிப்பாகக் கண்டறிய ஐந்து மாநகராட்சிகளான கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகியவற்றிற்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து ஆய்வறிக்கைகள் மற்றும் 58 நகரங்களுக்கு போக்குவரத்து செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இம்மேம்பாட்டுத் திட்டங்களை அந்தந்த உள்ளாட்சியே செயல்படுத்த போதிய நிதி வசதி அவற்றிடம் இல்லாதிருக்கும் நிலையில் நகர் ஊரமைப்பு நிதியிலிருந்து மானியமாக நிதி வழங்கி திட்டங்களை விரைந்து செயல்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தின்படி, திட்ட மதிப்பீட்டில் 75 சதவிகிதத் தொகை நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாக வழங்கப்படும். மீதம் 25 சதவிகிதத் தொகை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தனது சொந்த நிதியிலிருந்து செலவு செய்ய வேண்டும். அதிகபட்ச மானியத் தொகையாக ஒரு மாநகராட்சிக்கு ரூ.50.00 இலட்சமாகவும், ஒரு நகராட்சிக்கு ரூ.25.00 இலட்சமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 32 நகரங்களில் திட்டங்கள் கண்டறியப்பட்டு, 22 நகரங்களுக்கு ரூ.2,03,35,500 அளவிற்கு மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது. 2010-11 ஆம் ஆண்டில் மேலும் 5 நகராட்சிகளில் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2010 ஏப்ரல் 21

இ) பூங்காக்கள் மேம்பாடு

பொதுமக்கள் சுத்தமான காற்றை சுவாசிக்கவும், அசதியான பரபரப்பான அலுவல்களுக்கிடையில் சிறிது நேரம் இளைப்பாறவும் பூங்காக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. பொதுமக்களின் நலனுக்காக பூங்காக்களை மேம்படுத்தி, பராமரிக்க வேண்டும். தற்போதுள்ள பூங்காக்களை மேம்படுத்த திட்ட மதிப்பீட்டில் 90 சதவிகிதத் தொகை (அதிகபட்சமாக ரூ.2.25 இலட்சம்) மானியமாக ஒரு பூங்காவிற்கு வழங்கப்படும். மீதத் தொகை சம்பந்தப்பட்ட உள்ளாட்சியால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இதற்குமுன், திட்ட மதிப்பீட்டில் 50 சதவிகிதத் தொகை (அதிகபட்சமாக ரூ.1.25 இலட்சம்) மட்டுமே மானியமாக வழங்கப்பட்டது. 2009-10 ஆம் ஆண்டில் இரண்டு நகரங்களுக்கு மானியமாக ரூ.2.50 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. 2010-11 ஆம் ஆண்டில் மேலும் 4 நகர்ப்புற உள்ளாட்சிகளில் பூங்காக்களை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7.5. பகுதி – 2 திட்டம்

புவியமைப்புத் தகவல் முறையைப் பயன்படுத்தி வளர்ச்சித் திட்டங்கள் தயாரித்தல்

திட்டமிடுதலில் தொலையுணர்வு, புவியமைப்புத் தகவல் முறை போன்ற நவீன தொழில்நுட்பத்தைப் புகுத்தும் நோக்கிலும், அனைத்து இரண்டாம் நிலை நகரங்களுக்கும் இரண்டிலிருந்து மூன்று ஆண்டு குறுகிய காலத்திற்குள் முழுமைத் திட்டங்கள் தயாரிக்கவும், புதிதாக கூட்டு உள்ளூர்த் திட்டக் குழுமமாக உருவாக்கப்பட்டுள்ள பெரம்பலூருக்கான முழுமைத் திட்டத்தை ஒரு முன்மாதிரித் திட்டமாகத் தயாரிக்க, நேஷனல் ரிமோட் சென்சிங் ஏஜென்சி, ஐதராபாத் / ஸ்பேஸ் அப்ளிகேசன் சென்டர், அகமதாபாத் ஆகிய மைய அரசு நிறுவனங்களின் மூலம் 2007-08 ஆம் ஆண்டு ரூ.10.00 இலட்சம் செலவில் பணி மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.

2010-2011 ஆம் ஆண்டில் திருவள்ளூர் கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிக்கான முழுமைத் திட்டம் தனியர் (Out sourcing) மூலம் ரூ.10.00 இலட்சம் செலவில் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2010 ஏப்ரல் 21]

8. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

2001 ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் மொத்த மக்கட்தொகையில் 11.28 சதவீதமும் மொத்த நகர்ப்புற மக்கட்தொகையில் 25.62 சதவீதமும் சென்னைப் பெருநகர் பகுதியில் வசிக்கின்றனர்.

2001 ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி சென்னையின் மக்கட்தொகை 43.44 இலட்சம் ஆகும். மேலும் 2026 ஆம் ஆண்டில் மக்கள் தொகை 58 இலட்சத்தை தாண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டில் 70 இலட்சமாக இருந்த சென்னைப் பெருநகர் பகுதியின் மக்கட்தொகை, 2026 ஆம் ஆண்டில் 126 இலட்சம் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகரின் பிரச்சினைகளைத் தீர்க்க விரிவான திட்டம் தேவை என்பதை உணர்ந்து தமிழக அரசு 1974 ஆம் ஆண்டிலேயே சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தை நிறுவியது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் தயாரிக்கப்பட்ட முதல் முழுமைத் திட்டம் ஆகஸ்ட், 2008 ஆம் ஆண்டு வரை நடைமுறையிலிருந்தது. நிறுவப்பட்ட நாள் முதல் கடந்த 36 வருடங்களாக பெருநகரின் திட்டமிடுதலிலும், வளர்ச்சியிலும் சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் நிறுவனங்களுடன், இணைந்து சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பெரும் பணியாற்றி வருகிறது. 2009-10 ஆம் நிதி ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட மற்றும் தொடர்கின்ற முக்கிய திட்டங்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

8.1 சென்னைப் பெருநகர் பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்டம் – 2026

அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட சென்னைப் பெருநகர் பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்டம் 2-9-2008 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டது. அந்நாளிலிருந்து இரண்டாம் முழுமைத் திட்டம் நடைமுறையில் உள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தினை செயல்படுத்தும்போது அதனை மறு ஆய்வு செய்யவும், கொள்கைகளிலும், செயல்முறைத் திறனிலும் தேவையான திருத்தங்களை செய்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்காக பிரிவு வாரியாக ஆறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் முழுமைத் திட்டத்தில்

[2010 ஏப்ரல் 21

பரிந்துரைக்கப்பட்ட கொள்கைகளையும், செயல்முறைத் திறன் மற்றும் செயல் திட்டங்களை முன்னுரிமைப்படுத்துவதும், சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் முகமைகள்மூலம் வரையறுக்கப்பட்ட காலகட்டத்திற்குள் இவற்றை செயல்படுத்துவதன்மூலம், பெருநகர மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதும் இக்குழுக்களின் முக்கியப் பணி ஆகும்.

இக்குழுக்கள் கூடி, பல பிரச்சனைகளை விவாதித்து, சென்னைப் பெருநகரில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக கூறப்பட்டுள்ள கொள்கைகளையும், செயல்முறைத் திறன்களையும் செயல்படுத்தவும் மற்றும் திட்டத்தின் தொலைநோக்கு பார்வையை அடைய, முன்கூட்டிய நடவடிக்கைகள் எடுக்க வலியுறுத்தியுள்ளன. இக்குழுக்கள் காலமுறைதோறும் கூடி இரண்டாம் முழுமைத் திட்டத்தின் குறிக்கோள்களை அடைய தமது பங்கினை அளிக்கும்.

8.2 சென்னைப் பெருநகர்ப் பகுதியில் உள்ள புராதன கட்டடங்கள் மற்றும் புராதனப் பகுதிகளைப் பாதுகாத்தல்

சென்னையில் பாதுகாப்பதற்குரிய பல அரிய புராதனக் கட்டடங்கள் / பகுதிகள் உள்ளன. மாநில மற்றும் மத்திய அரசின் தொல்லியல் சின்னங்களின் சட்டத்தின்கீழ் வராத, கட்டடக்கலை அல்லது வரலாற்று சிறப்பம்சம் கொண்ட, பாதுகாக்கப்பட வேண்டிய பல புராதனக் கட்டடங்களையும் / பகுதிகளையும் பாதுகாக்க, புராதனக் கட்டடங்கள் மற்றும் பகுதிகளை பட்டியலிடுதல், வெளியிடுதல் மற்றும் பாதுகாப்பதற்கான விதிகளை அமைத்தல் போன்றவற்றிற்கு இரண்டாம் முழுமைத் திட்டத்தின் கீழ் உள்ள வளர்ச்சி விதிமுறைகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் பாதிக்கப்பட்ட தனியார் உரிமையாளர்களுக்கு வளர்ச்சி உரிமை மாற்றத்திற்காகவும் (Transfer of Development Rights) அத்தகைய கட்டடங்களைப் பராமரிக்கத் தேவையான நிதி ஒப்பளிப்பு செய்வதற்காகவும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

வளர்ச்சி விதிகளின்கீழ் கூறியுள்ளபடி அரசுத் துறை மற்றும் நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட துறை வல்லுநர்கள், பங்கீட்டாளர்கள் ஆகியோரை உள்ளடக்கி பாரம்பரிய பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதன் உடன் நிகழ்வாக, மதிப்பீடு செய்வதற்கான அளவீடு மற்றும் பாதுகாக்கப்பட வேண்டிய கட்டடங்களின் இடங்களைக் கண்டறிய ஓர் வெளிப்படையான முறை பட்டியலிடுதல் மற்றும் பொதுமக்கள் மற்றும் உரிமையாளர்களைக் கலந்தாலோசித்தபின் அரசால்

2010 ஏப்ரல் 21]

அறிவிக்கை வெளியிடுதல் போன்றவற்றிற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

8.3 விரிவான வளர்ச்சித் திட்டம்

விரிவான வளர்ச்சித் திட்டமானது, ஒரு சிறிய பகுதிக்கான நில உபயோக வரைமுறைகள் மற்றும் அதன் அபிவிருத்திகளை உள்ளடக்கி தயாரிக்கப்படுவதாகும். பொதுவாக இத்திட்டம் சுமார் 6 சதுர கி.மீ பரப்புடைய பகுதிக்கு தயாரிக்கப்படுவதாகும். மனை விவரங்கள் உள்ள பகுதிகளுக்கு விரிவான திட்டங்கள் தயாரிக்கப்படும். தொடர் கட்டுமானப் பகுதி, பொருளாதாரத்தில் நலிவடைந்த பகுதி போன்ற வேறுபாடுகள் இருப்பதாலும் மற்றும் நகர வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியதாலும் விரிவான திட்டமிடுதல் அவசியமாகிறது.

சென்னைப் பெருநகர் பகுதியில், 57 திட்டப் பிரிவுகளுக்கு, விரிவான வளர்ச்சித் திட்டங்கள் 99 சதுர கிலோ மீட்டர் பரப்பிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டம் செயல்முறைத்திறன் இறுதி செய்யப்படுவதை எதிர்நோக்கியும், வரன்முறைத் திட்டங்களை அறிமுகப்படுத்தப்பட்டதாலும் கடந்த 15 வருடங்களாக விரிவான வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை. தற்பொழுது இரண்டாம் முழுமைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதால் பல்வேறு திட்டப் பிரிவுகளுக்கு, விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் சென்னை மாநகராட்சி எல்லையினை விரிவாக்க, அரசு அறிவித்ததை கருத்திற்கொண்டு, விரிவான வளர்ச்சித் திட்டத்தில் சேர்க்கப்படும் பகுதிகள், அதன் உள்ளடக்க விவரங்கள், அளிக்கப்பட வேண்டிய முன்னுரிமைகள், தயாரிப்பதற்கான காலகட்டங்கள் ஆகியவற்றை வகுத்து விரிவான வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

8.4 சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கான புவியியல் தகவல் மையம்

- சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்ட வரைபடங்கள் அனைத்தும் கணினியினைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. அவை அனைத்தும் பொதுமக்கள் இலவசமாக அணுகும் வகையில் 27-12-2009-ல் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அலுவலக இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

[2010 ஏப்ரல் 21

- சென்னை மாநகராட்சிப் பகுதி நீங்கலாக பிற பகுதிகளுக்கான நில உபயோக வரைபடங்கள் புவியியல் தகவல் அமைப்பின் வடிவில் மாற்றப்பட்டு வருகின்றன. இப்பணியை ஓராண்டு காலத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அதிகமான வருவாய் உட்பிரிவுகளைக் கொண்ட சென்னை மாநகராட்சியின் பகுதிகளை புவியியல் தகவல் அமைப்பின்கீழ் மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.
- அனைத்து நில உபயோக வரைபடங்களையும் புவியியல் தகவல் அமைப்பின்கீழ் மாற்றியபின், ஒரு குறிப்பிட்ட மனையின் நில உபயோகம், அதில் அனுமதிக்கப்படும் பயன்பாடுகள், கட்டப்படும் கட்டடத்தின் வகை, பொருந்தக்கூடிய வளர்ச்சி விதிகள், திட்ட அனுமதி பெறப்படும்போது செலுத்த வேண்டிய கட்டணங்கள் ஆகிய தகவல்களை எவரும் இலவசமாக கணினிமூலம் அறிந்துகொள்ள ஏதுவாகும். உட்கட்டமைப்பு வசதிகளை திட்டமிடுதல் மற்றும் வளர்ச்சிகளுக்கு, ஏனைய அரசுத் துறைகள் மற்றும் முகமைகள் இந்த புவியியல் தகவல் மையத்தை பயன்படுத்திக்கொள்ளலாம்.

8.5 சென்னைப் பெருநகர வளர்ச்சிப் பகுதியின் எல்லையினை மறு ஆய்வு செய்தல்

வேகமாகப் பெருகி வரும் நகர்மயமாதல், நெருக்கடி, நகரில் புதிதாக குடியமர்வு செய்தல், தேவைக்கும் குறைவான வளங்கள் ஆகியவைகளினால் ஏற்படும் நகரப் பிரச்சினைகளைக் கையாளவும், நகர வளர்ச்சியில் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை சந்திக்கவும் சென்னை போன்ற பெருநகரங்களில் பெருநகர திட்டமிடல் இன்றியமையாததாகும். தமிழக அரசானது தக்க தருணத்தில் சென்னைப் பெருநகர திட்டப் பகுதிக்கான திட்டங்களைத் தீட்டுவதற்காக 1974-ல் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தை நிறுவியது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டப் பகுதியின் பரப்பு 1,189 சதுர கி.மீ. ஆகும். ஆனால், நாட்டின் மற்ற பெருநகரங்களின் பரப்புகளோடு ஒப்பிடும்போது சென்னைப் பெருநகரின் பரப்பு மிகக் குறைவாகவே உள்ளது. மும்பைப் பெருநகர மண்டல வளர்ச்சிப் பகுதி 4,355 சதுர கி.மீ., கொல்கத்தா பெருநகர வளர்ச்சிப் பகுதி 1,854 சதுர கி.மீ., தில்லி தேசிய தலைநகர மண்டல பகுதி

2010 ஏப்ரல் 21]

33,578 சதுர கி.மீ., பெங்களூரு பெருநகர மண்டல வளர்ச்சிப் பகுதி 8,005 சதுர கி.மீ. மற்றும் ஹைதராபாத் பெருநகர வளர்ச்சிப் பகுதி 6,300 சதுர கி.மீ. பரப்புள்ளதாகவும் உள்ளன. 1,189 சதுர கி.மீ. பரப்பு உள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதியானது சென்னை நகரின் தாக்கத்தின் அடிப்படையில் பூகோளரீதியாக 1973-74 ஆம் ஆண்டுகளில் வரையறுக்கப்பட்டது.

வளர்ந்து வரும் நகர்ப்புற பிரச்சினைகளை எதிர்கொள்ளவும், சென்னையைப் பொருளாதார முதலீடுகளுக்கு ஒரு கவர்ச்சிகரமான சேருமிடமாக உருவாக்கவும், போதுமான வேலைவாய்ப்பு வசதிகளை உருவாக்கவும், ஒருங்கிணைந்து திட்டமிடுதல் மற்றும் வளர்ச்சிக்கான பணிகள் மேற்கொள்வது அவசியமாகிறது. தற்பொழுது சென்னைப் பெருநகரைச் சுற்றியுள்ள பகுதிகளான திருப்பெரும்புதூர், கேளம்பாக்கம், சிங்கப்பெருமாள் கோயில், திருவள்ளூர், பொன்னேரி ஆகிய பகுதிகளில் ஏற்பட்டுவரும் வேகமான வளர்ச்சிகளைக் கருத்தில் கொண்டு, சென்னைப் பெருநகர திட்டப் பகுதியின் பரப்பினை மறு ஆய்வு செய்ய வேண்டியது இன்றியமையாததாகும். சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நகர் ஊரமைப்பு இயக்குநரகத்துடன் இணைந்து சென்னைப் பெருநகர வளர்ச்சிப் பகுதியின் எல்லையினை மறுஆய்வு செய்து தகுந்த செயற்குறிப்புகளை அரசிற்கு சமர்ப்பிக்கும்.

8.6 தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் - III

சென்னைப் பெருநகர் பகுதிகளில் பெருகி வரும் போக்குவரத்துப் பிரச்சினைகளைக் குறைப்பதற்கு, உலக வங்கியின் உதவியுடன் ஓர் ஐந்தாண்டுத் திட்டத்தை 2005 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் இருந்து தமிழ்நாடு அரசும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமும் மேற்கொண்டுள்ளன. சமூக மற்றும் சுற்றுப்புறச் சூழல் தாக்கம் குறித்த பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு தமிழ்நாடு அரசும் உலக வங்கியும் ஜுலை 2008-ல் நடத்திய இடைக்கால மறு ஆய்வுக்குப் பிறகு இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.188 கோடியாகக் குறைக்கப்பட்டது. சென்னை பெருநகரப் பகுதியில் போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்காக 36 கி.மீ. நீளமுள்ள 5 முக்கிய சாலைகளை ரூ.145 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல், அண்ணாசாலையில் 2 இடங்களிலும், பெரியார் ஈ.வெ.ரா. சாலையில் ஒரு இடத்திலும் பிரிவு பாலங்களை கட்டுவதற்காக விரிவான திட்ட அறிக்கை

[2010 ஏப்ரல் 21

தயார் செய்தல் ஆகியவை அடங்கும். இது தவிர ரூ.15.6 கோடி மதிப்பீட்டில் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு சாதனங்களை நிறுவுதல், ஒரு போக்குவரத்து கல்வி மையம் அமைத்தல் மற்றும் செயலாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவையும் இத்திட்டத்தில் அடங்கும். அண்மையில் சென்னைக்கான 18 மாத கால ஒருங்கிணைந்த போக்குவரத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பெரும்பாலான திட்டங்களுக்கு விரிவான தொழில்நுட்ப திறனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவை பல்வேறு முன்னேற்றக் கட்டங்களில் உள்ளன. இந்த ஆய்விற்கான இறுதி அறிக்கையை கலந்தாய்வர்கள் (consultants) விரைவில் சமர்ப்பிக்க உள்ளனர். இந்த ஆய்வானது சென்னைப் பெருநகர்ப் பகுதி முழுமைக்கும் இயக்குகின்ற திட்டத்தை வழங்குவதுடன், அடுத்த 20 ஆண்டிற்குண்டான சாலை மற்றும் போக்குவரத்து உள் கட்டமைப்பில் விவேகமுள்ள முதலீட்டைச் செய்ய உதவும்.

8.7 பெருந்திரள் துரித இரயில், போக்குவரத்துத் திட்டம் நிலை-II

வேளச்சேரியிலிருந்து புனித தோமையர் மலை வரை

திருமயிலையிலிருந்து வேளச்சேரி வரை 11.17 கி.மீ. தூர பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் நிலை-II திருத்திய மதிப்பீட்டின்படி ரூ.877.59 கோடி மதிப்பீட்டில் முழுமையாக முடிக்கப்பெற்று நவம்பர் 2007 முதல் செயல்படத் துவங்கியுள்ளது. இத்திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு அதன் பங்காக 2008-09 வரை ரூ.544.37 கோடி வழங்கியுள்ளது. பெருந்திரள் துரித இரயில் திட்ட நிலை-II திட்டப் பணியை வேளச்சேரி முதல் புனித தோமையர் மலை வரை 5 கி.மீ. தூரம் நீட்டிக்க, ரூ.496 கோடி மதிப்பீட்டில் தமிழக அரசும் மைய அரசும் சேர்ந்து 2:1 என்ற விகிதாச்சாரத்தில் செலவுப் பொறுப்பை ஏற்றுச் செயல்படுத்த தமிழக அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டப் பணிகள் 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டு 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2008-2009 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக தமிழக அரசு தன் பங்காக ரூ.66.67 கோடி வழங்கியுள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில் மாநில அரசின் பங்களிப்பாக ரூ.20.30 கோடி மற்றும் ரூ.40.00 கோடி முறையே பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்து திட்டம் நிலை-2 மற்றும் பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்து திட்டம் நிலை-2-ன் விரிவாக்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 21]

8.8 சென்னைப் புறநகர் பேருந்து நிலையத்தில் இரண்டடுக்கு கீழ்த்தள இரு சக்கர வாகன நிறுத்துமிடம் அமைத்தல்

கோயம்பேட்டில் ரூ.103 கோடி செலவில் கட்டப்பட்ட சென்னைப் புறநகர் பேருந்து நிலையம், 2002 நவம்பரிலிருந்து இயங்கி வருகின்றது. சுற்றிலும் மூடப்பட்ட இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் இல்லாததால், சென்னைப் புறநகர் பேருந்து நிலையத்தில் ரூ.17 கோடி மதிப்பீட்டில் இரண்டடுக்கு கீழ்த்தள இரு சக்கர வாகன நிறுத்துமிடம் அமைக்கும் பணி 2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கட்டிடத்தின் மொத்த தரைப்பரப்பு 6,500 ச.மீ. ஆகும். இக்கட்டிடத்தில் 3,000 எண்ணிக்கையிலான இரு சக்கர வாகனங்களை நிறுத்த முடியும். இத்திட்டம் 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிக்கப்படும். இத்திட்டம் முடிவு பெற்ற பிறகு சென்னைப் புறநகர் பேருந்து நிலையத்திற்கு இரு சக்கர வாகனங்களில் வரும் பயணிகள் பிற அடிப்படை வசதிகள் கொண்ட சுற்றிலும் மூடப்பட்ட வாகன நிறுத்தும் வசதிகளுடன் பயனடைவார்கள்.

9. முடிவுரை

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, கட்டுப்படியாகக் கூடிய விலையில் அனைவருக்கும் வீடுகள் வழங்கும் திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. பொதுத் துறை மற்றும் தனியார் கூட்டு முயற்சி மற்றும் கூட்டு முயற்சித் திட்டம் ஆகிய புதிய உத்திகளின்கீழ் தனியார் பங்களிப்பை ஈடுபடுத்தி பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்கள் மற்றும் நலிவடைந்த பிரிவினர்களுக்கு அரசுத் திட்டங்களின் நன்மைகள் சென்றடைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நவீன தொழில் நுட்பங்களுடன்கூடிய பெருந்திட்டங்களை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் மற்றும் நகர் ஊரமைப்புத் துறை ஆகியவை தொலைநோக்குடனும் பரந்த மனப்பான்மையுடனும் செயல்படுத்தி வருகின்றன. மாநிலத்தின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான பெருந்திட்டங்களைச் செயல்படுத்தும்போது ஏற்படும் சிரமங்களைக் களைவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் திறமையான தலைமை மற்றும் வழிகாட்டுதல்கள், நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் வசிக்கும் குடிசைவாழ் மக்களுக்கு கருணையுடன்கூடிய புனரமைப்பு மற்றும் மறு குடியமர்வு கொள்கைகளைச் செயல்படுத்த உதவுகின்றன.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்"-குறள் 388

[2010 ஏப்ரல் 21]

இணைப்பு IV

(212 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

அறிவிப்புகள், 2010-2011

1. வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு வழங்கும் வகையிலும், சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மக்களும் பயன் பெறும் வகையிலும், இவர்கள் உற்பத்தி சார்ந்த தொழிலை தொடங்கினாலோ அல்லது சேவை மற்றும் வணிகம் சார்ந்த தொழில்களை துவங்க விரும்பினாலோ, அவர்களுக்கு உதவிடும் வகையில், 15 விழுக்காடு மானியத்துடன் அதிகபட்சமாக ரூ.5.00 இலட்சம் வரை வங்கிகள்மூலம் கடனுதவி வழங்கி "வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்" என்ற புதிய திட்டம் நடப்பு ஆண்டு முதல் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின்மூலம் சுமார் ரூ.100.00 கோடி திட்ட மதிப்பீட்டில் 10,000 பேருக்கு சுய வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

2. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை 2008-ன்கீழ் மானியம் பெறும் வகையில் கூடுதலாக 15 தொழில்கள் சேர்த்தல்

2008 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கையின்படி மானியங்களைப் பெற தகுதியில்லாத தொழில்களின் எண்ணிக்கை தற்போது 39 ஆக உள்ளது. தமிழகத்தில் ஏராளமான நூற்பாலை, நெசவாலை, பின்னலாடை உற்பத்தி செய்யும் ஜவுளி தொழில்கள் இருந்தாலும், மேற்படி தொழில்கள் இந்த மானியம் பெற தகுதியற்ற தொழில்களின் பட்டியலில் உள்ளன. நடப்பு ஆண்டு முதல், நூற்பாலை, நெசவாலை, பின்னலாடை உற்பத்தி உள்ளிட்ட கீழ்க்காணும் 15 தொழில்கள் மேற்படி மானியங்களைப் பெற தகுதி அடையும் வகையில் வழிமுறைகள் மாற்றியமைக்கப்படும்.

2010 ஏப்ரல் 21]

1. பாப்கார்ன் மற்றும் ஐஸ்கிரீம் தயாரித்தல்
2. கலப்பு உரம் தயாரித்தல்
3. ஜவுளி ஆலைகள் (நூற்பாலை மற்றும் பின்னலாடை உட்பட)
4. மாவு அரைவு தொழில்
5. உணவு விடுதிகள்
6. சமையல் எண்ணெய் மற்றும் கரைப்பான்களை உபயோகித்து எண்ணெய் பிரித்தெடுத்தல்
7. அரிசி ஆலை
8. வெல்லம் தயாரித்தல்
9. நிழற்படம் எடுத்தல் மற்றும் வண்ண நிழற்படம் தயாரித்தல்
10. ஒளி அச்சு நகல் எடுத்தல்
11. மின்சலவை தொழில்
12. செங்கல் தொழில் (சிமெண்ட் ஹாலோ பிளாக், இயந்திரங்கள்மூலம் மற்றும் நிலக்கரி சாம்பலிலிருந்து தயாரிக்கப்படும் செங்கல் தவிர)
13. காப்பி கொட்டை வறுத்தல் மற்றும் அரைத்தல்
14. கடிகாரம் பழுது பார்த்தல்
15. ஒளி மற்றும் ஒலி நாடா பதிவு செய்தல்

3. தொழில் நிறுவனங்கள் மானியங்களைப் பெற விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு 6 மாதத்திலிருந்து 1 வருடமாக உயர்த்துதல்

தற்பொழுது புதிய நிறுவனங்கள் மானியங்களைப் பெற, உற்பத்தி துவங்கிய நாளிலிருந்து 6 மாதத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும் என உள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களைச் சார்ந்த பல்வேறு தொழில் நிறுவன சங்கங்கள் (Associations) விடுத்த கோரிக்கைகளை ஏற்று, இந்த விண்ணப்ப கால அளவை 6 மாதத்திலிருந்து 1 வருடமாக உயர்த்தப்படும்.

4. வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல்

தொழில் திறன் படைத்தோர் மற்றும் தொழில் பயிற்சி பெற்றோர், வேலையற்று இருக்கும் நிலையை அகற்றும் நோக்குடன், இவர்களுக்கு தகுந்த வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரும் வகையில்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 21

தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் திறன் படைத்தோர் ஆகியோர்களை ஒருங்கிணைத்து, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்டத் தொழில் மையங்கள்மூலமாக வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படும்.

5. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை குறித்த வட்டார அளவிலான கருத்தரங்குகள் நடத்துதல்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கையில் குறிப்பிட்டுள்ள மானிய பலன்களை தொழில் முனைவோருக்கு எடுத்துரைத்து, தொழில் துவங்க ஊக்குவிக்க, மாநிலத்திலுள்ள அனைத்து வட்டாரங்களிலும் தொழில் ஊக்குவிப்பு கருத்தரங்குகள் நடத்தப்படும்.

6. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 15 குழுமத் திட்டங்களுக்கான பொது வசதி மையங்கள் அமைத்தல்

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான குழும மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட இடங்களில், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனக் குழுமங்கள் பயன்பெறும் வகையில் பொது வசதி மையங்கள் அமைக்கப்படும்:

எண்	இடம்	மாவட்டம்	குழுமம்	திட்ட மதிப்பீடு (தோராயமாக ரூ. இலட்சத்தில்)
1	கீழப்பாவூர்	திருநெல்வேலி	அரிசி ஆலை	757.76
2	ஆலங்குளம்	திருநெல்வேலி	அரிசி ஆலை	988.48
3	தஞ்சாவூர்	தஞ்சாவூர்	அரிசி ஆலை	233.66
4	அம்பத்தூர்	திருவள்ளூர்	பொறியியல்	544.36
5	வேலூர்	வேலூர்	பொறியியல்	972.07
6	பரமக்குடி	இராமநாதபுரம்	பொறியியல்	233.39

2010 ஏப்ரல் 21]

7	ஓசூர்	கிருஷ்ணகிரி	தானியங்கி உதிரி பாகங்கள் உற்பத்தி	707.48
8	கரூர்	கரூர்	பேருந்துக்கூண்டு வடிவமைத்தல்	939.00
9	நகரி	மதுரை	ரப்பர் பொருட்கள் உற்பத்தி	500.00
10	கப்பலூர்	மதுரை	பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி	489.12
11	சென்னை	சென்னை	சித்த மருந்துப் பொருட்கள் தயாரித்தல்	45.04
12	நாமக்கல்	நாமக்கல்	லாரி கூண்டு வடிவமைத்தல்	985.32
13	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்	செயற்கை வைரம் மற்றும் ஆபரணங்கள் தயாரிப்பு	985.00
14	ஈரோடு	ஈரோடு	கயிறு பொருட்கள் உற்பத்தி	486.51
15	சென்னை	சென்னை	ஆயத்த ஆடை உற்பத்தி	125.23
			மொத்தம்	8992.42

7. ஆட்டோ தொழிற்கூட்டுறவு சங்கங்களின்மூலமாக சிறுபான்மையின உறுப்பினர்களுக்கு ஆட்டோக்கள் வழங்கல்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழக (டாம்கோ) திட்டத்தின்கீழ், தொழில் வணிகத் துறை கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் ஆட்டோ தொழிற்கூட்டுறவு

[2010 ஏப்ரல் 21

சங்கங்களின்மூலமாக சிறுபான்மையின உறுப்பினர்களுக்கு 200 ஆட்டோக்களை ரூ.2.50 கோடி திட்ட மதிப்பீட்டில் கொள்முதல் செய்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 200 உறுப்பினர்கள் பயனடைவார்கள். இத்திட்டம் தாய்கோ வங்கி மூலம் செயல்படுத்தப்படும்.

8. மின் ஆளுமை வசதிகள் ஏற்படுத்துதல்

- சிட்கோவில் இதுகாறும் மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளையும், தொழிற்கூடங்களையும் பெறுவதற்கான விண்ணப்பங்கள் நேரடியாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ மட்டும் பெறப்பட்டு வந்தன. தொழில் முனைவோர்களின் சிரமத்தைக் குறைக்கும் பொருட்டு, இந்த நிதியாண்டில் (2010-11) இணையதளம் (Online) வாயிலாக விண்ணப்பிக்க வசதிகள் செய்யப்படும்.
- குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மானியம் பெற மாவட்டத் தொழில் மையங்களில் பெறப்படும் மூலதன மானிய (Capital Subsidy) விண்ணப்பங்களின் தற்போதைய நிலை குறித்து இணையதளத்தின் (Online) வாயிலாக உடனுக்குடன் அறியும் வசதி (Tracking of Subsidy Application) நடப்பு ஆண்டில் அறிமுகம் செய்யப்படும்.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை 2008இன் கீழ் வழங்கப்பட்டு வரும் சலுகை திட்டங்களான குறைந்த அழுத்த மின் மானியம் (LTPT Subsidy) மற்றும் மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் (VAT Subsidy) ஆகியவற்றைப் பெறுவதற்காக, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக பதிவு செய்யும் முறை நடப்பு ஆண்டு முதல் செயல்படுத்தப்படும்.

9. சிட்கோ தொழிற்பேட்டை ஒதுக்கீட்டில் முன்னுரிமை

சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின்மூலமாக ஆரம்பிக்கப்படவுள்ள புதிய தொழிற்பேட்டைகளில் மேம்படுத்தப்படும் மனைகளில், 10 விழுக்காடு தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினர் மற்றும் திருநங்கை ஆகியோருக்கு ஒதுக்கீட்டில் முன்னுரிமை வழங்கப்படும்.

2010 ஏப்ரல் 21]

10. தூத்துக்குடி மாவட்டத்தில் மீன் குழும தொழிற்பேட்டை அமைத்தல்

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம், பிடாநேரி கிராமத்தில் மீன் தொழில் வளர்ச்சிக்கு ஏதுவாக மீன் பிடி தொழில் சம்பந்தமான உற்பத்திப் பொருட்கள் சார்ந்த மீன் குழும (Fish Cluster) தொழிற்பேட்டை ஒன்று தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின்மூலம் அமைக்கப்படும்.

11. வேலூர் மாவட்டத்தில் தோல் குழும தொழிற்பேட்டை அமைத்தல்

வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில் 7 ஏக்கர் நிலப்பரப்பில், தோல் பொருட்கள் சம்பந்தப்பட்ட தோல் குழும (Leather Cluster) தொழிற்பேட்டை ஒன்று தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின்மூலம் அமைக்கப்படும். இத்திட்டத்திற்கு சுமார் ரூ.10.00 கோடி செலவிடப்படும்.

12. புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்குதல்

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின்மூலம் கீழ்க்கண்ட 10 இடங்களில் புதிய தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்:

எண்	மாவட்டம்	வட்டம்	கிராமம்	தேர்வு செய்யப்பட்ட நிலத்தின் அளவு (ஏக்கரில்)
1.	தஞ்சாவூர்	தஞ்சாவூர்	பாலையப்பட்டி	103.03
2.	புதுக்கோட்டை	குளத்தூர்	மாத்தூர்	19.92
3.	கரூர்	கிருஷ்ணராயபுரம்	மணவாசி	121.58
4.	வேலூர்	ஆற்காடு	அல்லாலசேரி மற்றும் நாகலேரி	40.00
5.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர் (தெற்கு)	மயிலேரி பாளையம்	22.23

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 21

6.	திருவள்ளூர்	திருவள்ளூர்	காவேரிராஜபுரம்	200.00
7.	திருவள்ளூர்	ஊத்துக்கோட்டை	ஏனம்பாக்கம்	200.00
8.	விருதுநகர்	சாத்தூர்	சத்திரப்பட்டி	60.00
9.	விழுப்புரம்	திண்டிவனம்	பட்டணம்	103.62
10.	திருநெல்வேலி	பாளையங்கோட்டை	பொன்னாகுடி	96.90

13. சென்னை மாநகரில் சிட்கோ வர்த்தக மையம் அமைத்தல்

சிறு தொழில்களின் வளர்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு, கிண்டி தொழிற்பேட்டையில்,

1. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் சார்ந்த கண்காட்சி மையம்;
2. கருத்தரங்கு கூட்ட வளாகம்;
3. குறு மற்றும் சிறு தொழில் முனைவோர்களுக்கான பயிற்சி மையம் ஆகியவற்றை உள்ளடக்கிய சிட்கோ வர்த்தக மையம் (SIDCO Trade Centre) ஒன்று ஏற்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS